அமெரிக்காவைப் பார்!

'சோமலெ'

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

உரிமை ஆசிரியர்க்கே] 1963 [ரூ. 2·75

முதற் பதிப்பு : 1950
2-ஆம் பதிப்பு : 1951
3-ஆம் பதிப்பு : 1952
4-ஆம் பதிப்பு : 1957
5-ஆம் பதிப்பு : 1963 (திருந்திய விரிவான பதிப்பு)

BIBLIOGRAPHICAL DATA

Author's Name: S. M. L. Lakshmanan Chettiar, (Somalay, pseud.) b. 1921.
Title : Amerikkavai Paar.
Language : Tamil
Edition : Fifth (Revised and enlarged)
Place of Publication : Madras.
Publisher : Inbha Nilayam, Madras-4.
Price : Rs. 2/75
Pages : 200
Size of Publication : 18 cm
Month of Publication : September, 1963.
Brief indication of contents: This is a travelogue on the United States Includes descriptive facts, author's impressions and observations on various aspect's of life in the United States. A chapter details U.S. Aid to India.

Library Classification No.
Colon :
Dewey :

MARUTHY PRESS, 63, Peters Road, Madras-14.

ஐந்தாம் பதிப்பின் முன்னுரை

இந்நூல் 1950-ஆம் ஆண்டில் முதல் முறையாக வெளிவந்து தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெற்றது. அதன் பயனாக 1951, 1952, 1957-ஆம் ஆண்டுகளில் புதிய பதிப்புகள் வெளிவந்தன.

இப்போது வெளிவரும் இந்த 5-ஆம் பதிப்பு முன்னைய பதிப்புகளைப்போல் அன்றி, திருந்திய முறையிலும் விரிவான முறையிலும் வெளி வருகிறது. 1950-க்கும் 1963-க்கும் இடையே அமெரிக்காவில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அவை ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. புள்ளி விவரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஹாவாய்த் தீவுகள் இப்போது அமெரிக்காவின் ஒரு இராச்சியமாகிவிட்டது. எனவே, அதைப் பற்றிய கட்டுரை ஒன்று இந்நூலில் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளது. அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றைப் பற்றிய கட்டுரையும், அமெரிக்கருடைய விளையாட்டு களைப்பற்றிய ஒரு கட்டுரையும், இந்தியாவின் பொரு ளாதார இராணுவத் தேவைகளுக்கு அமெரிக்க உதவி செய்து வருவதைப்பற்றி ஒரு கட்டுரையும் புதிதாக இப்பதிப்பில் இணைக்கப்பட்டுள்ளன. டன் அண்டு பிராட் ஸ்டிரீட் என்ற கட்டுரை தேவை யில்லை என்று கருதி இப்பதிப்பில் விடப்பட்டிருக் கிறது.

மேன்மேலும் இந்திய அமெரிக்க நல்லுறவு வளர இந்நூல் துணை புரியும் என்று நம்புகிறேன். இப்பதிப்பு வெளிவரக் காரணமாக உள்ள நண் பர்கள் அனைவர்க்கும் தமிழ் வாசகர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றி.

1—9—63,
சென்னை.

"சோமலெ"

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	நியூயார்க்	...	1
2.	நாடும் மக்களும்	...	20
3.	பெண்கள்	...	41
4.	குழந்தைகள்	...	49
5.	பிரிஸ்கோ	...	52
6.	கல்வி முறை	...	66
7.	பல்கலைக் கழகங்கள்	...	74
8.	ஒஹையோ பல்கலைக் கழகம்	...	82
9.	ஹாவாய்த் தீவுகள்	...	96
10.	விளையாட்டுகள்	...	106
11.	வேளாண்மை	...	111
12.	வாணிகம்	...	122
13.	விளம்பரம்	...	136
14.	700 அமெரிக்கரின் சாதனை	...	140
15.	பத்திரிகைகள்	...	143
16.	வானொலி	...	154
17.	திரை உலகம்	...	158
18.	வங்கிகள்	...	161
19.	பயணக் கலை	...	166
20.	ஹோட்டல்கள்	...	171
21.	உணவு	...	179
22.	இந்தியாவும் அமெரிக்காவும்	...	188
23.	இந்தியாவைப் பற்றிய அமெரிக்க ஆராய்ச்சி நிலையம்	...	190
24.	இந்தியாவுக்கு அமெரிக்க உதவி	...	192

1. நியூ யார்க்

நியூயார்க் நகரம் ஒரு குபேர பட்டினமாகும். உலகின் செல்வ நிலையை ஆக்குந் திறனும் அழிக்குந் திறனும் பெற்றுள்ளது, அங்குள்ள வால் ஸ்ட்ரீட். அந் நகரில் உள்ள பிராட்வே உலகிலேயே நீளமான சாலை. அடுத்தடுத்து ஓரிடத்திலேயே காணப்படும் தியேட்டர் களின் எண்ணிக்கை சொல்லி முடியாது.

சென்னை மாநகரின் பெருமையாக விளங்கும் எல். ஐ. சி. மாளிகையைப் போலப் பத்துப் பங்கு உயர முள்ள எம்பயர் ஸ்டேட் கட்டிடம், சுதந்தர நாடுகளாக உள்ள சிலவற்றின் பரப்பை விடக் கூடுதலாக உள்ள சென்ட்ரல் பார்க் என்னும் பெரிய பூங்கா, நாளுக்கு ஒரு நவநாகரிகத்தை உருவாக்கும் கடைகள் அமைந்த ஐந்தாம் அவென்யூ என்னும் சாலை—இவைகள் இருப்பதும் நியூயார்க்.

இருபது கோடி ரூபாய் செலவில் கட்டப் பெற்றதும் அமெரிக்க அரசாங்க விருந்தினராய்ச் செல்லும் வெளி நாட்டு அரசாங்கத் தலைவர்களும் தலைமை அமைச்சர்களும் தங்குவதற்கு வசதியுடன் கூடியதுமான வால்டார்ப் அஸ்டோரியோ ஹோட்டலும், ஏறத்தாழ ஒரு லட்சம் மாணவர் பயிலும் நியூயார்க் நகரப் பல்கலைக்கழகமும் நியூயார்க் நகருக்குப் புகழ் தரும் எத்தனையோ நிறுவனங்களுள் சில. பகலில் ஒரு கோடி மக்களும் இரவில் 80 லட்சம் மக்களும் இந்நகரில் வாழ்கிறார்கள். உலகில் எத்தனை நாடுகள் உண்டோ அத்தனை நாட்டு மக்களையும் இங்குக் காணலாம். அமெரிக்காவின் தலைநகராக இல்லாவிட்டாலும், உலக அமைப்பாகிய ஐக்கிய நாடுகள் சபையின் தலைநகராக நியூயார்க் இருந்து வருகிறது. பல ஆயிரக் கணக்கான கோடி பணம் செலவிட்டாலும் இப்படிப்பட்ட ஒரு நகரத்தை இன்று உண்டாக்க முடியாது. இத்தகைய பூலோக சுவர்க்கத்திற்கு 1948 நவம்பர் 5-ஆம் நாள் நான் போய்ச் சேர்ந்தேன்.

நல்வரவு

இங்கிலாந்திலிருந்து குயின் எலிசபத் கப்பலில் சென்றேன். கப்பல் நியூயார்க் துறைமுகத்தை அடைவதற்குச் சில மணி நேரத்திற்கு முன்னரே வானளாவும் மாட மாளிகைகளும் 'சுதந்திரச் சிலை'யும், தோற்றம் அளித்து, 'சுதந்திர அமெரிக்காவுக்கு வருக' என நல்வரவு கூறின. அறிவுச் சுடரைத் தாங்கும் பெண் தெய்வ வடிவிலுள்ள இச்சிலையின் உயரம் 45 மீட்டர் (அதாவது ஏறத்தாழ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தெற்குக் கோபுரத்தின் உயரம்) இது அட்லாண்டிக் பெருங்கடலில் நியூயார்க் கரையிலிருந்து 2 கி. மீ. தூரத்திலுள்ள பெட்லோ தீவில் கம்பீரமாக நிற்கிறது. இச்சிலை 225 டன் நிறையுள்ளது

இந்தச் சிலை அணங்கின் அடியிலிருந்து நுனி வரை 170 படிகள் உள்ளன. நீர்மட்டத்திலிருந்து 100 மீட்டர் உயரத்தில் சிலையின் உச்சியிலிருக்கும் மின்சாரக் கைவிளக்கிலுள்ள விசையை இயக்கினால், நியூயார்க் துறைமுகத்திலுள்ள மின்சார விளக்குகள் எல்லாம் ஒளிர்கின்றன. அமெரிக்க-பிரெஞ்சு நல்லுறவை வளர்ப்பதற்காகப் பிரெஞ்சு மக்கள் இச்சிலையை அமெரிக்கருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனர். இச்சிலையைச் செய்த சிற்பி ஐபில் என்ற பிரெஞ்சுக் கலைஞர். பிரான்சிலிருந்து அமெரிக்காவுக்கு 1885இல் சுதந்திரச்சிலை கப்பலில் அனுப்பப்பட்டது. அதே ஆண்டில் இந்தியாவிலும் 'காங்கிரஸ்' மகாசபை ஏற்பட்டு சுதந்திர இயக்கம் தோன்றிற்று.

சுங்கச் சோதனை

துறைமுகத்தை அடைந்ததும் வழக்கம்போல் சுங்கச் சோதனை நடந்தது. என் பெயரைச் சுருக்கமாகச் 'செட்டியார்' என்று கப்பல் அதிகாரிகள் குறித்திருந்தனர். இதன் முதல் எழுத்தாகிய 'C' என்பதைப் பெரிதாக அச்சிட்ட தாள்களை என்னுடைய பெட்டிகள் எல்லாவற்றிலும் கப்பல் அதிகாரிகள் ஒட்டினார்கள். 'A' முதல் 'Z' வரை ஒவ்வோர் ஆங்கில எழுத்துக்கும் ஒவ்வொரு சுங்க அதிகாரி இருந்தார். 'C' என்ற அடையாளம் உள்ள சுங்க அதிகாரியின் முன்னிலையில் நான் போய் நின்றேன். என்னுடைய பொருள்களும் அவரிடம் இருந்தன. முறைப்படி சில கேள்விகளைக் கேட்டுவிட்டு, என்னுடைய பெட்டிகளை அந்த அதிகாரி தாமே எடுத்துத் திறந்தார். மெதுவாகப் பார்த்தபின், அவரே அவற்றைப் பூட்டி, பூட்டியதையும் சரி பார்த்தார். என்னுடைய பொருள்களின் எண்ணிக்கையைப் பார்த்து நான் இசைவைத் தெரிவித்தவுடன், சுங்கச் சோதனை முடிந்துவிட்டதாக அச்சிட்ட தாளை

ஒவ்வொரு பொருளின்மீதும் அவர் ஒட்டினார். நான் ஓர் இந்தியர் என்பது தெரிந்ததும், மகாத்மா காந்தியடிகள் இறந்ததுபற்றித் தம் வருத்தத்தை அவர் தெரிவித்தார். என்னிடம் இருந்த தந்தச் சாமான் ஒன்றைப் பார்த்து இந்தியரின் கலை நுட்பத்தையும் வேலைத் திறனையும் வியந்து பேசினார். இறுதியில், அமெரிக்காவில் யான் கழிக்கும் காலம் என் வாழ்நாளில் சிறந்த பகுதியாக இருக்கவேண்டுமென்று உள்ளங் கலந்த உவகை மொழி கூறி, 'சிகரெட் பாக்கெட்' ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்து, எனக்கு வந்திருந்த ஒரு தந்தியையும் என்னிடம் தந்தார். ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்குச் செல்பவர்கள் அப் புதிய நாட்டில், சுங்க அதிகாரி, சுமை தூக்கும் தொழிலாளர், வாடகைக்கார் ஓட்டுபவர், ஹோட்டல் வேலையாட்கள் ஆகியோரைத் தான் முதலில் சந்திப்பது வழக்கம். அவர்கள் நடந்து கொள்வதைப் பொருத்தே அந்த நாட்டைப்பற்றிய கருத்து அயல் நாட்டவரின் மனத்தில் உருவாகும். வெளி நாடுகளுடன் நல்லுறவை வளர்க்க இவர்களைவிடச் சிறந்த தூதுவர் வேறு எவருமில்லை.

துறைமுகச் சிறப்பு

யான் சென்ற கப்பல் நின்றது நியூயார்க் துறைமுகத்தின் 64-ஆவது பாலம் என்பதைச் சுங்க அதிகாரி என்னிடம் தந்த தந்தியிலிருந்துதெரிந்துகொண்டேன். நியூயார்க் துறைமுகந்தான் உலகிலேயே பெரிய துறைமுகம்; அதில் 180 பாலங்கள் இருக்கின்றன. உலக வங்கியின் உதவியுடன் 1964-இல் சென்னைத் துறைமுகத்தில் மொத்தம் 10 பாலங்கள் இருக்கும். ஆண்டுதோறும் 13 ஆயிரம் கப்பல்கள் நியூயார்க் துறைமுகத்துக்கு வந்து செல்கின்றன.

போட்டியிடும் தந்திக் கம்பெனிகள்

துறைமுகத்தை விட்டு நான் வெளியேறுவதற்குள், தந்திக் கம்பெனிகளின் ஏஜண்டுகள் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு என்னிடம் வந்தனர். நான் நலமாய் வந்து சேர்ந்ததைத் தெரிவித்து மனேவிக்கும் அன்பர்கட்கும் தந்தி அனுப்பும்படி என்னே வேண்டினர். அவர்களில் ஒருவருடைய வேண்டுகோளுக்கு இணங்கினேன். ரசீது கொடுப்பது வீண் வேலே என்றும், அதனுல் தந்தி சில விஞடி நேரம் தாமதமாகிறது என்றும் அமெரிக்கர் கருதுகின்றனர். ஆகையால், தந்தியைப் பெற்றுக்கொண்டதற்கு ரசீது கொடுக்கும் வழக்கம் அமெரிக்காவில் இல்லே. தந்திக் கம்பெனிக்காகத் தந்திகளேத் தொகுக்கும் ஊழியர் தாம் இருக்கும் இடங்களிலிருந்து, தந்தியைப் பெற்ற மறுகணமே, தம் கம்பெனிக்குத் தனிப்பட்ட டெலிபோன்கள் வாயிலாகத் தந்திச் செய்தியைத் தெரிவித்துவிடுகின்றனர். அமெரிக்கத் தபால் இலாகாவினர் தந்திப் போக்கு வரத்தை மேற்கொள்வதில்லே. அமெரிக்காவிலுள்ள 30 ஆயிரம் தந்தி நிலேயங்களும், 22 லட்சம் மைல் நீளமுள்ள தந்திக் கம்பிகளும் தனிப்பட்ட கம்பெனிகளேச் சேர்ந்தவையே.

எங்கும் மின்சார மயம்

சில விஞடிகளில், ஒரு மின்சார இயந்திரம் என்னுடைய பொருள்களேத் துறைமுகவாயிலில் நின்ற வாடகைக் காருக்கு அருகே கொண்டு வந்தது. பொதுவாக அமெரிக்காவிலும் சிறப்பாக நியூயார்க்கிலும் மின்சாரம் செய்யாதது ஒன்றுமே இல்லே. துணி துவைப்பது மின்சாரம், துணியைக் காயவைப்பது மின்சாரம், காய்ந்த துணியை மடிப்பது மின்சாரம், சமையல் செய்வது மின்சாரம், தயிர் கடைவதும் ரொட்டி சுடுவதும் மின்சாரம், தலே

முடியைக் காயவைக்க, கால் அமுக்க, உறங்கும்போது குளிர்காலத்தில் கம்பளியைச் சூடாக்க வேனிற்காலத்திற் குளிரவைக்க—இவை ஒவ்வொன்றுக்கும் மின்சாரக் கருவி ஒன்று உண்டு. தையல் இயந்திரமும் கிராமபோனும் கடிகாரமும் மின்சாரத்தால் இயங்குகின்றன. கூட்டல் கழித்தல் ஆகிய கணக்குகளேயும் மின்சாரத்தால் செய்ய லாம். இன்சூரன்ஸ் பாலிசிகளேக் கொடுப்பது மின்சார இயந்திரம். போக்குவரவைக் கட்டுப்படுத்துவது மின்சார இயந்திரம். வீடு கூட்டவும், பாத்திரம் கழுவவும், தபால் ஸ்டாம்புகள் விற்கவும், நியூயார்க் பஸ்களிலும் தரைக்குக் கீழ் ஓடும் ரயில்களிலும் வேறு சில இடங்களிலும் டிக்கட் விற்கவும் மின்சாரம் பயன்படுகிறது. புத்தகங்களில் மேல் அட்டையைப் போடுவது மின்சாரம். இப்போது அமெரிக்கர் மனிதனுடைய மூளேக்குப் பதிலாகவும் மின்சாரத்தைப் புகுத்திவிடப் பார்க்கிருர்கள்!

பஸ் போக்குவரவு

நியூயார்க் நகர பஸ் போக்குவரவைப் பற்றியும் இங்கே சிறிது கூறலாம். நியூயார்க் நகர பஸ்களில் கண்டக்டர்கள் இல்லே; டிக்கட்டுகள் கொடுக்கும் வழக்க மும் கிடையாது. ஆகையால், டிக்கட்டுகள் கொடுக்கும் போது கண்டக்டர் நாக்கை விரலால் தொட்டு ஈரம் செய்துகொண்டு பிறகு அந்த எச்சில் விரலால் டிக்கட் டைக் கிழித்துக் கொடுக்கும் காட்சியையும் அங்கே காண வியலாது! பஸ் ஓட்டுபவருக்கு அருகில், எடையைக் காட்டும் இயந்திரம் போன்ற ஒரு கருவி உண்டு. இக் கருவியில் கட்டணத்தை, உரிய சில்லறை நாணயமாகப் போட்டாலன்றி இது வழி விடாது. பஸ் கதவுகள் பஸ் இயக்கும் இயந்திரங்களுடன் மின்சார அமைப்பால் இணேக்கப்பட்டுள்ளன. ஓட்டுபவர் பஸ்ஸை நிறுத்தினுல்

கதவுகள் திறந்து கொள்ளும்; அவர் பஸ்ஸை ஓட்டத் தொடங்கியவுடன் கதவுகள் தாமே மூடிக்கொள்ளும்.

நியூயார்க்கில் ஒரு பஸ்ஸில், ஒரேவிதக் கட்டணந் தான் உண்டு. கிழக்கு-மேற்கில் செல்லும் பஸ்களுக்கும், நெடுந்தூரம் செல்லும் தெற்கு–வடக்கு பஸ்களுக்கும் தனித்தனிக் கட்டணங்கள் உண்டு.

பலவிதக் கட்டணங்கள் ஏற்படுத்துதல், டிக்கட் கொடுத்தல் இவற்ருல் பஸ் செல்லும் வேகம் தடைப் படும்; கண்டக்டர் வைத்துக்கொண்டால் நடைமுறைச் செலவு மிகுதியாகும்; இவற்றைத் தடுக்கவே அமெரிக் காவில் இந்த ஏற்பாடுகள் போலும்!

டாக்சிக்கார்கள்

நியூயார்க் நகரத்தில் டாக்சிக்கு 'கேபு' (CAB) என்று பெயர். வேண்டுபவர் கேபு கம்பெனிக்கு டெலி போன் மூலம் தெரிவிக்கின்றனர். அந்த அலுவலகத்தில் ஆர்டர்களைப் பதிவு செய்து, அறிவிப்பாளர் அவற்றை ஒலிபரப்புங் கருவியின்முன் படிக்கிருர். அந்தக் கம்பெனி யைச் சேர்ந்த டாக்சிகளில் ரேடியோ—டெலிபோன் கருவி இருப்பதால், அவற்றை ஓட்டுபவர்கள் அதன் மூலம் செய்தி அறிந்து, அலுவலகக் கட்டளைகளை நிறை வேற்றுகிருர்கள். இந்த முறையால் ஒரு பிரயாணம் முடிந்தபின், டாக்சி அங்கிருந்தவாறே நேரே மற்ெருரு பிரயாணி இருக்கும் இடத்துக்குச் செல்லுகிறது.

நகர அமைப்பின் அழகு

துறைமுகத்திலிருந்து, எட்டு கி. மீ. தூரத்திலுள்ள எனது ஹோட்டலுக்குச் செல்ல டாக்சி ஓரிடத்தில் மட்டுமே திரும்பிற்று; எஞ்சிய தூரமெல்லாம்

நேராகவே சென்றது. இதிலிருந்து இந்நகர அமைப்புப் புலனாகும்.

300 ஆண்டுகட்குமுன், டச்சுக்காரர் இருபது டாலருக்கு வாங்கிய 760 சதுர கி. மீ. பரப்புள்ள காடு நியூயார்க். இன்று அது கண்டோர் வியப்புறும் நகரமாகத் திகழ்கிறது. அகலமான, ஒழுங்கான வீதிகளும் அவற்றின் இருமருங்கிலும் அணி அணியாகக் கட்டப்பெற்ற மாளிகைகளும் நகரமைப்புத் திட்டத்தின் சிறப்பை விளக்குகின்றன. கிழக்கு-மேற்குச் சாலைகளுக்கு வீதி என்றும், தெற்கு-வடக்குச் சாலைகளுக்கு 'அவென்யூ' என்றும் பெயர்கள் வழங்குகின்றன. நியூயார்க் தீவில் 11 அவென்யூக்களும் 250 வீதிகளும் உள. இவை அனைத்துக்கும் எண்கள் மட்டுமே உண்டு; பெயர்கள் இல்லை. நாம், அடையாளம் தெரிந்துகொள்ள, வீடுகளுக்கு எண் குறிப்பிடுகிறோம்; அதுபோலவே, வீதிகளுக்கும் பெயரிடாமல், எண் குறிப்பிடுவதே சரி என்பது அமெரிக்கர் கருத்து.

அமெரிக்கத் தலைநகரமான வாஷிங்டனிலுள்ள ஒவ்வொரு பெருந்தெருவுக்கும் அமெரிக்க இராச்சியங்களில் ஒவ்வொன்றன் பெயர் இடப்பட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

நியூயார்க் நகரில் ஒவ்வோர் அவென்யூவும் எல்லா வீதிகளோடும் இணைக்கப்பட்டுள்ளது. வீதிகளும் அவென்யூக்களும் ஒன்றையொன்று நேராகக் குறுக்கிட்டுச் செல்லுகின்றன. அவென்யூ என்பது வீதியைப்போல நான்கு மடங்கு அகலமாக இருக்கும். ஐந்தாவது அவென்யூவுக்குக் கிழக்கே இருக்கும் பகுதிக்கு, 'கிழக்குப் பிரிவு' என்றும், வீதிகளுக்குக் 'கிழக்கு வீதி' என்றும், மேற்கே இருக்கும் பகுதிக்கு 'மேற்குப் பிரிவு' என்றும், வீதிகளுக்கு 'மேற்கு வீதி' என்றும் பெயர்.

வலது கைப்புற வரிசையிலுள்ள கட்டிடங்கள் ஒற்றைப்படை எண்கள் உடையனவாயும் இடது கைப்புற வரிசையிலுள்ள கட்டிடங்கள் இரட்டைப்படை எண்கள் உடையனவாயும் இருக்கின்றன. கட்டிடச் சுவர்கள், வாயிற்படிகள் சாளரங்கள் எல்லாம் மிக ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளன. மேல்மாடிகளிலிருந்து தபால்களைக் கீழே தெருவில் உள்ள ஒரு பெரிய தபாற்பெட்டியிலே கொண்டுவந்து சேர்க்கச் சுவருக்குள் குழாய்கள் உண்டு.

நியூயார்க்கை அழகு நகரமாக்குவது இங்குள்ள மரங்கள்தான். 24 லட்சம் மரங்கள் இருக்கின்றன என்று கேள்விப்பட்டேன். நம் நாட்டில் புது நகரங்களை அமைக்கும்போது இந்தத் துறையில் போதிய கவனம் செலுத்தினால், நம் சந்ததியாராவது அழகிய நகரங்களில் வாழ இயலும்.

நகர நிர்வாகம்

நியூயார்க் மிகத் தூய்மையான நகரம். ஏன், எல்லா அமெரிக்க நகரங்களுமே இப்படித்தான். இதற்கு முதற் காரணம், இயந்திர உதவியுடன் சாலைகள் துப்புரவு செய்யப்படுவது. மற்றொரு காரணம், புகை ஏற்படும் எந்தப் பொருளையும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருப்பதாம். பிறிதொரு காரணம் நகரசபைகளின் பெருஞ் செல்வநிலை. நியூயார்க் நகரில் ஆகாய விமான நிலையமும், 890 கி. மீ. நீளமுள்ள பாதாள ரயில்வேயும், பூஞ்சோலைகளும், மருத்துவமனைகளும், போலீஸ் ஸ்டேஷன்களும் நகரசபையைச் சேர்ந்தவையே. நியூயார்க் சான்பிரான்சிஸ்கோ முதலிய பல துறைமுகங்கள் எல்லாம் அந்தந்த நகரசபைகளைச் சேர்ந்தவையே. இவற்றின்

மூலம் நகரசபைகளுக்கு மிகுந்த வருமானம் கிடைக்கிறது. நகரசபைகளால் எளிதில் கடன் வாங்கவும் இயலும். இவற்றிற்குக் கடன் கொடுக்கவும் பல நிறுவனங்கள் உள. நகரசபைகளுக்குக் கொடுக்கும் கடன் தொகைக்கு, வருமான வரியில் சிறிது கழிவு தரப்படுகிறது. இவற்றால் நியூயார்க் நகரசபையார் 2,000 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கின்றனர்.

பம்பாயும் நியூயார்க்கும்

நம் நாட்டில் செல்வநிலையில் பம்பாய் முதன்மையாயிருக்கிறது; இவ்வாறே அமெரிக்காவில் நியூயார்க் இருக்கிறது. பம்பாய் தலால் தெருவிலுள்ள பங்கு, பருத்தி, தங்கம், வெள்ளி மார்க்கெட்டுகள் இந்தியாவுக்கு எவ்வளவு முக்கியமோ, அவைபோலவே நியூயார்க்கு வால் ஸ்ட்ரீட் உலகப் பொருளாதாரத்தைச் சீராக்கவும் சீர்குலைக்கவும் வல்லது. பம்பாய் இந்தியாவின் தலைநகராக இல்லாததுபோலவே, நியூயார்க்கும் அமெரிக்காவின் தலைநகராகவோ நியூயார்க் இராச்சியத்தின் தலைநகராகவோ இல்லை. நியூயார்க் இராச்சியத்துக்குத் தலைநகர் ஆல்பனி என்ற ஒரு சிற்றூரே ஆகும். பம்பாயைப்போல நியூயார்க்கும் ஒரு தீவு. இந்தியப் பஞ்சு ஆலைத் தொழில் தலைநகரமாகப் பம்பாயும், அமெரிக்கப் பஞ்சு ஆலைத் தலைநகரமாக நியூயார்க்கும் இருக்கின்றன. இந்தியத் துணியில் 15 சதவீதம் பம்பாய்த் தீவிலும் அமெரிக்கத் துணியில் 75 சதவீதம் நியூயார்க் தீவிலும் உற்பத்தி ஆகின்றன. பம்பாயில் பார்சிகளும் நியூயார்க்கில் யூதர்களும் மிகச் சிறுபான்மையினரே. (அமெரிக்கரில் ஐந்தில் நான்குக்கு மேற்பட்டவர் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர். அங்கே நிலவும் அடுத்த பெரிய மதம் யூத மதம்.) எனினும், இரு நகரங்களிலும் இச்

சிறுபான்மையோரே பொருளாதாரத்தின் அச்சாணி யாக இருக்கின்றனர். ஐரோப்பியருக்கு இந்தியாவின் தலைவாயில் பம்பாய்; அமெரிக்காவின் தலைவாயில் நியூ யார்க். பம்பாய்க்கு வருபவர்களை இந்தியாவின் தலைவாயில் (Gateway of India) என்ற மண்டபமும், நியூயார்க்குக்கு வருபவர்களைச் 'சுதந்திரச் சிலை'யும் எதிர்கொண்டழைக் கின்றன. ஏனைய இந்திய நகரங்களைவிடப் பம்பாய் உலக முழுவதும் தெரிந்திருப்பதுபோல ஏனைய அமெரிக்க நகரங்களைவிட நியூயார்க் உலகப் புகழ் பெற்றுள்ளது. கோடிக்கணக்கான இந்தியர் பம்பாயைப் பார்க்காதது போலவே கோடிக்கணக்கான அமெரிக்கரும் நியூயார்க் கைப் பார்த்ததில்லை! பம்பாயில் பல ஆயிரம் வெளி நாட்டார் இருக்கிறார்கள்; நியூயார்க்கில் பல லட்சம் வெளிநாட்டார் உளர். பம்பாயில் நான்கு, ஐந்து மாடிக் கட்டிடங்கள் மிகுதியாக இருப்பதுபோல, நியூயார்க்கில் நாற்பது, ஐம்பது மாடிக் கட்டிடங்கள் பல இருக்கின்றன. பம்பாயைப் போலவே நியூயார்க்கிலும், மனிதனை மனிதன் இழுக்கும் சென்னையின் நாகரிகமான ரிக்ஷா வாகனம் பரவவில்லை.

தீவுகளும் சுற்றுவட்டமும்

நியூயார்க் என்னும் சொற்றொடர் மன்ஹாட்டன் தீவைமட்டும் குறிக்கும். விரிந்த நியூயார்க் (Greater New York) என்பது வேறுசில சிறு தீவுகளும், உள்நாட்டி லுள்ள பிரான்க்ஸ், ரிச்மண்டு, குயின்ஸ், புரூக்லின் போன்ற பகுதிகளும் சேர்ந்தது. இவை தஞ்சை மாநகரிலுள்ள செல்வம் நகர், அருளானந்த நகர் ரோட்டரி நகர், கருந்திட்டக்குடி போன்றவை. மன் ஹாட்டன் தீவின்சில முக்கிய பகுதிகளைப் பற்றி முதலில் சொல்லுவேன்.

ராக்பெல்லர் சென்டர்

தியேட்டர் வட்டத்தில் 50 ஆம் வீதியில் ராக்பெல்லர் சென்டர் என்ற ஓர் இடத்தில் 15 கட்டிடங்கள் ஒரே தொகுதியாக உள்ளன. இங்கே, ஒரு கட்டிடத்திலிருந்து மற்ருெரு கட்டிடத்துக்குச் செல்லச் சுரங்கப் பாதைகள் உண்டு. இக்கட்டிடங்களில் உயரமானது 'R. C. A.' என்ற அமெரிக்க வானெலிக் குழுவின் (Radio Corporation of America) 70 மாடிக் கட்டிடம். இதன் உச்சியிலிருந்து பார்த்தால் 80 கி. மீ. சுற்றளவு நன்கு தெரியும். இந்தக் கட்டிடங்களுக்குள்ளேயே பல நாட்கள் உண்ணவும், விளையாடவும், படம் பார்க்கவும், இங்கே நடைபெறும் வானெலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நேரிற் கேட்கவும் காணவும், பிற மொழிகள் படிக்கவும், பாதாள ரயிலில் செல்லவும், உறைந்த பனிக் கட்டியில் ஓடி ஆடவும், தோட்டத்தில் உலாவவும் இவை போன்ற பல வழிகளிற் பொழுது போக்கவும் இயலும். ரேடியோ சிட்டி மியூசிக் ஹால் என்ற உலகிற் பெரிய தியேட்டரும் இங்கேதான் இருக்கிறது.

நூல் நிலையம்

ஆண்ட்ரூ கார்னேஜி என்ற பெருஞ் செல்வர் அளித்த ஐந்து மிலியன் டாலர் (2½ கோடி ரூபாய்) நன்கொடையால் 50 நூல் நிலையங்கள் ஏற்பட்டன. இவற்றுள் பெரிது ''நியூயார்க் பப்ளிக் லைப்ரரி''. இது ஐந்தாவது அவென்யூ 42-ஆம் வீதியோடு கூடுமிடத்தில் உள்ளது. இங்கே 40 லட்சம் நூல்கள் உள்ளன. (கல்கத்தா, தேசிய நூலகத்தில் 12 லட்சத்துக்கும் குறைவான நூல்களே உள்ளன) இது உலகிற் பெரிய நூல் நிலையங்களில் ஒன்று. குருடர்களுக்கென நூல் நிலையம் ஒன்றும், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பல நாட்டுப் படங்கள்

ஆகியவை உள்ள (Reference) நூல் நிலையம் ஒன்றும், குழந்தைகளுக்கான நூல் நிலையம் ஒன்றும் இந்த நிலையத்தின் பகுதிகளாகும். நியூயார்க் நகரசபையார் இந்த நிலையத்தையும் இதனைச் சேர்ந்த இருபது சிறுநூல் நிலையங்களையும் நடத்துகின்றனர். இவை இரவு 11 மணி வரை திறந்திருக்கின்றன. சின்னஞ் சிறு நகரங்களிற் கூட அந்தந்த நகர மக்கள் தொகைக்குச் சமமான எண்ணிக்கையுள்ள நூல்களையுடைய நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் குழந்தைகளுக்கான தனிப் பகுதிகள் காற்றோட்டமான அறைகளில் இருக்கின்றன. இப்பகுதிகளில், மேசைகளும் நாற்காலிகளும் (நூல்கள் வைக்கும்) அலமாரிகளும் குழந்தைகளுக்கேற்றவாறு தணிவாக இருக்கின்றன. வாரந்தோறும் ஒரு மணி நேரத்திற்கு இங்கே குழந்தைகளுக்குக் கதைகள் படிக்கப்படுகின்றன. அமெரிக்காவில், பல நூல் நிலையங்கள் வாரந்தோறும் ஒரு விழா நடத்துகின்றன. குறித்ததொரு பொருளைப் பற்றிய நூல்களை இவ்விழாக்களின் வாயிலாக விளம்பரப் படுத்துகின்றனர். விளம்பரம் என்பது விற்பனைக்கு மட்டும் அன்று; படிக்க வைப்பதற்கும் அது தேவை!

எம்பயர் ஸ்டேட்

42-ஆம் வீதிக்குத் தெற்கே எட்டு வீதிகளுக்கு அப்பால் எம்பயர் ஸ்டேட் கட்டிடம் இருக்கிறது. இது வானத்தை முத்தமிடுவதுபோல் தோன்றும் மாளிகை. உலகத்திலேயே உயரமானது. வீதியின் மட்டத்திற்குக் கீழ் இரு மாடிகளும், மேலே 102 மாடிகளும் உண்டு. 102-ஆம் மாடியை எக்ஸ்பிரஸ் லிப்ட் மூலம் ஒரே நிமிஷத்தில் அடைந்தது எனக்குக் கண்கட்டு வித்தையாகவே இருந்தது! லிப்டில் இருந்த ஒரு நிமிடத்தில், மகிழ்ச்சியும் பயமும் மாறிமாறித் தோன்றி மறைந்தன. உச்சியி

லிருந்து பார்த்தபோது, சாலைகளில் சென்ற லட்சக்கணக்கான கார்களும் மனிதர்களும் கொசுக்கள் எறும்புகள் போலத் தோன்றக் கண்டேன். இந்தக் கட்டிடத்தில் ஒரு லட்சம் பேர் தங்கலாம்; இங்கே பல்லாயிரம் அலுவலகங்கள் உள்ளன. 102-ஆவது மாடியில் வான ஆராய்ச்சி நிலையமும் சிற்றுண்டிச்சாலை ஒன்றும் உள்ளன. தொலைக்காட்சிக் கோபுரம் (Television Tower) இக் கட்டிடத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது 55 மீட்டர் உயரம், அதாவது திருச்சி மலைக்கோட்டை உயரத்தில் முக்கால் பங்கு.

இக்கட்டிடம் நள்ளிரவுக்குப் பின்னருங்கூடத் திறந்திருக்கிறது. ஐந்து ரூபாய் கட்டணம் கொடுத்து டிக்கட் வாங்கினுல், யார் வேண்டுமானுலும் போகலாம்; வரலாம்; 102-ஆவது மாடியிலிருந்து குதித்து உயிரையும் போக்கிக் கொள்ளலாம். (இவ்விதம் செய்வோரும் ஒரு சிலர் உண்டு!) நள்ளிரவில் ஒளிரும் நிறைமதி மிக்க வெளிச்சம் தருகிறதா? நியூயார்க்கில் டைம்ஸ் ஸ்கொயரைச் சுற்றித் திருக்கார்த்திகை விளக்குகளைப் போலுள்ள எண்ணிலா மின்சார விளக்குகள் அதனைவிட ஒளிமயமாக இருக்கின்றனவா? என்று அறியவும் எம்பயர் ஸ்டேட்டுக்குச் செல்லலாம். இந்தியாவில் ஆளொன்றுக்கு 200 கிலோவாட் மணி மின்சார சக்தியும், அமெரிக்காவில் இதைப்போல 77 மடங்கும் செலவாகின்றன. ‘‘மண்ணெண்ணெய் விளக்கைப் பார்த்தவர்கள் கை தூக்குங்கள்’’ என்று ஒரு வகுப்பில் ஆசிரியர் கூறியபோது, மாணவர் ஒருவர்கூடக் கை தூக்கவில்லையாம். அமெரிக்காவில் மின்சார வளர்ச்சிக்கு வேறு சான்றும் வேண்டுமா? மின்சார வளர்ச்சியின் சின்னமாக விளங்கும் டைம்ஸ் ஸ்கொயர், கவி ரவீந்திரர் நூற்றுண்டு

விழாவின்போது 1961-இல் தாகூர் ஸ்கொயர் என்று பெயரிடப்படுகிறது.

சைனு—டவுன்

''சீனர், சீனு தவிர வேறு எங்கும் இருப்பார்கள்!'' என்று சொல்லுவதுண்டு; இது முற்றும் உண்மையே. ஜெர்மனி தவிர எல்லா நாடுகளிலும் நான் சீனரைப் பார்த்தேன். அமெரிக்காவில் வாழும் பல லட்சம் சீனர் அமெரிக்கப் பிரஜைகளாக ஆகிவிட்டனர். பம்பாயில் தமிழ் மக்களுக்குள்ள மாதுங்கா பகுதிபோல, நியூயார்க் நகரில், சைனு டவுன் என்ற ஒரு பகுதி இருக்கிறது. சீனக் கோவில்களும், சீனுவில் செய்யப்பட்ட வேடிக்கைப் பொருள்களே விற்கும் கடைகளும் இங்கே உள்ளன. சீன உணவு விடுதிகளும் ஏராளம்.

ஆற்றின்கீழ் அதிசயச் சாலே

குயின்ஸ் என்ற பகுதியில் வாழும் நண்பர் ஒருவர் தம் வீட்டுக்கு என்னே அழைத்துச் சென்ருர். குயின்சுக்கும் மன்ஹாட்டன் தீவுக்குமிடையே ஹட்சன் ஆறு ஒடுகிறது. அந்த ஆற்றின்கீழ், பல நூறு கோடி டாலர்கள் செலவிட்டு, 2 கி. மீ. நீளமுள்ள லின்கன் டன்னல் (Lincoln Tunel) என்ற சுரங்கப் பாதை கட்டப்பட்டுள்ளது. இதனுல், ஆற்றைக் காணுமலே அக்கரையை அடைந்தேன். ஒரு திக்கில் செல்ல ஒரு பாலமும் எதிர்த் திக்கில் வரப் பிறிதொரு பாலமும் இருக்கின்றன. ஒவ்வொரு பாலத்திலும் மணிக்கு 50 கி. மீ. வேகத்திற்குக் குறைந்தும் மிகுந்தும் செல்லும் வாகனங்களுக்குத் தனித் தனிப் பாதைகள் ஒதுக்கிவீடப் பட்டுள்ளன.

இதைப் போன்றே ''லாங் ஐலன்''டை மன்ஹாட்டன் தீவுடன் இணைக்கும் பாலம் ஒன்று உளது.

இதன் பெயர் புருக்லின் பாலம்; செலவு $2\frac{1}{2}$ கோடி டாலர்.

உலகத் தலைநகர்

ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகக் கட்டிடங்கள் நியூயார்க் நகரில், ராக்பெல்லர் குடும்பத்தார் அன்பளித்த ஈராயிரம் ஏக்கர்ப் பரப்புள்ள இடத்தில் உள. ஹட்சன் ஆற்றங்கரையில் 42-ஆவது வீதி தொடங்குமிடம் முதல், 48-ஆவது வீதி தொடங்குமிடம் வரை ஒரே தொகுதியில் எட்டுக் கட்டிடங்கள் 39 மாடிகளுடன் நிறுவப்பட்டிருக்கின்றன. இக்கட்டிடச் செலவுக்காக ஐ. நா. அலுவலகத்துக்கு அமெரிக்க அரசியலார், 65 மிலியன் டாலர் (32 கோடி ரூபாய்) வட்டியில்லாக் கடன் கொடுத்துதவியுள்ளனர். இதன் பயனாக நியூயார்க் உலகத் தலைநகராகி யிருப்பதுபற்றிப் பொதுவாக அமெரிக்கரும், முக்கியமாக நியூயார்க் மக்களும் பெருமைப்படுகிறார்கள்.

குடியிருப்பு வீடுகள்

குடியிருப்பு வீடுகளுக்கு அபார்ட்மென்ட் ஹவுஸ்(Apartment House) என்று பெயர். இவற்றில் 20-க்கு மேல் 30 மாடிகள் வரை உள்ளன. ஒவ்வொரு மாடியிலும் எட்டு அல்லது பத்துக் குடும்பத்தினர் பல ஆண்டுகள்வரை ஒருவரை ஒருவர் அறியாமல் வாழ்கின்றனர்! இவ்விதமான ஒவ்வொரு கட்டிடத்திலும் வாகனங்கள் நிறுத்தும் இடங்களும், மருத்துவ மனையும், அஞ்சல் நிலையமும் தையற்கடையும், சலவைச் சாலையும், பானங்கள் ஐஸ் கிரீம் முதலியவற்றை விற்கும் கடையும், விளையாடுமிடங்களும் இருக்கின்றன.

நியூயார்க்கிலும்!

புரூக்லின் என்பது நியூயார்க்கின் ஒரு பகுதி. போதிய அளவு உறங்காததாலும், ஓயாமல் வேலை பார்ப்பதாலும் அமெரிக்காவில் அல்லற்படுவோர் தொகை பல லட்சம் ஆகும்.

நியூயார்க் மக்களின் குணங்கள்

நியூயார்க் மக்களுக்கு 'வழ வழ' என்று பேச நேர மில்லை. சுருக்கமாகப் பேசக்கூட நேரமின்றித் தவிக் கிறார்கள். பகலில் நேரமின்றி இரவில் 11 மணிக்குமேல் டென்னிஸ் ஆடுபவர்களுக்கு எப்படி நேரம் இருக்க முடியும்? ஆகவே, தம்மிடம் பேச வருபவர்களை முதலில் சந்திக்க ஒரு செயலாளர் வைத்திருக்கும் பெரியோர்கள் பலர் இந்நகரில் உளர். இவ்வேலை பார்க்கும் பெண்கள் புதிதாய் வருபவர்களிடம் எல்லாச் செய்திகளையும் கேட் டுக்கொண்டு, அதன் பின்னர் அவர்கள் சொல்லியவற்றை உரியவருக்குச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றனர். ஆலைத்தொழிலுக்கு அடுத்தபடி வெளிநாட்டாரால்தான் நியூயார்க் நகரத்துக்கு வருவாய் கிடைக்கிறது. வாணி கத்துக்காகவும் பொழுது போக்குக்காகவும் இந்நகருக்கு வருபவர்கள் ஆண்டுதோறும் ஒரு பிலியன்* டாலர் (474 கோடி ரூபாய்) செலவிடுகின்றனர்.

நியூயார்க் மக்கள் விரும்புபவை: நகைச்சுவை நிறைந்த குட்டிக் கதைகள், தலைகீழ் வேகம், தம் வேலைகளைத் தாமே செய்தல், சுருக்கமான எழுத்துக்கள், ஐஸ்கிரீம், அலுவலகங்களில் சிறுசிறு காகிதங்களைக் குப்பையாகச் சேர்த்து வைத்திருந்து பிறநாட்டுப் பேரறிஞர்கள்

---

* அமெரிக்காவில் ஒரு பிலியன் என்பது ஓராயிரம் மிலியனுக்குச் சமம் ஆகும்.

பிராட்வே வழியாகச் செல்லும்போது, காகித மாலைகளை அவர்கள்மீது அன்பின் அறிகுறியாக எறிவது.

நியூயார்க் மக்கள் விரும்பாதவை : அன்ன நடை, கிரிக்கட், வீண்வேலை, சம்பிரதாயம், ஆற அமர எதையும் செய்வது, பிறரைப் பின்பற்றுவது.

நியூயார்க் நகரில் இருப்பவை : தீவுகள்—200. ஹோட்டல்கள்—11,000. குளிர்ந்த பானங்கள் விற்கும் கடைகள் —22,000. லிப்ட்கள்—43,000. மோட்டார் கார்கள்— 30 லட்சம். நாய்கள்—30 லட்சம்.

நியூயார்க் நகரில் இல்லாதவை : அசுத்தம், டிராம், ஓய்வு, போதுமான உறக்கம், சுடுமூஞ்சிகள், பிச்சைக்காரர், அடுத்த வீதியில் உறவினர்.

நியூயார்க்கில் நிகழுவன : ஏழு நிமிடத்துக்கு ஒரு பிறப்பு. ஐந்து நிமிடத்துக்கு ஒரு திருமணம். 15 நிமிடத்துக்கு ஒரு விபத்து.

நியூயார்க் மக்களின் குறிக்கோள் : ஆடம்பரமாகவாழ்வது; எந்த வழியிலாவதுதிடீரென்று பணம்சம்பாதிப்பது. பந்தயம் கட்டுவது, பொருளீட்ட எளிதான வழி. நான் போயிருந்தபோது கீழ்க்கண்டவற்றைப்பற்றி அமெரிக்கர் கோடிக் கணக்கில் பந்தயம் கட்டினர் :—

அமெரிக்கத் தலைவர் தேர்தலில் ட்ரூமன் வெல்வாரா? டூவே வெல்வாரா? எலிசபத் இளவரசிக்கு ஆண் வார்சு பிறக்குமா? பெண் வார்சு பிறக்குமா? பிரிட்டிஷ் மன்னரின் ஆஸ்திரேலியப் பயணம் 1949-இல் நிகழுமா? ஒத்திப் போடப்படுமா?

இவைபோன்ற பல பந்தயங்கள் அங்கே அடிக்கடி நிகழ்கின்றன. ''மீன் விற்ற காசு நாறுமா?'' அதுபோலவே

"பந்தயத்தில் கிடைத்த டாலர் செல்லாதா? என்ன?" என்று கேட்கின்றனர், பந்தயப் பித்துடைய அமெரிக்கர்.

பொதுவாக அமெரிக்கர் நல்லவர். தாமும் வாழ வேண்டும், பிறரும் வாழவேண்டு மென்பது அவர் களுடைய அவா. மனிதன் தன் வேலைகளுக்கு, இயந்திர உதவியையே அன்றி, வேறொரு மனிதனின் உதவியை நாடக்கூடாது என்பது அவர்கள் கருத்து. அமெரிக்கர் ஒவ்வொருவரும் தமக்குத்தாமே மன்னன், தமக்குத் தாமே வேலைக்காரன், தமக்குத்தாமே எல்லாம் என்ற மனப்போக்குடையவர்.

அமெரிக்கரின் கொள்கை :

"தருமம் செய்வது நல்லது. ஆனால் தருமம் செய்யும் தொகைக்கு அரை வட்டி கிடைத்தால், அதைவிட நல்லது" என்று அமெரிக்கரைப்பற்றி வேடிக்கையாகச் சொல்லுவது வழக்கம்.

2. நாடும் மக்களும்

அரசியல் விடுதலை அடைவதற்கு முன்னர், பிரிட்டிஷ் பேரரசுக்குட்பட்ட பகுதிகளைப் பற்றி மட்டுமே நமக்குத் தெரிந்திருந்தது. இப்போது, பிற நாடுகளுடனும் நாம் தொடர்பும் உறவும் கொண்டுள்ளோம். இந் நாடுகளுள் முதன்மையானது அமெரிக்கா. நமது தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேருவின் அமெரிக்கச் சுற்றுப் பயணத்தின் விளைவாகவும் சீனு இந்தியாவை ஆக்கிரமித்ததன் விளைவாக அமெரிக்கா அளவு கடந்த ஆயுதங்களை நொடிப் பொழுதில் அனுப்பி உதவியதன் பயனுகவும், நமது குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் 1963-இல் அமெரிக்காவில் மேற்கொண்ட பயணத்தாலும் இவ்விரு நாடுகளிலும் ஒன்றின் நிகழ்ச்சியைப் பற்றி மற்றென்றில் முன்பிருந்ததைவிட மிகுதியான அக்கறை ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா : ஒரு பொதுப் பெயர்

பொதுவாக, 'அமெரிக்கா' என்பது வட, தென் அமெரிக்கப் பெரு நிலப்பரப்புகளிலுள்ள எல்லா நாடுகளையுமே குறிப்பிடுகிறது. ஆனல் இன்றைய உலக வழக்கில் 'அமெரிக்கா' என்பது அமெரிக்காவில் ஐக்கியமாயுள்ள இராச்சியங்களையே (United States of America) குறிக்கின்றது. கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்ட பிறகு அப் பரந்த நாட்டைப்பற்றி நன்கு அறிய, ஐரோப்பிய நாட்டவர் பலர் முயன்றனர். ஐக்கிய அமெரிக்க நாட்டில் குடியேறியவருள் ஆங்கிலேயரே முதலிடம் பெற்றனர்.

அக்கண்டத்திலுள்ள பிற நாடுகளுடன் அடிப்படையான வேறுபாடு யாதெனில், இங்கே ஆங்கிலமொழி மட்டுமே பேசப்படுவதாம். கனடாவில் ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய இரண்டு மொழிகளும் வழங்கி வருகின்றன. பிரேசில் நாட்டில் போர்ச்சுகீசிய மொழி வழங்குகின்றது; தென் அமெரிக்காவின் மற்ற நாட்டவரெல்லாம் பேசுவது 'ஸ்பொனிஷ் மொழி' ஆகும்.

பரப்பும் மக்களும்

அமெரிக்கா கிழக்கு மேற்கில் அதாவது நியூயார்க்கி லிருந்து சான்பிரான்சிஸ்கோவரை 3000 மைலும், தெற்கு வடக்கில் அதாவது மெக்சிகோ எல்லையிலிருந்து கனடா எல்லை வரை 1700 மைலும் அகன்றிருக்கிறது; இந்தியா, கிழக்கு மேற்கில் (கல்கத்தாவிலிருந்து பம்பாய் வரை) 1100 மைலும், தெற்கு வடக்கில் (குமரி முதல் காஷ் மீரம் வரை) 2000 மைலும் இருக்கிறது. அமெரிக்காவின் கடற்கரை 11500 மைல் நீளமுள்ளது; இந்தியாவின் கடற்கரை 3000 மைல் நீளமுள்ளது.

அமெரிக்கா 30 லட்சம் சதுரமைல் பரப்புள்ள நாடு. அங்கே 19 கோடி மக்கள் வாழ்கின்றனர். இந்தியாவைப் போல இரண்டரைப் பங்கு நிலப்பரப்பில், இந்தியாவி லுள்ள மக்களில் ஐந்தில் இரண்டு பங்குக்குச் சமமான மக்கள் வாழ்கின்றனர்.

மூலப் பொருள்கள்

அமெரிக்காவில் மூலப்பொருள்கள் மிகுதி. மக்க ளுடைய முயற்சி, சுறுசுறுப்பு, புதிய கண்டுபிடிப்புக்கள் இவையும் ஏராளமாக இருப்பதால் உலகில் அமெரிக்கா

தலைசிறந்து விளங்குகின்றது. பலவிதமான தட்ப வெப்ப நிலைகள் அமெரிக்காவின் பல பகுதிகளில் நிலவுவதால் பெரும் அளவு அரிசியும், ஆண்டுதோறும் 3½ கோடி டன் கோதுமையும், 10 கோடி டன் சோளமும், 4 கோடி டன் சீமை அவலும், பலவிதமான பழங்களும், பிற உணவுப் பொருள்களும் உற்பத்தியாகின்றன. தொழில் வளர்ச்சியில் முன்னணியில் நின்றபோதிலும் அமெரிக்கா அதே சமயத்தில் பெரிய விவசாய நாடாகவும் இருந்து வருகிறது.

தொழில் வளர்ச்சியில் அமெரிக்காவின் முன்னேற்றத்தைப் பார்ப்போம். நிலக்கரி, பெட்ரோல், மின்சார சக்தி முதலான எரி பொருள்களின் உற்பத்தி அளவு கடந்தது. பருத்தியும் பஞ்சும் உலக உற்பத்தியில் சரி பாதி; உரிய பருவத்தில் பருத்தியை விரைவாகச் சேகரிப்பதற்காக, மகசூல் காலத்தில் அமெரிக்காவின் சில பகுதிகளில் பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறையளித்து, மாணவர்களை விவசாயப் பண்ணைகளுக்கு அனுப்பிவிடுகின்றனர். அமெரிக்காவில் ஆண்டுதோறும் 175 கோடி பவுண்டு (இந்தியாவில் 100 கோடி பவுண்டு) புகையிலையும், 12 லட்சம் டன் (இந்தியாவில் மூன்று லட்சம் டன்) ஆளி விதையும் விளைகின்றன. அமெரிக்காவில் 9 கோடி டன் (இந்தியாவில் 75 லட்சம் டன்) இரும்பும் எஃகும் உற்பத்தியாவதால், மோட்டார் கார் உற்பத்தியிலும், இயந்திரக் கருவிகள் செய்வதிலும் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. தம் நாட்டிலில்லாத ரப்பர் மைகா போன்ற மூலப்பொருள்களுக்கு மாற்றுகச் செயற்கை ரப்பர் செயற்கை மைகா ஆகியவற்றை அமெரிக்கர் கண்டுபிடித்துள்ளனர்.

போக்கு வரவு

பொருள்களின் உற்பத்தியால் மட்டும் ஒரு நாட்டின் செல்வம் பெருகிவிடாது; உற்பத்தியான பொருள்கள் உள்நாட்டில் தேவையான இடங்களுக்கும் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யத் துறைமுகங்களுக்கும் அனுப் பப்பட வேண்டும். இதற்கு வேண்டிய நல்ல போக்கு வரவு முறைகள் அமெரிக்காவில் உள்ளன. அமெரிக்காவில் 37 லட்சம் மைல்களுக்கு சிறந்த சாலைகள் உண்டு. அவை போன்ற சாலைகள் ஜெர்மனி தவிர உலகில் வேறெங்கும் இல்லை. இந்தியாவில், நல்ல சாலைகள் தமிழ் நாட்டில் 25000 மைல்களுக்கும், மற்ற எல்லா இராச்சியங்களிலும் மொத்தம் 70000 மைல்களுக்கும் உள. 2,27,000 (இந்தியாவில் 35000) மைல்களுக்கு ரயில் பாதைகளும், 700 (இந்தியாவில் 200-க்கும் குறைவு) ஆகாயவிமான நிலையங்களும் இருக்கின்றன. மேலும் அமெரிக்காவெங் கும் ஒரே அளவு அகலமுள்ள ரயில் பாதைகள் இருக் கின்றன; இந்தியாவைப்போல குறுகிய பாதைகள் (Narrow Gauge), நடுத்தரப் பாதைகள் (Meter Gauge), அகன்ற பாதைகள் (Broad Gauge) என்ற வேறுபாடு அமெரிக்காவில் இல்லை; இதனல் எந்த ஓர் இடத்தி லிருந்தும் வேறு எந்த ஓர் இடத்துக்கும் ஒரே ரயில் வண்டியில் பொருள்களை அனுப்ப அமெரிக்கரால் முடி கிறது. இவ்வாறு ஒருவகையான அகலமுடைய ரயில் பாதை மட்டுமே இந்தியாவில் இயங்கினல் காசியிலிருந்து இராமேசுவரத்திற்கும், கன்னியாகுமரியிலிருந்து காஷ் மீரத்துக்கும், டில்லியிலிருந்து மங்களூர்க்கும் நேர் ரயில்கள் போய்வர இயலும். அந்நாள் என்று வருமோ?

அமெரிக்காவில், பெரும்பாலும் ஆண் பெண் எல்லோருக்குமே மோட்டார்க்காரை இயக்கத் தெரியும். ஐந்து லட்சம் பேர் ஆகாய விமானம் ஓட்டும் தகுதி

உடையவராக இருக்கிறார்கள். மேலும் தத்தம் பொருள் களுக்கு ஏற்ற வாகன் (Wagon) களையும், 75 லட்சம் ட்ரக் (Trucks) களையும் தொழிற்சாலைகள் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கின்றன. அப்பொருள்களை அனுப்ப அவற்றையே பயன்படுத்துகின்றன.

அமெரிக்க மக்கள்

அமெரிக்கா இன்று, செல்வம் கொழிக்கும் சீமையாக இருப்பதற்கு, அதன் நீர்வள நிலவள மேம்பாடு மட்டுமே காரணம் அன்று; இரும்புச் சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள், தங்க இருப்பு, நல்லூழ்வினை இவற்றால் மட்டுமே அமெரிக்கர் பெருஞ் செல்வராயிருப்பதாகக் கருதுவது தவறு. உரிமையை வற்புறுத்துவது மட்டு மன்றிக் கடமையைச் செய்வதிலும் அமெரிக்கர் கவனமா யிருக்கின்றனர்; கடினமான வேலைகளையும் மனமுவந்து செய்வர்; சுறுசுறுப்புடனும் தன்னம்பிக்கையுடனும் விடா முயற்சியுடனும் எவ்வேலையிலும் ஈடுபடுவர்.

அமெரிக்கர் ஒவ்வொருவரும் தமிழ்நாட்டுத் தொழி லாளரைப் போலவே சிறந்த உழைப்பாளிகள். தமிழ் நாட்டுத் தொழிலாளர் தம் உழைப்பால் இலங்கை, பர்மா, மலேயா போன்ற அண்டை நாடுகளின் வளத் தைப் பெருக்கினர். அமெரிக்கர் தம் திறமையைத் தம் நாட்டின் வளத்தையே பெருக்கப் பயன்படுத்தினர்; விஞ்ஞான உதவியை ஏற்றுக்கொண்டனர்; ஐரோப்பிய நாடுகளிலிருந்து மூலதனம் வரவழைத்துக் கொண்டனர்; திட்டமிட்டுப் பெரும் அளவில் தொழில் வளர்ச்சிக்கு அடிகோலினர். இவற்றின் பலனாக 350 ஆண்டுகளுக்கு முன் காடாக இருந்த ஒரு நாட்டை இன்று எல்லா உதவி களுக்கும் உலக நாடுகளில் பெரும்பாலானவை எதிர் பார்க்கும்படி செய்திருக்கின்றனர்!

அமெரிக்கரும் இந்தியரும்

அமெரிக்கரைப்பற்றி இந்தியருக்குச் சில தவருன கருத்துக்கள் இருக்கின்றன. இவ்வாறே இந்தியரைப்பற்றி அமெரிக்கரிடமும் சில தவருன கருத்துக்கள் நிலவுகின்றன. இந்தியர் ஒவ்வொருவரும் மன்னராகவோ முற்றும் துறந்த முனிவராகவோ இருப்பர்; இல்லையேல், பிச்சைக்காரராகத்தான் இருக்கவேண்டுமென்றும், இந்தியர் அனைவர்க்கும் வடமொழி, சோதிடம், பாம்பு பிடிப்பது ஆகியவை தெரியுமென்றும், இந்தியா 'மந்திர வித்தைகள் நிறைந்த' நாடென்றும் அமெரிக்கர் நினைக்கிருர்கள். அமெரிக்கர் ஒவ்வொருவரும் குபேரர் என்பதாகவும், அமெரிக்கச் சாலைகளில் தங்கம் கொட்டிக் கிடப்பதாகவும் நம் நாட்டில் நினைக்கிருேம். இரண்டும் தவறு!

இருவகை இந்தியர்கள்

இந்தியாவைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் கொலம்பஸ் அமெரிக்காவை அடைந்தார். தாம் கண்ட நாடு இந்தியா என்று அவர் எண்ணியதால், அந்த நாட்டுக்கு 'இந்தியா' என்றும் அங்கு வாழ்ந்த ஆதி அமெரிக்கருக்கு 'இந்தியர்' என்றும் கொலம்பஸ் பெயரிட்டார். ஆதி அமெரிக்கர் இப்போது நான்கு லட்சம் பேர் இருக்கின்றனர். அவர்களும் இன்றைய அமெரிக்கரும் தனித் தனியே வாழ்கின்றனர். ஆதி அமெரிக்கர் சிவப்பு நிறத்தவராக இருப்பதால், அவர்களுக்குச் சிவப்பு இந்தியர் என்ற பெயர் இப்போது வழங்கி வருகிறது. நம் நாட்டவரைச் சிவப்பு இந்தியரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, நம் நாட்டவரின் பாஸ்போர்ட்டுகளில் கிழக்கு இந்தியர் (East Indians) என்ற சொற்களையே அமெரிக்க அரசாங்கத்தார் எழுதுகின்றனர்.

நம் நாட்டில் தோடர், படகர் போன்ற நீலகிரி மலையினத்தவர் போல, சிவப்பு இந்தியர் தொகையும் அருகி வருகிறது. அவர்களுக்கு இனி வாழ்வு இல்லை; இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுவார்களோ என்று சிலசமயம் அஞ்சவும் நேருகிறது. நவாஹோ இந்தியரும் வேறு சில சிவப்பு இந்தியரும் பொருளாதாரத் துறையில் முன்னேறி வருகின்றனர்.

மணிகள் கோத்த ஆடையும், இறகு செருகிய தலைக் கவசமும் கையில் சுழலும் கோடரியும் இவர்களுடைய அடையாளங்கள். இவர்களில் பலர் மெல்ல மெல்ல வெள்ளைக்காரர்களுடன் இரண்டறக் கலந்து வருகின்றனர் சிவப்பு இந்தியர் தொகை 5 லட்சம். சிவப்பு இந்தியர் ஒருவர் அமெரிக்கக் குடியரசின் துணைத்தலைவராக 1929 முதல் 1933 வரை இருந்தார்.

நீக்ரோக்கள்

அமெரிக்காவில் நீக்ரோக்கள் இரண்டு கோடிப் பேர் உள்ளனர். இந்தியாவில் ஹரிஜனங்களைப்போல அமெரிக்காவில் நீக்ரோக்கள் இருக்கின்றனர். இந்த இரு பிரிவினரும் இப்போதுதான் பிற இனத்தவருடன் ஒத்த நிலையை அடைந்து வருகிறார்கள். இந்தியாவில் ஹரிஜனங்களுக்கு இருப்பதுபோலவே அமெரிக்காவில் சட்டப்படி நீக்ரோக்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. இந்தியாவில் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கு மகாத்மா காந்தியடிகள் உழைத்தது போலவே, அமெரிக்காவில் நீக்ரோக்களை அடிமைப்படுத்தும் வழக்கத்தை ஒழிக்கவும், அவர்களை வெள்ளையர் சுரண்டுவதற்கு முற்றுப் புள்ளி வைக்கவும் ஆப்ரகாம் லிங்கன் (Abraham Lincoln) முயன்றார். இந்தியாவில் ஏனைய பகுதிகளைவிட மலையா

ளத்தில் ஹரிஜனங்களின் நிலை மிக இழிவாக இருந்தது போன்றே, அமெரிக்காவில் வடக்கேயுள்ள 35 இராச்சியங்களைவிட பதின்மூன்று தெற்கு இராச்சியங்களில் (Southern States) நீக்ரோக்களின் நிலை இன்னும் தாழ்ந்ததாகவே இருந்து வருகிறது. இந்த இராச்சியங்களில் லிட்டில்ராக் முதலிய இடங்களில் 1963-இல் கூட நிறவெறியின் விளைவாகப் பல நிகழ்ச்சிகள் நடந்தன. நீக்ரோக்களுக்குத் தனியாக மருத்துவ மனைகள் அமெரிக்காவில் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. பல்கலைக் கழகங்களில் சில ஆண்டுகளாகத்தான் நீக்ரோ மாணவர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். வெள்ளைக்காரர்களுக்குச் சமமான அந்தஸ்தும் உரிமையும் நீக்ரோக்களுக்குக் கிடைக்க, தலைவர் கென்னடி தம்மாலான யாவும் துணிந்து செய்து வருகிறார். வாணிகத்திலும் பிற துறைகளிலும் நீக்ரோக்கள் விரைவாக முன்னேறி வருகின்றனர். அணுக் குண்டைக் கண்டுபிடித்த பன்னிரண்டு விஞ்ஞானிகளுள் ஒருவர் ஒரு நீக்ரோ. புகழ்பெற்ற இசைவாணர் பால் ரோப்ஸன் குத்துச்சண்டை வீரர் ஜோ லூயி (Joe Louis), ஐக்கிய நாடுகள் குழுவின் பிரதிநிதியாகப் பாலஸ்தீனத்தில் யூதருக்கும் அராபியருக்கும் நடுவராக இருந்து அமைதி நிலவப் பெரும்பாடுபட்டு 1950-ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற டாக்டர் பஞ்சு (Bunche) ஆகியோர் நீக்ரோக்களே. மற்ற உயர்பதவிகளும் அரசியல் காரணங்களுக்காக நீக்ரோக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பிற அமெரிக்கரைப் போலவே நீக்ரோக்களும் பந்தயங் கட்டி விரைவாகப் பொருள் ஈட்டும் சூதுகளில் பெருவிருப்புடையவர்கள்.

அமெரிக்கரின் சிறப்பியல்புகள்

அமெரிக்கர் பரந்த நோக்கமும், இளமை உள்ளமும், எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்த அறிவும் சிறிது பழகின

வுடனேயே பிறரைக் கவரும்படியாக விருந்தோம்பும் குணமும் நிறைந்தவர்கள். பல்கலைக் கழகப் பட்டங்களை அமெரிக்கர் தம் பெயருக்குப்பின் சேர்த்துக்கொள்வதில்லை. அமெரிக்க அரசாங்கத்தார் பட்டங்கள் வழங்குவதுமில்லை. கலை, மதப்பற்று, ஆத்மீக விஷயங்கள் ஆகியவற்றில் ஆங்கில, பிரெஞ்சு மக்களைப் போலத் தொன்மையான பெருமை அமெரிக்கருக்கு இல்லை. எனினும், நுண்கலை வளர்ச்சியில் அமெரிக்கர் இப்போது கவனம் செலுத்தி வருகின்றனர். இதன் பயனாகக் கலையுலகில் ஒரு மறுமலர்ச்சி அமெரிக்காவில் தோன்றியிருக்கிறது.

மகாத்மா காந்தியடிகளின் அறிவுரைகளை அறிந்து பின்பற்ற வேண்டும் என்ற ஆவல் அமெரிக்கர் பலருக்கு இந்நாளில் ஏற்பட்டிருக்கிறது. சுவாமி விவேகானந்தர் இந்து மத அறவுரைகளைப்பற்றிச் சிக்காகோவில் 1893-இல் மதங்களின் பாராளுமன்றத்தில் சொற்பொழிவு செய்து, பிறகு 1895 வரை அமெரிக்காவெங்கும் சுற்றுப் பயணம் செய்ததன் பயனாகப் பல நகரங்களில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்கர் பலர் அவைகளில் ஈடுபட்டுள்ளனர்.

1894-இல் நியூயார்க்கில் வேதாந்த சங்கம் ஏற்பட்டது. அந்நகரில் இராமகிருஷ்ணர்—விவேகாநந்தர் நிறுவனம் (Center) ஒன்றும் நடைபெற்று வருகிறது. பாஸ்டன், ரோடு ஐலண்டைச் சேர்ந்த பிராவிடன்சு, சிக்காகோ, சீயாட்டில், சான்பிரான்சிஸ்கோ, பெர்க்லே ஆகிய இடங்களிலும், ஹாலிவுட்டிலும் வேதாந்த சங்கங்கள் இராமகிருஷ்ண மடத்துத் துறவிகளின் மேற்பார்வையில் நன்கு இயங்குகின்றன. ஹாலிவுட்டில் சாந்தா பார்பாரா என்ற இடத்தில் இராமகிருஷ்ண சங்கத்தார் ஒரு கோயில் கட்டியுள்ளனர்.

அமெரிக்கரிடம் இயற்கையாகவே நகைச்சுவை மிகுதியாக உண்டு; தன்னை மறந்து நகைச்சுவையில் ஈடுபட்டுச் சிரிப்பது அவர்களுடைய இயல்பு. சாரமற்ற செய்திகளையும் பிறர் சுவைக்கும்படி செய்வர். அவர்களுடைய பேச்சில் பரபரப்பும் ஆர்வமும் இருக்கும். சிரிப்பை அவர்கள் ஒரு பயிற்சியாகக் கொள்கின்றனர். வாழ்வின் வெற்றிக்கு முகமலர்ச்சி இன்றியமையாதது என்பது அமெரிக்கர் கருத்து. அமெரிக்கரின் நகைச்சுவைக்குச் சான்றாகப் பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். கிறிஸ்துமஸ் பண்டிகை நாளில் போக்குவரவுச் சட்டங்களை மீறுபவர் தண்டிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக அவர்களுடைய வாகனங்களில் கிறிஸ்துமஸ் வாழ்த்துத் தாள்களைப் போலீசார் ஒட்டுவர்.

அமெரிக்கர் வீண்வேலையை விரும்பார். அவர்களுக்கு அதற்கு நேரமும் கிடையாது. 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற முறையையே அவர்கள் விரும்புவர். எடுத்துக்காட்டாக ரிடக்சன்-இன்-டாக்சஸ் (Reduction in taxes) என்பதற்கு டாக்ஸ்-கட் (Tax Cut) என்றே அமெரிக்கர் கூறுவர். எனவே, அமெரிக்கர் கையாளும் ஆங்கில மொழி தனித்த இயல்புடையது. ஐந்து டாலர் நோட்டு என்பதற்கு ஐந்து டாலர் 'பில்' என்று சொல்லுவார்கள். ரசீது, பில் என்பதற்கெல்லாம் 'செக்' என்று சொல்லுவார்கள். 'பி. ஏ.' என்பதற்கு 'ஏ. பி.' என்பர் அமெரிக்கர். பெட்ரோல் என்பதற்கு அமெரிக்கர் 'காசோலீன்' என்றும், ரயில்வே என்பதற்கு 'ரயில் ரோடு' என்றும், 'லிமிடெட் கம்பனி' என்பதற்கு 'கார்ப்பரேஷன்' என்றும், 'லக்கேஜ்' என்பதற்கு 'பாகேஜ்" (Baggage) என்றுங் கூறுவர். அமெரிக்கர், சில சொற்களில் பயன்படுத்தும் எழுத்துக்களும் வியப்பைத் தருவன. அற்றுள் இரண்டை இங்கே கூறலாம்.

Night = Nite; Cheque = Chek.

பேசுவது போல் எழுதவேண்டும்; பேசப்படும் மொழிக்கும் எழுதப்படும் மொழிக்கும் வேறுபாடு இருத்தல் கூடாது என்பது அமெரிக்கரின் கட்சி.

அமெரிக்க அரசியல் சட்டத்தில் ஏழு (இந்திய அரசியல் சட்டத்தில் 395) பிரிவுகள்தான் உள்ளன. 1776 முதல் இன்றுவரை அந்த அரசியல் சட்டம் 16 தடவை தான் திருத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு திருத்தமும் மக்களுடைய உரிமைகளை விரிவாக்கவே, செய்யப் பட்டிருக்கிறது.

நீட்டல், நிறுத்தல், முகத்தல், நாணய அளவுகளைத் தசாம்ச முறையில் அமெரிக்கர் அமைத்திருக்கின்றனர். இந்த முறைப்படி, அமெரிக்காவில் ஒரு மைலுக்குப் பத்துப் பர்லாங்குகள் உள்ளன; ஓர் அந்தருக்கு 100 பவுண்டுகளும், ஒரு டன்னுக்கு 2000 பவுண்டுகளும்தான் உண்டு. டாலரின் சிறு பகுதிகளாகச் சதம் என்பது மட்டுமே உண்டு. 100 ந. பை. சேர்ந்தது ரூபாய் என்பது போல, 100 சதம் கொண்டது ஒரு டாலர்.

தபால் ஸ்டாம்புகளை ஒட்டியபின், 'ஏர் மெயில்' என்ற முத்திரைக்காக மற்றொரு சிறுகாகிதத்தை ஒட்டுவது இரட்டிப்பு வேலை எனக் கருதும் அமெரிக்கர் 'ஏர் மெயில்' என்று மேலச்சிட்ட (Overprint) ஸ்டாம்புகளை விற்கின்றனர். பார்சல்களில் பல ஸ்டாம்புகளை ஒட்டி நேரத்தை வீணாக்காமல், உரிய தபாற் கட்டணத்தை வாங்கிக்கொண்டு, அத்தொகையை ஒரு கருவி மூலம் ஒரு ரசீதாக அச்சிட்டுப் பார்சலின்மீது அந்த ரசீதை ஒட்டுகிறார்கள்.

சில மாதங்களில் 30 நாட்களும், வேறு சிலவற்றில் 31 நாட்களும், பிப்பிரவரியில் 28 நாட்களுமாக வேறுபட்

டிருப்பதற்குப் பதிலாக எல்லா மாதங்களிலும் 28 நாட்களே இருக்க வேண்டுமென்றும், ஜூன் ஜூலை மாதங்களுக்கு இடையே சோல் 'Sol' என்ற மாதம் புதிதாக அமைக்கப்பட்டு 13 மாதங்களுக்கு 28 நாட்கள் வீதம் 364 நாட்களும், ஆண்டு முடிவு நாள் என ஒரு நாளும் ஆக 365 நாட்கள் இருக்க வேண்டும் என்றும், இந்த 365 ஆம் நாளைப் புதிய ஞாயிற்றுக்கிழமை எனக் கருத வேண்டும் என்றும் அமெரிக்கர் சிலர் விரும்புகிறார்கள். இம்முறைப்படி எல்லா ஆண்டுகளிலும் எந்த மாதத்திலும் குறிப்பிட்ட ஒரு தேதி ஒரு கிழமையாகவே இருக்கும். வெஸ்ட்கிளாக்ஸ், கோடாக், ஹெர்ஸ்ட் போன்ற 400 பெரிய அமெரிக்க வணிகக் குழுவினர் இம்முறைப்படி, தங்கள் ஆண்டுகளை வகுத்திருக்கின்றனர்.

பல இனத்தவரின் கலப்பு

பல நாகரிகங்கள், கலையியல்புகள் இவற்றின் விளைவாக இன்றைய இந்தியா உருவாகியிருக்கிறது. இது போலவே, ஐரோப்பாவின் எல்லாப் பகுதி மக்களும் அமெரிக்காவில் குடியேறி யிருக்கின்றனர். தாம் வாழும் நாட்டினிடமுள்ள பற்றினாலும், கலப்பு மணங்களாலும் இவர்கள் தங்களைத் தனித்தனி இனங்களாகக் கருதுவதில்லை. எல்லோரும் ஓர் குலம் (அமெரிக்கக் குலம்), எல்லோரும் ஓர் இனம் (அமெரிக்க இனம்) என்ற எண்ணத்துடனேயே வாழ்கின்றனர்.

உரிமை மனப்பான்மை

தம் நாட்டின் வளத்தைப் பெருக்குவது, தனிப்பட்டவரின் சொத்து உரிமையைக் காப்பது, தாம் தாம் விரும்பிய தொழிலைச் செய்வது, தம் குடும்பத்தைப்

பேணுவது, தாம்விரும்பும் அரசியல்முறையை அமைப்பது, தத்தம் கடவுளரை வழிபடுவது, உலக இன்பங்களைத் துய்ப்பது ஆகியவற்றுக்குத் தங்கள் நாட்டில் முழு உரிமை இருப்பதுபற்றி அமெரிக்கர் பெருமைப்படுகிறார்கள்.

கிறிஸ்தவர் அனைவரும் (God the Father, God the Son, and God the Holy Ghost என்ற) மூன்று கடவுளரிடம் நம்பிக்கை உடையவர்கள். அமெரிக்கர் 'God the Private Enterprise' தனிப்பட்டவர் தம் விருப்பப்படி அரசாங்க இடையூறின்றிப் பொருள் ஈட்டத் தொழில் செய்யும் உரிமை' என்ற கடவுளையும் சேர்த்து நான்கு கடவுளரிடத்தில் நம்பிக்கை உடையவர் என்று கேலியாகச் சொல்லுவதுண்டு! அமெரிக்காவில் அரசாங்கம் நடத்தும் ஒரே தொழில் அஞ்சல் நிலையம் ஆகும்; போதிய ஊதியமின்மையால், இவற்றை நடத்த அமெரிக்க வணிகர் முன்வரவில்லையாம்.

போட்டியிடும் ரயில்கள்

அமெரிக்காவில் மொத்தம் 705 குழுக்கள் ரயில்களை நடத்துகின்றன. ஒரு நகரிலிருந்து மற்றொரு நகருக்கு இரண்டு அல்லது மூன்று குழுக்களின் ரயில்கள் செல்லுகின்றன. ஒவ்வொரு குழுவும் தனித் தனியாகத் தன் செலவில் ரயில் பாதைகளும் ரயில் நிலையங்களும் அமைத்துக்கொண்டிருக்கிறது. நம் நாட்டு மூன்றாவது வகுப்புக்கு நிகரான 'கோச்சு' என்னும் வகுப்பில், ஒவ்வொருவருக்கும் தனியிடமும், நம் நாட்டு இரண்டாம் வகுப்பிலுள்ளதைவிட மிகுதியான வசதிகளும் இருக்கின்றன. உட்காரும் இடத்தை ஒதுக்கி வைத்திருப்பதற்குத் தனிக் கட்டணம் (Reservation Fee) செலுத்த வேண்டுவதில்லை. ரயில் புறப்படும் இடங்களில் மட்டுமன்றி, இடையிலுள்ள நிலையங்களிலும் இடம் ஒதுக்கப்படுகிறது.

சிறு கட்டணம் செலுத்தினல் ரயிலிலுள்ள கண்டக்டரிடம் ஒரு தலையணையை வாடகைக்கு வாங்கிக் கொள்ளலாம். பிரயாணிகள் பெட்டிகளையும் ஏனைய பொருள்களையும் வைப்பதற்கு ஒவ்வொரு வண்டியிலும் தனி இடம் உண்டு. அந்த இடத்தினில் மட்டுந்தான் பிராயாணிகள் தங்கள் பொருள்களை வைக்கின்றனர். நம் நாட்டில் நிகழ்வதுபோல் பொருள்கள் திருட்டுப் போவதுமில்லை; ''திருடர்கள் ஜாக்கிரதை'' என்ற அறிவிப்புப் பலகைகளும் இல்லை. குறைந்த பொருள்களுடன் மட்டுமே மக்கள் பிரயாணம் செய்கிருர்கள். ஆகையால், 'குறைந்த சாமான், நிறைந்த வசதி; பயணத்தை இனிதாக்குக' என்ற விளம்பரம் அங்கே தேவைப்படவில்லை. நெடுந் தூரம் செல்லும் ரயில்கள் எல்லாவற்றிலும் உணவுச் சாலையும் உண்டு; நமக்கு வேண்டும் உணவின் பெயரை நாம் ஒரு தாளில் எழுதிக் கொடுப்பது இந்த உணவுச் சாலைகளில் வழக்கம்.

முதலாளிகள்

அமெரிக்காவில் பெரு மூலதனம் உடையவர்மீது வெறுப்பு இல்லை. காரணம், அச் செல்வர்கள் நாட்டின் நலத்தைப் பாதுகாப்பதேயாகும். அநேகமாக எல்லா அமெரிக்கப் பல்கலைக் கழகங்களும் தனிப்பட்டவர் நிறுவியவையே. ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியார் புதுப் புது மாதிரிக் கார்களைச் சிறு உருவில் செய்து காட்டுபவர்கட்குப் பெரும் பரிசுகள் கொடுக்கின்றனர். ஒரு கோடி மாணவருக்கு, ஆண்டுதோறும் இக்கம்பெனியார் புத்தகங்களும் படங்களும் அச்சிட்ட சொற்பொழிவுகளும் அன்பளிப்பாக வழங்குகின்றனர். தொழில் தொடர்பு இல்லாக் கடிதங்களுக்குப் பதில் எழுதும் பண்பாடும் வருவாயில்லாத அறிவுத் துறைகளில் ஈடுபடும்

அறக் குழுக்களை அமைப்பதும் அமெரிக்கக் கோடீசுவரர்களுக்கு உடன் பிறந்த இயல்பு.

தொழிலாளர் நிலை

அரசாங்கத்தார் மட்டுமே தொழிலாளரின் நலத்தைப் பாதுகாப்பர் என்ற கொள்கையை அமெரிக்கர் ஒப்புக் கொள்ளவில்லை. தொழிலாளி என்றால் வேலையாள் என்றோ, மதிப்பிற் குறைந்தவர் என்றோ பொருள் இல்லை; ஏனெனில், அமெரிக்கர் வீடுகளில் வேலையாட்களே இல்லை. இயந்திர உதவியோடு ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு தம் வேலைகளைத் தாமே செய்கின்றனர்.

ஹோட்டல்களில் பாத்திரம் கழுவுதல், தியேட்டர்களில் டிக்கட் விற்பது, விவசாயப் பண்ணைகளில் உதவி செய்வது ஆகிய வேலைகளை மாணவர்கள் விடுமுறை நாட்களிலும், கல்லூரி நாட்களில் ஓய்வு நேரத்திலும் செய்கின்றனர்; இதனால் தங்களுக்குக் கிடைக்கும் சொந்த வருவாயின் வாயிலாகவே சிறு செலவுகளை எல்லா மாணவரும் ஈடுசெய்கின்றனர்; பெற்றோர் உதவியின்றியே பலர் கல்வி கற்றுவிடுவர். நம் நாட்டில் தாய் தந்தையரைத் துன்பப்படுத்தி, அவர்களிடமிருந்து பணம் பெற்று, அதை வீண் செலவு செய்து, கல்லூரிகளில் கல்வி பெறும் மாணவமாணவியர் சிலரைக் காணும்போது அமெரிக்க இளைஞர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பெரிய படிப்பினை அடிக்கடி என் நினைவுக்கு வரும்.

வேறு வழிகளில் வருவாய் கிடைத்தபோதிலுங்கூட, ஒவ்வோர் அமெரிக்கரும் ஒரு வேலை செய்ய விரும்புகின்றனர். அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த ரூஸ்வெல்ட்டின் மக்களுள் ஒருவர் சுரங்கத் தொழிலாளி

யாயும், மற்ருெருவர் புத்தகக் கடையில் வேலையாளாகவும் இருக்கின்றனர். வேலை செய்வதில் அமெரிக்கர் பெருமைப் படுகின்றனர்.

அமெரிக்கத் தொழிலாளி பிறரைவிடத் தான் தாழ்ந்த நிலையிலிருப்பதாகக் கருதுவதில்லை; பிறர்மீது பொரு மைப் படுவதுமில்லை. நியூயார்க்கில் டாக்சிக்கார் ஓட்டு பவர்களில் சிலர் தம் பிரயாணிகளுக்கு அன்பளிப்பாகச் சிகரெட்டுத் தருவதும் நிகழ்ச்சி முறை. தலைமுடி திருத்துபவர்கள் வாடிக்கைக்காரரைத் தம் இல்லங் களுக்கு விருந்துக்கு அழைப்பதும் உண்டு.

தொழிலாளரைவிடத் தாங்கள் உயர்ந்த நிலையிலிருப் பவர் என்ற மனப்பான்மை தொழிலாளராக இல்லாதவர் களிடம் கிடையாது. ஒருவர் தமக்குக் கீழ் வேலை செய் வதாக எந்த அமெரிக்கரும் சொல்லுவதில்லை; தம்முடன் வேலை செய்வதாகவே சொல்லுவர். தபால்கள் கொடுப்ப வரை அவர் அவ்வேலை பார்க்கும்போது மட்டுமே ‘போஸ்ட்மன்’ ஆகக் கருதுவது அமெரிக்க வழக்கம். ஓய்வு நேரத்திலும் தபால் விடுமுறை நாட்களிலுங்கூட அவரை, ‘போஸ்ட்மன்’ ஆகக் கருதும் இந்தியாவிலுள்ள வழக்கம் அமெரிக்காவில் இல்லை. வேலை நேரம் தவிர, எஞ்சிய நேரங்களில் தொழிலாளரையும் சமூகத்தில் ஓர் உறுப்பினர் என்றே அமெரிக்கர் நினைக்கிருர்கள்.

எந்த வேலைக்கும் ஒரு மதிப்புக் கொடுப்பதும் அமெரிக்கர் வழக்கம். விழாக்களின்போது, வீட்டினுள் பந்தல் அமைப்பது, காகிதங்களில் சித்திர வேலை செய்வது போன்ற தொழில் செய்பவருக்கு இண்டீரியர் டெகரேடர் (Interior Decorator) என்ற சிறப்பான பெயருண்டு. இதுபோலவே விவசாய மேஸ்திரிக்கு, பண்ணை எஞ்சினீயர் (Farm Engineer) என்றும், முடி

திருத்துபவருக்கு ஹேர் கன்சல்டன்ட் (Hain Consultant) (முடி ஆலோசனையாளர்) என்றும், வண்ணருக்குக் (Cleaner) என்றும், தையற்காரருக்குக் கன்வெர்டர் (Converter) என்றும், விசாரணைக் குமாஸ்தா (Enquiry Clerk) வுக்கு ரிசப்சன் மானேஜர் (Reception Manager) என்றும், லிப்ட் இயக்குபவருக்கு எலிவேட்டர் ஆப்பரேடர் (Elevator operator) என்றும், மயானத்தில் சடங்குகள் செய்யும் தொழிலாளிக்குப் புயூனரல் டைரக்டர் (Funeral Director)என்றும், டைப் அடிக்கும் இயந்திரத்தை இயக்குபவருக்கு டைப்பிஸ்ட் என்ற சொல்லுக்குப் பதிலாகச் செயலாளர் என்றும் மதிப்பிற்குரிய பெயர்கள் வழங்குகின்றன.

அமெரிக்காவில் குறைந்த சம்பளம் மணிக்கு 75 சதம் அதாவது ரூ. 3-62. இதனுல் வாரத்துக்கு நாற்பது மணி நேரம் வேலை பார்க்கும் தொழிலாளிக்கு மாதம் ரூ. 600 கிடைக்கிறது! இதுவே குறைந்த சம்பளம். தொழில் படிப்பும் தொழில் அனுபவமும் உள்ளவர்களுக்கு அதற்கேற்பக் கூடுதலான சம்பளம் உண்டு; உணவுச் சாலைகளில் உணவு படைக்கும் பணிப் பெண்களுக்கும், வேறு பலருக்கும் உணவு உட்கொள்ளுபவர் கொடுக்கும் அன்பளிப்பு மட்டும், நம் நாட்டில் அதே வேலை செய்பவருக்குள்ள சம்பளத்தைவிடக் கூடுதலாக இருக்கிறது.

எந்த அமெரிக்கத் தொழிலாளியும் ஒரு கிலோ சர்க்கரை வாங்க 5 நிமிடமும், கோதுமை ரொட்டி வாங்க 6 நிமிடமும், ஒரு கிலோ காப்பிக்கொட்டை வாங்க 15 நிமிடமும், ஒரு கோழி வாங்க 27 நிமிடமும், ஒரு கிலோ வெண்ணெய் வாங்க 40 நிமிடமும், ஒரு மாத வீட்டு வாடகை கொடுக்க 3 நாட்களும் வேலை செய்தால் போதும். அந்தக் காலத்துக்குள் இவை வாங்க

வேண்டியதற்கான சம்பளத்தை இவன் பெறுவான். அமெரிக்கத் தொழிலாளரின் பொருளாதாரச் செழிப்பை பின்வரும் நிகழ்ச்சிகள் விளக்குவன.

ஒரு தொழிற்சாலையில் சம்பளம் கொடுத்த நாளில், ஒரு தொழிலாளி தன் சம்பளப் பணத்தைக் காணுமற் போக்கிவிட்டான். உடனே, அவனுடைய தோழன் ஒருவன் தன் தொப்பியை எடுத்து எல்லோரிடமும் சுற்றி அனுப்பினுன். வார முழுவதும் வேலை செய்த தங்கள் சகோதரத் தொழிலாளியை வெறுங்கையுடன் மனைவி மக்களிடம் அனுப்புவது முறையன்று என்று எண்ணி, ஒவ்வொரு தொழிலாளியும் பைக்குள் கையைவிட்டு டாலர் பில்களை (கரன்சி நோட்டை அமெரிக்கர் பில் என்பர்) தொப்பியில் குவித்தார்களாம். இறுதியில், அந்தத் தொழிலாளிக்குத் தன் சம்பளத்தைவிடக் கூடுதலான தொகை கிடைத்துவிட்டதாம்!

அமெரிக்க மோட்டார்த் தொழிற்சாலைகளுக்குத் தொழிலாளிகள் தம் இல்லங்களிலிருந்து சொந்த மோட்டார்க் கார்களிலாவது அல்லது சொந்த மோட்டார் சைகிள்களிலாவது வருவது வழக்கம். இதையொட்டி வழங்கும் கதை ஒன்றுண்டு. அது வருமாறு:

ஓர் அமெரிக்கத் தொழிலாளி ரஷ்யாவுக்குச் சென்றுன்; அங்கிருந்த ரஷ்யத் தொழிலாளி தொழிற்சாலை ஒன்றைக் காட்டி, ''இது தொழிலாளரைச் சேர்ந்தது. இந்நாட்டில் எல்லாம் பொது உடைமை'' என்று பெருமையாகச் சொன்னுன். அங்கே நிற்கும் ஒரு சில கார்கள் யாருடையன? என்ற வினுவுக்கு, அவை தொழிற்சாலையை மேற்பார்க்கும் ஒருசிலரைச் சேர்ந்தவை என ரஷ்யத் தொழிலாளி விடை பகர்ந்தான். சில வாரங்களுக்குப் பின்னர், அந்த ரஷ்யத் தொழிலாளி அமெரிக்கத் தொழிலாளியின் விருந்தினனுக வந்து,

டெட்ராயிட் நகரிலுள்ள ஒரு தொழிற்சாலையைப் பார்வையிட்டான். இந்தத் தொழிற்சாலை யாருடையது? என்று ரஷ்யத் தொழிலாளி கேட்டான். "தொழிற்சாலை முதலாளிகளைச் சேர்ந்தது; ஆனால் தொழிற்சாலைக்கு வெளியே நிற்கும் பல்லாயிரக் கணக்கான கார்கள் தொழிலாளருக்குச் சொந்தமானவை!" என்று அமெரிக்கத் தொழிலாளி கூறவே, ரஷ்யத் தொழிலாளி வாயடங்கிப் போனான்.

விரைவில் வளர்ச்சியடையும் பண்பாடு

அமெரிக்கரின் குணச் சிறப்புக்களை மேலும் கவனிப்போம். புத்தம் புதிய ஆராய்ச்சிகள் செய்வதிலும், முன்னமே பிறர் செய்த ஆராய்ச்சிகளைப் பயன்படுத்திக் கொள்ளுவதிலும் அமெரிக்கர் இணையற்றவர். கருத்துக்களை முதலிற் சொல்பவர் பிரிட்டிஷார்; ஆனால் அவற்றை நிறைவேற்றி வைப்பவர் அமெரிக்கரே. உதாரணமாகத் தொலைக் காட்சி ஆராய்ச்சியில் பிரிட்டிஷார் முதன்மை வகித்தனர். 1846-இல்தான் இதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய அமெரிக்கர், 1963-இல் 150 தொலைக் காட்சி நிலையங்களை நிறுவியிருக்கின்றனர். விரைவாக எதையும் செய்யும் ஆற்றல் அமெரிக்கருக்கு உண்டு.

'அமெரிக்கர்சாலைகளில் நடப்பதில்லை; ஓடுகிறார்கள்!' என்று சொல்லுவது வழக்கம். "நாம் நீரில் வாழும் உயிர்களைப்போல நீந்தவும், பறவைகளைப் போல வானத்தில் பறக்கவும் கற்றுக்கொண்டுவிட்டோம். ஆனால் மனிதர்களைப் போலத் தரையில் நடக்க இன்னும் பழகவில்லை!" என்று ஓர் அமெரிக்கக் கட்டுரையாளர் வேடிக்கையாக எழுதியிருந்தார்.

"நன்றாயின் இன்றே செய்க", "இன்று என்பதும் நாளை என்பதும் இல்லை யென்பதற்கு அடையாளம்"

என்பவற்றை வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்ட அமெரிக்கர் உலகிலேயே உயரமான எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தை *19* மாதங்களில் கட்டி முடித்தனர். ஒவ்வொன்றும் *10,000* டாலர் விலையுள்ள *10* லட்சம் வீடுகளை ஆண்டுதோறும் கட்டுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபைக் கட்டிடத்தை ஓராண்டுக்குள் கட்டி முடித்தனர். எவருக்கும், அவரவர் அளவுக்குச் சரியான உடைகளை ஐந்தாவது அவென்யூவிலுள்ள கடைகளில் துணியைக் கொடுத்த ஒரு மணி நேரத்தில் தருகின்றனர்.

குறைந்த உறக்கம்

அமெரிக்கரின் மற்ருேர் இயல்பு அவர்கள் மிகக் குறைந்த நேரம் உறங்குவதாகும். ஓயாமல் வேலை செய்வதாலும், கவலையாலும், உணர்ச்சி வேகத்தாலும் போதிய உறக்கமின்றி வாழும் அமெரிக்கர் ஒரு கோடிப் பேருளர். உறக்கம் வருவதற்காக ஒவ்வோர் இரவிலும் *65* லட்சம் மாத்திரைகளை அமெரிக்கர் உட்கொள்ளுகின்றனர். போதிய உறக்கமின்மையால், பல லட்சம் அமெரிக்கர் நோய்வாய்ப்பட்டு இருக்கின்றனர்.

அமெரிக்கர் எந்த வேலையையும் பிறரிடமிருந்து இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளுவதில்லை; அதற்கென ஒரு தொகை கொடுத்துவிடுவார்; க்யூ வரிசையில் முன் இடத்தை விட்டுக்கொடுப்பவர்களுக்கு ஒரு டாலர் வரை கொடுக்கும் அமெரிக்கரைப் பல ஐரோப்பிய நாடுகளிற் கண்டேன். இதைப்போன்று மற்றவர்களும் தம்மிடம் பெறும் ஒவ்வோர் உதவிக்கும் தமக்குப் பொருளீடு செய்ய வேண்டுமென்று அமெரிக்கர் எதிர்பார்க்கிருர்கள்.

அமெரிக்கரின் கவலைகள் :—இறக்குமதியை விட ஏற்றுமதி ஆண்டுதோறும் மிகுந்துகொண்டே போகிறதே!

இந் நிலையை எவ்வாறு சரிக்கட்டுவது? 100 ஆண்டுகட்கு மேலும் உயிருடனிருப்பவர்களின் தொகை இரண்டு கோடிக்கும் அதிகமாகக் கூடிக் கொண்டே போகிறதே! இதனுல் தீமைகள் ஏற்படுமா?

அமெரிக்காவில் இல்லாதவை :—சமூக நன்மைக்கான எல்லாவற்றையும் அரசாங்கமே செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கும் மனப்பான்மை, போதிய நேரம், பஞ்சம், குண்டு உள்ள சோடாப் புட்டிகள், பிளாட்பாரம் டிக்கட்டுகள், மாம்பழம், தணிக்கை அதிகாரி (Censor), உணவுப்பங்கீடு, மாணவர் வேலை நிறுத்தம், மரியாதையைப்பற்றிய தப்பபிப்பிராயங்கள் (Formality), சம்பிரதாயத்துக்காகவும் சட்டத்துக்காகவும் வேடிக்கையான காரியங்களைச் செய்வது, முடிவாகிவிட்ட விஷயங்களின் தகுதி-தகுதியின்மை பற்றி வெற்றுரையாடல்.

அமெரிக்கருக்கு விருப்பமானவை:—சுறுசுறுப்பான பேச்சு, தோட்டவேலை, இயற்கை அழகில் இன்புறுதல், பிளாஸ்டிக் பொருள்கள், பல பக்கங்கள் உள்ள விரிவான கடிதங்கள், சாக்லட் சூயிங் கம் என்னும் சுவைக்கும் மிட்டாய், உயிரைத் துரும்பாக மதிக்கும் இயல்பு, புள்ளி விவரங்கள், இளமை, பல நிறங்கள், விஞ்ஞானப் புதுமைகள், ஊர் சுற்றுதல், தேனீ வளர்த்தல், சோதிடம், பொருட்காட்சி மண்டபம், 'கோக்க கோலா' என்ற குளிர்ந்த பானம், நீராடும் அறை, விருந்தோம்பல், லாப்ஸ்டர் (Lobstor). லாப்ஸ்டர் என்பது நடக்கும் கால்களுடைய ஓர் உயிரினம்; பெரிய உருவமுடையது; பெருங்கடலில் பிடிக்கப்படுவது; உணவாகப் பயன்படுபது.

3. பெண்கள்

ஒரு நாட்டில் மக்கள் வாழும் வகையை அறிவதற்கு, பெண்களின் நிலையையும் ஆராய்வது இன்றியமையாதது. அவர்களன்றி ஓரணும் அசையாது!

இந்த நூற்ருண்டில் அமெரிக்க ஆடவரும் பெண்டிரும் ஒருவரோடொருவர் எளிதாக மனவேறுபாடின்றிப் பழகி வருகின்றனர். பஸ் அல்லது ரயிலில், முன் பின் அறியாத ஒரு பெண்ணும் ஓர் ஆணும் அடுத்தடுத்து இருந்து பயணம் செய்யும்போது, அவர்கள் இருவரும் இனிமையாகப் பேசிக்கொள்வர். இதுபோன்ற நிகழ்ச்சிகளால் மேலும் உறவு கொண்டாட ஒருவர் விரும்புவதாக மற்றவர் கருதுவதில்லை.

உடல் வலிமை

ஆடவரைப் போலவே பெண்டிரும் கலங்காத நாட்டுப் பற்றும், அசைக்க முடியாத ஆண்மையும் அருளும், பொது நன்மைக்குப் பாடுபட வேண்டுமென்ற உறுதிப்பாடும், அதற்குரிய உடல் வலிமையும் உடையவர்களா யிருக்கின்றனர். ஆடவரைப் போலப் பெண்டிரும் விளையாட்டுகளில் மிக்க விருப்பமுடையவர். இருபாலரும் தமது முக்கிய அலுவல்களில் விளையாட்டையும் ஒன்றுகக் கருதுகின்றனர். எல்லா விதமான விளையாட்டுகளிலும் பெண்களும் ஈடுபடுகின்றனர். பெரும்பான்மையான அமெரிக்கப் பெண்கள் மோட்டார்க் கார்களை ஓட்டுகின்றனர்; அமெரிக்காவில் ஆடவர் மோட்டார்க் கார்கள் ஓட்டும்போதுதான் பெரும்பாலும் விபத்துக்கள் நேர்கின்றனவாம்! ஆகாய விமானம் ஓட்டும் ஆற்ற

லுள்ள பத்தாயிரம் அமெரிக்கப் பெண்டிர் இருப்பதாக அறிகிறோம். அமெரிக்கப் பெண்கள் தோட்டக் கலையிலும் ஆர்வமுடையவரா யிருக்கின்றனர்.

மணம்

அமெரிக்காவில், மணம் செய்துகொண்டே ஆக வேண்டும் என்பதில்லை. இதனால், ஆண்களிலும் சரி, பெண்களிலும் சரி, வயது வந்தும் மணமாகாதவர் பல்லாயிரவர் உளர். தத்தம் உரிமைகளை மனைவிக்கோ கணவனுக்கோ விட்டுக்கொடுக்கவும், குடும்பப் பொறுப்பை எற்கவும் இவர்கள் விரும்பாமையே இந் நிலைக்குக் காரணம்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும், குடும்பப் பொறுப் பேற்கக் கணவனைத் தேடும் வழக்கம் அமெரிக்காவில் இல்லை. இடையே, சில காலம் ஏதாவதொரு வேலையில் பெண்களும் அமருவது முறையாகிவிட்டது. சராசரி 23 வயதில் ஒரு பெண், 25 வயதுள்ள ஓர் இளைஞனைத் திருமணம் செய்துகொள்ளுவது வழக்கம்.

அமெரிக்காவில் காதல் முறையில் மணம் நடைபெறுகிறது. ஒவ்வொரு பெண்ணும் தான் விரும்பும் ஆண் மகனோடு பல மாதங்கள்—சிலர் சில ஆண்டுகள்—வரை எல்லாத் துறைகளிலும் கூடிப் பழகி, ஒருவர் மற்றவரின் பழக்கவழக்கம், விருப்பு வெறுப்பு, குற்றங் குறை ஆகியவற்றைத் தெரிந்து சம்மதித்துத்தான் திருமணம் முடித்துக் கொள்ளுகின்றனர். எனவே, மனம் ஒத்தாலன்றிச் செல்வம் அல்லது பதவிக்காகத் திருமணம் அமெரிக்காவில் நடைப்பெறுவதில்லை. சாதிமத வேறுபாடுகளால் திருமணங்கள் தடைப்படுவதில்லை. காதலித்துத்தன் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பெண் தன் தாய்

தந்தையர்க்குத் தெரிவித்தால்தான், அவர்கள் மண விழாவுக்கு வருவார்கள்.

மனம் ஒன்றுபடாவிடில், மண முறிவு (Divorce) செய்துகொள்ள இருதிறத்தாருக்கும் உரிமையுண்டு. மணமுறிவு செய்து கொள்ளுபவர்கள் பத்துப் பேரில் ஒருவர். சில சமயங்களில் அற்பமான காரணங்களால் மண முறிவு ஏற்படுகிறது. ''அமெரிக்காவில் ஒரு பெண் தான் அணியும் உடையைத் தன் கணவன் ரசிக்கவில்லை என்ற காரணத்திற்காகக்கூட விவாக ரத்துச் செய்துகொண்டு விடுகிறாள்; இப்படியே போய்க்கொண்டிருந்தால் இது எங்கு போய் முடியுமோ?'' என்று ஒரு பேராசிரியர் கேட்கிறார். இவ்வாறு பிரியும்போது, அவர்களில் யாராவது ஒருவர் தம்முடன் குழந்தைகளை அழைத்துச் செல்லுவர். குழந்தைகளைத் தாயார் அழைத்துச் செல்ல வேண்டுமென்றும், குழந்தைகளைப் பேணும் செலவிற்காக ஒரு தொகையைத் தந்தை சில ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் நீதிமன்றத்தார் கட்டளையிடுவர்.

கணவன் இறந்துவிடின் மனைவி மறுமணம் செய்து கொள்ளுவாள். பெரும்பாலும் கணவனை இழந்த பெண்களிடம் பெருஞ் செல்வம் சிக்குவதால், அவர்கள்மீது மற்றப் பெண்கள் பொறாமைப்படுவர்!

வர வர, மண முறிவு குறைந்து வருகிறது.

கணவனும் மனைவியும்

அமெரிக்கச் சமூகத்தில் கணவனும் மனைவியும் ஒருவர் மற்றொருவருடைய உரிமைகளையும் அவர்களுக்குரிய வசதிகளையும் உணர்ந்துகொண்டு, அவைகளுக்குத் தாம் எவ்வகையிலும் இடையூறாக இல்லாமல் வாழ்கின்றனர். வீட்டினுள் இருப்பதுபோலவே வெளியிலும் ஆணும்

பெண்ணும் சரிசமானமாக வாழ்கின்றனர். மணமான பெண்களும் எல்லா வேலைகளிலும் இருப்பது கண்கூடு.

ஆண்கள் செய்யும் எந்த வேலையையும் பெண்களும் செய்கின்றனர். இதனுல் வீட்டு வேலையைப் பார்க்கும் பெண்கள் அதற்கெனத் தமக்கு ஒரு சம்பளத்தைக் கணவரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். வருவாயில் மூன்றில் ஒரு பகுதியைக் கணவன் தன் சொந்தச் செலவுகளுக்கு வைத்துக்கொள்ளுவதும், ஒரு பகுதியை மனைவிக்கு (வீட்டு வேலைக்குப் பதிலாக அந்த நேரத்தில் வேறு வேலை செய்தால் அவள் பெறக்கூடிய வருவாய்க்கு ஈடாக)க் கொடுப்பதும், மூன்ருவது பகுதியிலிருந்து கணவனும் மனைவியும் குடும்பச் செலவு செய்வதும், பல அமெரிக்கக் குடும்பங்களில் வழக்கம்.

வீட்டு வேலை

அமெரிக்காவில் என்னைக் கவர்ந்தவற்றுள் குறிப்பிடத்தக்கது, மிகச் சில வீடுகளில் மாத்திரமே வேலையாட்கள் இருப்பதுதான். சமையல்போன்ற எல்லா வேலைகளிலும் நமக்கு விருந்தளிக்கும் குடும்பத்தினருக்கு விருந்தினர் உதவி புரிவதும் அமெரிக்காவில் வழக்கம்.

வேலையாளின்றியே அமெரிக்கப் பெண்கள் குடும்ப வேலைகளைச் செய்வதற்கு உதவும் பல கருவிகள் உள்ளன. இவற்றுள் சில:— ரொட்டி சுடும் கருவி (Toaster), முட்டையை உணவாக்கப் பயன்படும் கருவி, உணவைப் பக்குவமான நிலையில் வைத்திருக்கும் கருவி (Electric Deep Freezer), வெண்ணெய் திரட்ட உதவும் கருவி (Electric Churns), உண்ட கலங்களைக் கழுவ உதவும் கருவி (Electric Dish-washer), ஐஸ் பெட்டி (Refrigerator), துணி துவைக்குங் கருவி, துவைத்த துணியைக் காயவைக்குங் கருவி, மின்சாரத் தையல் இயந்திரம், மின்

சாரத்தின் துணையால் வீட்டைத் தூய்மையாக்குங் கருவி.

எல்லா அலுவலகங்களிலும் செயலாளர் வேலே செய்பவர்கள், சில்லறைக் கடைகளில் பொருள்களை விற்பவர்கள், நூலகராக இருப்பவர்கள் ஆகியோரில் பெரும்பான்மையோர் பெண்களே. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் நான்கில் ஒரு பங்கினர் பெண்டிரே. ஆசிரியர் பதவியிலும் பல்லாயிரம் பெண்கள் உளர். போலீஸ்காரராகவும் சுங்க ஊழியராகவும் ஓர் ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் வேலே பார்க்கின்றனர்.

பல பெண்கள் அளவிடற்கரிய இன்னல்களுக்கிடையே, காட்டிலாகாவில் பணியாற்றுகின்றனர். காடு வெட்டி நாடாக்குவதிலும் பல்லாயிரம் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். உலக முழுதும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்பது அமெரிக்கரின் ஆசை. இந்த இயல்புக்கேற்பப் பலர் ஆகாய விமானங்களில் பணிப்பெண்களாக உள்ளனர். இவைபோன்ற எண்ணற்ற தொழில்களில் பெண்கள் அமர்ந்திருப்பதால், ''தம் வீடு தவிர வேறு எங்கும் அமெரிக்கப் பெண்களைக் காணலாம்!'' என்று கேலியாகச் சொல்லுவதுண்டு.

அரசியல்

பல அமெரிக்க நகரங்களில் மேயர் பதவியைப் பெண்கள் வகிக்கின்றனர். இதைத் தவிர அரசியலில் நேரடியாகக் கலந்துகொள்ளும் அமெரிக்கப் பெண்கள் ஒரு சிலரே எனினும், இவர்கள் அமெரிக்க அரசியலில் மறைமுகமாக மிக்க செல்வாக்குடையவர்களாக இருக்கின்றனர்.

அமெரிக்கத் தலைவர் தேர்தலில், தேர்தலுக்கு நிற்பவரின் மனைவியைப் பற்றியும் வாக்காளர் கவனிப்பார்கள்.

அவள் தம் நாட்டின் முதன்மை வாய்ந்த பெண்ணு யிருக்கத் தகுதியுள்ளவளாக இருக்கவேண்டும் என்பதில் அமெரிக்கர் கண்ணுங் கருத்துமா யிருக்கின்றனர். மனே வியை விலக்கிய கணவர்கள் அமெரிக்கத் தேர்தல்களில் வெற்றி பெற்றதில்லே.

பொது நலப்பணி

தமிழ்நாட்டில் போலவே அமெரிக்காவிலும் ஆண் பாலரைக் காட்டிலும் பெண்பாலருக்குச் சமயப்பற்று மிகுதியாக உண்டு. ஞாயிற்றுக் கிழமையன்று கிறிஸ்தவ ஆலயங்களில் சிறுவர் சிறுமியருக்கு விவிலிய நூல் (Bible) வகுப்பு நடத்தும் பெண்கள் சில ஆயிரம் பேர் உளர்.

வேறு விதங்களில் சமூக நன்மைக்கான பணிகளில் பல அமெரிக்கப் பெண்கள் ஈடுபட்டுளள்னர். ஒய். டபிள்யூ. சீ. ஏ., பெண் சாரணர் ஆகிய இயக்கங்கள் உள்பட, பெண்களின் நலத்தைப் பேணப் பல கழகங்கள் அமெரிக்க நாடெங்கும் இயங்குகின்றன. வறுமையாலும் பிணி யாலும் வருந்தும் மக்களுக்கு ஆறுதல் அளிக்க இவற்றின் வாயிலாகப் பலவாருன தொண்டுகளே இம் மங்கையர் புரிந்து வருகின்றனர்.

குணங்கள்

பிறருக்குப் பயன்பட்டு வாழவேண்டு மென்ற எண்ணம் அமெரிக்கப் பெண்டிருக்கு உண்டு. அவர்கள், கூடி வாழும் இயல்புடையவர்கள். இயற்கை வனப்பில் ஈடுபடும் மனப்பண்பும், புன்முறுவல் பூத்த முகமும், நகைச்சுவை போற்றும் நா நலம்போன்ற நல்லியல்புகளும் அவர்களிடம் பொருந்தியுள்ளன. தாம் பெருஞ் செல்வர் என்ற அகந்தையான மனப்பான்மை அவர்களிடம் காணப்படவில்லே.

தோற்றம் எவ்வாறிருப்பினும் அவர்கள் எளிமை யான மனத்தரே. அமெரிக்கப் பெண்கள் புதுப்புது மாதிரியான உடைகளில் விருப்பமுடையவர். அவர்களுடைய உடைகள் மிக விரைவில் உருமாறுந் தன்மையன. அண்மையில், சேலை வாங்கும் ஆர்வம் பரவி வருகிறது.

பொழுது போக்காக, நாய் அல்லது பூனையை வளர்ப்பது பெண்களின் வழக்கம். பத்து அமெரிக்கப் பெண்களில், ஏழு பேர் பூனைகளை வளர்க்கின்றனர்; நான்கில் ஒருவர் பியானோ என்னும் இசைக் கருவியை வாசிக்கின்றனர். சென்னைக்கு வந்து சில மாதம் தங்கினால் மாதம் 30 ரூபாய் வாடகை கொடுத்துப் பியானோ இசைக்கும் அமெரிக்கப் பெண்களை யான் அறிவேன்.

அமெரிக்க ஆடவரைப்போலவே பெண்டிரும் போதிய நேரமின்றித் துன்பப்படுகின்றனர். இதனால் அவர்கள் தம் நீண்ட கூந்தலை வளர்த்துப் பலவாருகப் பின்னித் தொங்க விடுவதற்குப் பதிலாக ஆடவரைப் போலவே தாமும் தலைமுடியைக் கத்திரித்து விடுகின்றனர்.

அமெரிக்காவில், எங்கும் எப்போதும் பெண்களுக்குத் தக்க மதிப்புக் கொடுக்கப்படுகிறது. ஓரிடத்திற்குள் செல்லும்போது ஆடவரே கதவைத் திறந்துவிட்டு. பெண் உள்ளே சென்ற பின்னரே தாம் செல்லவேண்டும். ஓர் ஆண் ஒரு பெண்ணைச் சந்திக்கும்போது, அவளுடன் கை குலுக்குவதா இல்லையா என்பதை அவளே முடிவு செய்யவேண்டும். இவை போன்ற நிகழ்ச்சிகள் மிகப் பல.

இந்தத் தலைமுறையில், அமெரிக்கப் பெண்களில் தலை சிறந்து விளங்கியவர் திருமதி எலியனூர் ரூஸ்வல்ட். இவர் அமெரிக்கத் தலைவராக இருந்த எப். டி. ஆர். மனைவி.

இவ்வம்மையார் பல துறைகளில் முற்றும் ஈடுபட்டார். கணவன் இறந்தபின், ஐக்கிய நாடுகள் குழுவிலும் வேறு பல இடங்களிலும் ஆற்றிய பணியால் திருமதி எலியனுர் ரூஸ்வல்ட் அமெரிக்கப் பெண்களின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்கினுர். மை டே (My Day) என்ற தலைப்பில் இவ்வம்மையார் 1936 முதல் எழுதிய நாட் குறிப்பை பல அமெரிக்கப் பத்திரிகைகள் வெளி யிட்டன. ஏறக்குறைய ஒரு கோடி மக்கள் அதை நாள்தோறும் படித்தனர். 1963-இல் உயிர் நீக்கும்வரை இவ்வம்மையார் அரும்பணிகள் செய்து அமெரிக்க மகளிரின் புகழை நிலைநாட்டினுர். இந்திய — அமெரிக்க நல்லுறவுக்கும் பாடுபட்டார்.

4. குழந்தைகள்

குடும்பம் மிகச் சிறியதாக இருப்பதால் குடும்பத் தொல்லை குறைகிறது. மிகுதியான மக்களைப் பெற்ற அமெரிக்கப் பெண் பெருமைப்படுவதில்லை; கூடுதலான நிறையுள்ள குழந்தையைப் பெற்றெடுப்பவள்தான் பிறர் பொறாமைக்கு ஆளாவதுண்டு. ஒவ்வொரு குழந்தையும் பிறந்த அன்றே நிறுக்கப்படுகிறது. வாழ்க்கை இன்ப மயமாக இருப்பதற்கும் வாழ்க்கை நிலை உயர்வதற்கும் குடும்பத்தில் ஓரிரு குழந்தைகளே இருக்க வேண்டுமென்று அமெரிக்கர் நினைக்கிறார்கள்.

குழந்தைகள் இல்லாதவர்களும், ஆண் குழந்தைகள் மட்டும் உடையவர்களும் மற்றவர்களுடைய பெண் குழந்தைகளை எடுத்து வளர்க்கின்றனர். அமெரிக்கத் தாய்மார்கள் குழந்தைகளைப் பயமுறுத்துவதில்லை; குழந்தைகளின் மனத்திலிருந்து பயத்தைப் போக்க முயலுகின்றனர். ஆகாய விமானத்தைக் கண்டு அச்சம் ஏற்படுவதைத் தடுக்கத் தொட்டிலில் கிடக்கும் குழந்தைகளுக்குப் பொம்மை ஆகாய விமானங்களைக் கொடுக்கின்றனர். பள்ளிக்குச் சென்றதும் பொம்மை விமானங்களை அவர்களுக்குச் செய்து காட்டுகின்றனர். டிராக்டர்களைக் காண்பிக்கின்றனர். இவ்வாறெல்லாம் இயந்திரங்களில் குழந்தைகளுக்கு ஆர்வத்தை வளர்க்கின்றனர்.

குழந்தைகள், தம் விருப்டப்படி எச் செயலையும் செய்யவும், பெற்றோர்களின் இடையூறின்றி வாழவும் பல ஏற்பாடுகள் உள்ளன. ஆறு மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைகளைத் தனி அறைகளில் உறங்கப் போடு

கின்றனர். கடவுளை வழிபட்டுத் தமக்கு வேண்டியதை எதிர்பார்க்கக் கூடாதென்றும், உழைப்பது கடவுள் வழிபாட்டுக்கு ஒப்பானதே என்றும் அமெரிக்கர் குழந்தைகளுக்கு வலியுறுத்தி வருகின்றனர்.

தமது உழைப்பால், மாலைப்பொழுதில் ஏதாவது ஒரு குற்றேவல் செய்து தாம் ஈட்டும் பொருளில் ஒரு பகுதியை அமெரிக்கக் குழந்தைகள் தம் பெற்ருேருக்குக் கிறிஸ்துமஸ் பெருநாளன்று அன்பளிப்பாகக் கொடுக்கிருர்கள்.

குழந்தைகள் விரல் நகத்தைக் கடிப்பதும், பெருவிரலைச் சுவைப்பதும் எல்லா நாடுகளிலுமுள்ள வழக்கங்கள் ஆகும்; இந்தத் தீய வழக்கங்களைத் தவிர்ப்பதற்காக, கைகளை வேறு வகையில் பயன்படுத்தும் வேலைகளில் குழந்தைகளுக்கு ஆர்வம் உண்டாகும்படி அமெரிக்கத் தாய்மார்கள் செய்கிருர்கள்.

கூர்மையான கத்திகளையும் மருந்துகளையும் உயரமான இடங்களில் அல்லது பூட்டப்பட்ட அலமாரிகளிலேயே அவர்கள் வைக்கின்றனர். வாய், மூக்கு, காது ஆகிய உறுப்புக்களுள் பொத்தான், நாணயம், குண்டூசி, ரப்பர் போன்ற பொருள்களைப் போடக்கூடாது என்பதையும் அமெரிக்கத் தாய்மார்கள் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கின்றனர்.

வைத்தியரிடம் அவ்வப்போது குழந்தைகளை அழைத்துச் சென்று, தம் உடல் நலத்தைப் பேணும் நண்பர்தான் வைத்தியர் என்று குழந்தைகளுக்கு உணர்த்துகின்றனர்; வைத்தியரைக் கண்டதும் அழாதபடி குழந்தைகளைப் பழக்குகின்றனர்.

இவற்ருல் சிறுவயதிலேயே குழந்தைகள் பொறுப்பாக நடந்துகொள்ளுகின்றனர். வாழ்க்கை முறையை

அனுபவத்தால் தெரிந்து கொள்ளுகின்றனர். குழந்தைகளின் இயல்பான வளர்ச்சியை எவரும் எவ்விதத்திலும் தடை செய்வதில்லை. குடி ஆட்சி என்பது மற்றவரின் உரிமைகளை ஒப்புக்கொண்டு, தம் உரிமைகளையும் பாதுகாப்பதாகும். இக்கொள்கையில் அமெரிக்கர் குழந்தைப் பருவத்திலிருந்தே ஊறித் திளைக்கின்றனர். விளையாடும்போதுகூட, இன்ன விளையாட்டே விளையாட வேண்டும் என்று அமெரிக்கப் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளை வற்புறுத்துவதில்லை.

குழந்தை பிறந்ததும் பிறந்த தேதிச் சீட்டு வழங்கும்போது குழந்தை வளர்க்கும் முறைகளை விளக்கும் புத்தகமொன்றையும் பெற்றோருக்கு நகர சபையார் அன்பளிக்கின்றனர்.

மூன்றாண்டு நிறைவெய்தும் வரையில் அமெரிக்கப் பெண்கள் தம் குழந்தைகளுக்கு வாரந்தோறும் கீழ்க் கண்ட உணவை ஊட்டுகின்றனர்:

		கிலோ
பச்சைக் காய்கறிகள்	...	1
சிட்ரஸ் பழமும் தக்காளிப் பழமும்	...	1
பச்சைப் பட்டாணி, பேரீச்சம் பழம், மற்றப் பழங்கள்	...	1
தானியங்கள்	...	0·6
மீன் எண்ணெய்	...	0·5
உருளைக் கிழங்கு	...	0·3
முட்டை 4		
(நாள்தோறும்) பால் (காப்பி அன்று) 4 கோப்பை		

குழந்தைகள் விரும்பி உண்ணும்படி, கூடுமானவரை பல நிறங்களுள்ள உணவுகளை ஆக்குவர்.

5. பிரிஸ்கோ

நியூயார்க்கிலிருந்து 5,000 கி.மீ. தொலைவிலுள்ளது சான்பிரான்சிஸ்கோ. 14 மணி நேரத்தில் 114 டாலர் (அப்போது ரூபாய் 380) செலவில் 1948 டிசம்பர் 4-ஆம் தேதி நான் ஒரு சார்ட்டர்ட் (Chartered) விமானத்தில் சான்பிரான்சிஸ்கோவுக்குப் போய்ச் சேர்ந்தேன். இந்த விமானங்களில் மற்ற விமானங்களுக்குச் செலுத்துங் கட்டணத்தில் மூன்றில் ஒரு பகுதி குறைவு. ஆனால் குறிப்பிட்ட அளவு பிரயாணிகள் சேர்ந்த பின்னரே இவை புறப்படும்.

நியூயார்க்கும் சான்பிரான்சிஸ்கோவும்

நியூயார்க்கிலிருந்து சென்றதால் அந்த நகரை அளவுகோலாகக் கொண்டுதான் நான் இந்த நகரத்தைப் பார்த்தேன். நீண்ட பேச்சுக்கோ, நீளமான பெயருக்கோ நேரமில்லாத அமெரிக்கர் நியூயார்க் நகரத்தை 'NYC' என்பதுபோல், சான்பிரான்சிஸ்கோ நகரத்தைச் சுருக்கமாக, **பிரிஸ்கோ** என்பர்.

நியூயார்க்கைப் போலவே பிரிஸ்கோவும் எந்த அமெரிக்க இராச்சியத்துக்கும் தலைநகராக இல்லை. இதற்குக் காரணம், பெரு நகரங்களிலும் துறைமுகங்களிலும் அரசியல் தலைநகரங்கள் இருந்தால், அங்கேயுள்ள வணிகர் அரசாங்கத்திடம் செல்வாக்குப் பெற்றுவிடக் கூடும் என்று அஞ்சி, அமெரிக்கத் தலைநகரங்கள் சிற்றூர்களிலேயே இருக்க வேண்டுமென்று அமெரிக்க அரசியலை வகுத்தவர்கள் முடிவு செய்துள்ளதே.

நம் நாட்டில் பம்பாயும் கல்கத்தாவும் போலவே அமெரிக்காவில் நியூயார்க்கும் பிரிஸ்கோவும் இருக்கின்றன. இந்த இரண்டுமே அமெரிக்காவில் பெரிய துறைமுகங்கள். இவை முறையே அட்லான்டிக், பசிபிக் கரைகளில் அமெரிக்காவின் தலைவாயில்களாக இருக்கின்றன. பம்பாயிலிருந்து அட்லான்டிக் வழியாக நியூயார்க்கும், கல்கத்தாவிலிருந்து பசிபிக் வழியாகவும் பிரிஸ்கோவும் ஒரே தொலைவில் இருக்கின்றன.

கலிபோர்னியா

சான்பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா இராச்சியத்தின் முதன்மையான நகரம். கலிபோர்னியாவின் நிலப் பரப்பு 1,58,000 சதுர மைல். அதாவது ஜப்பானுக்குச் சமமானது; தமிழ் நாட்டைப் போல மூன்று பங்கு பரப்புடையது.

அமெரிக்காவில் ஒவ்வோர் இராச்சியத்துக்கும் முத்திரை (Seal), கீதம், பறவை, கொடி ஆகியவை தனித் தனியே உண்டு. இவைபோலவே ஒவ்வொரு கேலிப் பெயரும் உண்டு.* நியூயார்க் இராச்சியத்தின் கேலிப் பெயர் எம்பயர் ஸ்டேட் என்பது. கலிபோர்னியாவின் கேலிப் பெயர் கோல்டன் ஸ்டேட் என்பதாகும். தங்க

* பிரிட்டிஷாருக்கு "ஜான்புல்" என்றும் ஜப்பானியருக்கு "நிப்பன்" என்றும் கேலிப் பெயர்கள் இருப்பது போல, அமெரிக்கருக்கு அங்கில் சாம் (Uncle Sam) என்ற கேலிப் பெயருண்டு. U. S. என்ற சுருக்கெழுத்துக்களிலிருந்து Uncle Sam என்ற சொற்றொடர் ஏற்பட்டதென்பர் சிலர். "அங்கில் சாம்" நட்சத்திரம் பொறித்த உடையும் உயர்ந்த தொப்பியும் அணிந்த வெண்தாடியுள்ள வளர்ந்த ஆளாகப் பத்திரிகைகள் அவரைச் சித்திரிக்கின்றன,

மயமான இராச்சியம் என்பது இதன் பொருள். 1849 முதல் 1949 வரை 230 கோடி டாலர் மதிப்புள்ள தங்கம் இங்கே தோண்டப்பட்டுள்ளது. தங்கம் கண்டுபிடிக்கப் பட்டதன் முதல் நூற்ருண்டு விழா 1949–இல் கலிபோர் னியாவில் கொண்டாடப்பட்டது.

தங்கத்துக்கு அடுத்தபடியாகக் கலிபோர்னியாவுக்கு வருமானம் தருவது திரைப்பட உலகின் தலைநகராகிய 'ஹாலிவுட்' என்னும் நகரமேயாகும். வகைவகையான பழங்கள் கலிபோர்னியாவில் செழிப்பாகப் பயிராகின் றன. இவற்றுள் பேரீச்சம்பழம், அத்தி, ஆரஞ்சு, நமது நாரத்தையைப் போன்ற 'சிட்ரஸ்', ஆப்பிள், அன்னுசி, திராட்சை, ஓரளவு மாம்பழத்தின் சுவையை உடைய பீச்சஸ் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். சுருங்கச் சொன்னுல், இங்குள்ள எல்லாரும் வாழ்நாள் முழுவதும் பழச்சாறு மட்டுமே குடித்துக் கொண்டிருக்கலாம்.

அமெரிக்காவின் மிகப் பள்ளமான இடம் கடல் மட்டத்துக்கு 179 அடி கீழேயுள்ளது, 'Death Valley' என்று இதற்குப் பெயர். இங்கு வெப்பம் 138 டிகிரி வரை இருக்குமாம். இந்த இராச்சியத்தில்தான் அமெரிக்காவின் மிக உயரமான மலையும் இருக்கிறது. இதனுல் கலிபோர்னியாவில், பலவிதமான தட்ப வெப்ப நிலைகள் இங்கே உள்ளன.

புகழ் பெற்ற பத்திரிகை ஆசிரியர்களும், டென்னிஸ் ஆட்டக்காரர்களும், புலவர்களும், விஞ்ஞானிகளும் நிறைந்தது கலிபோர்னியா. இங்குஇதுவரை பத்துப் பேர் நோபல் பரிசு பெற்றிருக்கின்றனர். உலக அரசாங்கம் ஏற்பட வேண்டுமென்றும், அதில் அமெரிக்கா சேர வேண்டுமென்றும் பல ஆண்டுகளுக்கு முன்னரே முடிவு செய்தது இந்த இராச்சியச் சட்ட சபையேயாகும்.

இயற்கையழகு நிறைந்த கலிபோர்னியாவில் இன்றைய உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத பெட்ரோல் மிகுதியாக உள்ளது. அமெரிக்காவிலுள்ள 34 ஆயிரம் எண்ணெய்க் கிணறுகளில் மிகுதியானவை கலிபோர்னியாவிலும், அதையடுத்துள்ள டெக்சாஸ் இராச்சியத்திலுமே இருக்கின்றன.

'கலிபோர்னியா—டெக்சாஸ் எண்ணெய்க் கம்பெனி' என்பது தான் சுருக்கமாகக் கால் (CAL) டெக்ஸ் (TEX) என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறது. உலகிற் பெரிய பல்கலைக்கழகமும் இந்த இராச்சியத்திலிருக்கிறது; ஆகாயவிமான ஆராய்ச்சியில் கலிபோர்னியாப் பல்கலைக் கழகம் முன்னணியில் நிற்கிறது.

அமெரிக்காவின் இராச்சியங்களிலும் கலிபோர்னியா இருவிதங்களில் சிறப்படைந்துள்ளது. அவற்றுள் ஒன்று மற்ற இராச்சியங்களைவிட இது (1054 மைல்) நீளமான கடற்கரையினை உடையது; மற்றொன்று இங்கே ஆண்டுதோறும் 4,000 பேர் கார் விபத்துக் களால் உயிரிழப்பது; மிகுதியான மோட்டார்களுடைய இராச்சியம் கலிபோர்னியா தான்.

கலிபோர்னியாவில் இந்தியர்

கலிபோர்னியாவில் 2,000 இந்தியர் வாழ்கின்றனர். இந்தியர் பீஜித் தீவில் குடியேறிய நாட்களிலேயே, இங்கேயும் குடியேறத் தொடங்கினராம். இப்போது கலிபோர்னியாவில் இருப்பவர்கள் வங்கப் பிரிவினையின் போது இந்தியாவிலிருந்து சென்ற வங்காளிகளும் சீக்கியருமே ஆவர். விவசாயத்திலும் சிறு வாணிகத்திலும் ஈடுபட்டு நல்ல வருவாயோடு வாழும் இந்த அமெரிக்கக் குடிமக்களிற் பலர் அமெரிக்கப் பெண்களையும், மெக்சி

கோப் பெண்களையும் மணந்துள்ளனர். இந்தியரின் மனைவியர் சங்கம் ஒன்றை இப்பெண்கள் பிரிஸ்கோவில் ஏற் படுத்தியுள்ளனர். இதில் வியப்பு ஒன்றுமில்லை. என். ஜி. ஓ க்கள் மனைவியர் சங்கம், தமிழ்நாட்டில் இல்லையா?

பாலங்களும் துறைமுகங்களும்

பிரிஸ்கோ நகரத்தையும் அதையடுத்துப் பசிபிக் கடலிலுள்ள ஒரு தீவையும் இணைப்பது, 'கோல்டன் கேட் பாலம்; பிரிஸ்கோவையும் ஒக்லண்டு என்ற இடத்தையும் இணைப்பது ஒக்லண்டு குடாக்கடல் பாலம்.' இவ்விரண்டு பாலங்களும் பொறியியற் கலையின் முன்னேற்றத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றன. ஒக்லண்டு பாலம்எட்டேகால் மைல் நீளமானது; இதில் நாலரை மைல் கடலுக்கு மேல் கட்டப்பட்டிருக்கிறது.

கோல்டன் கேட்பாலம் 16 கோடி ரூபாய்ச் செலவிலும் ஒக்லண்டு பாலம் 35 கோடி ரூபாய்ச் செலவிலும் கட்டப் பட்டவை இவ்விரு பாலங்களும் எவரையும் எளிதில் தம் வயப்படுத்த வல்லவை. இவற்றின் அழகில் ஈடுபடாதவர்களே கிடையாது எனலாம். இவை உலகப் புகழ் பெற்றவை. எனவே பசிபிக் பெருங்கடல் வழியாகப் பிரிஸ்கோவுக்கு வருபவர்களின் கவனத்தை முதலிற் கவரக் கூடியவை இவையாகும்.

பிரிஸ்கோவின் துறைமுகம் மிகப் பெரியது; நகருக்குச் சிறப்பைத் தருவது. மாதந்தோறும் ஆயிரத் துக்கு மேற்பட்ட கப்பல்கள் இத் துறைமுகத்துக்கு வந்து செல்லுகின்றன. சென்னைபோல இதுவும் செயற்கைத் துறைமுகம் ஆகும்,

உலகின் பொது நகரம்

நியூயார்க்கிலிருப்பது போன்று பிரிஸ்கோவில் இட நெருக்கடி இல்லை. நியூயார்க் மக்களைவிடப் பிரிஸ்கோ வில் வாழ்பவர்கள் ஆசிய நாகரிகம், கலை, பண்பாடு இவற்றுடன் மிகுதியான உறவு கொண்டவர்கள். நியூ யார்க் வாசிகளைவிடப் பிரிஸ்கோவர்களுக்கு அதிக ஓய்விருக்கிறது. பிரிஸ்கோவர்கள் பிறருடன் எளிதில் பழகும் இயல்புடையவர்கள்.

இவற்றிற்குக் காரணம் பிரிஸ்கோ கிழக்கும் மேற்கும் சந்திக்கும் இடமாக இருப்பதாகும். பிரிஸ்கோவிலிருந்து ஐரோப்பாவைவிட ஆசியா அருகு. அமெரிக்காவை நன்கு அறிய அங்கே செல்லும் இந்தியர்கள் பிரிஸ்கோ வழியாகச் செல்வதுதான் பொருத்தமானதாகும்.

சில தலைவர்களைப் போலவே, சில நகரங்களும் ஒரு நாட்டுக்கு மட்டுமன்றி உலக முழுவதுக்குமே பொது வானவை. இவற்றுள் பிரிஸ்கோவும் ஒன்ருகும். இத் தகைய நகரிலேயே பல நாட்டுப் பிரதிநிதிகளும் 1945 ஏப்ரல் 25 முதல் ஜூன் 26 வரை கூடி, ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை வரைந்தனர்.

சிங்கப்பூரைப் போலவே பிரிஸ்கோவிலும் பல நாட்டவர் வாழ்கின்றனர். இங்கே பிலிப்பைன்காரரும், மெச்சிகோக்காரரும் வேறு பல நாட்டவரும் உளர். இங்குள்ள அமெரிக்கரில் ஸ்பெயின் போர்ச்சுகல் ஆகிய நாடுகளிலிருந்து குடியேறியவர்களே மிகுதியானவர். 1940-க்குப் பின் மற்ற இராச்சியங்களில் வாழும் அமெரிக்கர் 75 லட்சம் பேர் இப்பகுதியில் குடியேறி யுள்ளனர். ‘முன்னேற்றமடைய மேற்கே செல்ல வேண்டும்’ (go west young man) என்பது ஓர் அமெரிக்கப் பழமொழி.

சைனு—டவுன்

அமெரிக்கருக்கு அடுத்தபடியாக, பிரிஸ்கோவில் மிகுதியாய் வாழும் இனத்தவர் சீனரே. ஆசியாவுக்கு வெளியே ஓரிடத்திலேயே அதிகமான சீனர்கள் இருப்பது பிரிஸ்கோவில்தான். கலிபோர்னியாவில் தங்கம் கண்டு பிடிக்கப்பட்டது முதல், சீனர்கள் படகுகளில் இங்கு வரத் தொடங்கினர்.

பிரிஸ்கோவில் சைனு-டவுன் என்ற ஒரு பகுதி இருக்கிறது. இப்பகுதியில் பல சீனப் பகோடாக் களும் (பகோடா-புத்த ஆலயம்), சீன முறைப்படி அமைந்த டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜும், சீனத் தியேட்டர் களும் இருக்கின்றன. சீனுவில் இருப்பது போன்ற அஞ்சல் நிலையங்களும், சீன மொழியில் தந்தி அஞ்சல் நிலையங்களும், சீனரின் கடைகளும், சீனரின் வானொலி நிலையமும், சீன மொழியில் வெளியாகும் ஐந்து நாள் இதழ்களின் அலுவலகங்களும் இந்தச் சைனு-டவுனில் உள்ளன. இங்குள்ள ஒரு வங்கியைப் பெண்களே நடத்து கின்றனர். சைனு-டவுனுக்குச் செல்லுபவர்களுக்குச் சீனமொழியில் சில சொற்கள் சொல்லிக் கொடுக்கப்படு கின்றன.

சீனர்களுக்கு மங்களகரமான நிறம் சிவப்பு என்பதையும் புத்தாண்டுப் புது நாளன்று யாரிடமாவது கடன் வாங்குவது நல்ல காலத்துக்கு அறிகுறி என்பது சீனர்களின் நம்பிக்கை என்பதையும் பிரிஸ்கோ சைனு-டவுனில் அறிந்தேன். சைனு-டவுனை நிர்வகிப்பவர்கள் ஆறு கம்பெனிக்காரரர்கள்; இவர்களுக்கும் பிரிஸ்கோ நகர சபைக்கும் ஒரு நூற்றுண்டுக்குமுன் ஏற்பட்ட உடன் படிக்கையின்படி சைனு-டவுனின் நிருவாகத்தில் நகர சபையார் தலையிடுவதில்லை.

காரணப் பெயர்

பிரிஸ்கோ என்பது ஒரு காரணப் பெயர். "அர்ச் பிரான்சிஸ் ஆப் அசிசி" என்பவர் கிறிஸ்தவ மதத் தலைவருள் புகழ்பெற்ற ஒருவர்; அவர் பெயரால் இந்நகர் நிறுவப்பட்டதாம். பிரிஸ்கோவின் மிகப்பெரிய ஹோட்டலும் சென்ட் பிரான்சிஸ் ஹோட்டல் என்னும் பெயருள்ளது. இது 14 மாடிக் கட்டிடத்தில் இருக்கிறது. இதன் எதிரில் யூனியன் ஸ்கொயர் என்னும் பூங்காவின்கீழ் நான்கு மாடிகளில் கார் நிறுத்த (Subterranean Garage) வசதி செய்யப்பட்டிருக்கின்றது.

பிரிஸ்கோவின் சிறப்புக்கள்

யூனியன் ஸ்கொயரைச் சுற்றி நாற்புறமும் உள்ள பௌவல், கீயரி, போஸ்ட், ஸ்டாகடன் தெருக்களில் மிகப் பெரிய கடைகளுள்ளன. இந்தப் பூங்காவுக்கு அண்மையில் மார்க்கட் ஸ்ட்ரீட் என்ற பெரிய சாலை இருக்கிறது. புது டில்லிக்குக் கனுட் சர்க்கசும், சிங்கப்பூருக்கு ராபிள்ஸ் பிளேசும், லண்டனுக்குப் பிக்காடில்லி சர்க்கசும், நியூ யார்க்குக்கு டைம்ஸ் ஸ்கொயரும்போல, பிரிஸ்கோவுக்கு மார்க்கட் ஸ்ட்ரீட் முக்கியமானது.

இந்தச் சாலையில் விற்கப்படாத பொருளே இல்லை எனலாம். செல்வம் பொழியும் இந்தச் சாலை வழியாகச் செல்லாமல் பிரிஸ்கோவில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குச் செல்வது எளிதன்று. சான்பிரான்சிஸ்கோவின் சிறப்பான தொழில்கள் இறைச்சியைப் பக்குவப்படுத்துதல், மீன்பிடித்தல், சர்க்கரையைச் சுத்தம் செய்தல் ஆகியவை.

பிரிஸ்கோ பத்து லட்சம் மக்கள் வாழும் நகரம்; எழில் மிக்க காட்சிகள் நிறைந்தது; மாடமாளிகைகளும்

சிறந்த கடற்கரையுமுடையது. சாலைச் சந்திகளி லெல்லாம் பல நிறப் பூஞ்செடிகளைப் பிரிஸ்கோவெங்கும் காணலாம். உலகிலேயே மிக அழகிய நகரங்களுள் ஒன்றாகக் கருதத்தக்க பிரிஸ்கோவில் 50 மலைகளும் 100 பூங்காக்களும் உள்ளன. இப்பூங்காக்களுள் ஒன்றான கோல்டன் கேட் பார்க் 1013 ஏக்கர் நிலப் பரப்புடைபது; இதனுள் இருக்கிற ஸ்டெயின்ஹார்ட் அக்குவேரியம் உலகிற் பெரிய மீன் காட்சிக்கூடம் ஆகும்.

மற்றொரு பூங்கா ஷேக்ஸ்பியர் தோட்டம் என்பது; இத்தோட்டத்தில் ஷேக்ஸ்பியர் தம் நாடகங்களில் குறிப் பிட்டிருக்கும் எல்லா வகையான பூக்களும் உள்ளன. பிரிஸ்கோவின் மிகக் கூடுதலான வெப்பம் 79 டிகிரி பாரன்ஹீட். (திருச்சியில் 106) இந்த வெப்பத்தைக் கூடத் தாங்க இந்நகர மக்களால் இயலவில்லையாம். பிரிஸ்கோவின் இயற்கை நிலையும் வேடிக்கையானது. இங்கே செயற்கை மழை மட்டுமே உண்டு; இயற்கை மழை சாதாரணமாகப் பெய்வதில்லை. ஐ. நா. சபை கூடியபோது வழக்கத்துக்கு மாறாகச் சிறிது தூற்றல் இருந்ததாம்

'கேபிள்-கார்'

பிரிஸ்கோவைப்பற்றி எழுதும்போது அந் நகரத்துக் கேபிள்காரைக் குறிப்பிடாமல் எழுத முடியாது. "முனிசி பல் ரயில்வே" என்றும் இதை அழைக்கிறார்கள். இஃது ஓர் அரிய போக்குவரவுக் கருவி. உலகிலேயே இங்கு மட்டுந்தான் இவ்வாகனம் இருக்கிறது.

தோற்றத்தில் இது டிராம்காரைப் போன்றது. இது சரிவான மலைகளின் மீது ஏறுகிறது. அம்மலைகளிலிருந்து இறங்கவும் அதனால் இயலும். கோச்சு வண்டியில்

இருப்பதுபோன்ற மணி அடிக்கும் கருவியும் இவ் வாகனத்தில் உண்டு. மணிக்கு 9 மைல் வேகத்தில் செல்லும் இவை, இந்நகரில் மொத்தம் 26 மைல் தொலேக்கு ஒடுகின்றன.

கேபிள்கார் ஏற்பட்ட வரலாறு சுவையானது. 1869-இல் ஐந்து குதிரைகள் பூட்டப்பட்ட கோச்சு வண்டிகளே இந்நகரில் மிகுதியாயிருந்தனவாம். ஒருநாள் ஒரு குதிரை மலேமீது ஏற முடியாமல் தரையில் விழுந்து கால் ஒடிபட்டு இறந்ததாம். இதைப் பார்த்த ஆண்ட்ரு ஹால்லீடை (Andrew Hallidie) என்பவர் கோச்சுக்கு மாற்றுவாகனம் கண்டுபிடிக்கவேண்டுமென்று முயன்ருர். தம் ஆராய்ச்சியின் பயனுகக் கேபிள் காரைத் தோற்று வித்து அதை இந்நகரில் 1873-இல் வெள்ளோட்டம் விட்டாராம்.

நகரசபை

கேபிள் கார் அனைத்தும் பிரிஸ்கோ நகர சபையைச் சேர்ந்தவை. போக்கு வரவிலும் வருமானம் கிடைக்கும் பிற தொழில்களிலும் பிரிஸ்கோ நகரசபையார் 80 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிருர்கள். இது நெய்வேலித் திட்டத்தின் முதலீட்டில் முக்கால் பங்கு ஆகும்.

பிரிஸ்கோ நகரசபைக் கட்டிடத்திற்குச் சிவிக் சென்டர் என்று பெயர். இஃது இணையற்ற அழகு நிறைந்த எட்டுக் கட்டிடங்களின் தொகுதி; பிரெஞ்சுக் கட்டிடக் கலையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது; கலைச் சிற்பம் நிறைந்தது; இதன் உச்சியிலுள்ள வட்ட வடிவ மான கூண்டு பல ஆயிரம் டன் நிறையும் உடையது. பல நிறச் செடிகள் இக்கட்டிடத்தின் வாயிலில் இருக்கின்றன.

சில சிலைகளும் ஓவியங்களும் பிரிஸ்கோப் பெரியார்களின் படங்களும் இக்கட்டிடத்தின் உட்பாகத்தில் உள்ளன.

நகர வரலாறு பளிங்குக் கற்களில் பொறிக்கப் பட்டுள்ளது; ஆபரா இசைக்கென ஒரு மண்டபமும், ஆறு லட்சம் நூல்களுள்ள நூல் நிலையமும், பொருட் காட்சி மண்டபமும் கலிபோர்னியாவில் தங்கத்தைக் கண்டு பிடித்தவர்களின் நினைவாக மார்ஷல் ஸ்கொயர் என்ற சதுக்கமும் இங்கே நிறுவப்பட்டுள்ளன.

குற்றவாளிகள்

அமெரிக்கர் குற்றவாளிகளை நடத்தும் விதம் தனிச் சிறப்புடையது. மீண்டும் மீண்டும் குற்றம் செய்தவர்களை மட்டுமே அவமதிப்பது அமெரிக்கரின் வழக்கம். குற்ற வாளிகட்கு அமெரிக்கச் சிறைச்சாலைகளில் எல்லாவித வசதிகளும் செய்து கொடுக்கப்படுகிறது. வாழ்க்கையில் நன்னிலை அடையவும், ஏதாவதொரு தொழிலில் ஈடுபடவும் சிறையிலிருக்கும்போது, கைதிகள் கற்றுக் கொள்கின்றனர்.

ஒரு முறை மட்டும் சிறைத் தண்டனையடைந்த பலர் கண்ணியமாக நடந்து கொள்ளுகின்றனர். சமூகத்தில் வேறுபாடின்றிச் சேர்த்துக்கொள்ளப்படும் முன்னுள் குற்றவாளிகளிற் பலர், இப்போது பெரிய பதவிகளைச் சீருடனும் சிறப்புடனும் வகித்து வருகின்றனர். பிரிஸ் கோத் துறைமுகத்துக்குச் சிறிது தொலைவிலுள்ள ஒரு சிறு தீவுக்குக் குற்றவாளிகள் அனுப்பப்படுகிருர்கள். அச்சிறையிலிருந்தபோது அங்குள்ள நூல்நிலையத்தி லிருந்த சட்டப் புத்தககங்ளெல்லாவற்றையும் படித்த ஒரு குற்றவாளியே பிரிஸ்கோவின் தலைசிறந்த வழக் கறிஞராக உள்ளார்!

குபேரரும் முடிசூடா மன்னரும்

இத்தாலியிலிருந்து கியான்னினி என்பவர் 1888-இல் 50 ரூபாயுடன் பிரிஸ்கோவிற்குச் சென்று குடியேறினாராம். தம் வீட்டில் இவர் ஐஸ்கிரிம் செய்து கொண்டிருந்தபோது, அடுத்த வீட்டுக்காரர் இவர் வீட்டுக்கு வந்து, இவர் தயாரித்த ஐஸ்கிரீமைத் தின்று பார்த்து அதன் சுவையைப் பாராட்டினாராம்.

இந்தச் செய்தி முதலில் வீடு வீடாகவும், பின்னர்த் தெருத்தெருவாகவும் பரவிற்றாம். அதன் பயனாக, கியான்னினி ஐஸ்கிரீமைப் பெரும் அளவில் செய்து கை வண்டியில் வைத்து விற்கத் தொடங்கினாராம். மேன்மேலும் தம் தொழிலை விரிவுபடுத்திக் குபேரரான கியான்னிவ் இன்று பேங் ஆப் அமெரிக்கா என்னும் பேங்கின் தலைவராக இருக்கிறார். உலகில் தனிப்பட்டவர் நடத்தும் பேங்குகளில் இதுவே பெரியது. இந்தப் பேங்கில் ஒரு புதுமை என்னவெனில், ஒரு செண்டு (5 ந.பை.) மட்டும் போட்டு, பள்ளிச் சிறுவர்கூட கணக்குகள் வைத்துக் கொள்ளலாம்!

பெண்கள்

உலகிலேயே அழகாக உடை அணிபவர் இந்த நகரத்துப் பெண்களேயாவர். 'அப்பேரல் சிடி' ('Appyrel City') என்று ஒரு பகுதி பிரிஸ்கோவில் உளது. 34 ஏக்கர்ப் பரப்புள்ள இப்பகுதியில் உலகிற் பெரிய உடை உற்பத்தி நிலையம் இருக்கிறது.

சாலையின் அழகு

பிரிஸ்கோவிலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குச் செல்லும் 470 மைல் நீளமுள்ள சாலை பெரும் புகழ் பெற்றது. அந்தச் சாலையில், 8 பிரிவுகள் உண்டு; அதா

வது ஒவ்வொரு திக்கிலும் 4 பிரிவுகள் இருக்கின்றன. லாரி போன்றவைகளுக்கு ஒரு பிரிவும், மணிக்கு 40 மைலுக்குக் குறைவான வேகத்தில் செல்லும் கார்களுக்கு ஒரு பிரிவும் 40 மைலுக்கு மேல் 55 மைல் வேகத்துக்குள் செல்லும் கார்களுக்கு ஒரு பிரிவும், மணிக்கு 55 மைல் வேகத்துக்கு மேல் செல்லும் கார்களுக்கு ஒரு பிரிவுமாக நான்கு பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

470 மைல் தொலேவு முழுதும் ஒவ்வொரு 10 மைலிலும் ஒரு 'மோட்டல்' (Motel) இருக்கிறது. மோட்டாரிஸ்ட் ஹோட்டல் என்ற சொற்களின் முதல் இறுதிப் பகுதிகள் சேர்ந்து இச்சொல் அமைந்திருக்கிறது. மோட்டார் ஓட்டுபவரின் நலத்துக்காக அமைக்கப்பட்ட இவற்றில் ஏனேய ஹோட்டல்களிலுள்ள வசதிகளே யன்றிக் கார்களே நிறுத்தவும், செப்பனிடவும் தக்க அமைப்புக்களும் உள்ளன. காருக்கு வேண்டும் கருவிகள் விற்கும் பகுதியும் மோட்டலில் உண்டு.

மக்களின் பண்பாடு

ஏனேய அமெரிக்க மக்களேப்போலப் பிரிஸ்கோ வாசிகளும் கல்வி, வைத்தியம், சட்டம், வீட்டு வேலே, தையல் வேலே, கெட்டுப்போன கருவிகளேச் செப்பனிடுதல் ஆகிய எல்லாம் தெரிந்தவர்களாகத் திகழ்கின்றனர்.

யாரையும் ஊக்கப்படுத்தும் பண்பும், முயற்சியிலும் உழைப்பிலும் நம்பிக்கையுமுடைய இந்த மக்களிடம் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனநிலேயும், எதையும் ஆராய்ந்தறிந்து திட்டமிடும் மனப்பான்மையும் உண்டு.

பிரிஸ்கோ வாசிகள் வைகறையில் துயிலெழுவர்; காலே 6 மணிக்கு முன்பே பல்லாயிரம் கார்கள் பிரிஸ்கோ

வின் பல பகுதிகளிலிருந்தும் அந்நகரத்திலுள்ள பங்கு மார்க்கட்டுக்கு விரைகின்றன. நியூயார்க்கில் அட்லாண்டிக் நேரமும், பிரிஸ்கோவில் பசிபிக் நேரமும் நிலவுகின்றன. இவ்விரண்டுக்கும் மூன்று மணி நேர வேறுபாடு உண்டு. இதனுல், நியூயார்க்கில் வால் ஸ்ட்ரீட் பங்கு மார்க்கட் காலே 9 மணிக்குத் திறக்கும்போது, பிரிஸ்கோவில் காலே 6 மணியாயிருந்தும், அப்போதே பிரிஸ்கோவர்கள் தங்கள் பங்கு மார்க்கட்டைத் திறக்க வேண்டியிருக்கிறது. பங்கு மார்க்கட்டுடன் உறவுள்ள மிகப் பல அலுவலகங்களும் தம் வேலேயை இந்த நேரத்திலேயே தொடங்குகின்றன.

பிரிஸ்கோவின் பங்கு மார்க்கட் மண்ட்கோமரி தெருவில் இருக்கிறது. இந்தத் தெருவிலுள்ள ஹோட்டல்கள், கடைகள், அலுவலகங்கள் ஆகியவற்றிலெல்லாம் பேசப்படுவன யாவும் அமெரிக்காவின் மேற்குப் பகுதியையும் ஹாவாய் இராச்சியத்தையும் பசிபிக் பெருங் கடலிலுள்ள நாடுகளேயும் பாதிக்கின்றன.

6. கல்வி முறை

அமெரிக்கக் கல்விமுறையின் அடிப்படை பாலர் பள்ளியே (Nursery School) ஆகும். அமெரிக்கர் தம் குழந்தைகளுடைய கல்வி முறையைப்பற்றி அக்குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே நினைத்துப் பல திட்டங்களும் செய்துவிடுகிறார்கள். இரண்டு வயதிலேயே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். பெற்றோர் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்போது, அவர்களுடைய குழந்தைகளை இப்பள்ளி ஆசிரியர்கள் கவனித்துக் கொள்ளுகின்றனர்.

இங்கே குழந்தைகளுக்குச் சத்து உணவு கொடுக்கிறார்கள்; உடல் நலத்துக்கேற்ற பழக்கங்களை ஊக்குவிக்கிறார்கள். குழந்தைகள் தத்தம் விருப்பப்படி வளர்ச்சியடையத் தக்க சூழ்நிலையில் தூய காற்றுள்ள தோட்டங்களில் இப்பள்ளிகள் அமைந்துள்ளன. நம் நாட்டில் சுகாதார வசதியுள்ள வீடுகள் குறைவு. ஆதலின், குழந்தைகள் உடல் நலத்துக்கேற்ற கட்டிடங்களில் சில மணி நேரமாவது கழிக்கப் பயன்படும் வகையில், பள்ளிகள் அமையவேண்டும்.

அமெரிக்காவில், நாள்தோறும், இப்பள்ளிகளில் ஆசிரியர்கள் குழந்தைகளின் உடல் நிலையைச் சரிபார்க்கின்றனர். சூடான சத்துள்ள சீருணவு உண்ட பின்னர், பிற்பகலில் சூரிய வெளிச்சத்தில் அவரவரின் வயதுக்கேற்ப ஒரு மணி நேரத்துக்குமேல் இரண்டு மணி நேரம்வரை குழந்தைகளை ஆசிரியர்கள் உறங்கச் செய்கின்றனர். பல்வேறு சமூக அமைப்புக்களிலும், பொரு

ளாதார நிலைகளிலும், பண்பாடுகளிலும் வளரும் குழந்தைகள் ஒருவர் போக்கை மற்ருெருவர் அறிய இப்பள்ளிகள் உதவுகின்றன.

தாமே ஆராய்ந்து முடிவு செய்வதும், பிறருடன் கூட்டுறவாகப் பல முயற்சிகளில் ஈடுபடுவதும் அமெரிக்கக் குடி ஆட்சி முறையின் சிறப்புக்கள். தன்னம்பிக்கை, மற்றவர்களிடம் அன்பாக இருத்தல், கூரிய அறிவு, கூட்டுறவு, உயரிய நோக்கம், மன அமைதி, உண்மை, சமுதாய சேவை, மகிழ்ச்சி, சுறுசுறுப்பு, நேர்மை, கடவுள் பக்தி, கீழ்ப்படிதல், நேரந்தவருமை, கட்டுப்பாடு ஆகிய குணங்களே குடிமைப் பயிற்சிக்கு இன்றியமையாதவை என மாணவருக்கு வலியுறுத்தப்படுகிறது.

சிறுவர் பள்ளி (Kindergarten)

பாலர் பள்ளியிலிருந்து குழந்தைகள் கிண்டர் கார்டன் பள்ளிகளுக்குச் செல்லுகின்றனர். மூன்ருண்டு முதல் ஏழாண்டுவரையுள்ள குழந்தைகளுக்கான இப் பள்ளிக் கூடங்களில், பந்து சக்கரம் வளையம் குச்சி போன்ற விளையாட்டுக் கருவிகளைக் கொடுத்தும், படம் வரைந்து காட்டியும், நிறங்களைத் தீட்டிக் காண்பித்தும், களிமண்ணில் உருவங்கள் செய்து காட்டியும், கதைகள் சொல்லியும் குழந்தைகளின் அறிவை வளர்க்கின்றனர்.

கீழ்க்கண்டவைபற்றி, இங்கே சொல்லிக் கொடுக்கின்றனர்: சிறப்பான நாட்களைக் கொண்டாடும் முறை, பொருள்களின் உருவங்கள், நிறவேறுபாடுகள், வலம், இடம், காலக் கணிதம், நாணயம், அளவைகள், பண்ணை வாழ்க்கை, பழங்களும் காய்கறிகளும், மளிகைக்கடை, பருவ காலங்கள், நாய்க்குட்டி பூனைக்குட்டி போன்ற

உயிரினங்களை அன்புடன் வளர்ப்பது, கடிதம் எழுதுதல், தீயினின்றும் காத்துக் கொள்ளுதல்.

தாய்நாடு போக்குவரவு, வெளி நாட்டுக் குழந்தைகள், பூச்சிகள், பிற உயிரினங்கள், மரங்கள், பூக்கள், பறவைகள், கற்கள், உலோகங்கள், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், ஒலி, ஒளி, சட்டைப் பொத்தான்களைத் தைத்துக் கொள்வது ஆகியவை பற்றியும் கல்வி புகட்டப்படுகிறது.

16 ஆண்டுவரை கட்டாயக் கல்விமுறை பல அமெரிக்க இராச்சியங்களில் இருந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்கப் பள்ளிக்கூடங்களிலெல்லாம் அரசாங்கத்தார் தம் செலவில் மாணவருக்குப் பகல் உணவு படைக்கின்றனர். மாணவரை வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கும் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கும் அழைத்துச் செல்ல அரசாங்கத்தாரும் நகரசபையாரும் ஏறத்தாழ ஒரு லட்சம் பஸ்களைத் தம் செலவில் பயன்படுத்துகின்றனர்.

பொருட்காட்சிசாலை

குழந்தைகள் கற்பனைத் திறம் நிறைந்தவர்கள்; தாமே எதையும் செய்யும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. அச்சமின்றியும் புதுமையாகவும் எதையும் செய்யும் தன்மை அவர்களுக்கு இயல்பாக அமைந்தது. முதியோரைப் போல அவர்கள் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப் படுவதில்லை; சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதில்லை. குழந்தைகளின் இந்த இயல்புகளுக்கு ஏற்ற பொருட்காட்சிச் சாலை ஒன்று நியூயார்க் நகரில் தொடங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பல பொருட்காட்சிச் சாலைகள் பிற இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன.

மரம், காகிதம் இவற்றுல் இங்கே குழந்தைகள் தாம் விரும்பியதைச் செய்யலாம். தச்சு வேலை செய்யுமிடமும் அஞ்சல்துறை அடிக்கடி வெளியிடும் புதுவகை முத்திரைகளைச் சேர்க்கும் பகுதியும் இங்கே உள்ளன. குழந்தைகளின் உயரத்துக்கேற்ற மேசைகளும் நாற்காலி களும் போடப்பட்ட விளையாட்டு மண்டபமும் இருக்கிறது.

பல நாட்டவர் என்ன உடை உடுக்கின்றனர் என்பதைக் குழந்தைகள் நன்கு அறிவதற்காக, அவற்றை அணிந்த பொம்மைகள் இங்கே கொலுப்போல வைக்கப் பட்டுள்ளன. குழந்தைகள் பிடித்து விளையாடக்கூடிய உயிரினங்களும் இங்கே உள்ளன.

மாவட்டம், இராச்சியம், நாடு, உலகம் இவற்றின் பரப்புக்களைக் குழந்தைகள் சரியாக அறிய வேண்டும். ஆகவே, அமெரிக்கர் எல்லாவற்றையும் ஒரே அளவுள்ள படங்களில் குழந்தைகளுக்குக் காட்டுவதில்லை; அந்தந்தப் பகுதிகளின் இயற்கையான பரப்புக்கு ஈவான அளவுகளில் படங்கள் வரைந்து பூகோளப் பாடங் கற்பிக்கின்றனர்.

இந்தியாவைப்பற்றிப் பூகோளப் பாடம் நடத்தும் போது, தேங்காயை உடைத்துக் காட்டி, இந்தியாவில் தென்னைமரங்கள் மிகுதியாக இருப்பதை மாணவர்க்கு அமெரிக்க ஆசிரியர்கள் வற்புறுத்துவார்கள். முழுத் தேங்காயைக் காண்பது அங்கே அரிது.

இந்திய மக்கள் மண்எண்ணெய் விளக்குப் பயன் படுத்துவதை, ஓர் அரிக்கன் விளக்கைக் கொண்டு வந்து வகுப்பில் காண்பித்து விளக்குவார்கள். காரணம், அமெரிக்க மாணவர் இவற்றைப் பார்த்ததே இல்லை.

சிறுவர்களுடன் பழகுவதற்குப் பொறுமை, அன்பு முதலிய நற்குணங்களும் வேண்டும்; இவை நிரம்பிய

பெண்பாலாரே இப்பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஆசிரியர்களாக இருக்கின்றனர்.

பிற சிறப்புக்கள்

அமெரிக்கக் குடியரசு அமைப்பின் (அரசியல் சட்டத்தின்) முக்கியமான பகுதிகள் பள்ளிக்கூட மாணவருக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் மாணவர் தொகை கூடலாமென்பதை எதிர்பார்த்து, முன்னேற்பாடாக, பள்ளிக்கூடக் கட்டிடங்களை இப்போதே அமெரிக்காவில் பெரிதாகக் கட்டிவருவது, திட்டமிடும் ஆற்றலுக்கு ஒரு சான்றாகும்.

பள்ளியில் இருக்கும்போதே மாணவர்கள் இதழ்களைப் படிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். நாள் இதழ்கள் குழந்தைகளுக்கெனச் சிறிய அளவில் தனிச்சஞ்சிகைகளை அச்சிட்டு ஞாயிற்றுக்கிழமை வெளியாகும் இதழுடன் கொடுக்கின்றன. இவையேயன்றி, பல நிறப் படங்களுடன், கதைகளும் அடங்கிய வெளியீடுகளும் குழந்தைகளுக்காக வெளியாகின்றன. பெரும்பாலும் தாய் தந்தையர் தம் குழந்தைகளுக்குக் கொடுக்கும் முதற் பரிசு குழந்தைகளுக்கேற்ற கலைக் களஞ்சியம்தான்.

ஆசிரியர் கொடுக்கும் அடிப்படைக் கருத்துக்களின் சீரிய பொருளை மாணவர் தெளிவாக உணர்ந்து, தளராத ஊக்கத்தாலும் விடாமுயற்சியாலும் பயனடைகிறார்கள். மாணவரின் இயல்பான திறமைகளை வெளிப்படுத்தும் தன்மைக்கு அமெரிக்கக் கல்விமுறை முக்கியத்துவம் நல்குகிறது. இதனால், மாணவருக்கு ஆசிரியர்கள் நேரே சொல்லிக் கொடுக்கும் நேரத்தைவிட மிகுதியான நேரத்

தைப் பிறவகையில் அறிவைப் பெருக்குவதில் அமெரிக்கக் கல்வி நிலையங்கள் செலவிடுகின்றன. விடுமுறை நாட்களில் சிறு தொலைவிலுள்ள பல இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்கின்றனர்.

பள்ளிக்கூட நேரத்திற் பெரும் பகுதியை விஞ்ஞான மாணவர் ஆய்வுக் கூடத்திலும் ஏனைய மாணவர் நூல் நிலையத்திலும் கழிக்கிறார்கள். எல்லாக் கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பெரிய நூல்நிலையங்கள் உள்ளன. குறைந்தசெலவில் சிறந்த நூல்கள் அடங்கியசொந்த நூல் நிலையம்வைத்திருக்கும் மூன்று மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஐம்பது டாலர் கொடுக்கப்படுகிறது.

புதிய சொற்களை அறியும்போது அகராதியை உடனுக்குடன் புரட்டிப் பார்ப்பது அமெரிக்கரின் வழக்கம்; இது இவர்களுடைய அறிவுப் பசிக்கு எடுத்துக் காட்டாகும். விலையுயர்ந்த சிறந்த நூல்களை யாவரும் படித்துப் பயன் பெறுவதற்கு உதவியாகக் குறைவான விலையில் 25 சதத்துக்கு ரூ. 1-25 அமெரிக்கர் 'பாக்கெட் புத்தகம்' வெளியிடுகின்றனர். பிரயாணம் செய்யும் போது படிப்பதற்கு எடுத்துச் செல்லச் சட்டைப் பையில் வைக்கத்தக்க அளவில் இப்புத்தகங்கள் அமைந்தன.

உயர்நிலைப் பள்ளி

உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் முதல் ஆண்டில் நகர ஆட்சி முறையும் இரண்டாம் ஆண்டில் உலக வரலாறும் மூன்றும் ஆண்டில் அமெரிக்க நாட்டின் வரலாறும் நான்காம் ஆண்டில் குடியரசு முறையும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

உணவு சமைத்தல், பின்னுதல், தைத்தல், துணி துவைத்தல், முதல் சிகிச்சை செய்தல், மின்சார அதிர்ச்சி

ஏற்பட்டவருக்கு மருத்துவம் செய்தல், குழந்தை வளர்த்தல், வீட்டை அழகுபடுத்துதல் ஆகியவற்றில் உயர்நிலேப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சியளிக்கிருர்கள். அமெரிக்கக் குழந்தைகள்—இரு பாலாரும்—தாங்களே உணவாக்கி ஆண்டுக்கு இருமுறை பெற்ருேர்களுக்குத் தங்கள் பள்ளிக் கூடங்களில் விருந்தளிக்கின்றனர்.

அமெரிக்காவின் பெரிய தொழிற்சாலேகள் தம் ஊழியர்க்கெனப் பயிற்சி நிலேயங்கள் நடத்துகின்றன• அவரவர் செய்யும் வேலேக்குத் தேவையான நுண்ணறிவைத் தொழிலாளர் பெறும்படி செய்வதே தொழிற் சாலேகளின் குறிக்கோள்.

பெண் கல்வி

ஆடவருக்கும் பெண்டிருக்கும் உள்ள கல்வி முறையில் முக்கியமான வேறுபாடு ஒன்றும் இல்லே. ஒரு சில இடங்களில் பெண்களுக்குத் தனியாக உயர்நிலேப் பள்ளிகளும் கல்லூரிகளும் உள்ளன; எனினும், இருபாலாரும் சேர்ந்து படிக்கும் கல்லூரிகளும் பல்கலேக்கழகங்களுமே அமெரிக்காவெங்கும் பெருகியுள்ளன. ஹார்வர்டு பல் கலேக்கழகத்தில் ஆண்களுக்கு மட்டுமே கல்வி புகட்டப் பட்டது; அங்கும் இப்போது மாணவிகளும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

வாழ்க்கை முழுவதும் கல்வி

கல்வி என்பது கல்லூரியோடு அல்லது பல்கலேக் கழகத்தோடு முடிந்துவிடுகிறதென்று நம் நாட்டில் பலர் கருதுகின்றனர். ஆனல், நடக்கத் தெரிந்தவுடன் பள்ளிக் கூடத்துக்குச் செல்லும் அமெரிக்கக் குழந்தைகள் வாழ் நாள் முழுவதும் படித்த வண்ணமாயிருப்பதை நோக்கும் போது,

"யாதானு நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்னும் திருக்குறள் நமது நினைவுக்கு வருகிறது. எவ்வளவு ஆண்டு நிரம்பியவராயினும், எவ்வளவு செல்வராயினும், எவ்வளவு வேலையுள்ளவராயினும், எவ்வளவு பெரிய பதவியிலிருப்பவராயினும், எப்பாலாராயினும் நாள்தோறும் சில மணி நேரமாவது எதையாவது படிப்பது அமெரிக்கர் பழக்கம்.

7. பல்கலைக் கழகங்கள்

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களைப்பற்றி நாம் விரிவாக அறிந்துகொள்வது நன்று. ஏன் எனின், அங்குள்ள உயர்நிலைப் பள்ளிகளிலோ பிற கல்வி நிலையங்களிலோ நாம் போய்ப் பயிலுவது அருமை; ஆனால், பல்கலைக் கழகங்களில் மேற்படிப்புப் படிக்க அமெரிக்காவுக்குப் போகும் வாய்ப்பு, தகுதியும் முயற்சியும் இருந்தால் பெரும்பாலும் கிடைக்கும்.

அமெரிக்காவில் ஈராயிராம் பல்கலைக்கழங்கள் அல்லது பல்கலைக் கழகத்துக்குச் சமமான உயர் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. இவை யாவுமே அரசாங்கத்தாரால் நடத்தப்படுவதில்லை. இராச்சிய அரசாங்கங்கள் நடத்தும் பல்கலைக் கழகங்கள் 50 இருக்கலாம். ஏனைய பல்கலைக் கழகங்கள் அனைத்தும் தனிப்பட்டவர்களாலும் நகராண்மைக் கழகங்களாலும், கிறித்தவ நிறுவனங்களாலும், நீக்ரோக்களின் கூட்டு முயற்சிகளாலும், பெரும் பொருளீட்டிய வணிகர்கள் நிறுவியுள்ள அறக்குழுக்களாலும் நடத்தப்படுகின்றன.

ஜெனரல் மோட்டார்ஸ் போர்டு, ஜெனரல் எலக்ட்ரிக், வெஸ்டிங் ஹவுஸ், ஸ்டாண்டர்டு ஆயில், மெட்ரோபாலிட்டன் இன்சூரன்ஸ், புருடன்சியல் இன்சூரன்ஸ், இண்டர் நேஷனல் டெலிபோன், கோடக், யு. எஸ். ஸ்டீல் கார்ப்பரேஷன், மார்கன் போன்ற வணிகக் குழுக்கள் தம் லாபத்தில் ஒரு பகுதியைக் கல்வி வளர்ச்சிக்குச் செலவிடுகின்றன. கார்னேஜி என்ற வள்ளல் 20 கோடி ரூபாயும், அறத்தால் புகழ்பெற்றுக்

கொடை விளக்காக விளங்கும் ராக்பெல்லர் குடும்பத்தார் 300 கோடி ரூபாயும் கல்விக்காக வழங்கியுள்ளனர். ராக்பெல்லர் குடும்பத்தார், தாம் நிறுவியுள்ள பல்கலைக் கழகத்துக்கு அந்நகரின் பெயரால் 'சிக்காகோ பல்கலைக் கழகம்' என்று பெயரிட்டுள்ள பெருந்தன்மையும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் மிகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகம் ஹார்வர்டு. அடுத்த வரிசையில் இருப்பவை: யேல், பிரின்ஸ்டன், சிக்காகோ, கொலம்பியா, கலிபோர்னியா, பல்கலைக் கழகங்கள். மூன்றும் வரிசையில் இராச்சியப் பல்கலைக் கழகங்களும், மின்னிசோட்டா, ஸ்டான்போர்டு போன்ற பல்கலைக் கழகங்களும் இடம் பெறுகின்றன. இம்மூன்று வரிசைகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் 100க்கும் குறைவு.

இந்தப் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றின் வரவு செலவும் ஓராண்டுக்கு 50 கோடி ரூபாய்க்கு மேற்பட்டதாகும். எனவே, இந்திய நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களையும் சேர்த்தால்கூட அவற்றின் ஐந்தாண்டு வரவு செலவு, அமெரிக்காவிலுள்ள மூன்றும் நிலைப் பல்கலைக் கழகம் ஒன்றின் ஓராண்டு வரவு செலவுக்குச் சமமாகாது.

இவ்வளவு பணமும் எப்படிச் செலவிடுகின்றனர்?

முதலாவது சிறந்த கட்டிடங்கள் கட்டுகின்றனர். இரண்டாவது, தகுதியானவர்களை ஆசிரியராகச் சேர்த்து அவர்களுக்கு மிக உயர்ந்த சம்பளம் கொடுக்கிறார்கள். மூன்றாவது, மாணவர்களுக்கு வேண்டும் வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்கின்றனர். நூல் நிலையங்களுக்குக் கோடிக் கணக்கில் செலவிடுகின்றனர். ஆராய்ச்சியாளர்களுக்கென்று தனிப்பட்ட

நூல் நிலையங்களை நிறுவுகின்றனர். ஆசிரியராக இருந்து கொண்டே படிப்பவர்களுக்கும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பேராசிரியர், துணைப் பேராசிரியர் ஆகியோருக்கும் பணத்தை வாரி வழங்குகிறார்கள். பணத்தைக் குறைத்துக் கொடுத்தால், குறிப்பிட்ட ஆராய்ச்சி நிகழாது; பொருளாதாரச் சிக்கல் பற்றியே ஆராய்ச்சி நடக்கும்!

அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் சிறிய நகரங்களிலும் உள்ளன. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் சேரும் போது மாணவர் சராசரி 18 வயதுடையவராக இருக்கின்றனர். இதனால், அங்கு மாணவர்கள் அறிவுப் பெருக்கத்தில் ஆர்வமும் வாழ்வில் பொறுப்பும் உள்ளவர்களாக விளங்குகின்றனர்.

மாணவருக்குத் தேர்வு நடத்திப் பட்டங்கள் கொடுக்கும் உரிமை அமெரிக்காவில் பல்கலைக் கழகங்களுக்கு மட்டுமன்றிக் கல்லூரிகளுக்கும் உண்டு. பல கலைகளுக்கான கல்லூரிகள் ஓரிடத்தில் ஒருங்கே அமையப் பெற்றிருப்பதே அமெரிக்காவில் பல்கலைக் கழகத்துக்கும் கல்லூரிக்குமுள்ள வேறுபாடாகும். பகல் முழுவதும் வேலை பார்ப்பவர்கள் உயர் படிப்புப் பெறுவதற்கேற்பச் சில பல்கலைக் கழகங்கள் இரவிலும் நடைபெறுகின்றன.

மாணவர் பெறும் மதிப்பு எண்களைக் கொண்டு தேர்ச்சியை உறுதி செய்யும் முறை அமெரிக்காவில் இல்லை. விடைத் தாள்களைத் திருத்தியபின், அவற்றை ஆசிரியர்கள் 'ஏ. பி. சீ.' என்று மூன்று வகுப்பாகப் பிரித்து மதிப்பிட்டு, 'சீ' வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தேர்ச்சி பெறாதவர்களாகக் கருதுகின்றனர். நேரத்தைப் பொன்னேபோற் போற்றும் அமெரிக்கர் தேர்வின் முடிவுகளையும் ஆகாயவிமான விரைவில் தெரிவித்து

விடுகின்றனர். விடைத் தாள்களைத் திருத்தி அரைமணி நேரத்தில் முடிவைத் தெரிவிக்கும் இயந்திரங்களையும் கண்டுபிடித்து அவற்றைச் சில தேர்வுகளிற் பயன்படுத்தி வருகின்றனர்!

நூல்கள் வெளியிடும் வேலையை எல்லாப் பல்கலைக் கழகங்களுமே மேற்கொண்டுள்ளன. உலகின் பல நாடு களைப்பற்றிய ஆதாரமான நூல்களைக் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டிருக்கின்றனர். ஹார் வர்டு பல்கலைக் கழகத்தார் சமஸ்கிருத மொழியைப் பற்றி அரிய நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் ஒரு பெரிய அச்சகமும் நூல் வெளியீட்டுப் பிரிவும் உண்டு.

நூல் வெளியீட்டுப் பிரிவு கல்வி கற்பிக்கும் பிரிவைப் போலவே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இப்பிரிவு வெளியிடும் நூல்கள் சிறந்த ஆதார நூல்களாக அமைந்து அமெரிக்க அரசாங்கத்து வெளிநாட்டு அலுவலர்களுக்கு உதவுகின்றன. நூல்கள் அவற்றின் அளவுக்கேற்ப புரோஷியூர், ஆர்டிகிள், மானேகிராப், புத்தகம் (Brochure, Article, Monograph, Book) என்று பெயர் பெறுகின்றன.

சிக்காகோ, பென்சில்வேனியா முதலிய பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறை உண்டு. கலிபோர்னியா போன்ற பல்கலைக் கழகங்களில் மொழி இயற்கல்வி கல்வி கற்பிக்கப்படுகிறது.

வடமொழிப் படிப்பு 1870லேயே ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்டது. இன்றும் இங்கு அமெரிக்கர் மட்டுமன்றிப் பிறநாட்டவரும் வடமொழி பயில்கின்றனர். இந்தியப் பல்கலைக் கழங்களி லிருந்து வடமொழி, தத்துவ சாத்திர, சமயப் பேரா

சிரியர்கள் இடையிடையே ஹார்வர்டில் சொற்பொழி வாற்றுகின்றனர்.

பென்சில்வேனியா பல்கலைக் கழகத்திலும் வட மொழி ஆராய்ச்சி புகழ் பெற்றுளது. அங்குள்ள பேராசிரியர் நார்மன் பிரவுன், அமெரிக்காவில் தலை சிறந்த வடமொழிப் பேராசிரியர் ஆவார். அவர் பிறந்தது இந்தியாவில்தான். அவர் 1963-இல் கூட, சென்னைக்கு வந்திருந்தார். அவர் பல தடவை இந்தியாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் வந்தவர்; மதுரையைப்பற்றி நூல் எழுதி யிருப்பவர்; சென்னை பல்கலைக் கழகத்து நூற்றுண்டு விழாவில் அவர்க்குக் 'கௌரவ டாக்டர்' பட்டம் கொடுக்கப்பட்டது. இந்தியாவைப்பற்றி நன்கு அறிந்த பெருமேதை, நார்மன் பிரவுன்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் பெருமைக்கு இன்னும் ஒரு காரணம், அங்கே ஆசிரியரும் மாணவரும் நண்பர்போல நெருங்கிப் பழகுவதேயாம். அமெரிக் காவில் ஆசிரியரோ மாணவரோ வேலை நிறுத்தம் செய்வ தில்லை என்பதும், மிகுதியான சம்பளம் பெறும் ஆசிரியர்கள் அவ்வருவாயில் ஒரு பகுதியை மாணவருக்குச் செலவிடுவதும் இங்கே குறிப்பிடத்தக்கவை.

பல்கலைக் கழகங்களில் தலைவர், அதாவது துணை வேந்தர் பதவிக்கு அமெரிக்கர், சிறந்த அறிஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய வாழ்நாள் முழுவதற் கும் அப் பதவியை உறுதிப்படுத்துகின்றனர். பயன்மிக்க பல வேலைகளைப் ப'ல்லாண்டுகளுக்குத் திட்டமிடவும் நிறைவேற்றவும் இந்த முறை உதவியாக இருக்கிறது.

நாட்டின் பெரிய தலைவர்களும் அரசியல் வாழ்வோடு நின்றுவிடாமல், பல்கலைக் கழகப் பதவிகளையும் ஒத்த

தாக மதித்துக் கல்வித்துறையில் பணியாற்றுகின்றனர். அமெரிக்காவின் தலைவர் ஆகுமுன் கொலம்பியா பல்கலைக் கழகத்துத் தலைவர் பதவியைத் தளபதி ஐசன் ஹோவர் ஏற்றுக்கொண்டதை இங்கே நினைவூட்டுவது பொருத்தமானது. இந்நாளில் உலகிற் பெரிய நீர்ப் பாசனத் திட்டமாகிய டென்னசி பள்ளத்தாக்கின் வளத்தைப் பெருக்கும் குழுவின் தலைவரும், சிறந்த பொறியியல் வல்லாருமான அர்தர் மார்கன் போன்றோரும் அமெரிக்காவில் கல்வித்துறையில் தொண்டாற்றி வருகின்றனர். இப்பெரியார் இந்தியப் பல்கலைக் கழகங் களைப் பற்றிய இராதாகிருஷ்ணன் ஆய்வுக் குழுவில் ஓர் உறுப்பினராக நம் நாட்டிற்கு வந்தவர் ஆவார்.

அமெரிக்கக் கல்வித் திட்டத்தில், ஈராண்டுப் படிப்பு அல்லது மூன்றாண்டுப் படிப்பு என்று எந்தப் படிப்புக்கும் குறிப்பிட்ட கால வரையறை இல்லை. ஒவ்வொரு மாண வரும் தம் திறமைக்கேற்பச் சில மாதங்களிலேனும் சில ஆண்டுகளிலேனும் பட்டம் பெறலாம்.

ஆராய்ச்சியில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்தும் நோக் கத்தோடு, அமெரிக்க சோதனைச் சாலைகளில் சோதனைக் குழாய்களை உடைத்துவிட்டதற்காக மாணவருக்கு அப ராதம் விதிப்பதில்லை. ஓரளவு ஆராய்ச்சி முடித்த பின்னரே அங்கே பட்டங்கள் வழங்கப்படுகின்றன. நில வள இயலில் பயிற்சிபெறும் மாணவருக்கு வெறும் நூலறி வோடு நிறுத்திவிடாமல், இல்லினாய் பல்கலைக் கழகத்தார், மாணவர்களை ஆகாய விமானங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய வேறுபட்ட நிலப் பகுதிகட்கு அழைத்துச் செல்லுகின்றனர். ஒவ்வொரு விமானத் திலும் ஓர் ஆசிரியர் அமர்ந்து, விமானத்துக்குக் கீழுள்ள இடத்தின் இயற்கை அமைப்பை மாணவருக்கு விளக்குகின்றார்.

காடுகளில் தீப்பற்றினல் ஏற்படும் சேதத்தைப் பற்றி ஆராய, சில பல்கலைக் கழகங்களில், வானத்தில் உலவும் வகுப்புக்களை நடத்துகின்றனர்.

அமெரிக்கர் தம் வாழ்க்கைக்குப் பயன்படாத எதையும் படிப்பதில்லை. மாமியாரோடு மருமகள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை ஜப்பானிலுள்ள கல்லூரிகள் மாணவிகளுக்குக் கற்பிக்கின்றன. இக் கல்வி அமெரிக்காவில் இல்லாததால், இது அமெரிக்கரின் வாழ்க்கைக்கு வேண்டுவதில்லை என்றே கொள்ள வேண்டும்.

அமெரிக்கக் கல்லூரிக் கட்டிடங்கள் மிக உறுதியாகக் கட்டப்பட்டுள்ளன. பிளாரிடா பல்கலைக் கழகத்தில் 80 லட்சம் ரூபாய்ச் செலவில் எதிரொலியைத் தடுக்கும் வன்மையுடையதும், ஒலியைத் தெளிவாகக் கேட்கச் செய்வதும், குளிர்—வெப்ப சாதனங்களுடன் கூடியது மான பெரியதோர் மண்டபம் கட்டி, அங்கே இசைக் கல்லூரி நிறுவியுள்ளனர்.

உலகிற் பெரிய பல்கலைக் கழகம்

கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சில புள்ளி விவரங்களைக் குறிப்பிடலாம். அதன் பரப்பு 10404 ஏக்கர். விவசாயப் பண்ணையின் நிலப்பரப்பு 1650 ஏக்கர். வகுப்புக்கள் நிகழும் மண்டபங்களின் இடப் பரப்பு 41 ஏக்கர். கட்டிடங்கள் 540. ஆசிரியர்களின் எண்ணிக்கை 3235; மாணவர்களின் தொகை 60,000. நூல் நிலையத்திலுள்ள நூல்கள் 30 லட்சம்; அவற்றின் மதிப்பு நாலரைக் கோடி ரூபாய். தனிப்பட்டவர்களின் நன்கொடை 18 கோடி ரூபாய். ஓராண்டுச் செலவு 80 கோடி ரூபாய். இயந்திரங்களின் மதிப்பு 30 கோடி ரூபாய்.

உலகின் பல நாடுகளுக்கிடையே நல்லெண்ணத்தை வளர்க்கப் பல்கலைக் கழகம் சிறந்த கருவியாகும். இது பற்றியே பல நாட்டுப் பல்கலைக் கழகங்கள் ஆசிரியர் களையும் மாணவர்களையும் தமக்குள் மாற்றிக்கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை முடிவு செய்தது. இதற்கான திட்டங்களை அமெரிக்க அரசாங்கமும் அமெரிக்க அற நிறுவனங்களும் பல்கலைக் கழகங்கள் வாயிலாக நிறைவேற்றி வருகின்றன. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பல்லாயிரம் ஆசிரியர்கள் வெளிநாடு களுக்குச் சென்று அங்கு ஓரிரு ஆண்டுகள் வாழும் வாய்ப்புப் பெற்றவர்கள் ஆவர்.

இறுதியாக, ஓர் எச்சரிக்கை கூறலாம். சிலர் எப்படியாவது அமெரிக்காவுக்குப் போனால் போது மென்று விடாப்பிடியாக முயன்று, இந்தியாவை விட்டுப் புறப்பட்டு விடுகின்றனர். நிறவெறி உள்ள நகரங் களிலோ அல்லது தாம் பயிலும் பாடத்தில் நல்ல பேரா சிரியர்கள் இல்லாத பல்கலைக் கழகங்களுக்கோ சென்று அவர்கள் அவதிப்படுகின்றனர். வேறு சிலர், அமெரிக் காவிலேயே பிற்பட்ட பகுதிகளுக்குச் சென்று ஏமாற்றம் அடைகின்றனர். தக்கவர்களைக் கேட்டும், யு எஸ்.ஐ.எஸ். என்னும் அமெரிக்கச் செய்தி நிறுவனத்தாரின் அறிவுரை பெற்றும் திட்டமிட்டுப் பல்கலைக் கழகம் தேர்ந் தெடுப்பதே சாலச் சிறந்தது.

8. ஒஹையோ பல்கலைக் கழகம்

ஓஹியோ என்று நாம் சொல்லுகிறோமே, இந்த இராச்சியத்தின் பெயரை அமெரிக்கர் 'ஒஹையோ' என்று உச்சரிக்கின்றனர்.

ஒஹையோ இராச்சியப் பல்கலைக் கழகம்தான், நான் அமெரிக்காவில் யான் விரிவாகப் பார்த்த பல்கலைக்கழகம். இக் கல்வி நிலையத்தை விரிவாகக் காண்போம்.

நியூயார்க்கிலிருந்து 1100 கி. மீ. தொலைவில் கொலம்பஸ் என்னும் நகரில் இப் பல்கலைக் கழகம் இருக்கிறது. இதை நான் பார்க்கப் போனதற்குக் காரணம், தெரிந்த நண்பர்கள் இங்கே கல்வி பயின்றதே ஆகும்.

இப்போது கோயம்புத்தூர், அவிநாசிலிங்கம் மனை இயல் கல்லூரியில் முதல்வராக இருக்கும் டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நான் கொலம்பசுக்குச் சென்றேன்.

ஆனால், அங்கு என்னை விருந்தினராக ஏற்றுக் கொள்ளப் பல அமெரிக்கக் குடும்பங்கள் போட்டியிட்டன. வொல்லர்மன் குடும்பத்தாருடனும் ஹகோலா குடும்பத்தாருடனும் ஹௌ குடும்பத்தாருடனும் சிற்சில நாட்கள் தங்கினேன்.

அமெரிக்கரின் ஒழுக்கம்

கடவுள் வழிபாடு செய்த பின்னரே இக்குடும்பத்தினர் உணவருந்தியது, அமெரிக்காவில் நான் எதிர்

பாராததொன்று; மேலும், நான் தங்கிய இக் குடும்பங்களில் ஒன்றிலேனும், ஒருவரும் குடிவகைகளைப் பயன்படுத்தவில்லை. என்னுல் அவர்கள் குடிக்காமலிருக்கிறுர்களே என்று நான் வருத்தப்பட்டபோது, "நாங்கள் மட்டுமன்று; எங்களைப் போலவே, கிறிஸ்துமஸ் தவிர ஏனைய நாட்களில் குடிக்காத பல்லாயிரம் அமெரிக்கர் இருக்கிறுர்கள்" என்று அவர்கள் கூறியது, வியத்தற்குரியதாயிருந்தது.

நான் போய்ச் சேர்ந்த நாள் மிகச் சிறப்பான நாள்; அன்றுதான் ஒஹையோ—மிச்சிகன் மாகாணங்களுக்குள் கால்பந்தாட்டப் போட்டி அந்நகரில் நடந்தது. அன்று நான் அங்கு வந்ததைப்பற்றி அன்பர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்; நான் பாக்கியசாலி என்றுங் கூறினர். சில நாட்களுக்கு முன்பே, எனக்காக 10 டாலர் (47½ ரூபாய்) கொடுத்து ஒரு டிக்கட்டும் வாங்கியிருந்தனர்.

விளையாட்டுக் காட்சி

பிற்பகல் 3 மணிக்கு அப்போட்டியைப் பார்க்கச் சென்றேம். அன்றுபோல் மிகுதியான குளிர் என்றும் இல்லை. பல உடைகளை அணிந்துகொண்டு நண்பர்களை மகிழ்விக்கவே நான் சென்றேன். பல்கலைக் கழக மைதானத்தில் அப்போட்டி நிகழ்ந்தது. ஏறக்குறைய ஒரு நூருயிரம் மக்கள் கூடியிருந்தனர். வானெலிக்காக அறிவிப்பு நடந்துகொண்டிருந்தது. பத்திரிகைகட்காகவும் உள்ளக் களிப்புக்காகவும் பலர் நிழற்படம் எடுத்த வண்ணமாயிருந்தனர்; தொலைக் காட்சிக் கம்பெனியார் போட்டிக் காட்சியை அஞ்சல் செய்தனர். திரைப்படக் காரர்களும் சுறுசுறுப்பாயிருந்தனர். அமெரிக்கரின் கால்பந்தாட்டம் 'ரக்பி' எனப்படும். அதற்கும் பிற நாடுகளில் நடக்கும் கால்பந்தாட்டத்துக்கும் பல வேறு

பாடுகள் உண்டு. இரண்டு சீனர்கள் ஓர் அமெரிக்கக் கால்பந்தாட்டத்தைப் பார்த்த பின்னர், எந்தக் கட்சி வென்றது என்பதைப் பற்றி விவாதித்ததாக அமெரிக்காவில் வேடிக்கைப் பேச்சுப் பேசுவது இன்றும் வழக்கம்.

கொடி வணக்கம்

நாட்டுக்கொடியை ஏற்றி நாட்டு வணக்கப்பாடலைப் பாடிய பின்பே போட்டி தொடங்கிற்று. தம் நாட்டுக் கொடிக்கு அமெரிக்கர் மிகவும் வணக்கம் செலுத்துவர்; தெருவில் யாரேனும் ஒருவர் நாட்டுக் கொடியைக் கொண்டு போனால், அவ்வழியிற் செல்வோர் அனைவரும் தலை குனிந்து, தொப்பிகளை எடுத்து வணக்கம் செலுத்துகிறார்கள்.

மாணவிகளின் விடுதி

போட்டி முடிவுற்றதும், அருகிலிருந்த பேக்கர் ஹாலுக்குச் சென்றேன். மாணவிகளின் உணவு விடுதி இருக்கும் அம்மண்டபத்தில், ஆண்டுக்கு நான்கு நாட்களில்தான் ஆடவர் உள்ளே செல்லலாம். போட்டியை முன்னிட்டு அந்நாளும் குறிப்பிட்ட நாட்களில் ஒன்றாயிருந்தது. அங்கே ஒவ்வொரு மாணவிக்கும் டெலிபோன் இருந்தது; சுகாதார வசதிகள் சிறந்து விளங்கின; நீராடுவதற்கான அமைப்புக்களையுங் கருவிகளையுங் கண்டு பொறாமைப்பட்டேன். நீராடும் அறையே அமெரிக்கர்கள் போற்றிச் சிறப்பிக்கும் இடம். அவர்கள் நீராடும் அறையில்தான் குடியிருப்பர் என்று விளையாட்டாகச் சொல்லுவதுண்டு. வீடு கட்டும் செலவில் ஒரு பெரும்பகுதியை நீராடும் அறைக்காகவே அமெரிக்கர்

செலவிடுவர். பல வீடுகளில், வாழ்பவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், நீராடும் அறைகளின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும்.

கடவுள் வழிபாடு

மறுநாள் ஞாயிற்றுக் கிழமையாக இருந்ததால், நான் காம்பஸ்*க்குச் செல்லவில்லை. என்னை விருந்தினனாக ஏற்றிருந்த குடும்பத்தாருடன் நானும் கிறித்தவக் கோயிலுக்குச் சென்றேன். குழந்தைகட்கான விவிலிய நூல் வகுப்பில் ஆசிரியரின் வேண்டுகோட்கிணங்க, 6, 7 ஆண்டுச் சிறுவருக்கு நான் சில சொற்கள் கூறினேன். அங்கிருந்து வயதுவந்த இளைஞர்கட்கான வழிபாட்டு மண்டபத்துக்குச் சென்றேன். மிஸ்டர் வொல்லர்மனின் மகன் ப்ரட்டி என்னை அறிமுகப் படுத்தியவுடன், அங்கும் ஒரு குட்டிச் சொற்பொழிவாற்றினேன். அதன் பின்னர் முதியோருக்கான வழிபாட்டு மண்டபத்துக்குச் சென்றேன். காந்தியடிகளிடம் மிகவும் அன்புடைய ரெவரண்டு வொல்ட் என்ற மதகுரு, ''காந்தியடிகளின் நாட்டிலிருந்து வந்திருப்பவர்'' என்று என்னைப்பற்றித் தம் உரையிற் குறிப்பிட்டார். வழிபாடு முடிந்தவுடன், மிகப் பலர் என்னிடம் வந்து என் நலத்தை விசாரித்தனர்.

நாகரிகமாய் உண்ணவும் உடுக்கவும் ஆடவும் ஓடவும் பாடவும் புலனுர இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கவும், இவற்றிற்கெல்லாம் இன்றியமையாத செல்வத்தை

---

*பல்கலைக் கழகமும் அதைச் சேர்ந்த எல்லாக் கட்டிடங்களும் உள்ள இடம் என்னும் பொருளில் காம்பஸ் என்ற சொல் அமெரிக்காவில் வழங்குகின்றது.

மேன்மேலும் வளர்க்கவும் பொழுது போதாத அமெரிக்கருக்குக் கண்ணுக்கெட்டாத ஒரு கடவுளைப் பற்றிச் சிந்திக்கவும் நேரமிருக்கிறது என்பதை அன்றுதான் நான் அறிந்தேன்.

பல்கலைக் கழகப் பிரிவுகள்

திங்சட்கிழமை யன்று, ரோடரி சங்கத்தில் நடந்த பகலுணவுக் கூட்டத்தில் சர்வதேச விருந்தினனுக யான் சிறப்பிக்கப்பட்டபின், காம்பஸ் பார்வையை அன்று தொடங்கினேன். ஒஹையோ பல்கலைக்கழகம் 2400 ஏக்கர் பரப்பில் 68 கட்டிடங்களுடன், ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் புகழ்பெற்ற பல பேரறிஞர்கள் உள்பட 2600 ஆசிரியர்களுடனும், 5000 மாணவிகளுட்பட 25,000 மாணவர்களுடனும், 22 கோடி ரூபாய் மூலதனத்தோடும் விளங்குகின்றது. இது அமெரிக்காவிலுள்ள நடுத்தரப் பல்கலைக் கழகங்களுள் ஒன்ருகும். பல் வைத்தியம், மிருக வைத்தியம், சட்டக் கல்வி, பொறியியற்கலை, விமானக் கல்வி, வானிலை ஆராய்ச்சிக் கல்வி, பத்திரிகைக் கல்வி போன்ற 70 பிரிவுகள் இங்கு உண்டு. ஓரளவு ஆராய்ச்சி செய்த பின்புதான் பட்டங்கள் வழங்கப்படும். ஏனைய அமெரிக்கப் பல்கலைக் கழங்கள் போலவே இங்கேயும் போரில் தொண்டாற்றிய பல்லாயிரவர் பிறகு மாணவராய்ச் சேர்ந்து பயிற்சி பெற்றுள்ளனர்.

துணைத் தலைவர் சந்திப்பு

காம்பசில், என் முதல் அலுவல், பல்கலைக் கழகத் துணைத் தலைவராகிய டாக்டர் ப்ளாண்டு ஸ்ட்ராலியைச் சந்தித்ததேயாகும். அவர் இந்தியாவைப் பற்றியும் இந்தியாவிலுள்ள கல்வி முறையைப் பற்றியும் என்னிடம் விரிவாகக் கேட்டார்; தம் பல்கலைக் கழகத்தைப் பற்றிய

விவரங்களையும் விளக்கிக் கூறினர்; இல்வாழ்க்கைக் கலை, கால்நடைப் பாதுகாப்பு, விவசாயப் பொறியியற் கலை போன்ற துறைகளில்தான் ஒஹையோ பல்கலைக் கழகம் பெரிதும் முன்னேறியிருப்பதாகக் கூறினர். தாம் ஒரு விவசாயி என்றும் அன்று காலையிற்கூட வயலில் வேலை செய்ததாகவும் அவர் கூறியது, எனக்குப் பெரு யப் பளித்தது. தகுதியுள்ள இந்திய இளைஞர்கள் தம் பல்கலைக் கழகத்துக்கு வரவேண்டுமென்றும், அவர்கட்கு எல்லா உதவிகளும் அளிப்பதாகவும் அவர் கூறினர். கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து வந்த மாணவரிற் பலருக்கு ஆங்கில மொழிப்பயிற்சி போதிய அளவுக்கு இல்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினர். அவரோடு நான் பேசிக்கொண்டிருந்தபோது, பல்கலைக் கழகப் புகைப்படப் பகுதியினர் படமெடுத்தனர்; எங்கள் சந்திப்பு, பல்கலைக்கழக இதழில் மறுநாள் வெளியாயிற்று.

பாலர் பள்ளி

செவ்வாய்க்கிழமையன்று பாலர் பள்ளிக்கூடத்துக்குச் சென்றேன். இதுவும் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதி. இங்கே, பல்கலைக்கழக மாணவிகள் இரண்டு ஆண்டுக் குழந்தைகட்கு அவர்கள் விரும்பியபோது படங்கள் காட்டிக் கல்வி கற்பித்தனர். பால்மணம் மாருச் சிறுவர் சிறுமியரை, தாய்மார்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்போது, பேணுவது இப்பள்ளியின் பொறுப்பு

இல்வாழ்க்கைக் கலைப் பகுதி

எனது அடுத்த அலுவல், இல்வாழ்க்கைக் கலைப் பகுதியை யான் பார்வையிட்டது. சலவையாகி வந்துள்ள துணிகளைச் சரிபார்க்கும் கருவிகளும், பலவகை உணவு களைச் சோதனை செய்யும் பொறிகளும் இங்கே இருந்தன.

பொருளாதாரப் பேராசிரியர் சந்திப்பு

பொருளாதாரப் பேராசிரியர்களுடன் அன்று பகலுணவு அருந்தினேன். செவ்வாய்தோறும் அவர்கள் சந்தித்துச் சொற்பொழிவாற்றுதல் மரபாம். நான் அவர்கள் கூட்டத்தில் பேசிப் பெருமிதம் அடைந்தேன். கூட்ட முடிவில் பல பேராசிரியர்கள் தத்தம் அறைகட்கு என்னை அழைத்தனர். பல வினுக்களைப் பற்றித் தனித் தனியே அவர்களோடு விவாதித்தேன். சிலர் தாம் இயற்றிய நூல்களை அன்பளிப்பாகத் தந்தனர்; அமெரிக்கப் பொருளாதாரத்தை நன்கு அறிய எனக்கு உதவக் கூடிய நூல்களின் பட்டியலுந் தந்தனர்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் ஓர் ஆசிரியர் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து மற்றொன்றுக்கு எளிதில் மாற இயலும். ஆனுல் வேலைக்கு மனுப் போடும் முறை அரிது. தக்கவர் ஒருவர், வேலை விரும்புபவரின் தகுதி யைப் பற்றித் தெரிவித்தால் அதன் அடிப்படையில் அவருடைய தகுதியை ஆராய்ந்து உடனே வேலை கொடுப்பர். முன்னர் வேலை பார்த்த பல்கலைக்கழகத் தாரிடம் அவரைப்பற்றி விசாரிக்கும் வழக்கம் அமெரிக் காவில் இல்லை.

வேலை உயர்வு படிப்படியாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஏற்பாடும் மனநிலையும் அமெரிக் காவில் இல்லை. ‘இன்ன சம்பளம் தந்தால்தான் உங்கள் பல்கலைக் கழகத்துக்கு வருவேன்’ என்று சொல்லும் துணிவும், கொள்கை வேறுபாட்டால் விலகிச் செல்லும் நெஞ்சமுத்தமும் அமெரிக்கப் பேராசிரியர் பலருக்கு உண்டு. 1962—63-இல் மிசிசிப்பி பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினர் கடைப்பிடித்த நீக்ரோ எதிர்ப்புக் கொள்கைகளைக் கண்டித்து, அப்பல்கலைக் கழகத்து

வெள்ளை-அமெரிக்கப் பேரரசிரியர் பலர் பிற பல்கலைக் கழகங்களுக்குச் சென்றதை யான் அறிவேன். அமெரிக்காவில் நிலவும் மக்களாட்சி மனப்பான்மை பல்கலைக் கழகங்களிலும் ஊடுருவியிருப்பதற்கு இது சான்றாகும்.

வானொலிக் கல்வித்துறைத் தலைவர் சந்திப்பு

பின்னர் பல்கலைக் கழக வானொலி நிலையத்தில், வானொலிக் கல்வித்துறைத் தலைவர் டாக்டர் கீத் டைலர் வானொலி நிகழ்ச்சியில் என்னைப் பேட்டி கண்டார். இந்தியாவைப்பற்றிய பல வினாக்களுக்கு விடை கூறினேன். இந்தியா அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் ஏற்றுமதிகளும் ஒன்றுக்கொன்று போட்டியில்லாதவையாயிருப்பதால், பொருளாதாரத் துறையில் இந் நாடுகள் ஒத்துழைப்பது எளிதென்பதையும், இந்தியா மீது அமெரிக்கர் நல்லெண்ணமுடையவரா யிருப்பதையும், டாக்டர் டைலர் பேட்டியின் இறுதியில் குறிப்பிட்டார்.

நூல் நிலையம்

நூல் நிலையத்திலும் சிறிது நேரம் செலவிட்டேன். இரவு 11 மணி வரையில் பல நூல் நிலையங்கள் திறந்திருக்கும். ஆராய்ச்சியாளருக்குத் தனி நூல் நிலையங்களும் பொழுது போக்குப் படிப்புக்குத் தனி நூல் நிலையங்களும் அமெரிக்காவில் உண்டு. நான் சென்றபோது ஒஹையோ பல்கலைக் கழக நூல் நிலையத்தில், 8,00,000 நூல்கள் இருந்தன. ஆண்டுதோறும் இந்நூல் நிலையத்திற்கு 5,00,000 ரூபாய் செலவிட்டனர்.

திரைப்படக் காட்சி

பல்கலைக் கழகத் திரைப்பட மாளிகைக்கும் சென்றேன். இங்கே யாவரும் பணம் கொடுக்காமல் விரும்பிய

போதெல்லாம் திரைப் படம் பார்க்கலாம். தென் அமெரிக்கப் பிரயாணம், அமெரிக்க வாணிகம், ஐக்கிய நாடுகள் சபை என்ற மூன்று படங்களை ஒரு மணி நேரத்திற் பார்த்தேன்.

மாணவர்களின் உணவு விடுதி

அன்றிரவு எனக்கு ஒரு ப்ரடர்னிடியில் (மாண வர்கள் சகோதரத்துவ சபை) விருந்து நடந்தது. அப்பல்கலைக் கழகத்தில் மட்டும் இதுபோன்ற ஆண் மக்கட்குரிய மாணவர் விடுதிகள் 75 உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனிக் கட்டிடம் உண்டு. நான் விருந் துண்ட ப்ரடர்னிடியில், 16 மேல் வகுப்பு மாணவரும், 16 கீழ் வகுப்பு மாணவரும் ஆக 32 மாணவர்கள் இருந் தனர். ஒவ்வொரு மேல் வகுப்பு மாணவருக்கும், தாம் விரும்பும் கீழ் வகுப்பு மாணவரொருவரைத் தம் அறை யில் தங்கியிருக்கச் செய்ய உரிமை உண்டாம்.

அந்த ப்ரடர்னிடிகளில், இன்றியமையாத சமையல் வேலைகட்கு மட்டுமே சம்பளங் கொடுத்து வேலையாள் நியமிப்பர்; உணவு படைக்கும் வேலையையும் பாத்திரங் கழுவும் வேலையையும் ப்ரடர்னிடியின் உறுப்பினரே, தமக்குள் காலவரையறை செய்துகொண்டு, மாறிமாறிச் செய்வர். வறுமை மிகுந்துள்ள நம் நாட்டில், இவை போன்ற சிக்கன முறைகளைக் கையாளும் நாள் எந்நாளோ?

எல்லா ப்ரடர்னிடிகளும் அவற்றுக்குத் தேவையான பொருள்களைத் தொகுத்து வாங்கிக்கொள்ளுகின்றன. அவை வாங்கும் உணவுப் பொருள்களைப் பல்கலைக் கழக இல்வாழ்க்கைக் கலைப் பகுதியினர் சோதிக்கின்றனராம். அங்கே உணவாக்குவதற்குப் பயன்படும் நிலக்கரியின்

தன்மையைப் பல்கலைக் கழகத்து இரசாயன அறிஞர் சரிபார்க்கிறாராம்.

ப்ரடார்னிடிகளில் ஒவ்வொரு நேர உணவுக்கும் குறித்த நேரம் உண்டு. மணி அடித்ததும், உறுப்பினர் அவரவருக்குரிய இடங்களில் அமரவேண்டும். நம் நாட்டு உணவு விடுதிகளிற்போலக் குறித்த நேரத்திலிருந்து 1½ மணி நேரம்வரை விரும்பியபோது உணவருந்தச் செல்வது அங்கே இயலாது. உணவின் தொடக்கத்திலும் இறுதியிலும் உறுப்பினர் அனைவரும் சேர்ந்து இசை பாடுவர்.

பிற அலுவல்கள்

அன்றிரவு உணவுக்குப் பின்னர்ப் பல்கலைக் கழகச் சமய ஆலோசகரும் இந்தியாவின்பால் மிக்க பற்றுடையவருமான ரெவரண்டு டாக்டர் மக்ளீன் என்பாரும் நானும் சொற்பெருக்குகள் ஆற்றினோம். அடுத்த அலுவலுக்கு நேரம் ஆகிவிடவே, இல்வாழ்க்கைக் கலைப் பகுதித் தலைவி டாக்டர் மிஸ் பிரானிகன் அவர்களுடைய இல்லத்துக்கு டாக்டர் மக்ளீனும் நானும் விரைந்தோம். அங்கே எல்லோருக்கும் தமிழ்நாட்டுச் சிற்றுண்டிகள் பரிமாறப் பட்டன.

புதன்கிழமையன்று, உடற்பயிற்சிக் கலை பற்றிய சொற்பொழிவு நடந்த வகுப்பில் நானும் அமர்ந்தேன். ஆசிரியரும் மாணவரும் மிக இனிமையாகப் பழகியதும், மனமுவந்து ஊக்கமாக மாணவர் பாடங் கேட்டதும், ஆசிரியர் பேச்சின் நகைச்சுவையும் நான் மாணவனாயிருந்தபோது நிகழாதவையாகவே இருந்தன.

பார்ட்டல் இன்ஸ்டிடியூட்

ஏனைய மாணவர்களெல்லாம் அடுத்த வகுப்புக்குச் செல்ல, அப்போது மட்டும் மாணவனாகிய யான்,

பார்ட்டல் இன்ஸ்டிடியூட்டுக்குப் புறப்பட்டேன். புகைப்பட ஆராய்ச்சி, மின்சாரக் கருவிகளைச் சரிபார்க்கும் வேலை, நெருப்பைத் தரும் பொருள்கள்பற்றிய ஆராய்ச்சி, வாயு பரிசோதனை, எக்ஸ் கதிர்கள் நிறமாலை, உலோகங்கள் ஆராய்ச்சி, தாதுப்பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி, தட்பவெப்ப நிலையைச் சோதிப்பது ஆகியவை இந்த இடத்தில் நடக்கின்றன. தனிப்பட்டவர்களின் பொருளுதவியால் இது அமைந்துள்ளது. இக்கழகத்தினர் கட்டணம் வாங்கிக்கொண்டு, தொழிற்சாலைகட்கும் வியாபாரிகட்கும் தொண்டு புரிகின்றனர்.

டாக்டர் கெர்ச்சரின் பண்பாடு

எகிப்தில், கெய்ரோ பல்கலைக்கழகத்தின் ஆலோசகராயிருந்த டாக்டர் கெர்ச்சருடன் அன்றிரவு விருந்துண்டேன். அங்கே குழுமியிருந்த அமெரிக்க நண்பர்கள் நம் உணவை, நமது முறைப்படியே தரையில் அமர்ந்து கையாலேயே உட்கொள்ள நேரிட்டது. அது அவர்கட்குப் புதியதாயினும், சுவையான அநுபவமாக இருந்தது. பேராசிரியர் கெர்ச்சர் தம் மாணவரும் நானும் இருந்த இடத்துக்குத் தம் காரைத் தாமே ஓட்டிக்கொண்டு வந்து எங்களை அவர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றதும், தம் வீட்டில் வண்ண வேலைகளைத் தாமே செய்ததாகச் சொன்னதும், அன்று விருந்தில் நண்பர்கட்கும் மாணவர்கட்கும் பேராசிரியத் தோழர்கட்கும் உணவு படைக்கும் வேலையையும் தட்டுக் கழுவும் வேலையையும் தாமே செய்ததும், தம் சமையலறைக்குள் என்னை அழைத்துச் சென்று மின்சார அடுப்பை எனக்கு இயக்கிக் காட்டியதும், தம் மாமியாரை எனக்கு அறிமுகப்படுத்தியதும் நான் நம்ப முடியாத காட்சிகளாக இருந்தன.

நன்றி கூறும் நாள்

வியாழக்கிழமை, நன்றி கூறும் நாள் (Thanks-giving day). அதாவது, ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்கு வந்து நூறுயிரக்கணக்கானவர் குடியேறியதைக் குறிக்கும் ஆண்டுவிழா நாள்; செல்வத்திற் சிறந்து விளங்கும் அமெரிக்க மண்ணில் குடியேறியதற்காக அமெரிக்கர்கள் அனைவரும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தும் நாள். அதனை உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செலுத்தும் நம் பொங்கலைப் போன்ற விழா எனக் கூறலாம். அது அமெரிக்கரின் நாட்டு வணக்கப் பெருநாள். ஆண்டு தோறும் நவம்பர்த் திங்களில் நாலாவது வியாழக்கிழமையில் அது நிகழும். நாடெங்கும் அன்று விடுமுறை நாள். அமெரிக்கருக்கு மிகப் புனிதமான நாட்களில் அது ஒன்று. குடும்பத்து உறுப்பினர் அனைவரும் ஒருங்கே கூடி மகிழும் அந்நாள் 1621-ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்நாளில் கிறித்தவ ஆலயங்களில் சிறப்பான வழிபாடுகள் நிகழ்கின்றன. அந்நாளில், அமெரிக்கர் அந்நாட்டு உணவாகிய வான் கோழி இறைச்சியை (ஏழு கிலோ எடையுள்ள இது அமெரிக்க நாட்டின் சிறப்பான பறவை) நாம் பொங்கலன்று சர்க்கரைப் பொங்கல் உண்பதுபோல் உண்பர்.

வேளாண்மைப் பண்ணை

வெள்ளிக்கிழமையன்று, 1,000 ஏக்கர் நிலப்பரப்பும் இக்காலத்துக்குரிய கட்டிடங்களுமுள்ள பல்கலைக்கழகத்து விவசாயப் பண்ணையைப் பார்வையிட்டேன். அது மிகச் சுகாதாரமான நிலையில் பேணப்பட்டு வருகிறது. அங்கே தேனீக் கூடுகளையும் கோழிப்பண்ணைகளையும், மாட்டுப் பண்ணைகளையும், கனிகாய் உற்பத்திபற்றிய

கழகத்தையும் பார்த்தேன். தாவரங்களும் விலங்குகளும் பற்றிய ஆராய்ச்சிக்காகப் பெரியதோர் ஏரியும் அங்கே இருக்கிறது.

விமான நிலையம் முதலியன

பல்கலைக் கழகத்து ஆகாயவிமான நிலையம், விவசாயப் பண்ணைக்கு அணித்தாயுள்ளது. அதன் நிலப் பரப்பு 400 ஏக்கர். ஒஹையோவில்தான் ஆகாயவிமானம் கண்டு பிடிக்கப்பட்டதென்பதையும் அங்குள்ளவர்கள் எனக்கு நினைவுபடுத்திய வண்ணமாக இருந்தனர். பல்கலைக் கழக ஆய்வுக்கூடத்தையும் பொருட்காட்சிச் சாலையையும் பார்வையிட்டபின், ஆசிரியர்கள் சங்கத்தில் (பாகல்டி கிளப்) ஒய். எம். சி. ஏ. நண்பர்கள் சிலருடன் பகலுணவு அருந்தினேன்.

நம் நாட்டு உணவு

அன்றிரவு டாக்டர் மக்ளீன் வீட்டில், பல நண்பர்களுடன் மீண்டும் நம் நாட்டு உணவு அருந்தும் பேறு கிடைத்தது. நம் உணவின் சுவையை யாவரும் பாராட்டினர்; காரம் மிகுதியாயிருப்பதாயும், எண்ணெய் சேர்ப்பதால் செமிப்பதில்லை என்றும் நம் உணவைப்பற்றி இரு குறைகள் வெளிநாட்டார் கூறுவர்.

பிரிவு விருந்து

சனிக்கிழமையன்று, ஹௌ குடும்பத்தார் கொலம்பஸ் நகரம் முழுவதையும் எனக்குக் காட்டினர். மீண்டும் தம் இல்லத்துக்கு நான் வரும் நன்னாளை எதிர்பார்ப்பதாகக் கூறினர். அவர்களின் வேண்டுகோளுக்கு இசைவு தெரிவித்து, அவர்கள் இல்லத்திலிருந்து விடைபெற்று, இரயிலுக்குச் செல்லும் வழியில் தத்துவப் பேராசிரியர்

ஏவ் என்பாரின் இல்லத்துக்கு வந்தோம். அங்கே, எனக்கு ஒரு சாய் ஓ நாரோ* நடந்தது. அன்று விருந்துண்ட முப்பதின்மரிற் பெரும்பாலோர் இந்திய மாணவரே. தொழிற்சாலைகளின் ஊதியத்தில் தொழிலாளருக்குப் பங்கு கொடுப்பதுபற்றி நடந்த விவாதத்தில், நானும் சில சொற்கள் கூறிவிட்டு வெளிநாடுகளிற் கல்வி பயிலும் இந்திய மாணவரிடமிருந்து இந்தியா பெரிதும் எதிர்பார்ப்பதையும், அவர்கள் இந்தியாவின் நற்பெயரைக் காப்பாற்றவேண்டும் என்பதையும் எடுத்துச் சொன்னேன். தாம் அனைவரும் நன்ருக நடத்தப்படுவதாகவும், பிறருடன் எளிமையாகப் பழகும் இயல்புடையவர்களுக்கு அமெரிக்க மக்கள் தனித்தனியே தாராளமாக உதவிகள் செய்து வருவதாகவும் அம்மாணவர்கள் வாயிலாக அறிந்து மகிழ்ந்தேன்.

முடிவுரை

நொடிப்பொழுதில் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தேன்; என் வாழ்நாளிலேயே மிகவும் சுறுசுறுப்பான வாரமும் முடிந்துவிட்டது. நான் நியூயார்க்கில் விட்டு வந்த வேலைகளைத் தொடர்ந்து செய்ய அந்நகருக்குத் திரும்பலானேன். ஆனுலும், அப்பல்கலைக் கழகமும், அங்கே யான் பெற்ற புதிய நண்பர் குழாமும் இத்துணை ஆண்டுகட்குப் பின்னும் என் மனத்தை விட்டு அகலவில்லை. அவர்களிற் சிலர் இன்றளவும் எனக்குக் கடிதங்கள் எழுதுகின்றனர்.

* சாய் ஓ நாரோ என்பதற்கு ஜப்பானிய மொழியில், பிரிவுபசார விருந்து என்பது பொருள்.

9. ஹாவாய்த் தீவுகள்

ஹாவாய்த் தீவுகள் 1959-ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் உறுப்பு இராச்சியங்களில் ஒன்ருக இணைந்துவிட்டன. இந்த இராச்சியத்தின் தலைநகர் ஹோனலூலு.

ஹோனலூலு துறைமுகத்துக்கு 'பேர்ள் ஹார்பர்' என்று பெயர். 1941-இல் இந்தத் துறைமுகத்தின்மீது ஜப்பானியர் குண்டு வீசியதால்தான் தென்கிழக்கு ஆசிய நாடுகளெல்லாம் இரண்டாவது உலகப் போர் பரவிற்று. ஹாவாய் மக்கள் இதனுல் எவ்வளவு பாதிக்கப்பட்டனர் என்பதை 'பேர்ள் ஹார்பர்' குண்டு வீச்சின் ஏழாம் ஆண்டு விழாவை அவர்கள் கொண்டாடியபோது நான் நேரில் பார்த்து உணர்ந்தேன்.

ஹாவாய்த் தீவுகளை நினைக்கும்போது அந்தமான் தீவுகளின் நினைவு நமக்கு வருகிறது. இவ்விரண்டு தீவுக் கூட்டங்களுமே அவற்றிலுள்ள முதன்மையான தீவின் பெயரால் பெயர் பெற்றிருக்கின்றன. அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு ஹாவாய்த்தீவும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அந்தமான் தீவும் முக்கியமானவை.

பசிபிக் பெருங்கடல்

சான்பிரான்சிஸ்கோ நகரிலிருந்து 4000 கி. மீ. மேற்கே பசிபிக் பெருங்கடலின் நடுவே ஹாவாய்த் தீவுகள் உள்ளன. உருவிலும் பரப்பிலும் ஏழு பெருங்கடல்களிலும் பெரியது பசிபிக்தான். பசிபிக்கில் இருப்பது போல வேறு எந்தப் பெருங்கடலிலும் நூற்றுக் கணக்

கான தீவுகள் கிடையாது. பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவுகளில் குச்சிபோல் நிற்கும் தலைமயிருடைய பீஜியர்கள் சப்பட்டை மூக்குடைய நியூகலிடோனியர்கள் போன்ற பல இனத்தவர் வாழ்கின்றனர். குடியேற்ற நாடுகள், பாதுகாப்பு ஆட்சியிலுள்ள பிரதேசங்கள், செட்டில் மெண்டுகள், இருநாடுகளால் பொதுவாக ஆளப்படும் பகுதிகள் போன்ற பல வகையான ஆட்சிமுறைகளைப் பசிபிக்கில் காணலாம். நீலகிரி மலையுச்சியின் உயரமுள்ள பகுதிகள், பெரு மழை பெய்யும் இடங்கள், எரி மலைகள் இவையும் அங்கே உண்டு. சில இடங்களில் பசிபிக் பெருங்கடலின் அகலம் 16,000 கிலோ மீட்டர்.

விஞ்ஞானிகள் வரையறுத்துள்ள ஒரு கற்பனைக் கோட்டுக்கு, சர்வதேச நாள் மாறும் எல்லை (International Date Line) என்று பெயர். இந்தக் கோடு பசிபிக் பெருங்கடலில் 180° நெடுக்குத்தொலை (Longitude) கோட்டையொட்டி அமைவதாகக் கருதப் படுகிறது. இதன் இருபுறத்திற்கும் 24 மணி நேரம் வேறு பாடு உண்டு. ஞாயிற்றுக்கிழமை இரவு கிழக்கிலிருந்து மேற்கே செல்லுபவர், மறுநாள் காலையில் எழுந்தால் மீண்டும் ஞாயிற்றுக்கிழமை உதயமாகும். அதே நேரத்தில் எதிர்த் திக்கில் வருபவர் ஞாயிற்றுக்கிழமை இரவு தூங்கிச் செவ்வாய்க்கிழமை காலையில் துயில் எழுவார். அவருக்கு அந்த வாரத்தில் திங்கட்கிழமை கிடையாது.

மேலே கண்ட சிறப்புக்களையுடைய பசிபிக் பெருங் கடலின் முச்சந்தியாக அமைந்த ஹாவாய்த் தீவுகள் மிக அழகாக இருப்பதாலும் மகிழ்ச்சி பொங்கும் மக்கள் வாழ்வதாலும், கொடுத்து வைத்த பகுதியாகக் கருதப் படுகிறது.

மண் வளமும் மலர் வளமும்

எழில்மிக்க சோலைகளும் எண்ணி முடியாத அளவுக்கு வகைவகையான பூக்களுள்ள தோட்டங்களும் தெரு வெங்கும் தென்னந்தோப்புகளும் இருப்பது இந்தத் தீவுகளின் தனிச் சிறப்பு. உல்லாசச் சுற்றுலாவுக்கு இதற்கு ஈடான இடங்கள் மிகச் சிலவே.

ஹாவாயில் மரங்களை எண்ணி முடியாது. திரும்பு மிடமெல்லாம் மரங்களைப் பார்க்கலாம். மரங்களின் அடியில் மக்கள் உட்காருகின்றனர். அத்தகைய இடங் களில்தான் நடனம் ஆடுகிறார்கள். உணவு உண்பதும், பொழுதுபோக்குவதும்கூட அங்குதான். அழகான பொருள்கள் செய்ய, மரங்களையே பயன்படுத்து கின்றனர். 150 அடிவரை பரந்து, குடைபோல அமைந்துள்ள மரங்களையும் கண்டேன். உலகத்தின் பெரிய ஆலமரங்கள் பலவற்றையும் இங்கே காணலாம்.

ஹோனலூலுவின் கடற்கரைக்கு வைக்கிக்கி பீச் என்று பெயர். இது சென்னைக் கடற்கரையைப்போன்றே உலகிற் சிறந்த கடற்கரைகளுள் ஒன்று. இதுவும் 6 கி.மீ. தொலைவுக்கு உளது. வைக்கிக்கி கடற்கரைச் சிறப்பை ஹாவாயர்கள் போற்றி வருகின்றனர்; அந்நாட்டு இலக்கியங்கள் இயம்பிய வண்ணமாய் உள்ளன.

ஹாவாய் வளமான பூமி. எரிமலைச் சாம்பல்களால் பண்பட்டிருப்பதால் இந்த மண்ணில் கரும்புப் பயிரும் அன்னாசிப் பயிரும் செழிக்கின்றன. இப்பொருள்கள் தவிர சர்க்கரை, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மீன் ஆகியவையும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

இங்கு வெப்பம் குறைவு. திடீரென மழை பெய் வதும் உண்டு.

மக்கள்

ஹாவாய்த் தீவுகளில் வாழும் மக்களின் தொகை ஆறு லட்சம்; அதாவது மதுரை நகரைப் போன்றது. சிங்கப்பூரைப் போலவே பல நாட்டு மக்களைக் கொண்ட நாடு இது. ஜப்பானியர் தொகை மக்கள் தொகையில் மூன்றில் ஒன்ருகவிருப்பதால் அவர்களின் குடியேற்றம் தடைப்படுத்தப் பட்டிருக்கிறது. ஹாவாயர் தொகை 12,000 தான் இருக்கக்கூடும். எனவே அவர்கள் தங்கள் நாட்டில் தாங்களே சிறு பான்மையராகி விட்டனர். ஹாவாயர்களுக்கும் ஏனையோர்க்கும் பிறந்தவர்கள் 75,000 பேர். காகேசிய இனத்தவர் ஒரு லட்சம் பேர். பிலிப்பைன்காரர் 61,000 பேர் வாழ்கின்றனர். சீனர் 32,000. பிற நாட்டாரும் உள்ளனர். எனவே இத்தீவு களில் நிகழும் பெரிய செயல் 'கலப்பு மணம்.'

ஹாவாய் சட்டசபை உறுப்பினருள் எல்லா இனத்தவரும் இருக்கிருர்கள். ஹாவாயின் பிரதிநிதியாக அமெரிக்கக் காங்கிரசில் ஒரு ஜப்பானியரும், அமெரிக்க செனேட்டில் ஒரு சீனரும் ஹாவாய் மக்களால் நேர்ந் தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

ஹோனலூலுவில் இந்தியர் இருபது பேர் உள்ளனர். இந்நகரில் செல்வம் ஈட்டியவர்களுள் கோவிந்தராம் வாட்மல் (1891—1959) என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் அமெரிக்க மங்கை யொருத்தியை மணந்து கொண்டார். வாட்மல் பவுண்டேஷன் என்ற ஓர் அற நிறுவனத்தை வாட்மல் 1942 இல் நிறுவியுள்ளார். அந்நிறுவனத்தார் வாட்மல் நினைவாக விஞ்ஞான ஆராய்ச்சி முதலியவற்றுக்கு ஆண்டுதோறும் பல பரிசுகளை வழங்குகின்றனர். பரிசுக்கு உரியவர்களைத் தேர்ந் தெடுக்கும் குழுவில் இந்தியரும் அமெரிக்கரும் உள்ளனர்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நல் லுறவு ஏற்படவும், இந்தியாவின் தொழில் விரைந்து வளரவும், இந்தியர்கள் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் சொற்பொழிவு நடத்தவும் இந்த அறநிறுவனம் செலவு செய்கிறது. ஹாவாயில் இசையும் பிற கலைகளும் வளரவும் இந்நிறுவனம் ஆவன செய்து வருகிறது. வாட்மல்தான் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற முதல் இந்தியர். அவர் இறந்தபோது ஹாவாய்ப் பத்திரிகைகளும் அமெரிக்கக் காங்கிரசும் அவருக்கு அஞ்சலி செலுத்தின.

இந்தியத் தொடர்புடைய மற்ருெரு ஹாவாய்க் காரர் மேரி எலிசபத் பாஸ்டர் என்ற அம்மையார். இவருடைய பண உதவியால் (காசிமாநகரையடுத்த) சாரநாத்தில் மூலகண்டகுட்டி விகார் என்ற பௌத்தர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. புத்த பிரானுக்குரிய அமைதி தவழும் புனித இடம் சாரநாத், அங்குள்ள கோயிலை, அமைதியின் சின்னமாகவுள்ள ஹாவாய்த் தீவுக்காரர் அமைத்தது பொருத்தமே.

ஹாவாய் மொழி

ஹாவாய் எங்கும் இப்போது வழங்கிவரும் மொழி ஆங்கிலம்.

ஹாவாயருடைய தொன்மையான மொழி ஹாவாய் மொழி; அது மிக இனிமையானது. அதில் 12 எழுத்துக்கள் மட்டுமே உண்டு. ஒரு சொல்லையே பெயர்ச் சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்தும் சிறப்பியல்பும் இந்த மொழிக்கு உரியது. இம் மொழியில் சில சொற்களைக் காண்போம்:

அலோஹா	... வணக்கம்
வாஹினி	... பெண்

கௌனு கௌனு ... சாபம்
ஹுலாஹுலா ... நடனம்
மலாமோபோனே ... கவனமாய் இரு
விக்கி விக்கி ... விரைவாக
ஹலேபுலே ... கோவில்
ஹுமுஹுமுநுகுனுகுவாபுவா... மிகச்சிறிய மீன்

பழக்க வழக்கங்கள்

ஏழாம் வகுப்பில் படிக்கும்போதுதான், செருப்புப் போட்டு நடப்பது ஹாவாயில் வழக்கம். ஹாவாய் நேரம் என்றுல் அழைப்பில் குறிப்பிடப்பட்ட நேரத்தை விட ஒரு மணி பிந்தித்தான் நிகழ்ச்சிகள் தொடங்கும் என்று பொருள்படும்.

'பேபி லூ அவாவ்' என்ற ஒரு சடங்கு உண்டு. இது முதற்குழந்தைக்கு மட்டும் நடத்தப்படும் சிறப்பு நிகழ்ச்சி. நாட்டுக்கோட்டை நகரத்தாரின் புதுமை விழாவைப் போன்றது.

பேபி லூ அவாவ் சடங்குக்கு வரும் விருந்தினர் 10 ரூபாய் மொய்ப்பணம் எழுதவேண்டும். சாதாரண நாட்களில் கத்தி, கரண்டி, குத்துமுள் முதலியவற்றின் துணையால் சாப்பிட்டாலுங்கூட, பேபி லூ அவாவில் கையால்தான் சாப்பிட வேண்டும்.

ஹிந்துக்களைப் போலவே ஹாவாயர்களும் பல கடவுளரை வழிபடுகின்றனர்; எரிமலைகளால் கேடு வராதவாறு பிரார்த்தித்து எரிமலைக் கடவுளை வணங்குவர். (இது, நாம், அம்மை நோய் வராதிருக்க வேனிற்காலத்தில் அம்மன் முதலிய தெய்வங்களுக்கு விழா எடுப்பது போன்றது.) சூரிய வணக்கம் ஹாவாயிலும் நிலவுகிறது.

சாபம், ஏவல் முதலியவற்றில் ஹாவாயர் பலருக்கு நம்பிக்கை உண்டு.

'லெய்' என்பது பூமாலை. 'லெய்'களை வெளிநாட்டவருக்கு அணிவதில் ஹாவாயர் மகிழ்ச்சியடைகின்றனர். ஹாவாயிலிருந்து செல்லும்போது, இத்தீவுகளின் எல்லையைத் தாண்டியவுடன் வெளிநாட்டவர் 'லெய்'களைக் கடலில் போட்டுவிட வேண்டும். நீரோட்டத்தால் 'லெய்'கள் கரையை அடைந்தால், அவற்றை அணிந்திருந்தோர் மீண்டும் ஹாவாய்க்கு வருவர் என்பது நம்பிக்கை.

ஹாவாயர் வாழ்க்கையை அனுபவித்து இன்பம் காணுவர். அன்னாசிப் பழத் திருவிழா, அலோஹா வாரம் என்னும் விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். அவற்றில் முக்கிய நிகழ்ச்சி ஹாவாய்ப் பெண்களின் கலைவனப்பு மிக்க நடனம் ஆகும்.

சில விநோதங்கள்

ஹாவாயில் பாம்புகளே இல்லை.

ஹாவாய்ச் சட்டப்படி, வணிகர்கட்கு மட்டுமே நாள்தோறும் இருமுறை தபால்கள் வழங்கப்படுகின்றன. ஏனையோர், தம் கடிதங்களை நாள்தோறும் ஒரு முறையே பெறலாம்.

சீனாவையும் ஜப்பானையும் 'கிழக்குத்திசை நாடுகள்' என்றும், அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் மேற்குத் திசை நாடுகள் என்றும் செல்லுகிறோம். ஹாவாயர்கள் இதை முரணாகச் சொல்லுவர். ஹாவாய்த்தீவு, ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இருப்பதால் அவர்கள் சொல்லுவதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், நமக்கு இது புதுமையாகவும் புதிராகவும் இருக்கிறது.

ஹாவாயின் முக்கியத்துவம்

ஹாவாய், அமெரிக்காவின் மேற்கு எல்லையாக இருக்கிறது. அது, அமெரிக்காவின் பாதுகாப்புக்கு மிக முக்கியமான இடம். ஆகையால் விமானப் படைத் தளத்தையும் பெரிய கப்பல்களைச் செப்பனிடும் வசதியுள்ள துறைமுகத்தையும் அமெரிக்கர் ஹாவாயில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பல்கலைக் கழகம்

ஹாவாய்ப் பல்கலைக் கழகம் 10,000 மாணவர்கள் கொண்டது. வேளாண்மை, கடல்வாழ் உயிரினம் ஆகிய துறைகளும், பசிபிக் கடல் ஆராய்ச்சி, ஆசியப் பண்பாடு முதலிய படிப்புக்களும் இப்பல்கலைக் கழகத்தில் குறிப்பிடத் தக்கன.

பசிபிக் தீவுகளிலிருந்தும் ஜப்பான், இந்தியா முதலிய ஆசிய நாடுகளிலிருந்தும் பல நூறு மாணவர் இங்கு வந்து கல்வி பயிலுகின்றனர்.

இப்பல்கலைக் கழகத்தில் 'கிழக்கு—மேற்கு நிலையம்' உளது; இது அமெரிக்க, ஆசிய மாணவர்களுக்குக் கல்வியும் நல்லுணர்வும் ஊட்டும் ஒரு பெரிய நிலையம் ஆகும். இதில் ஒரு பகுதி சர்வதேசக் கல்லூரி; சர்வதேசப் பயிற்சி நிறுவனம், மற்றொரு பகுதி இந்நிலையத்துக்கு அமெரிக்க அரசாங்கம் ஒரு கோடி டாலர் வழங்கியிருக்கிறது. ஹாவாய் அரசாங்கமும் ஹாவாய்ப் பல்கலைக்கழகமும் நன்கொடை அளித்து வந்துள்ளன; இப்பல்கலைக் கழகப் பேராசிரியர்களில் கால் பங்கினர் ஆசிய மரபினர். இங்குள்ள மாணவரும் ஆசிரியரும் எம்மரபினராயினும், ஆசியாவைபற்றிய கலைத்துறைகளில் ஆராய்ச்சி செய்துள்ளனர். அதற்கென ஆசியாவில் பிரயாணம் செய்கின்றனர்,

ஆசிய நாட்டினர் தாம் விரும்பும் துறையில் பயிற்சி பெறவும், அமெரிக்கர் ஆசியாவைப்பற்றிப் படிக்கவும் ஆசியாவில் பணியாற்றவும் வாய்ப்பு நல்கப்படுகிறது.

ராக்பெல்லர் குடும்பத்தார், இப் பல்கலைக்கழகத்தில் தத்துவ சாத்திரத் துறைக்குப் பெரும்பொருள் கொடுத்துள்ளனர். அதனால், உலக தத்துவ சாத்திர மாநாடு *1949*-லும் *1959*-லும் இப்பல்கலைக் கழகத்தில் கூடிற்று. இந்திய மாணவர் பலர் இங்கு பயிலுகின்றனர். இங்குள்ள பேராசிரியர் சிலர் தமிழ் நாட்டுக்கு வந்துள்ளனர். ஹாவாய்ப் பல்கலைக்கழகம், தீவுகளின் பிற பகுதிகளிலும் கல்லூரிகளை நடத்துகிறது. ஹாவாய்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் குறிப்பிட்ட நாட்களில் விமானங்களில் அங்குச் சென்று பாடம் நடத்தி மாலையில் திரும்புகின்றனர்.

ஆட்சிமுறை

ஹாவாயின் கடைசி அரசியின் பெயர் லிலியா ஹோபாணி. இவள் *1893*-இல் அமெரிக்க வணிகரின் சூழ்ச்சியால் பதவியிழந்தாள். *1900*-இல், இத்தீவுகளில் அமெரிக்க ஆட்சி ஏற்பட்டது. ஹாவாய்ப் பிரதேசம் என்ற பெயரால் தனி ஆட்சி, அமெரிக்கரால் நடத்தப்பட்டது.

1960-ஆம் ஆண்டு முதல், இது ஏனைய பகுதிகளைப் போல, அமெரிக்க ஐக்கிய ஆட்சியில் ஓர் உறுப்பு-இராச்சியம் ஆகிவிட்டது. இங்கும் சட்டசபைகள் ஏற்பட்டுள்ளன. ஹாவாய் கவர்னர், ஹாவாய் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார், அமெரிக்கக் காங்கிரசுக்கும் செனேட்டுக்கும் ஹாவாய் மக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்து அனுப்புகின்றனர்.

இராச்சியத்தின் செல்வாக்கு

அமெரிக்காவில் உள்ள ஒவ்வோர் இராச்சியத்துக்கும் பல பெருமைகள் உண்டு. தலைநகரான வாஷிங்டனில் ஒவ்வொரு இராச்சியத்தின் பெயரும் ஒரு பெரிய சாலைக்கு இடப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு இராச்சியத்துக்கும் ஒரு கேலிப் பெயர், ஒரு கொடி, ஒரு சின்னம், ஒரு பறவை, ஒரு மரம், ஒரு நிறம், ஒரு மலர், ஒரு கீதம் ஆகியவை (Nick-name, State Flag, State Motto, State Bird, State Tree, State Colour, State Flower, State Song) ஏற்பட்டிருப்பதை 53-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். ஹாவாய்க்கும் இத்தனை உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் (அமெரிக்கச் சட்டசபை) உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், இராச்சிய கவர்னர், நீதிபதிகள் முதலிய அதிகாரிகள் ஆகியோர் தேர்தலிலும், அரசியல் சட்டத்தைத் திருத்தும்போதும் தங்கள் கருத்தைத் தெரிவிப்பது போன்ற உரிமைகள் ஒவ்வொர் இராச்சியத்துக்கும் உண்டு.

ஹாவாயின் பெருந்தொழில்களும் தோட்டங்களும் கரும்பு ஆலைகளும் பெரும்பாலும் அமெரிக்கச் செல்வர்களின் உடைமைகளே ஆகும். மீன் பிடித்தலும் படகோட்டுதலும் ஹாவாயரின் தனி உரிமை. ஆயினும், முன்னேற்றம் அடையவும் சம உரிமை பெறவும் எல்லா வாய்ப்புக்களும் ஹாவாயர்க்கு உண்டு; எவ்விதத் தடையும் இல்லை.

'ஹலோ ஓ நோ ஹோ ஏ ஐக்கி இயா ஹாவாய்' என்பது ஹாவாயில் வழங்கும் ஒரு பழமொழி. 'ஹாவாய்த் தீவுகளைப் பார்க்காத வரை உங்கள் வாழ்வு வீண்தான்!' என்பது இதன் பொருள்.

10. விளையாட்டுகள்

அமெரிக்காவில் விளையாட்டுகளுக்குப் பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இது, அமெரிக்கர் வாழ்க்கை முறையில் குறிப்பிடத்தக்கது. விளையாட்டின் பயனாக, அமெரிக்க மக்கள் உடற்கட்டுடன் இருக்கின்றனர். உடலமைப்பையாவது உயரத்தையாவது பார்த்து அவர்களுடைய வயதை மதித்தால், நாம் ஏமாற்றம் அடைய நேரும்.

நாள் இதழ்களில்கூட, விளையாட்டுப் போட்டிபற்றிய செய்திகள் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்படும். புகழ்பெற்ற ஆட்டக்காரர் பலர் தொழில் முதலாளிகளைப்போலவே வருவாய் பெறுவதும் வழக்கம்.

விளையாட்டு அரங்கம்

அமெரிக்காவில், அட்லாண்டிக் பெருங்கடற்கரை முதல் பசிபிக் பெருங்கடற்கரை வரையிலும், இது போலவே கனடா நாட்டு எல்லை தொடங்கி நடு அமெரிக்க நாடுகளின் எல்லைவரையிலும் ஏறத்தாழ 1500 திறந்த வெளி அரங்கங்கள் உள்ளன. குளிரும் மழையும் பனியும் எந்த நாட்களிலும் இருக்கலாம்; அப்போது திறந்த வெளி அரங்கத்தில் ஆட முடியாது. ஆகையால், பல நகரங்களில் கட்டிடத்தினுள் அமைக்கப் பட்ட விளையாட்டிடங்கள் உள்ளன. இம்மண்டபங்களை, விளையாடி மகிழக் கட்டப்பெற்ற அரண்மனைகள் என்று

சொன்னாலும் பொருந்தும். இந்த எண்ணம், நியூயார்க் நகரத்து மாடிசன் ஸ்கொயர் கார்டன் என்ற மாளிகையைக் கண்டபோது எனக்கு ஏற்பட்டது.

நான் சென்ற அன்று, பனிக்கட்டியின்மீது ஆடும் ஹாக்கிப் போட்டி நடந்தது. இந்த ஆட்டத்தில் அமெரிக்கருக்கு நிறைந்த ஆர்வம் உண்டு. சாதாரண ஆட்டங்களைக்கூட, ஐம்பதாயிரம் பேர் காண்பர்; 10 ரூபாய் முதல் 30 ரூபாய்வரை செலுத்தித்தான் விளையாட்டைக் காண இயலும். ஒவ்வோர் ஆட்டமும் நாட்டு வணக்கப் பாடலுடன் தொடங்கும். ஆட்டங்களில் புகழ்பெற்றவர்களும் ஆடுவார்களேயாயின், திரைப்படங்கள் எடுக்கப்படும்; தொலைக்காட்சி வாயிலாகவும் ஒலிபரப்பு நடைபெறும்.

அமெரிக்கர் கண்டு மகிழும் மற்றோர் ஆட்டம் பேஸ்பால். இதைப்பற்றி முன்னரே கூறியிருக்கிறோம். இதுதான் அமெரிக்கரின் தேசிய விளையாட்டு.

பேஸ்பால் அமெரிக்காவில் மட்டுமே சிறப்பாக ஆடப்படுகிறது. 27மீட்டர் சதுரமுள்ள மைதானத்தில் இவ்விளையாட்டு நடைபெறுகிறது. இந்தச் சதுரத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஒரு 'பேஸ்' இருப்பதாலேயே, இந்த ஆட்டம் இப் பெயர் பெற்றது. பந்தடித்தவர் தம் மூலையை விட்டு அடுத்த மூலைக்குச் சென்றதும் அவருடைய குழுவில் அடுத்தவர் பந்தடிக்கும் இடத்திற்கு வந்து, எதிரி கோஷ்டி எறியும் பந்துகளைத் தடித்த கனமான 'பாட்'டினால் அடிப்பார். இவ்வாறு பந்தடித்து விட்டுச் செல்வதில், நான்கு மூலையிலும் பந்தடிக்கும் குழுவின் நான்கு ஆட்கள் சேர்ந்தால் அவர்களுடைய குழுவுக்கு ஒரு 'ரன்' கிடைத்ததாகக் கருதப்படும்.

ஒவ்வொரு குழுவும் 9 தடவை மாறிமாறிப் பந்தடிப்பர். ஓராண்டில் 3, 4 மாதங்களுக்குப் பேஸ்பால் ''சீசன்'' நடைபெறுகிறது. வேனிற் காலத்தில்—மே மாதம் முதல் செப்டம்பர் மாதம்வரை—பேஸ்பால்தான் அமெரிக்கரின் முக்கியமான விளையாட்டு. சிறந்த பேஸ் பால் ஆட்டக்காரருக்குச் சீசனுக்கு 30 ஆயிரம் டாலர் வரை கொடுத்து அவர்களுட்பட்ட கட்சிகளுக்கிடையே பந்தயங்கள் ஏற்பாடு செய்யும் குழுக்கள் அமெரிக்காவில் இயங்குகின்றன. திரைப்பட நடிகர் நடிகைகளுக்குள்ள செல்வாக்கும் வருவாயும் பேஸ்பாலில் சிறந்த ஆட்டக் காரருக்கு உண்டு. ஆண்டுதோறும் மூன்றரை லட்ச ரூபாய் ஊதியம் பெறும் ஆட்டக்காரர்களும் உள்ளனர்.

பௌலிங்

அமெரிக்காவில் மிகப்பலர் ஆடும் ஒரு விளையாட்டு, பௌலிங் என்பது. மரத்தாலும் எஃகாலும் செய்யப் பட்ட ஏழு கிலோ எடையுள்ள பந்துகளை, ஸ்பிரிங் உள்ள ஒரு பலகையின்மீது 35 மீட்டர் தொலைவு உருட்டி அப்பந்தைக் குழிக்குள் விழச் செய்வதே இந்த ஆட்ட மாகும். இந்த ஆட்டத்தை நள்ளிரவு வரையில் ஆடும் அமெரிக்கர் சிற்றூர்களிலும் உள்ளனர்.

டென்னிஸ்

நள்ளிரவில் டென்னிஸ் ஆடுவதும் அமெரிக்கர் இயல்பாகும். பகலில் ஓய்வு இல்லாதிருப்பதும், எவ்வித மாவது நாள்தோறும் விளையாட வேண்டுமென்ற மன உறுதியுமே இப்பழக்கத்துக்குக் காரணமாகும். 'டேவிஸ் கப்' என்ற டென்னிஸ் ஆட்டத்தின் தலைமையான பரிசையும் பல ஆண்டுகளில் அமெரிக்கர் பெற்றுள்ளனர்,

புகழ்பெற்ற டென்னிஸ் வல்லுநர், பிறருக்கு டென்னிஸ் ஆட்டம் பயிற்றும் கல்லூரிகள் நடத்துகின்றனர்.

நடப்பதும் நீந்துவதும் அமெரிக்காவில் வாழும் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் உடற் பயிற்சிகள் ஆகும். 'தொந்தி' பெருத்துவிடாமல் இருக்க வேண்டும் என்ற கவலே அமெரிக்கர் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதனுல் கொழுப்புச் சத்து இல்லாத பொருள்களே உண்ணும் வழக்கமும், நாள்தோறும் குறிப்பிட்ட தொலேவு நடந்து செல்லும் வழக்கமும் அவர்களிடையே பரவியுள்ளன.

மோட்டார் கார் ஒட்டுவது என்பது அமெரிக்காவில் எல்லோருக்கும் தெரிந்த கலே. அங்கு 16 வயதிலேயே கார் ஒட்டும் உரிமை வழங்கப்படுகிறது. 14 வயதில் மாணவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கும், பள்ளியிலிருந்து வீட்டுக்கும் மட்டும் கார் ஒட்டிச் செல்ல, பெற்ருேர் களின் இசைவுடன், போலீசாரிடமிருந்து உரிமை பெறலாம்.

ஆகாய விமானம் ஒட்டுவதும் அந்த நாட்டில் பெரிதும் பரவியிருக்கிறது. 18 வயதுள்ளவர், சில குறிப்பிட்ட செயல்களுக்கும் தாமே தனியாக ஒட்டிப் பழகவும் உரிமை பெறலாம் என்ற சட்டம் சில இராச்சியங்களில் நிலவுகிறது. எனவே, இந்த உரிமை பெற்ற இளேஞர்கள் குறிப்பிட்ட இராச்சிய எல்லேக்குள் மட்டும் பறக்கலாம். நாடெங்கும் விமானம் ஒட்டு வதற்கு, அமெரிக்க மத்திய அரசாங்க இசைவும் அவர்கள் வரையறை செய்யும் வயதும் வேண்டும்.

பிற ஆட்டங்கள்

அமெரிக்கரின் மற்ற விளேயாட்டுகள்—மோட் டார்ப் போட்டிகள், மோட்டார் சைக்கிள் போட்டிகள்,

ஆகாய விமானப் போட்டிகள், பெருங்கடல்களிலும் ஏரிகளிலும் மீன் பிடித்தல், படகு ஓட்டுதல், அம்பு எய்தல், வில் எறிதல், வாட்போர், மற்போர், கண்ணைக் கட்டிக்கொண்டு கால் பந்தாடுதல் (Blind Football) பனிக் கட்டியின்மீது ஓடுதல் முதலியனவாம். துப்பாக்கி யால் சுடுவதில் ஒலிம்பிக் பதக்கம் பெற்றவர் சுவிஸ் நாட்டவரைத் தவிர, அமெரிக்கர் மட்டுமே ஆவர்.

பாஸ்கட் பால் எனப்படும் கூடைப்பந்து ஆட்டம் அமெரிக்காவில்தான் தோன்றியது என்பதும் குறிப்பிடத் தக்கது.

11. வேளாண்மை

அமெரிக்கா தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடு. அந்த நாட்டின் முக்கியமான தொழில்களுள் முதன்மையானது வேளாண்மை.

அமெரிக்கர் உண்பதற்கு மட்டுமன்றி உலக மக்கள் உண்பதற்கும் அமெரிக்காவில் உணவு உற்பத்தி பெருக்கப் பட்டு வருகிறது.

'தனியொருவனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'

என்று கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் முழக்கினர். 'உலகம் ஒன்று; பசி, பொது எதிரி' என்பதே இதன் கருத்து. இந்தத் தத்துவத்தின் விளக்கமாக உலக உணவு மாநாடு 1963ல் அமெரிக்க அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டது.

அளவு கடந்து உற்பத்திப் பெருக்கம் அடைந்துள்ள அமெரிக்கா ஏழை நாடுகளுக்கு ஊறு பயக்கும் உணவுப் பற்றுக்குறையைப் போக்குவதில் தன் பொறுப்பை உணர்ந்திருக்கிறது. சான்றாக, நம் இந்திய நாட்டைக் குறிப்பிடுவோம்.

நாள்தோறும் ஒரு கப்பல் நிறைய அமெரிக்காவி லிருந்து நமக்கு உணவுப் பொருள்கள் வருகின்றன. இவற்றில் ஒரு பகுதி நாம் விலை கொடுத்து வாங்குவது; மற்றொரு பகுதி நமக்கு அமெரிக்க மக்களும் அரசாங்க மும் அன்பளிப்பாகத் தருவது.

இப்படி எத்துணையோ நாடுகளுக்கு அமெரிக்கா நாள்தோறும் நாழிகைதோறும் நாவாய்கள் வழியாக உணவுப் பொருள்களை அனுப்பியவாறு இருக்கிறது.

இவ்வளவு பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அமெரிக்கரில் ஐந்தில் இரண்டு பேர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். நேரடியாக இவ்வேலை செய்யாமல், இத் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில் களால் வாழ்பவர்கள் ஒரு கோடிப் பேர் இருக்கலாம்.

அரசாங்கத்தின் நிலை

வேளாண்மைத் தொழிலுக்கு அரசாங்கம் இரண்டு வகையில் ஊக்கம் கொடுக்கிறது. ஒன்று குறிப்பிட்ட விலையை விட இன்னும் குறைந்துவிடாமல், உணவுப் பொருள்களுக்கு 'விலை உறுதி' நல்குகிறது. மற்றொன்று, பயிர்கள் செழிப்பாக இருக்கத் தேவையான உரங்கள் கிடைக்க வழிவகை செய்வதுடன் ஆராய்ச்சியின் பயன் வேளாண்மைத் தொழிலுக்குக் கிடைக்க உதவுகிறது.

மேற்கூறியவை தவிர, வேறு எந்த வழியிலும் அரசாங்கம் வேளாண்மைத் தொழிலில் தலையிடுவ தில்லை. அதற்கு, நிதியுதவி கொடுப்பதும் கிடையாது.

கூட்டுறவு

அமெரிக்காவில் பயிரிடப்படும் நிலங்களில் ஐந்தில் நான்கு பங்கு, கூட்டுறவு முறையில் நடைபெறுகின்றன. இந்தப் பண்ணைகளுக்கும் ரஷ்யாவிலும் சீனாவிலும் இயங்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் எவ்விதமான தொடர்பும் பொது இயல்புகளும் கிடையாது.

அமெரிக்காவில் அரசாங்கத் தலையீடின்றியும் அலுவலர்கள் இன்றியும் புதிய இயந்திரங்களைப் பயன் படுத்தி, குடியானவர்கள் பெரிய பண்ணைகளில் பயிரிடு கின்றனர்.

கல்வி முறை

கடலோரப் பகுதிகள் தவிர, அமெரிக்காவெங்கும் ஏற்பட்ட கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் யாவும் வேளாண்மைத் தொழிலின் வளர்ச்சிக்காகவே தொடங்கப்பட்டன. 'லாண்டு கிராண்ட் காலேஜஸ்' என்று சிலவற்றுக்குப் பெயர் உண்டு. வேளாண்மை பெருக, பயனுள்ள கல்வி பரப்ப இவை உண்டாக்கப் பட்டன. அரசாங்கம் ஒவ்வொரு கல்லூரிக்கும் 1000 ஏக்கர் முதல் 5000 ஏக்கர் வரை நிலங்கள் கொடுத்தது.

அறுவடைக் காலத்தில் உதவி செய்ய, சில கல்வி நிலையங்கள் மாணவர்களைப் பண்ணைகளுக்கு அனுப்பி விடுகின்றன. பருத்தி காய்க்கும் காலங்களில், சில இராச்சியங்களில் மாணவர்க்கு விடுமுறை கொடுக்கப் படுகிறது. காரணம், தொழிலாளர் குறைந்த அமெரிக்க நாட்டில் இப்படிச் செய்தால்தான் வேளாண்மைத் தொழில் நன்முக நிகழும். உழைப்பும் படிப்பும் கலந் திருந்தால், மாணவர்களுக்குப் பொறுப்பு உணர்ச்சி பிறக்கும்.

வருங்கால உழவர்கள்

14 வயதுக்கும் 21 வயதுக்கும் உட்பட்ட பல மாண வர்கள், Future Farmers of America என்ற பெயரில் அமெரிக்காவின் வருங்கால உழவர் சங்கம் என்ற அமைப்பை நிறுவியுள்ளனர். வேளாண்மை இழிவான

தொழில் அன்று; மதிப்பான தொழில் என்ற கருத்தை இச்சங்கம், மாணவர்களிடையே பரப்பி வருகிறது.

மேல் படிப்பு

கார்னல் பல்கலைக் கழகத்திலுள்ள விவசாய அறிஞர்கள், உருளைக் கிழங்கின் இயல்பான எடையை வகைப் படுத்தும் ஒரு முறையைக் கண்டு பிடித்துள்ளனர். இதன் பயனுகச் சுட்டு அல்லது வறுத்து உண்பதற்கு ஏற்ற வெவ்வேறு வகை உருளைக் கிழங்குகள், தனித் தனிப் பண்ணைகளில் சாகுபடி செய்யப்படுகின்றன.

பஞ்சும், அமெரிக்காவின் பெரிய உற்பத்திப் பொருள்களில் ஒன்று. பஞ்சு வகைகளைப்பற்றி நியூ ஆர்லியன்சு முதலிய பல இடங்களில் ஆராய்ச்சிகள் நிகழ்கின்றன.

சிட்ரஸ் என்ற பழத்தில் சேர்ந்துள்ள சத்துக்களைப் பற்றி பிளாரிடா பல்கலைக் கழகம் ஆராய்ந்து வருகிறது.

குறிப்பாக, கொழுப்புச் சத்து இல்லாத உணவுகளையே உண்ண அமெரிக்க ஆடவரும் பெண்டிரும் ஆசைப்படுகிறுர்கள். எனவே, சத்து உணவு ஆராய்ச்சி அந்த நாட்டில் பல்கிப் பெருகியிருக்கிறது.

ஆராய்ச்சி

வேளாண்மைத் துறையும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் வணிகக் குழுக்களும் ஆராய்ச்சிக்குக் கோடிக் கணக்கில் செலவிடுகின்றன.

உற்பத்திப் பெருக்கத்துக்கான புதிய வழிகளைக் கண்டு பிடித்தவண்ணமாக இருக்கின்றர். புதிய முறைகளைச் சோதனை செய்து பார்க்கின்றனர். இவற்றுள்

ஒன்று, பாக்கேஜ் திட்டம் என்பது. இத்திட்டம் 1960 முதல் தஞ்சை மாவட்டத்தில் அமெரிக்க உதவியுடன் கடைப்பிடிக்கப்பட்டு அதன் பயனை நாம் பெற்றுள்ளோம்.

சீனர்கள் இப்படித்தான் பெரிய அளவில் உற்பத்தி செய்வதாகவும் அமெரிக்காவை விஞ்சி விட்டதாகவும் கூறினர். அந்தத் திட்டங்களையும் இந்தியாவில் செயல் படுத்தினோம். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரிந்துவிட்டது.

அமெரிக்கத் திட்டங்களும் உற்பத்திப் பெருக்க முறைகளும் அத்தகையன அல்ல. அமெரிக்காவில் எதுவும் மூடு மந்திரமாகச் செய்யப்படுவதில்லை.

ஆராய்ச்சியில் அமெரிக்கர் 3 இலட்சியங்களைக் கொண்டுள்ளனர்.

1. உற்பத்தி அளவு பெருகவேண்டும்.

2. உற்பத்தி செய்யப்படும் பொருளின் தரமும் தூய்மையும் தலைசிறந்திருத்தல் இன்றியமையாதது.

3. உற்பத்திச் செலவு நியாயமானதாகவும் சிக்கனமானதாகவும் இருக்கவேண்டும்.

தரம்

அமெரிக்காவில் தரமான பொருள்கள் மட்டுமே செய்யப்படுகின்றன. ஏவுகணை விட்டும் வான் வெளியைக் கடந்தும் வல்லவராக உள்ள அமெரிக்கர், பொருள்களில் கலப்படம் செய்யும் கலையை இன்னும் கற்கவில்லை!

அமெரிக்காவிலிருந்து எந்த நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் உணவுப் பொருள்கள், கப்பலேற்றுமுன்

சோதிக்கப்படுகின்றன. அதற்குப் பின், மின்சார லிப்ட்டுகளுடன் கூடிய புத்தம் பதிய கிட்டங்கிகளில் உணவு மூட்டைகள் குவிக்கப்படுகின்றன. எவ்விதத்திலும் பொருள்கள் கெடக்கூடாது என்பதற்காக, கிட்டங்கிகள் அலுமினியம் போன்ற உலோகங்களால் அமைக்கப் படுகின்றன.

உற்பத்தி முதல் விற்பனைவரை, ஒவ்வொரு கட்டத்திலும் பொருள்கள் தூய்மையாகப் பேணப்படுகின்றன. 'எதிலும் தூய்மை, எங்கும் தூய்மை.'—இதுவே அமெரிக்கர் கொள்கை.

அடக்க விலை

உற்பத்தி பெருகினால் போதியதாகுமா? ஒரு பொருளை நாம் கோடிக் கணக்கில் செய்யலாம். ஆனால், அதைவிட மிக மலிவாக வெளிநாட்டிலிருந்து வாங்கிவர இயலுமாயின் உற்பத்தி பெருகியும் பயனில்லை.

ஆகையால், தொழிற்சாலைகளைப்போல வேளாண்மைப் பண்ணைகளிலும் உற்பத்திச் செலவு எவ்வளவு என்பதைக் கணக்கெழுதிக் கண்காணித்துக்கொண்டே இருக்கிறார்கள். அடக்கவிலை குறைவதற்கான வழிகளை, தொடர்ந்து ஆராய்கிறார்கள்.

கவுண்டி அதிகாரிகள் பண்ணைகளை இடையிடையே பார்வையிட்டு மண்வளம் பற்றியும், புதிதாக இன்ன பயிரிடலாம் என்பது பற்றியும் கருத்துக் கூறுகின்றனர்.

உலகின் பிற பகுதிகளில் இன்ன பொருள் கூடுதலாக உற்பத்தி ஆகிறது; இன்ன பொருள் அடுத்த ஆண்டில் கூடுதலாகத் தேவைப்படும் என்பதை அறிந்து, அதற்கேற்ப ஆண்டுதோறும் உற்பத்தியைத் திட்டமிடுகின்றனர்.

வேளாண்மைச் சந்தை

ஒவ்வோர் இராச்சியத்திலும் வேளாண்மைச் சந்தை ஆண்டுதோறும் கூடுகிறது. இவ்விழாவில் உழவர் தம் சீரிய விளைவுகளைக் காட்சியில் வைக்கின்றனர். சிறந்த உழவர்கள் பரிசு பெறுகின்றனர்.

உழவுத் தொழிலுக்குப் பயன்படும் புதிய கருவிகளையும் இயந்திரங்களையும் செய்பவர்கள் அவற்றை இங்கே கொண்டுவந்து இயக்கிக் காட்டுவார்கள். இயந்திரக் கலப்பைகள் முதல் இரயில் பெட்டிக்குள் வைக்கத் தக்கவாறு பொருள்களை 'பாக்' செய்ய உதவும் கருவிகள் வரை பல்வேறு இயந்திரங்கள் இந்தச் சந்தைகளில் விளம்பரம் பெறுகின்றன; விற்பனையும் ஆகின்றன.

பண்ணையின் அளவு

நம் நாட்டில் ஓர் ஏக்கரில் கிடைப்பதைப்போன்று பல மடங்கு, அமெரிக்காவில் ஒவ்வொரு ஏக்கரிலும் விளைகின்றது. இந்நிலைக்கு முதற்காரணம், ஒவ்வொரு உழவனுக்கும் ஏறத்தாழ 100 ஏக்கர் நிலம் இருப்பதாகும்.

இயந்திரத்தின் துணையால் விதை விதைப்பது பெரும் ஊதியம் தருகிறது. பயிருக்கு நோய் ஏற்படின், அதை நீக்க உடனே அங்கு தக்க அறிஞர் துணையைப் பெறலாம்; பெறுகின்றனர்.

உணவுப் பொருள்கள்

அமெரிக்காவில் பயிராகும் உணவுப் பொருள்கள் பருத்தி, அரிசி, கோதுமை, சோளம், அவல், பார்லி முதலியன.

அரிசியை அமெரிக்கர் சிறு அளவில்தான் உண்பர்; ஆனால் அரிசியை மங்களகரமான பொருளாக அவர்கள் மதிக்கின்றனர். ஒரு கிலோ எடை அளவுள்ள, சிறு அரிசி பிளாஸ்டிக் பைகளில் அடைக்கப்பட்டுக் கண்கவரும் வண்ணம் கடைதோறும் இருக்கும். இப்பைகளின்மீது 'திருமண அரிசி' (Nuptial Rice) என்று அச்சிடப்பட்டிருக்கும். தேவாலயத்திலிருந்து வெளிவரும் புதிய மண மக்கள்மீது, இந்த அரிசி தூவப்படுகிறது!

கோதுமைதான் அமெரிக்கர்களின் சிறப்பான உணவு. அதை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதை இந் நூலின் பிறிதொரு பகுதியில் கூறுவோம்.

அமெரிக்காவில் மக்காச் சோளம் கொழித்து வளர்கின்றது. நல்ல மகசூல் கிடைக்கிறது. சூப் செய்யவும் ரொட்டி செய்யவும் மக்காச் சோளத்தை அமெரிக்க மக்கள் வாங்குகின்றனர்.

பண்ணை நிலம் பண்படுவதற்காக, மேற்கூறிய தானியங்களை அமெரிக்கர் மாறி மாறிப் பயிரிடுகின்றனர்.

செயற்கை மழை

எதிர்பார்த்தபடி மழை பெய்யாவிடில், செயற்கை மழையை வருவித்துக் கொள்ள, பெரிய பண்ணைகளிலெல்லாம் ஓர் ஆள் உயரத்துக்கு மேல் தண்ணீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற விதங்களில் பயிர்களுக்குக் கெடுதல் ஏற்பட்டால், உழவருக்குப் பொருள் நட்டம் ஏற்படக் கூடியதைக் தவிர்க்கும் முறைகளும் அமெரிக்காவில் நிலவுகின்றன. இதன்படி ஆண்டுதோறும் மிகச் சிறு தொகையை உழவர் கட்டுகின்றனர்; பயிருக்குக்கேடு நேர்ந்தால் இன்சூரன்ஸ் குழுக்கள் பயிராகியிருக்கவேண்டிய தானியங்களின் நடப்பு விலையை உழவருக்குக் கொடுக்கின்றன.

கோழி வளர்த்தல்

அமெரிக்கர் கோழி வளர்ப்பதைப் பற்றியும் இங்குக் குறிப்பிடலாம். உருளைக்கிழங்கை உட்கொண்டால் அவை விரைவாக முட்டையிடுவதாக அமெரிக்கர் ஆராய்ச்சியால் அறிந்து, கோழிகளுக்கு உருளைக்கிழங்கை உணவாகக் கொடுக்கின்றனர். கோதுமை, சீமை அவல், இறைச்சி, உயிர்ச்சத்துள்ள காய்கறிகள் ஆகியவை கோழிக்கு அமெரிக்கர் கொடுக்கும் மற்ற உணவுகளாகும். கோழியைப்போலச் சத்துள்ள உணவு கொடுப்பன வேறெவையுமில்லை என்பது அமெரிக்கரின் முடிவு.

மாடு வளர்த்தல்

அமெரிக்க விவசாயப் பண்ணை ஒன்றுக்குச் சென்றிருந்தபோது, அங்குள்ள மாடுகளைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அவை, ஒவ்வொன்றும் யானை போலத் தோற்றம் அளித்தன. 'காஸ்டிக் பொடாஷ்' (Caustic Potash) என்ற இரசாயனத் தூளைத் தடவி, கொம்புகள் வளருவதைத் தடுத்துவிடுகிறார்கள். எல்லா மாடுகளுக்கும் வைக்கோல், புல் என்பவற்றோடு பார்லியும் சோயாபீன்சும் உணவாகக் கொடுக்கிறார்கள். வைக்கோல், புல், மக்காச் சோளம், கோதுமைத்தூள், வெல்லம் ஆகிய பொருள்களையெல்லாம் கலந்து உருட்டித் திரட்டி ஓர் உணவாக்கி அதையும் மாடுகளுக்குக் கொடுப்பதாக அறிந்தேன்.

பசுமாடுகளைப் பேணும் விதத்தையும் நாம் அறிந்து கொள்ளவேண்டுவது இன்றியமையாதது. இவை நாள் தோறும் சவுக்காரம் (Soap) தேய்த்து குளிப்பாட்டப் படுகின்றன. இப்பசுக்களின் கன்றுகள், உருவத்தில் மான் குட்டிகளைப்போல் இருக்கின்றன.

பசுக்களின் மடி வண்ணுன் மூட்டைபோலப் பெரிதாக இருப்பதையும் வியப்போடு கவனித்தேன். பசுக்கள் தின்பதற்காக, ஆப்பிரிக்காக் கண்டத்தில் சூடான் நாட்டில் இருப்பதைப்போன்ற புல்லை அமெரிக்கர் பயிர் செய்கின்றனர். பிண்ணுக்கும், கோதுமைத் தவிடும் சில நவ தானியங்களும் பழச்சாறும் பசுக்களுக்கு ஊட்டப் படுகின்றன.

ஒவ்வொரு நாளும் ஒரு பசு கொடுக்கும் பாலின் நிறையைக் கணக்கெடுத்து, அதில் நான்கில் ஒரு பங்கு எடையுள்ள தீனியை அப்பசுவுக்கு மறுநாள் வைப்பதும் அமெரிக்கரின் வழக்கம். உதாரணமாக, நேற்று 12 கிலோ பால் கறந்த பசுவுக்கு இன்று 3 கிலோ நிறையுள்ள தீனி வைப்பார்கள். அந்தப் பசு இன்று 9 கிலோ பால்மட்டுமே தந்தால் நாளைக்கு அதற்கு 2 கிலோ நிறையுள்ள உணவையே கொடுப்பார்கள்.

தூய்மையாக எவ்வேலையையும் செய்வதில் யாருக்கும் பின்வாங்காத அமெரிக்கர் பசுவின் பாலைக் கையால் கறப்பதில்லை. பால் கறக்கும் கருவியிலுள்ள குழாயைப் பசுவின் மடியில் இணைத்து விடுவதே அவர்கள் கையாளும் முறை. அப் பசுக்கள் தரும் பாலில் வெண்ணெய்ச் சத்து மிகுதியாக இருப்பதாகவும், நாள்தோறும் மூன்று தடவைகள் பால் கறப்பதாகவும், ஒவ்வொரு தடவையும் சராசரி 14 கிலோ நிறையுள்ள பால் கிடைப்பதாகவும், அந்தப் பண்ணையினர் எனக்குத் தெரிவித்தனர்.

கறந்தவுடன் பாலை ஓர் ஐஸ் பெட்டியில் வைத்து, அது 50 டிகிரிவரை குளிரும்படி செய்கின்றனர். அதன் பின், பாலிலுள்ள ‘பாக்டிரியா’ என்ற நுண்கிருமிகள் ‘பாஸ்சரைசேசன்’ என்றும் முறைப்படி நீக்கப்படுகின்றன. அதன் பிறகு, கெட்ட நாற்றத்தைப் பாலிலிருந்து விலக்க சில விஞ்ஞான முறைகள் கையாளப்படுகின்றன. இந்த

நிகழ்ச்சிகள் அனைத்தும் பண்ணையிலேயே நிகழ்கின்றன. இவற்றின் இறுதியில், குறிப்பிட்ட பல அளவுகளுள்ள புட்டிகளில் பாலை ஊற்றி, அந்தப் புட்டிகளுக்குள் காற்று புகாதபடி 'சீல்' வைக்கப்படுகின்றது. இதன் பின்னரே, சில்லறை விற்பனைக்குப் பால் வெளியே கொண்டுபோகப் படுகிறது. இவ்வளவு எச்சரிக்கையுடன் தயாரிக்கப்படும் பாலின் விலை, எல்லா விலையும் மிகுதியாக உள்ள அமெரிக்காவில் ஒரு வீட்டிற்கு 10 செண்டு அதாவது இன்றைய நாணய மாற்றுப்படி ஐம்பது காசு. அமெரிக்கர் பாலில் தண்ணீரையோ, தண்ணீரில் பாலையோ கலப்பதில்லை; கலக்க இயலும் என்பதையும் அறியார். அதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை.

புட்டியில் பால் அடைப்பதைப் பற்றி ரீடர்ஸ் டைஜஸ்ட் பத்திரிகையில் பெர்னிஸ் கி. கிரான்க்ஹைட் என்பவர் பின்வரும் நிகழ்ச்சியை எழுதியிருக்கிறார்:

> ஓர் இத்தாலிய விஞ்ஞானி அமெரிக்காவில் புட்டிகளில் பால் அடைக்கும் இயந்திரசாலை ஒன்றைப் பார்வையிடப் போனார். அப்பொழுது அங்கே ஒரு குழாய் வெடித்ததனால் பால் எல்லாப் பக்கங்களிலும் சிதறி விழுந்தது. ஒரு கணங்கூடத் தாமதியாமல் ஒரு தொழிலாளி இயந்திரத்தை நிறுத்தினார். இன்னொருவர் பழுது பார்த்து முடித்தார். உடனே மீண்டும் வேலை தொடங்கிற்று. இதைப் பார்த்து வியப்புற்று இத்தாலிய விஞ்ஞானி சொல்லியதாவது: ''இதுபோல் எங்கள் நாட்டில் நடந்தால், பெரிய குழப்பம் ஏற்படும்; எல்லோரும் கத்துவார்கள்; வேலை எதுவும் நடக்காது. பாலெல்லாம் பாழாகும். நாளெல்லாம் அதே பேச்சாகப் பேசுவார்கள்.''

12. வாணிகம்

நியூயார்க்கின் ஒரு முச்சந்தியில் 40 மாடிகளுள்ள ஒரு கட்டிடத்தில் இருக்கிறது மேசீஸ். இந்தக் கடை, ஆண்டு தோறும் ஒன்றரைக் கோடி ரூபாய் விளம்பரத்திற்காகச் செலவிடுகிறதாம். மேசீஸிலேயே தபால் தந்தி நிலையங்களும், டெலிபோன் அலுவலகமும் பல மாடிகளில் உணவுச் சாலைகளும் இருக்கின்றன. மற்றக் கடைகளில் பொருள்கள் ஒவ்வொன்றையும் என்னென்ன விலைக்கு விற்கிறார்கள் என்று அறிய, வாரந்தோறும் தம் வேலையாட்கள் வாயிலாக 40,000 வகையான பொருள்களை அக்கடைகளிலிருந்து மேசீஸ் கடையினர் விலைக்கு வாங்குகிறார்கள். எந்தப் பொருளையாவது குறைத்து விற்க இயலாவிட்டால், அப்பொருளை மேசீஸ் கடையினர் தம் தொழிலிலிருந்து நீக்கிவிடுவராம்.

பெரிய கடைகளில் எல்லாம் சிறு தள்ளுவண்டிகள் உள்ளன. கடைக்குள் நுழைந்ததும் அவற்றுள் ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். அதில் குழந்தைகளை உட்கார வைத்து, கடையெங்கும் தள்ளிக்கொண்டு சென்று வேறு பகுதிகளில் பொருள்களைப் பார்க்கலாம். வாங்கிய பொருள்களை வைத்துக் கொள்ளவும் இந்த வண்டிகளில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். லிப்ட்டு வாயிலாக, வண்டிகளையும் மாடிகளுக்குக் கொண்டு போக இயலும்.

மேசீஸில் நாள்தோறும் ஒரு மிலியன் டாலர் ($47\frac{1}{2}$ லட்சம் ரூபாய்)க்கு வியாபாரம் நடக்கிறது. இந்தக் கடையில் ஆகாய விமானங்கள்கூட விற்கப்படுகின்றன. பிளாஸ்டிக், அலுமினியம் இவற்றால் தயாரிக்கப்பட்டதும் சக்கரம் வைத்து நகருவதுமான 'ரெடிமேட் வீடு'களையும்

இந்தக் கடையில் வாங்கலாம். ஒரே நாளில் 12,000 டை (Tie - கழுத்தில் அணியும் ஒரு சிறு பட்டி) விற்ருர்களாம். மற்ரெரு நாள் இரண்டு மணி நேரத்தில் ஒரு லட்சம் டாலர் (ரூ. 474,000) மதிப்புள்ள ரவிக்கைத் துணி விற்ருர்களாம்.

இந்தக் கடைக்குப் பொருள்கள் வாங்குவதற்காக 16 நாடுகளில் சொந்த ஆட்கள் இருக்கிருர்களாம். அமெரிக்கர் விரும்பும் மாதிரிகளில் சமையல் பாத்திரங்களைச் செய்ய டோக்கியோவிலுள்ள மேசீஸ் ஏஜண்டு ஜப்பானியருக்குப் பயிற்சி அளிக்கிருராம். தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றும், துணி உற்பத்தித் தொழிற்சாலைகள் பலவும், பழத் தோட்டங்களும் இக்கடைக்கு உரிமையாக இருக்கின்றன. இவை மூலம் கிடைக்கும் பொருள்களை இக்கடையில் மலிவான விலைக்கு விற்கிருர்கள்.

நாள்தோறும் தந்தி மூலம் 2500 ஆர்டர்களும், டெலிபோன் மூலம் 20,000 ஆர்டர்களும் இக்கடைக்குக் கிடைக்கின்றனவாம். தாம் வாங்கக் கூடிய பொருள்களின் விலைக்கு முன்பணம் கொடுத்து இரண்டரை லட்சம் பேர் மேசீஸ் கடையில் கணக்குகளை வைத்திருக்கின்றனராம். தாம் விற்கும் மருந்துகளைச் சோதிக்க இங்கே ஆய்வுக்கூடம் இருக்கிறதாம். உற்பத்தியாளரிடமிருந்து இவர்கள் வாங்கும் சாமான்களின் தரத்தை முடிவு செய்ய இக்கடையில் சில நிபுணர்களை வைத்திருக்கின்றனராம்.

வாணிக முறை

பல லட்சம் ரூபாய்கள் பெறுமானமுள்ள பொருள்கள், சாலையில் செல்லுவோருக்குத் தெரியும் படியாகக் கண்ணுடியால் அமைக்கப்பட்ட அறைகளில் அல்லும் பகலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாக் கடைகளிலும், உள்ளே சென்றவுடன் பல வேலையாட்கள், ஒருவருக்குப்பின் ஒருவராக வந்து, ''உங்களுக்கு என்னவேண்டும்? எங்களில் வேறு யாராவது உங்களைக் கவனித்து வேண்டுவன செய்கிறார்களா? நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய இயலும்?'' என்றெல்லாம் உள்ளன்போடும் இனிமையாகவும் கேட்கிறார்கள். மேலும், நாம் அந்தப் பகுதியை விட்டுச் செல்வதற்குள் அல்லது அந்தக் கடையை விட்டுச் செல்வதற்குள் நம்மைக் கவனிப்பதை விட்டுவிட்டு வேறொருவரைக் கவனிக்கக் கடையிலுள்ள வேலையாட்கள் சென்றுவிட மாட்டார்கள். ஒரு சமயத்தில் ஒரு வாடிக்கைக்காரருடன் தான் ஒரு வேலையாள் தொடர்பு வைத்துக்கொள்ளுவார். வேலையாட்களுக்குத் தனி உடை இருப்பது நம்மைப் போன்ற வெளியூர்க்காரர்களுக்கு உதவியான ஓர் ஏற்பாடாகும்.

எதையாவது விற்று எப்படியாவது கடைக்கு லாபம் காட்டிவிட வேண்டுமென்றோ, தம் நேரத்தை வீணாகப் போக்கிவிட வேண்டுமென்றோ, அந்தக் கடை முதலாளிகளாவது வேலையாட்களாவது நினைப்பதில்லை.

உடைகள் விற்கும் ஒரு கடைக்கு, இந்தியப் பெண் மணி ஒருவர் சென்றிருந்தாராம். அவர்களுக்குத் தகுந்த 'ஓவர்-கோட்' ஒன்றுக்காக 54 மாதிரிகளில் அவர்களுக்கு அணிந்தும் கழற்றியும் முடிந்தபின், அவற்றுள் எதையாவது வாங்க அவர்கள் சம்மதித்தும், கடைக்காரர்கள் ஒப்புக்கொள்ளவில்லையாம். அவர்களுடைய நிறத்துக்கும் உருவத்துக்கும் பொருத்தமான ஆடை அந்த 54-இல் இல்லை என்றும், அதனால், அவற்றில் ஒன்றை விற்பது தம் கடையின் பெருமைக்குக் குறைவென்றும் கடைக்காரர்கள் கருதினராம்!

கடைகளிலுள்ள வேலைக்காரர்கள் பொருள்களை விற்பது மட்டுமல்லாமல், அதனுடன் தொடர்புள்ள எல்லாச் செயல்களிலும் ஆலோசனை கூறும் ஆற்றலுடையவராகவும் இருப்பர். உதாரணமாகப் பலசரக்குச் சாமான்கள் விற்கும் பகுதியில், எந்த உணவுகள் எவ்விதம் செறிமானமாகும்? என்னென்ன சத்துக்கள் அதில் உண்டு? எவ்விதம் அதைச் சமைப்பது? புதிய ஆகாரங்கள் எவை எவை தயாரிக்கலாம்? என்றெல்லாம் ஆலோசனை கூறுபவர்கள் இருப்பார்கள். இதைப்போலவே, புத்தகம் விற்கும் பகுதியிலும், எனக்கு அரசியலில் ஆர்வம் இருப்பதாக நான் கூறினால், அந்தத் துறையில் புதிய வெளியீடுகள் எவை என்று அந்த வியாபாரி கூறுவார். உடை வாங்கப் போனாலும் இப்படியே.

எல்லாக் கடைகளிலும் எந்தப் பொருளையும் ஒரே விலைக்கு விற்கிறார்கள். மிகச் சிறிய பொருள்களையுங்கூட அவ்வவற்றிற்கு ஏற்ற அளவுள்ள காகிதப் பைகளில் அழகுறக் கட்டித் தருவதில் அமெரிக்கர் இணையற்றவர்.

ஷாப்பிங் கார்டு

மிகப் பெரிய கடைகளில், கடையின் முன்பகுதியில் கொடுக்கப்படும் 'ஷாப்பிங் கார்டு' என்ற ஒரு புத்தகத்தை நாம் பெற்றுக்கொண்டு மற்றப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டும். அந்தப் புத்தகத்துக்கு ஓர் எண் இருக்கும். ஒவ்வொரு புத்தகத்திலும் 2 அடித் தாள்களுள்ள 6 பில்கள், ஒவ்வொன்றும் பின்புறம் கார்பன் உள்ள தாளில், தயாரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பில்லிலும் நமது ஷாப்பிங் கார்டுப் புத்தகத்தின் எண் குறிக்கப் பட்டிருக்கும். கடையில், பல பகுதிகளிலும் நாம் வாங்கும் பொருள்களை அந்தப் பகுதியினர் ஒரு தனி

பில்லில் குறித்துவிட்டு, ஒரு பிரதியை எடுத்துக்கொண்டு புத்தகத்தை நம்மிடம் மீண்டும் தந்துவிடுவார்கள். எல்லாப் பொருள்களும் வாங்கி முடிந்ததும், நாம் பணம் பெறுபவரிடம் புத்தகத்தைக் காட்டிப் பணம் செலுத்த வேண்டும். நாம் வாங்கிய பொருள்கள் அனைத்தும் அங்கே நமக்காக ஒருங்கே காத்துக்கொண்டிருக்கும்.

வியாபார தந்திரங்கள்

அமெரிக்க வியாபார தந்திரங்கள் எண்ணில. இவற்றுள் முதன்மையானது கடனுக்கு விற்பது. போதிய பணம் இல்லாதவர்கள், 10 அல்லது 20 தவணைகளில் பணம் கட்டுவதாக ஒப்பந்தம் செய்துகொண்டு, எந்தப் பொருளையும் வாங்கலாம். முக்கியமாக, மாதச் சம்பளம் வாங்கும் நடுத்தர வகுப்பார் தம் சக்திக்குமேல் விலையுள்ள பொருள்களை வாங்குவதற்கு இது ஆசை ஊட்டுகிறது. பத்தாயிரம் டாலருக்கு ஒரு வீடு வாங்கினல், ஓராயிரம் டாலர்தான் உடனடியாகக் கொடுக்கவேண்டும். எஞ்சியுள்ள தொகையை ஆண்டுதோறும் ஆயிரம் ஆயிரமாகக் கொடுக்கலாம்.

எந்தப் பொருளையும் மிகுதியாக வாங்கும்படி மக்களைக் கவர்ச்சி செய்வதும் அமெரிக்க வணிக மரபு. சான்பிரான்சிஸ்கோவில், 10 செண்டு பஸ் டிக்கட்டுகளில், மூன்றை ஒரே முறையில் வாங்கினல், 25 செண்டு கொடுத்தால் போதும். அமெரிக்க அஞ்சல் நிலையங்களில் ஒரே மதிப்புள்ள 500 ஸ்டாம்புகள் கொண்ட ஒரு பந்தை வாங்கினல், இரண்டு சதவீதம் கழிவு உண்டு. இதனல் அமெரிக்காவில் எந்தக் கடையிலும் எந்த நேரத்திலும் த்பால் ஸ்டாம்பு வாங்க இயலுகிறது.

வாங்குவோருக்கான வசதிகள்

பொருள்களை விற்றுவிடுவது மட்டும் தங்கள் வேலை அன்று. இயன்ற அளவு அவற்றை வாங்க வருபவர்களுக்கு எல்லாவித உதவிகளையும் செய்யவேண்டுமென்பதையும் வணிகர் உணர்ந்து, இந்தத் துறையிலும் பெரும் முதலீடு செய்கின்றனர். நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, லாஸ் ஏஞ்சல்ஸ் முதலான நகரங்களில் கடைகளில் பொருள் வாங்கச் செல்பவர்கள் சாலைகளில் தம் காரை நிறுத்த இடமில்லாமல் ஒரு மணி நேரம்வரை பல சாலைகளைச் சுற்றி வருவது வழக்கம். இத்தொந்தரவை முன்னிட்டுச் சொந்தமாகக் கார் உடையவர்கள்கூட பஸ்ஸில் வருவதுண்டு. இப்போது, அமெரிக்காவில் முக்கிய நகரங்களிலெல்லாம், புதிய கட்டிடம் கட்டும் கடைக்காரர்கள், தம் வாடிக்கைக்காரருடைய கார்களை நிறுத்துவதற்காக, 2,000-க்கு மேல் 3,000 கார்கள்வரை தங்குவதற்கான இடத்தையும் தம் கடைக்கு அருகே ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள மருந்துக்கடைகளில் மருந்துகள் மட்டுமன்றி, இதர இன்றியமையாப் பொருள்களும் புத்தகங்களும் தபால் ஸ்டாம்புகளும் விற்கப்படுகின்றன. வாடிக்கைக்காரர்களுக்கென தனியாக ஒரு டெலிபோன் வைக்கப்பட்டிருக்கிறது.

பல மாடிகளுள்ள கட்டிடங்களில் அமெரிக்கக் கடைகள் இருப்பதால், அவற்றில் மின்சார லிப்ட்கள் மட்டுமன்றி, 'எஸ்கலேட்டர்' (Escalator) என்னும் மின்சாரத்தால் சுழலும் மாடிப்படியும் வாடிக்கைக்காரர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

லிப்ட்டைக் குறிப்பிட்டதும், ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகின்றது. சான்பிரான்சிஸ்கோ நகரிலும்

மேசீஸ் கடைக்குச் சென்றிருந்தேன். அது இருபது மாடிக் கட்டிடத்தில் இருக்கிறது. அங்கு லிப்ட் இயக்கு பவன் சொன்னது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ''இதோ 5-ஆவது மாடி: இங்குக் குடைகள், குழந்தைகளுக்கான பொருள்கள், ஸ்டேசனரி சாமான்கள்......இதோ 9-ஆவது மாடி: தளவாடச் சாமான்கள் விற்கும் பகுதியும் அஞ்சல்நிலையமும்,சிற்றுண் டிச் சாலையும் இருக்கின்றன...இதோ 10-ஆவதுமாடி: மின் சாரக் கருவிகளும், உணவுப்பொருள்களும் கிடைக்கும்... அடுத்தது 11 ஆவது மாடி: கண்ணாடிப் பொருள்கள், கட்டிடச் சாமான்கள், மருந்துகள் விற்குமிடம். இதோ, 12 ஆவது மாடி: ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஏற்ற துணிகள் விற்கும் பகுதிகள் இங்குண்டு. முடி அழகு செய்யும் இடமான 13 ஆவது மாடி; இதோ'' என்று ஒவ்வொரு மாடியைப்பற்றிய விவரங்களையும் மூச்சு விடக் கூட நேரமின்றி அடுக்கிக்கொண்டே போனான்: அடுத்த மாடி வருவதற்குள் அனைத்தையும் சொல்லிவிடுவதற்காக, அவன் மின்சாரத்தோடு போட்டியிட்டான்.

வெற்றிக்குக் காரணம்

அமெரிக்காவில் கடைகள் பெரு வெற்றி அடைவ தற்கு முதற் காரணம், கடைகள் சொந்தமாக நடத்தப் படாமல், குழுவினரால் நடத்தப்படுவதே. மகன் தகுதி யுடையவனாயில்லாவிட்டால், தந்தை இறந்ததும் கடையை மூடிவிட வேண்டுவதில்லை. தக்க பயிற்சி உடையவர்களுடைய தலைமையில், கடையின் நிர்வாகம் தங்கு தடையின்றித் தொடர்ந்து நடைபெறும். ''அமைச் சர்கள் வருவர்; அமைச்சர்கள் போவர். ஆனால் அரசாட்சி என்றும் நடந்துகொண்டே இருக்கும்'' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. இதைப்போன்றே, அமெரிக்காவில்

கடை முதலாளிகள் இருப்பர்; கடை முதலாளிகள் இறப்பர்; ஆனல் கடை மட்டும் அழியாமல் என்றும் பதினுருக வாழும்.

பல தலைமுறைகளுக்கு ஒரு கடையின் பெயரை மக்கள் கேள்விப்படுவதால், அந்தப் பெயரைச் சொன்ன அளவில், கடைக்குச் சாதகமான ஒரு தனிப்பட்ட அபிப் பிராயம் உருவாகிவிடுகிறது. இதனல், விளம்பரங்களைப் படித்து அவற்றைக் கத்திரித்துத் தபாலில் அனுப்பிப் பொருள்கள் வாங்குவோர் அமெரிக்காவில் பல கோடிப் பேர் உளர். டெலிபோனில் ஒரு கடையைக் கூப்பிட்டு, "90 சதம் பஞ்சு உள்ள, பாப்ளின் துணியில், தக்காளிச் சிவப்பு நிறத்தில், 14 அங்குலம் கழுத்தளவுள்ள காலருடன் கூடிய அரைக் கைச் சட்டை வேண்டும்" என்று கூறி, கடைக்குச் செல்லாமலே பொருள் வாங்குபவரும் உண்டு.

வேலைக்காரருக்கான நன்மைகள்

ஒரு நாளில் ஒரு நூறு ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறும் சில்லறைக் கடைகளிலே, முதலாளியே எல்லாவற்றையும் கவனித்துவிட முடியும். ஆனல், நாள்தோறும் பல லட்சம் ரூபாய்களுக்கு விற்பனை நடைபெறும் லண்டனிலுள்ள செல்ப்ரிட்சஸ், ஹாராட்ஸ், நியூயார்க்கிலுள்ள மேசீஸ், கிம்பல்ஸ், சாக்ஸ், கொலம்பசிலுள்ள லாஜரஸ், சூரிக்கிலுள்ள ஜெல்மோலி, சிட்னியிலுள்ள டேவிட் ஜோன்ஸ் போன்ற கடைகளிலே, அங்குள்ள வேலையாட்களே எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளுகின்றனர்.

குறிப்பிட்ட ஓரிடத்தில் வேலை செய்வதைப் பற்றி நம் நாட்டு அரசியலாரின் ஊழியர்களைப்போல, கடை வேலையாட்கள் பெருமைப்படுகிருர்கள். ஒவ்வொரு

கடையிலுமுள்ள ஊழியர் தனித்தனியே கழகங்கள் அமைத்துக் கொண்டிருக்கின்றனர்; அவற்றின் மூலம், பொது நன்மைகள் பலவற்றை அடைகின்றனர். இக் கடைகள், தம் வேலையாட்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் சொந்த உபயோகத்துக்குப் பொருள் களை மலிவான விலைக்கு விற்கின்றன. வேலையாட்களுக்கு இலவச வைத்திய வசதியளிக்கின்றன.

இடைவேளையில், வேலையாட்கள் உறங்குவதற்காக மெத்தை போடப்பட்ட ஒரு மண்டபமும் பல கடைகளில் உண்டு. அவர்களின் பொழுது போக்குக்காகப் பல ஏற்பாடுகளும் கடையினர் செய்திருக்கின்றனர். வாரந் தோறும் விடுமுறை நாளும், கோடைக் காலத்தில் நான்கு வார ஒய்வும் சம்பளத்துடன் கொடுக்கப்படு கின்றன. கடையின் லாபத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி, ஆறு மாதங்களுக்கொருமுறை, வேலையாட்களுக்கு வெகு மதியாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. எந்த வித மாகவோ, எந்த இடத்திலோ—ஓய்வு நாளில் கூட வேலை யாளுக்கு விபத்து நேர்ந்தால் அதற்கும் கடையிலிருந்து நஷ்டஈடு தரப்படுகிறது.

இவ்வேலையாட்கள், கடைநேரத்தில் தம் சொந்த அலுவல்களைக் கவனியார். நியூயார்க்கில், எம். ஏ. படிக் கும் தம் மகளைச் சந்திக்கும்படி என் அமெரிக்க நண்ப ரொருவர் என்னைக் கேட்டுக்கொண்டிருந்தார். எனக்கு ஓய்வு கிடைத்தபோதெல்லாம். அந்தப் பெண் கல்லூ ரிக்கோ, விளையாடுமிடத்திற்கோ சென்றுவிடுவாள். எப் படியாவது அவளைச் சந்தித்துவிட வேண்டுமென்ற உறுதி யோடு, இரவு 8 மணிக்கு அவள் தங்கியிருந்த மாணவர் உணவு விடுதிக்குச் சென்றேன்.

இரவு 7 மணிமுதல் 10 மணிவரை புளூமிங்டேல் என்ற கடையில் அவள் வேலை செய்வதாக அங்கிருந்தவர் வாயிலாக அறிந்து, உடனே அந்தக் கடைக்குச் சென்றேன். அங்கு அவளைச் சந்தித்தபோது, இரண்டொரு சொற்களை மட்டும் என்னிடம் கூறிவிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவள் மீண்டும் தன் வேலைக்குச் சென்றுவிட்டாள். பெரும் ஏமாற்றத்துடன் நான் விடை பெற்றேன்; மறுநாள், அவளே என்னை வந்து சந்தித்துத் தன் தந்தையிடமிருந்து சில நாட்களுக்கு முன் என்னைப் பற்றி ஒரு கடிதம் வந்ததாகத் தெரிவித்தாள். அதுவன்றோ கடமையுணர்ச்சி?

தான் வேலை செய்யும் கடையில், வேலையாட்களுக்கு நூல் நிலையமும் உடற்பயிற்சிச் சாலையும் இருப்பதாகவும், 'பிரிட்ஜ்' என்னும் சீட்டாட்டம் பற்றி அவர்களுடைய கழகத்தில் மாதமிருமுறை சொற்பெருக்குகள் நடைபெறுவதாகவும், துப்பாக்கியால் சுடப் பழகுபவருக்கும், புகைப்படம் எடுப்பவர்களுக்கும் அக்கடையிலேயே தனித்தனிக் கழகங்கள் இருப்பதாகவும், முதல் சிகிச்சை கூட அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதாகவும், அந்தப் பெண் சொன்னாள். கடையைப் பற்றிய வாரப்பத்திரிகை அச்சிட்டு வழங்கப்படுகிறதாம். அவர்களுக்காக ஒரு பேங்கும் இருக்கிறதாம். கடையில் என்னென்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்ற யோசனையையும் வேலையாட்கள் மாதந்தோறும் தெரிவிக்கவேண்டுமாம். மேலும் சில.

மழை பெய்தால் வேலையாட்களுக்குக் குடைகள் கொடுக்கவும் ஒரு பகுதி இருக்கிறது. உரிய கட்டணம் கட்டிக் குடையைப் பெற்றுக்கொண்டு போய், மீண்டும் குடையைக் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

வேண்டும். தத்தம் பொருள்களை வைத்துக்கொள்ள, ஒவ்வொரு வேலையாளுக்கும் ஒரு சிறு அலமாரி கொடுக்கப் பட்டிருக்கிறது. வேலைக்கு வரும் வழியில், காய்கறிகளை வேலைக்காரர்கள் வாங்கியிருந்தால், மாலையில் அவர்கள் அவற்றை வீட்டிற்குக் கொண்டு போவதற்குள் அவை வாடி விடாதபடி, அவற்றைக் குளிரான நிலையிலே வைத்திருக்க ஐஸ் பெட்டிகள் இருக்கின்றன.

உடைகள் கடையிலேயே கொடுக்கப்படுகின்றன; உடைகளை மாற்றிக்கொள்ள, காலையிலும் மாலையிலும் பத்துப் பத்து நிமிட நேரம் அனுமதிக்கப்படுகிறது. உடைகளைச் சுத்தம் செய்யவும், தையல் வேலைக்கும் கடையிலேயே தனி இடங்களும் ஆட்களும் உண்டு. வேலையாட்களை அழகு படுத்தவும் கடையில் ஒரு பகுதி உண்டு. வேலையாட்கள் நீதிபதிக்கு உதவி செய்யும் (Jury) வேலைக்குச் சென்றால், அந்த நாட்களுக்குச் சம்பளப் பிடித்தம் செய்வதில்லை. வேலைக்குப் போகுமுன் அன்றைய காலைப் பத்திரிகையில், அந்தக் கடையினர் வெளியிட்டுள்ள விளம்பரங்களைப் படித்துக்கொண்டு போகவேண்டும். வாடிக்கைக்காரர்களின் குழந்தைகள் கடைக்குள் காணமற் போய்விட்டால் அக் குழந்தைகளை வைத்திருக்கக் கடைக்குள்ளேயே ஒரு குறிப்பிட்ட இடம் இருக்கிறது. அந்த இடத்துக்குக் குழந்தைகளைக் கொண்டு போய்ச் சேர்ப்பதும் வேலையாட்களின் கடமைகளில் ஒன்று.

இரவு 7 மணிக்குமேல், வேலை செய்பவர்களுக்கு, இரவு உணவுக்காக ஒரு தொகை தரப்படுகிறது. வேலையாட்களின் குடும்பத்தில் யாராவது இறந்தால் சவ அடக்கத்தின்போது கடையிலிருந்து இனமாகப் பூக்கள் அனுப்பி அனுதாபத்தைத் தெரிவிப்பது வழக்கம். இக்

கடைகளில் வேலை கிடைப்பது எளிதன்று. குறிப்பிட்ட உயரமும் பயிற்சியும் பொது அறிவும் கல்வித் தேர்ச்சியும் இனிய முகமும் பொறுமையும் உடையவர்களுக்கே வேலை கிடைக்கும்.

தூய்மை

ஏனைய துறைகளைப்போலவே வியாபாரத்திலும் அமெரிக்கர் சுகாதாரத்தை மிகவும் போற்றுகின்றனர். தேங்காயைத் திருகியதும், அதை அழகிய சிறு டப்பாக் களில் அடைத்து, விற்பதைப் பல இடங்களில் பார்த்தேன்.

சான்பிரான்சிஸ்கோ நகரில் ஒரு மீன் கடைக்குப் போயிருந்தேன். அங்கே மீன் பிடித்தல் ஒரு பெரிய தொழில். கடைக்குள்ளேயே ஊருணி அமைத்து, கடலில் பிடித்த மீன்களை அந்த ஊருணியில் விட்டிருக்கின்றனர். வாடிக்கைக்காரர்கள் கேட்டவுடனே, வலை போட்டு மீனைப் பிடித்துக் கொடுக்கிறார்கள்!

நம்மையறியாமலே புகைப்படம்!

வெளிநாட்டவர், மேலை நாடுகளிலே, புகைப்படக் கடைக்குப் போய்ப் படம் எடுக்க வேண்டுவதே இல்லை. லண்டனில் டிராபால்கர் சதுக்கத்தினருகிலோ, பாரிசில் ஐபில் கோபுரத்தின் அண்மையிலோ, பிராஹாவின் சரித் திரப் புகழ் பெற்ற மாடமாளிகைகளைச் சுற்றிலுமோ, அன்றிச் சிட்னி ரேசுக்கோ நாம் சென்றால், நாம் பணம் கொடுக்காமலே, புகைப்படக் கம்பெனியார் நம்மைப் பட மெடுத்து விடுவார்கள். மறுகணம் ஒரு சீட்டை நம்மிடம் தருவார்கள். உங்கள் படம் 24 மணி நேரத்துக்குள் எங்கள் கடையின் காட்சிப் பலகையில் இருக்கும். அது உங்களுக்குப்

பிடித்திருந்தால், 50 ந.பை. வீதம் எத்தனை படங்கள் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று அந்தச் சீட்டில் அச்சிடப்பட்டிருக்கும். தாம் படமெடுக்கும் எத்தனைப் பேர்களில், எத்தனைப் பேர்கள் இறுதியிற் பணம் கொடுத்துப் படத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள் என்று மக்களின் மனநிலையை ஆராய்கின்றனர். புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்து, புகைப்படக் கடையினரும் தம் தொழிலை நடத்துகிறார்கள்.

அமெரிக்கர் தீப்பெட்டியை விலைக்கு விற்பதுமில்லை, வாங்குவதுமில்லை. *15* குச்சிகள் உள்ள சிறு அட்டைகளைச் சிகரெட் வாங்கும்போது அதனோடு தருவர். வீண் வேலைகளும் காலதாமதமும் கூடாதென்பதே இதன் கருத்து.

செயின் ஸ்டோர்

செயின் ஸ்டோர் என்பது அமெரிக்கா முழுவதும் இருக்கின்றது. இது ஒரு சங்கிலித் தொடர். அதாவது ஓர் ஆளுகைக்குட்பட்ட கடைகள் நாடு முழுவதும், பல்வேறு நகரங்களில் இருப்பதாகும். (இந்தியாவில் பாட்டா செருப்புக் கடை, ஹிஜ்ஜின்பாதம்ஸ் இரண்டையும் இங்கே குறிப்பிடலாம்.) எப்படி நம்மில் பலர் பாட்டா செருப்புகளையே விரும்புகிறோமோ, அதைப் போன்றே வாழ்க்கைக்கு வேண்டிய ஒவ்வொரு பொருளையும் குறிப்பிட்ட புகழ் பெற்ற கடைகளில் வாங்கவே அமெரிக்கர் விரும்புவர். இவை பல தலைமுறையாக மக்களின் நம்பிக்கைக்கு உரியனவாய் நடைபெற்று வருகின்றன. இவற்றில் விற்கப்படும் பொருள்கள் ஓரளவு தகுதியுடையனவாகவே இருக்கும்.

விருந்தினர் தாம் தங்கிய வீட்டுக்காரர்களுக்கும், நண்பர்களுக்கும், நோயாளிகளுக்கும் பூ அனுப்புதல்

சில நாடுகளில் மரியாதைக்கு அறிகுறியான ஒரு வழக்கம். உதாரணமாகக் கோவையிலுள்ளவர், திருநெல்வேலிக் காரருக்குப் பூ அனுப்புவது எப்படி? கோவைக்காரர் அந்நகரிலுள்ள பூ வியாபாரியிடம் பணம் கொடுத்தால், அவர் தந்தி மூலம், திருநெல்வேலியிலுள்ள தம் கிளைக்குத் தெரிவித்து விடுவார். அந்தக் கிளையிலுள்ளவர்கள், திருநெல்வேலியில் குறிப்பிட்டவரிடம் உரிய காலத்தில் பணம் கொடுத்தவர் சார்பாகப் பூவைச் சேர்த்துவிடுவார்கள். பணம் பத்துஞ் செய்யும் அன்றோ?

பிற சிறப்புக்கள்

போலிப் பொருள்களை விற்று மக்களை ஏமாற்றுவதைத் தடுக்கவும், எல்லாக் கடைகளிலும் விற்கப்படும் பொருள்கள் உறுதியானவையாக இருக்கின்றனவா என்பதைச் சரிபார்க்கவும் பொருளாதாரச் செழிப்பான நாடுகளில் 'இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்டாண்டர்ட்ஸ்' என்ற பெயரில் தர நிர்ணய நிலையம் இருக்கிறது.

இன்றைய உலக வியாபாரம், போக்கர் என்னும் சீட்டாட்டத்தைப் போல இருப்பதாகவும், லாபம் முழுவதும் ஒருவருக்கே—அமெரிக்கருக்கே—கிடைத்து விடுவதாகவும் ஓர் ஆஸ்திரேலிய நண்பர் ஒரு தடவை எனக்கு எழுதியிருந்தார். இந்தப் போக்கர் விளையாட்டில், அமெரிக்கர் கையாளும் ஒரு சூழ்ச்சி தமக்குப் போட்டியில்லாமல் அவர்கள் செய்துவிடுவதுதான்.

13. விளம்பரம்

பத்திரிகைகளிலும், பல சாலைகளின் சந்திப்புகளிலும், திரைப்படங்களிலும் மட்டுமின்றி வானொலியிலும் தொலைக்காட்சியிலுங்கூட விளம்பரங்கள் வெளியிடப் படுகின்றன. பத்திரிகை அதன் ஒரு பகுதியை விளம்பரம் வெளியிடுபவருக்கு விற்பதைப்போல, வானொலி நிலையத் தார் தாம் ஒலிபரப்பும் நேரத்தின் ஒரு பகுதியைக் குறிப் பிட்ட விலைக்கு விளம்பரம் வெளியிடுபவருக்கு விற் கின்றனர்.

பத்திரிகை அதன் தலைப்புச் செய்திகள் உள்ள பக்கத்தில் அல்லது அட்டையின் வெளிப்பக்கத்தில் வெளி யிடும் விளம்பரங்களுக்கு கூடுதலான கட்டணம் வாங்கு வது போல, வானொலி நிலையத்தார் வானொலியை மக்கள் மிகுதியாகக் கேட்கும் நேரங்களுக்கும், முக்கிய நிகழ்ச்சி களுக்கு முன்னும் பின்னும் உள்ள நேரங்களுக்கும் கூடுத லான கட்டணங்கள் வாங்குகின்றனர். குறிப்பிட்ட நேரத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளும் வணிகர், அந்த நேரத்தில் தம் செலவில் ஒரு நல்ல நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, இடையிடையே தம் பொருளை விளம் பரப்படுத்துவர்; தம் பொருளைப்பற்றி வானொலியில் நாடகம் நடத்துபவர்களும் உளர்; தம் நிகழ்ச்சிகளைக் கேட்கும்படி பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துபவர் களும் உண்டு.

'NBC' என்ற நேசனல் பிராட்காஸ்டிங் கம்பெனி யின் நிகழ்ச்சி ஒன்றுக்கு நான் பார்வையாளராகச் சென்றேன். அப்போது ஒட்டக மார்க் சிகரட் கம்பெனி

யாரின் விளம்பரம் தொடங்க இருந்தது. அந்நிகழ்ச்சிக்கு 250 பார்வையாளர் அனுமதிக்கப்பட்டனர். பார்வை யாளரின் பொதுஅறிவைச் சோதிக்கும் ஐந்து கேள்வி களைக் கேட்கப் போவதாகவும், தம் சிகரட்டின் பெயரான Camel என்ற ஆங்கிலச் சொல்லின் ஐந்து எழுத்துக் களையும் முதல் எழுத்தாகக் கொண்ட வார்த்தைகளை அவ்வெழுத்துக்கள் உள்ள வரிசை முறைப்படி ஐந்து கேள்விகளுக்கும் விடையாகக் கூறவேண்டுமென்றும் அறிவிப்பாளர் கூறினர்.

அவர் கேட்ட முதல் கேள்வி, "போர்க்காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த ஒருவர் பெயர் என்ன?" என்பது. பார்வையாளர் ஒருவர், "சர்ச்சில்" என்று பதிலளித்தார். Churchill என்ற வார்த்தை யில் முதல் எழுத்து 'C' ஆக இருப்பதால் விடை கூறிய வருக்கு, 2 டாலர்களும் 2 பாக்கெட் 'காமல்' சிகரட்டும் பரிசாகக் கொடுக்கப்பட்டன. "இப்போது இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருப்பவர் யார்?" என்ற கேள்வி இரண்டாவதாகக் கேட்கப்பட்டது. "ஆட்லி" என்று ஒரு பார்வையாளர் சடாரென்று பதில் கூறினர். 'Camel' என்ற பெயரின் இரண்டாம் எழுத்தாகிய 'A' யுடன் 'Attlee' என்பது தொடங்குவதால், இவ்விடை தந்த வருக்கு 4 டாலரும் 4 பாக்கெட் 'காமல்' சிகரட்டும் பரிசாகத் தரப்பட்டன. மூன்றுவது கேள்வி, "இன்றைய உலகில் வெளிநாட்டு மந்திரிகளில் முக்கியமானவர் யார்?" என்பது; மாலத்தோவ் என்ற பெயரின் முதல் எழுத்து 'Camel' என்ற சொல்லின் மூன்றுவது எழுத் தாக இருப்பதால், விடை கூறியவருக்கு மூன்றுவது பரி சாக 8 டாலரும் 8 பாக்கெட் 'காமல்' சிகரட்டும் வழங்கப் பட்டன. நான்காவது கேள்வி, "இரண்டாவது உலகப் போரில் பணியாற்றிய சிறந்த இராணுவ வீரர் யார்?"

என்பது. 'Camel' என்பதில் நான்காவது எழுத்து 'E' ஆக இருப்பதால் இக்கேள்விக்குப் பதில் E இல் தொடங்க வேண்டும். (Eisenhover) 'ஐசன்ஹோவர்' என்று பதில் சொல்லியவருக்கு நான்காம் பரிசாக 16 டாலரும் 16 பாக்கெட் சிகரட்டும் அளிக்கப்பட்டன. கடைசிக் கேள்வி, ''உலகின் முக்கியமான நகரம் ஒன்றின் பெயரைச் சொல்லுக'' என்பது. 'லண்டன்' என்ற சொல்லின் முதல் எழுத்து 'L.' அது 'Camel' என்பதின் கடைசி எழுத்தாக இருப்பதால், இந்த நகரத்தின் பெயரைச் சொன்னவருக்கு ஐந்தாம் பரிசாக 32 டாலரும் 32 பாக்கெட் சிகரட்டும் கிடைத்தன. இதைப் போன்ற பல நிகழ்ச்சிகள் அமெரிக்காவில் நடைபெறுகின்றன.

கோக்க கோலா

அமெரிக்கருக்குக் குளிர்ந்த பானங்களைக் குடிப்பதில் விருப்பம் மிகுதியாக உண்டு. இதை (Soda·water) முதலில் உற்பத்தி செய்த ஜோசப் பரீஸ்ட்லி என்பவர் நினைவாக அமெரிக்கர் ஒரு சிலை வைத்திருப்பதே இதற்குச் சான்று.

அமெரிக்கர் மிகவும் விரும்பி அருந்தும் 'கோக்க-கோலா' (Coca-cola) என்ற குளிர்ந்த பானத்தைத் தயாரிப்பவர்கள், தம் சரக்கை விற்கத் தொடங்குமுன் பலகோடி ரூபாய்கள் செலவிட்டு விளம்பரப்படுத்தினராம்.

விளம்பரக் கல்வி

விளம்பரக் கலை அத்துணைச் சிறப்புப் பெற்றிருப்பது, இக்கலைக்கான கல்வியும் கழகங்களும் ஆராய்ச்சிக் குழுக்களும் கல்லூரிகளும் பல்லாயிரக்கணக்கான புத்தகங்களும் இருப்பதாலேயாம்.

ட்ருமன் ஹோட்டல், ஐசன்ஹோவர் ரேடியோ, ரூஸ்வல்ட் சிகரட் போன்ற பெயர்கள் அமெரிக்காவில் இல்லை. இவ்வாறு

வணிக விளம்பரத்துக்குத் தம் தலைவர்கள் பெயரைப் பயன்படுத்தாமல், அமெரிக்கர் தம் தலைநகருக்கு அமெரிக்கக் குடியரசின் முதல் தலைவராகிய வாஷிங்டன் பெயரை அமைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

அமெரிக்காவில் வெளிவரும் விளம்பரங்களுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்:

"நவம்பர் 2-ஆம் தேதி பிரின்ஸ்டனில் நடக்கும் கால் பந்தாட்டத்துக்குச் செல்லுங்கள்; ஓடும் ரயிலிலேயே உணவுச் சாலையுள்ள ஸ்பெஷல் ரயில்கள் 10-45 மணி முதல் 8 நிமிஷத்துக்கு ஒரு தடவை நியூயார்க் பென்சில்வேனியா ஸ்டேஷனிலிருந்து புறப்படும்"

"......என்ற கடையில் உங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கினால், உங்களுடைய வாழ்க்கைச் செலவில் 100-க்கு 10 குறையும்."

"100 அமெரிக்காவில் 14 பேர் தங்களுடைய உடைகளை மேசீஸிலேயே வாங்குகின்றனர்."

"நவம்பர் மாதத்தில் மணமானவர்களில் எட்டில் ஒருவர் தம் திருமண உடைகளை எங்களிடமே வாங்கினர்."

"ஒரு மணி நேரத்தில் சராசரி 3490 பேர் 'சாக்ஸ்' கடையில் பொருள்கள் வாங்குகின்றனர்."

"நாளை 84 டிகிரி வெய்யில் இருக்கும் என்று வான ஆராய்ச்சி நிலையத்தார் எதிர்பார்க்கின்றனர். தட்பவெப்ப நிலை எப்படி இருந்தால் என்ன? கோக்ககோலா எந்தப் பருவத்துக்கும் ஏற்றதுதானே?"

14. 700 அமெரிக்கரின் சாதனை

அமெரிக்காவில் மருத்துவ வசதிகள் நிறைய இருப்பது எல்லோருக்கும் தெரிந்தது. அல்லது எல்லோரும் கேள்விப்பட்டதுதான். இவ்வளவு வசதிகள் அங்கு எப்படி ஏற்பட்டன?

எல்லா மருத்துவ மனைகளையும் அரசாங்கம் நடத்துகிறதா என்றால் அதுவுமில்லை. எத்துணையோ வகையான நிறுவனங்கள் மருத்துவமனைகளை நடத்துகின்றன. மிசனரிமார்கள், தொழிற்சாலைகள், ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப் போன்ற பொழுதுபோக்குச் சங்கங்கள் இப்படிப் பலவகை அமைப்புக்கள் இந்தப் பணிகளுக்கு மூலதனம் கொடுத்துள்ளன.

மேலும் மருத்துவ மனைகளில் நாள்தோறும் சில மணி நேரம் வேலை பார்ப்பதைச் சமூகப் பணியாகக் கருதும் ஆண்களும் பெண்களும் பல நூறாயிரம் பேர் வாழ்கின்றனர். விளையாட்டு அரங்கம், நூல் நிலையம், பகலுணவுக் கடைகள்—இப்படி எண்ணற்ற செயல்களில் சம்பளமின்றித் தொண்டு செய்யும் அமெரிக்கர் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் அந்த நாட்டு நிலவரப்படி சம்பளம் கொடுத்தால் ஆயிரக்கணக்கான மருத்துவ மனைகளையும் நூல் நிலையங்களையும் மூடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்!

உடல் நலமின்றி இருப்பவர்களைப் பார்த்து ஆறுதல் கூறுவது, அவர்கள் படிப்பதற்கு நூல்களை வழங்குவது, அவர்கள் குடும்பத்தாருக்குக் கடிதம் எழுதுவது, சிறு

மருத்துவ மனைகளுக்குத் தேவையான சிறு சிறு உதவிகளைச் செய்வது—இவற்றுக்காக, குறிப்பிட்ட நாட்களில் 2 மணி நேரம் ஒதுக்கி வைப்பவர்கள் எவ்வளவோ பேர் ஆவர்.

அமெரிக்கரின் கூட்டுறவு மனப்பான்மைக்கு ஒரு சான்று காட்டுவோம்.

இல்லினய் இராச்சியத்தில் ஹோப்டேல் என்ற சிறு நகரம் இருக்கிறது. நகரம் என்ருல் 10,000 மக்கள் இருப்பதாக எண்ணிவிட வேண்டாம். இந்த நகரத்தின் மக்கள் தொகை 700தான்.

இந்த நகரத்தில் ஒரு டாக்டருடன் தொடங்கப் பெற்ற மருத்துவமனை, 50 லட்சம் ரூபாய்ச் செலவில் விரிவடைந்திருக்கிறது. 1953-இல் 20 படுக்கைகள் உள்ள கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டது.

கட்டிடத்தை ஈடு வைத்து, கடன் பத்திரங்கள் வெளியிட்டு அதன்மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டுதான், கட்டிடம் கட்டத் தொடங்கினர். காண்டிராக்ட்காரர்கள் இல்லாமல், உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடனும் மேற்பார்வையிலும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.

வாணம் வெட்டும் பொறுப்பை உள்ளூர் உழவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

2 ஆப்பரேஷன் அறைகள், பிள்ளைப்பேறு அறை, தாய்-சேய்களுக்கு ஆறு அறைகள், சில சோதனைக் கூடங்கள், இரத்த வங்கி, எக்ஸ்கதிர் கருவிகள்—யாவும் அந்த மருத்துவமனையில் உள்ளன. கட்டிடம் 1955-ல் கட்டி முடிக்கப்பெற்றது.

1956ல் நர்சுகளுக்கு வீடுகள் கட்டப்பட்டன. அதற்கு உரிய தொகையும் கடன் பத்திரம் மூலம்தான் வசூலாயிற்று.

மருத்துவ மனையின் புகழ் எங்கும் பரவிற்று. அடுத்த ஊராரும் அங்கு வந்து மருத்துவம் செய்துகொண்டனர். 40 படுக்கையுள்ள கட்டிடம் ஒன்று தேவைப்பட்டது. 20 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கும் கடன் பத்திரம் வெளியிடப்பட்டது. 750 டாலர் கொடுப்பவர்களுக்கு 20 ஆண்டு முடிந்ததும் 1000 டாலர் திருப்பித் தரப்படு மென்றும் அவர்கள் ஆண்டுதோறும் 50 டாலர் மதிப் புள்ள மருத்துவ வசதி பெற்றுக்கொள்ளலாம், அல்லது அந்த உதவியைப் பிறருக்குக் கொடுக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

உடல் நலம் பெற்றவர்கள் ஓய்வாக இருப்பதற்கும் பல அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. போலியோ நோயால் வாடும் சிறுவர் மகிழ்ச்சியாகப் பொழுது போக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல் மருத்துவ நிபுணர், குழந்தை நோய் பற்றிய பேரறிஞர் முதலிய 40 வல்லுனர்கள் இந்த மருத்துவ மனையில் இருக்கிறார்கள். 95 பேர் குறிப்பிட்ட நேரங் களில் மட்டும் வேலை பார்த்துச் சம்பளம் பெறுகின்றனர். மாதம்தோறும் 10 லட்சம் ரூபாய் இந்த மருத்துவ மனைக்குச் செலவாகிறது. இவ்வளவு பணமும் மறுபடியும் இந் நகரிலேயே செலவிடப்படுகிறது. 'ஒரு பெரிய தொழிற்சாலை தொடங்கியிருந்தால்கூட எம் நகருக்கு இவ்வளவு நன்மை விளைந்திராது' என்று ஹோப்டேல் காரர் ஒருவர் 1963 ஜூனில் என்னிடம் கூறினார்.

15. பத்திரிகைகள்

'பத்திரிகைக்காரர்கள் பொல்லாதவர்கள்; ஊருக்கெல்லாம் உபதேசம் செய்பவர்கள்; ஆளுபவர்களை ஆட்டிவைப்பவர்கள்; 1,000 குண்டுகள் வைத்திருக்கும் எதிரிக்குப் பயப்படாவிட்டாலும் 4 பத்திரிகைகள் வைத்திருக்கும் ஆசாமிக்குப் பயப்பட்டுத்தான் ஆகவேண்டும்.'

—நெப்போலியன்

பல தெருக்கள் கூடுமிடங்களில் பத்திரிகை விற்பவர்கள் பல பிரதிகளைப் போட்டுவிட்டுச் செல்லுகிறார்கள்; பத்திரிகை வேண்டுவோர் அதற்கு உரிய விலையை அவ்விடங்களில் போட்டுவிட்டுத் தமக்கு வேண்டிய பிரதியை எடுத்துக்கொள்ளுகின்றனர்; சில மணி நேரத்துக்குப் பின், பத்திரிகை விற்பவர்கள் பணத்தையும் எஞ்சியிருந்தால் அப்பத்திரிகைகளையும் எடுத்துக்கொண்டு செல்லுகிறார்கள்; வேறு எவரும் அந்தப் பணத்தைத் தொடுவதில்லை.

சந்தாதாரர்களுக்குப் பத்திரிகை வழங்குதல்

சந்தாதாரர்களுக்கு அவரவர் வீடுகளில் பத்திரிகையைக் கொடுக்கும் வேலையை மாணவர்கள் மட்டுமே செய்கின்றனர். இவ்வாறு வருவாய் பெறும் மாணவர் 5 லட்சம் பேர் அமெரிக்காவில் உளர். பெஞ்சமின் ஃப்ராங்கலின், ஹென்றி போர்டு, தாமஸ் ஆல்வா எடிசன், தளபதி ஐசன் ஹோவர், ஹெர்பர்ட் ஹூவர் ஆகிய பெரியோர்களெல்லாம் சிறுவர்களாக இருந்தபோது பத்திரிகை விற்றவர்களுள் சிலர் ஆவர். 12 வயதுக்குட்

பட்டவர்கள் இவ்வேலையில் ஈடுபட அநுமதிக்கப்படுவதில்லை. (பிற்பகலில் வெளியாகும்) பத்திரிகைகளை இரவில் கொண்டுபோய்க் கொடுக்க 16 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

பத்திரிகை படிக்கும் வழக்கம்

அமெரிக்கர் எல்லோரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். காலைச் சிற்றுண்டியை உட்கொள்ளும்போது, அவர்கள் கட்டாயமாகக் காலைப் பத்திரிகையையும் படித்துவிடுகின்றனர். இதனால் உணவு உண்ண நெடு நேரம் ஆகிறது.

> "செவிக்குண வில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கு மீயப் படும்!"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்; ஆனால் இவர்கள் படிப்பதையும் உணவு உட்கொள்ளுவதையும் ஒரே காலத்தில் முடிக்கின்றனர்!

நண்பர்களுக்குக் கிறிஸ்துமஸ் அன்பளிப்பாகப் பலர் பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்துகின்றனர். இவற்றிலிருந்து பத்திரிகை படிப்பதில் அமெரிக்கருக்குள்ள ஆர்வத்தை நாம் அறியலாம்.

பத்திரிகைகளின் வளர்ச்சி

அமெரிக்காவில் 2026 தினசரிப் பத்திரிகைகள் உள்ளன. இவற்றுள் நியூயார்க்கிலிருந்து வெளிவரும் டைம்ஸ், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளைப் பத்து லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வாங்குகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில், பத்திரிகை விற்பனையை அதிகரிப்பதற்காக, ஒரு பிரிட்டிஷ் பத்திரிகையாளர் தம் பத்திரிகை வாங்குபவர்களுக்குச் சார்ல்ஸ்

டிக்கன்ஸ் எழுதிய நாவல்களை அன்பளிப்பாகக் கொடுத்தனராம். நியூயார்க் ஹெரால்ட் ட்ரீபியூன் பத்திரிகையாளர் பிரயாணத் திட்டங்கள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இவ்வாறெல்லாம் செய்ததால் பத்திரிகை வாங்குபவரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வந்திருக்கிறது. எக்காரணத்தாலாவது எதிர்பாராமல் பத்திரிகை வாங்குவோர் தொகை குறைந்து, அதனுல் பத்திரிகையின் செல்வநிலை கெட்டுவிடாதபடி அதற்குப் பாதுகாப்பாகப் பத்திரிகையாளர் இன்சூரன்ஸ் செய்து கொள்ளுகின்றனர்.

பல்வேறு குறிப்புக்கள்

நியூஸ் 'NEWS' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமாக 'N' (North) வடக்கு, 'E' (East) கிழக்கு, 'W' (West) மேற்கு, 'S' (South) தெற்கு ஆகிய நான்கு திக்குகளிலும் அரசியல் துறையில் மட்டுமன்றி, வேறு துறைகளில் நிகழ்வனவற்றையும் அமெரிக்கப் பத்திரிகைகள் விரிவாகவும் சிறப்பாகவும் வெளியிடுகின்றன. பங்கு மார்க்கட், பொருளாதார நிலை, உடல் நலத்தைப் பேணுதல், சத்துணவு, புதிய உணவு வகைகள், தோட்ட அமைப்பு, வீட்டை அழகுபடுத்துதல், திருமண ஆலோசனைகள், இயல் இசை நாடகம், நாய் பூனைகளை வளர்த்தல், புகைப்படக் கலை, பொழுது போக்குக்கான குறிப்புக்கள், நீதிமன்றத்துச் செய்திகள், விஞ்ஞானத்தில் புதிய ஆராய்ச்சிகள், விகடத் துணுக்குகள், குறும்புப் படங்கள் முதலிய எண்ணிறந்த பகுதிகளும் அமெரிக்கப் பத்திரிகைகளில் இருப்பதால், அமெரிக்கரின் வாழ்வைப் பத்திரிகைகள்தாம் உருவாக்குகின்றன.

''எந்த உணவைத் தயாரிக்கலாம்? எவ்வித ஆடை தரிக்கலாம்? வீட்டை எவ்வாறு அழகு படுத்தலாம்?

எந்தப் புத்தகத்தைப் படிக்கலாம்? எந்தத் திரைப்படத்துக்குச் செல்லலாம்? எந்தப் பொருள் மலிவாகக் கிடைக்கும்?'' என்ற அன்றாடக் கேள்விகளுக்குப் பதில் கூறுவது தினசரிப் பத்திரிகைகளே.

பத்திரிகைக் காகிதம் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. பெரிய பத்திரிகைகள் தாமே பத்திரிகைக் காகித ஆலைகளை வைத்திருக்கின்றன.

செய்தித் தாள்கள் நாள்தோறும் 48 பக்கங்கள் கொண்டனவாயும், ஞாயிறன்று, நூல் உருவில் சிறுவர்களுக்கான பகுதியுட்பட 350 பக்கங்கள் உள்ளதாகவும் இருக்கின்றன! இதனுல் ஓர் ஆண்டுக்கு ஓர் அமெரிக்கருக்கு 38 கிலோ (இந்தியாவில் கால் கிலோவுக்கும் குறைவாகவே, பத்திரிகைக் காகிதம் செலவாகிறது. இது ஒவ்வோர் அமெரிக்கரும் வாங்கும் சர்க்கரையின் நிறையைவிட மிகுதியாம்! நாள் இதழ் முழுவதையும் படிக்க ஒருவருக்கும் நேரம் இல்லாததால், அமெரிக்கப் பத்திரிகைகள் இரண்டு பத்திகளில் அட்டவணை வெளியிட்டு, வெளிநாடுகள், உள்நாடு, ஐக்கிய நாடுகள் சபை, பொருளாதாரம், விளையாட்டுக்கள் என்ற தலைப்புக்களில் குறிப்பான செய்திகளைக் கொட்டை எழுத்துக்களில் தருகின்றன. விளம்பரங்களை அறியவும் ஓர் அட்டவணை உண்டு. 500 பக்கங்கள் உள்ள நூலுக்குக் கூட, நம் நாட்டில் அட்டவணை போட இயலவில்லை!

ஆண்டுக்கு ஓர் அட்டவணை (Annual Index)

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர் ஆண்டு தோறும் ஓர் அட்டவணையை நூல் வடிவில் வெளியிடுகின்றனர். முக்கியமான செய்திகள், தனிப்பட்ட

வர்கள், இயக்கங்கள், பொருள்கள் இவைகளை அகர வரிசைப் படுத்தியிருப்பர். இவை பற்றிய விவரங்கள் அப்பத்திரிகையில் எந்த இதழில் எந்தப் பக்கத்தில் வெளியாயின என்று எளிதில் தெரிந்து கொள்ளுவதற்கு அந்த அட்டவணை உதவுகின்றது.

பிற சிறப்புக்கள்

அமெரிக்காவில் எவ்விதத் தணிக்கையும் இல்லை; நாட்டுக்குத் தீமை விளைவிக்கும் வகையில் அப்பத்திரிகைகள் எழுதுவதில்லை; எத்தகைய செய்திகளை வெளியிடலாம் அல்லது வெளியிடலாகாது என்று பத்திரிகைகள் தமக்குள் வரையறுத்துக் கொள்ளுகின்றன. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும் பிற வேலைகளிலும் பத்திரிகைநிருபர்கள் அமெரிக்கப் போலீசாருக்குப் பேருதவி செய்கின்றனர்.

போரைப் பற்றியும் அணுக் குண்டைப் பற்றியும் ஆதாரமான கட்டுரைகள் எழுதுவதற்காக நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர் பெருஞ் சம்பளங்கள் கொடுத்து, அவ்வத் துறையில் தேர்ந்தவர்களை வேலையில் வைத்துள்ளனர். மற்றத் துறைகளுக்கும் உதாரணமாக, தொழிலாளர் நிலை, ஆகாய விமானக் கலை, கல்வி, கலை, விஞ்ஞானம், பொருளாதாரம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் இப்பத்திரிகை அலுவலகத்தில் ஒரு நிபுணர் இருக்கிறார்.

செய்திகளில் இருவகை உண்டு. ஒன்று எதிர்பார்க்கப்படுவது; மற்றொன்று எதிர்பாராதது. முன்னதில் 1950 ஜனவரி 26ல் இந்தியாவில் குடியரசு ஏற்பட்டதையும், ஆண்டுதோறும் பிப்ரவரி மாத இறுதியில் அரசியலாரின் வரவு செலவு அறிக்கை வெளியிடப்படுவதையும குறிப்பிடலாம். இந்நிகழ்ச்சிகள் பல மாதங்

களுக்கு முன்பே அறிவிக்கப்படுவதால், இவற்றைப் பற்றிச் செய்திகள் அனுப்ப முன் கூட்டியே தக்க நிபுணர் களைச் செய்தி நிகழும் இடங்களுக்கு அனுப்பிவிட முடியும். இதுமட்டும் போதாது. எதிர்பாராது நிகழ்ச்சிகள் ஏற்படும்போது, அவற்றைப்பற்றியும் தகுதியுள்ள நிருபர் களின் செய்தியை வாசகர்களுக்குத் தரவேண்டும்; இதற் கென நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர் ஆகாய விமானங்களையும் நிபுணர்களையும் தயாராக வைத் துள்ளனராம். பூகம்பம், வெள்ளம், பேங்கு முறிவு, அரசியல் தலைவர் காலமானது போன்ற நிகழ்ச்சிகள் ஏற் பட்ட இடங்களுக்குச் சில மணி நேரங்களில் இந்த நிபுணர்கள் போய்ச் சேர்ந்துவிடுகின்றனர்.

வானொலிச் செய்திகளைக் கேட்டு அவற்றைத் தானே டைப் அடித்துவிடும் இயந்திரமும் இப்பத்திரிகை அலுவலகத்தில் இருக்கிறது. இந்த இயந்திரத்திற்கு 'ஹெல் ஸ்கிரைபர்' என்று பெயர். ஹெல் என்ற ஜெர்மன்காரர் இதைக் கண்டு பிடித்தவர். ஸ்கிரைபர் அல்லது 'ஸ்கிரைப் மிஷின்' என்பதற்கு ஜெர்மன் மொழியில் 'டைப்ரைட்டர்' என்பது பொருள்.

தலைப்புச் செய்திகள்

நெடுந்தொலைவில், சாலைகளில் நடந்து செல்பவர் களும் படிப்பதற்கு வசதியாக, நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர் தம் அலுவலகத்தைச் சுற்றி நாற் புறமும் தெரியும்படி மின்சார விளக்கு உள்ள பலகையில் தலைப்புச் செய்திகளை உடனுக்குடன் அறிவிக்கிறார்கள். ஒரு நிமிஷம் மட்டுமே இவ்விளக்குகள் ஒளியுடன் இருக்கின்றன; எழுத்துக்கள் ஓடுவனபோல் தோற்றம் தரும்படி இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

உலகச் செய்திகளில் கவனம் செலுத்தும்படி பள்ளிச் சிறுவரைத் தூண்டுவதற்காக, தலைப்புச் செய்தி ஒன்றைப்பற்றிய திரைப்படத்தை மாதந்தோறும் இப் பத்திரிகையாளர் காட்டுகின்றனர்.

வாரப் பத்திரிகைகளிலும் மாதப் பத்திரிகைகளிலும் சிறந்தவை லைப், லுக், ஹார்ப்பர்ஸ், டைம், பார்ச்சூன், சாட்டர்டே ஈவ்னிங் போஸ்ட், கோல்லியர்ஸ், நேஷனல் ஜியாக்ரபிக் மாகசின். இவை ஒவ்வொன்றையும் 10 லட்சம் பேர் வாங்குகின்றனர். மாதந்தோறும் பல கோடி ரூபாய் இவை ஒவ்வொன்றுக்கும் விளம்பரங்கள் வாயிலாகக் கிடைக்கின்றன.

பலவகைப் பத்திரிகைகள்

அமெரிக்காவில், ஒவ்வொரு வகையான தொழிலுக்கும் பொழுது போக்குக்கும் பத்திரிகைகள் உள்ளன. இவற்றின் பட்டியல் ஒரு பெரு நூல் அளவில் உள்ளது. சான்றுகச் சில கூறலாம்:

மின்சாரத் தொழில்பற்றி	14	பத்திரிகைகள்
நகர சபைகள் பற்றி	22	,,
மருந்து வியாபாரம் பற்றி	25	பத்திரிகைள்
இசையைப்பற்றி	27	,,

இவை தவிர, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் இவற்றின் வெளியீடுகள் எண்ணில. இளம் எழுத்தாளரையும் வருங்காலக் கவிஞரையும் ஆதரிக்கும் முறையில், இப்பத்திரிகைகளில் பல பகுதிகள் உள்ளன.

உலகத்தில் விஞ்ஞானம் அடைந்து வருகிற வளர்ச்சியை அவ்வப்போது வெளியிடும் உயர்ந்த சஞ்சிகைகளும்

அமெரிக்காவில் மிகுதியாக உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது 'சயன்டிபிக் அமெரிக்கன்' என்பது.

அமெரிக்கப் பத்திரிகைகள் யாவுமே பலநிறப் படங்களுடன் பளபளப்பான காகிதத்தில், கண்ணைக் கவரும்படி வெகு நேர்த்தியான முறையில் அழகான அமைப்போடு அச்சிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பல நிகழ்ச்சிகளைப்பற்றி மக்களின் கருத்துக்களை அறிவதற்காகச் சில வினாக்களைத் தயாரித்து வாசகர்களுக்கு அவற்றை அனுப்பி, அவர்களிடமிருந்து விடைகளை எதிர்பார்ப்பதும் அமெரிக்கப் பத்திரிகைகளின் வழக்கம்.

அமெரிக்கப் பத்திரிகைகளை—குடும்பத்தினர் அனைவரும் படிப்பவை, மகளிர்மட்டும் படிப்பவை, (நியூயார்க்கர் போன்ற) விகடப் பத்திரிகைகள் என—மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். வாராந்தச் செய்திப் பத்திரிகை, படப் பத்திரிகை, டைஜஸ்ட் என்னும் புதிய பாகுபாடுகளும் ஏற்பட்டுள்ளன.

வாராந்தச் செய்திப் பத்திரிகைகள் 'டைம்' பத்திரிகையைப் போன்றவை; இவை ஒவ்வொரு வார நிகழ்ச்சிகளை மட்டும் தொகுத்துச் சுருக்கமாக வெளியிடுகின்றன; ஹிரோஷிமாவில் அணுக்குண்டு போடப்பட்டபோது, வாரப் பத்திரிகைகள் ஒரு வாரத்திய இதழ் முழுவதும் அதைப்பற்றியே எழுதி வெளியிட்டன. இவற்றில் ஆசிரியர் குறிப்புக்கள் இருப்பதில்லை.

படப் பத்திரிகைகள் படங்களையே முதன்மையாக வைத்துக் கட்டுரைகளை வெளியிடுவன. உதாரணமாக 'லைப்' பத்திரிகையாளர் 20,000 புகைப்படங்களை வாராவாரம் ஊடுருவிப் பார்த்து, அவற்றிலிருந்து பத்துப் பத்துப் படங்களுள்ள 25 கதைகளை வெளியிடுகின்றனர்.

டைஜஸ்ட்

இப்போது உலகில் பரவி வரும் டைஜஸ்ட் என்ற பத்திரிகைகள் அமெரிக்காவில்தான் தோன்றின. அந்த நாட்டில் டைஜஸ்ட்கள் மிகப் பல உள்ளன. இவற்றுள் ரீடர்ஸ் டைஜஸ்ட் என்ற மாதப் பத்திரிகையை ஒன்றரைக் கோடி மக்கள் வாங்குகின்றனர்! 2500 பேர் இதன் அலுவலகத்தில் வேலை செய்கின்றனர். இப் பத்திரிகை 11 மொழிகளில், 19 பதிப்புக்களாக வெளிவருகிறது. இந்தியப் பதிப்பு பம்பாயிலிருந்து வெளிவருகிறது. இதில் சேர்க்கப்படும் கட்டுரைகள் அனைத்தும் சேர்ந்து ஆதாரமான பேரகராதியாக விளங்குகின்றன. மற்றப் பத்திரிகைகளிலிருந்து பகுதிகளைப் பொறுக்கவும், பொறுக்கியவற்றைச் சுருக்கமாக எழுதவும், வரிசைப் படுத்தவும், தக்க அமைப்புக்களுடன் வெளியிடவும் ரீடர்ஸ் டைஜஸ்ட் அலுவலகத்தில் தனித்தனித் துறைகள் உள்ளன.

டைஜஸ்ட் என்பது பலநிறக் கற்கள், பல நிற ஒளிகள், பல்வேறு குணங்கள் ஆகிய யாவும் நிறைந்த நவமணி மாலை போன்றதாகும். பத்திரிகை படிப்பவர்கள் தாங்கள் படித்த சுவையான பகுதிகளைக் கத்திரித்துத் தங்கள் நண்பர்களுக்கு அனுப்பியதைத் தொகுத்து அச்சிட்டே டைஜஸ்ட் வெளியிட்டார்கள். புகழ்பெற்ற ஒரு நூலின் சுருக்கத்தையும் ஒவ்வோர் இதழிலும் சேர்ப்பதுண்டு. தமிழில், அண்மையில் ‘மஞ்சரி’, ‘குத்தூசி’ முதலிய டைஜஸ்டுகள் வெளிவருவதை இங்கே குறிப்பிடலாம்.

டி விட் வாலேஸ் என்பவர் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ரீடர்ஸ் டைஜஸ்ட்டை உருவாக்கினர். மாதந் தோறும் இந்தச் சஞ்சிகை வெளிவருவதால், ஒரு

நாளைக்கு ஒரு கட்டுரை வீதம் 31 கட்டுரைகளை ஒவ்வோர் இதழிலும் சேர்க்கிறார்கள். கோட்டுப்பையில் பொருந்தக்கூடிய அளவில் வெளிவருவதும், விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததும் இப் பத்திரிகையில் குறிப்பிடத்தக்கவை.

இப்பத்திரிகையின் அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு ஓய்வுச் சம்பளமும், வைத்தியச் செலவுக்கும் ஆயுள் பாதுகாப்புப் பத்திரம் வாங்குவதற்கும் சிறு தொகைகளும், ஓராண்டுக்கு ஒரு மாத ஓய்வும் கொடுக்கப் படுகின்றன. இப் பத்திரிகைக்குச் சிறு துணுக்குகள் அனுப்புகிறவர்களுக்கும், மற்றப் பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளை அனுப்புகிறவர்களுக்கும் சன்மானம் கொடுக்கப்படுகிறது.

வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பற்றி இப்போது தனித்தனி டைஜஸ்ட்கள் வெளிவரத் தொடங்கி விட்டன. பெண்கள் டைஜஸ்ட், விஞ்ஞான டைஜஸ்ட், உழவர் டைஜஸ்ட், எழுத்தாளர் டைஜஸ்ட், நீக்ரோ டைஜஸ்ட், கத்தோலிக் டைஜஸ்ட் என்பவை இவற்றுள் சில.

துணை ஆசிரியர்கள்

திங்கள் இதழ்களின் துணையாசிரியர்களாக இருப்பவர்கள் அந்த இதழின் அலுவலகத்தில் பணியாற்ற வேண்டுவதில்லை. தலைசிறந்த எழுத்தாளர்களை அமெரிக்க இதழ்கள் துணையாசிரியர்களாக நியமித்துக் கொள்ளுகின்றன.

அலுவலகத்தார், தங்களுக்கு வரும் கட்டுரைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, சில ஆயிரம் மைல்களுக் கப்பால் வாழும் அல்லது உலகின் பல பகுதிகளைச்

சுற்றுப்பயணம் செய்யும் துணையாசிரியர்க்கு அனுப்புவர். அவர் அவற்றைப் படித்துப் பார்ப்பார். வெளியிடத்தக்க கட்டுரை என்று அவர் கருதுபவற்றுக்குச் செம்மையான வடிவம் கொடுத்து, அலுவலகத்துக்கு அனுப்புவார். இவ்வாறு அவர் செய்யும் வேலைக்கு ஒவ்வொரு தடவையும் எத்தனை மணி நேரம் ஆயிற்று என்று அலுவலகத்துக்கு அறிவிப்பார். ஒவ்வொரு 160 மணி நேர வேலைக்கும், துணையாசிரியர் ஒரு மாதச் சம்பளம் பெறுவார். ஒரு மணி நேர வேலைக்கு 35 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சம்பளம் பெறுபவர்கள் உள்ளனர்.

16. வானொலி

அமெரிக்காவில் மக்கள் தொகையைவிட வானொலிக் கருவிகளின் தொகை கூடுதலாக இருக்கிறது. பலரிடம் ஒன்றுக்கு மேற்பட்ட வானொலிக் கருவிகள் உண்டு. சமையலறைகளிலும் மற்ற இடங்களிலும் அவைகளைக் காணலாம்.

வானொலிக் கருவியுடன்கூடிய ஒரு கோடி மோட்டார் கார்கள் அமெரிக்காவில் இயங்குகின்றன. மின்சார உதவியின்றிச் சாதாரண 'டார்ச்லைட் பாட்டரி'யின் உதவியால் இயங்கும் டிரான்சிஸ்டர்கள் அமெரிக்காவில் இரண்டு கோடி உள்ளனவாம்!

அமெரிக்கக் குடும்பங்கள் சிலவற்றில் நூதனமான வானொலிக் கருவிகளைக் கண்டேன்.

"அலாரம்—ரேடியோ"

இவற்றுள் ஒன்று, "அலாரம்—ரேடியோ" என்பது. இன்றிரவு 8 மணிக்கு நமது தலைவர் டாக்டர் இராதா கிருஷ்ணன் வானொலியில் பேசுவதாக வைத்துக்கொள் வோம். அந்த நிகழ்ச்சியைக் கேட்க யான் விருப்பமுள்ள வனாயிருப்பேன்; ஆனால் உரியகாலத்தில் யான் வானொலிக் கருவியை இயக்க மறந்துவிடக்கூடும். இதைத் தவிர்ப் பதற்காக அலார கடிகாரமுள்ள வானொலிக் கருவிகள் அமெரிக்காவில் உள்ளன. அந்தக் கடிகாரத்தில் 8 மணிக்கு மணி அடிக்கும்படி வைத்துவிட்டால் வானொலிக் கருவி 8 மணிக்குத் தானே இயங்கத் தொடங்கிவிடும்!

விரும்பும் நிகழ்ச்சியைத் தவறுமல் கேட்பதற்கேற்பட்ட ஒரு விஞ்ஞானப் புதுமை இது.

சில வானொலிக் கருவிகளில் இசைத்தட்டில் வெளியான பாடல்களைக் கேட்க இயலுவதை யாவரும் அறிவோம். ஒரு முறைக்குமேல் ஒரு பாடலைக் கேட்கத் தங்களுக்குப் பொறுமையும் நேரமும் இல்லாததால், இசைத்தட்டை விலை கொடுத்து வாங்குவது அமெரிக்கரின் வழக்கம் அன்று. எனவே அமெரிக்க நூல் நிலையங்கள் புத்தகங்களுடன் பல ஆயிரம் இசைத்தட்டுக்களையும் சேகரித்து வைத்து, முன் பணம் பெற்றுக் கொண்டு, அவைகளையும் இரவல் கொடுக்கின்றன.

8 டாலர் (38 ரூபாய்) முதல் 1000 டாலர் (4740 ரூபாய்) வரை எந்த விலைக்கும் அமெரிக்காவில் வானொலிக் கருவி வாங்கலாம். நம் நாட்டில் சிலருக்கு வெற்றிலைப் பெட்டி எவ்வளவு இன்றியமையாத பொருளாக இருக்கிறதோ அதுபோலவே அமெரிக்கருக்கு வானொலிக் கருவி முக்கியமானது. அதை வைத்துக் கொள்ளுவதற்கு அங்கு எந்த விதமான 'லைசன்சு'ம் வேண்டியதில்லை.

ஒலிபரப்பு நிலையங்கள்

அமெரிக்காவில் 3000 (இந்தியாவில் சிற்றலை ஒலிபரப்பு நிலையங்கள் உட்பட 40) ஒலிபரப்பு நிலையங்கள் உள்ளன. சுருங்கச் சொன்னால், 25,000 மக்களுள்ள நகரங்களிலெல்லாம் வானொலி நிலையங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்றேனும் அரசியலாரைச் சேர்ந்தது அன்று. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஒலிபரப்பு நிலையங்கள் உள்ளன. மாணவருக்கான நிகழ்ச்சிகளை மட்டும் ஒலிபரப்பும் நிலையங்களைச் சில நகரசபைகள் நடத்துகின்றன. 75 வானொலி நிலையங்கள் தொழிற்சங்கங்களால் நடத்தப்

படுகின்றன. பத்திரிகைக் குழுக்கள் பல நிலையங்களை அமைத்துள்ளன. மற்றவையெல்லாம் தனிப்பட்டவர்களுடைய நிலையங்களே. இவற்றுள்ளும் இப்போது 'செயின்கள்' ஏற்பட்டுள்ளன.

வருவாய் பெறும் விதம்

வானொலி நிலையங்களெல்லாம் விளம்பரங்கள் மூலமாகத்தான் தம் வருவாயைப் பெறுகின்றன. வானொலி நிலையத்தார் தாம் வணிகருக்கு விளம்பர நேரத்தை விற்பதற்குத் தம் நிலையத்தின் சக்தி, ஒலிபரப்பு நிகழும் நேரம், நிகழ்ச்சியின் தன்மை, அந்நிகழ்ச்சியைக் கேட்கக் கூடியவர்களின் பாகுபாடு, நிகழ்ச்சியின் அளவு ஆகியவற்றுக்குத் தக்கபடி விலை கூறுவர்.

பெரிய வானொலி நிலையங்களுக்கு அவற்றைப் பார்வையிட வருபவர்கள் வாயிலாகவும் வருமானம் கிடைக்கிறது. நியூயார்க் நகரில் சில நிலையத்தார் குறிப்பிட்ட நோங்களில் பார்வையாளரை அழைத்துச் சென்று, பல பகுதிகளையும் காட்டி, விளக்கம் கூற ஏற்பாடுகள் செய்து, அதற்கென அலுவலரையும் நியமித்துள்ளனர்.

முக்கியமான செய்தி நிகழ்ந்தால், அதை அறிவிக்க ஓர் இயந்திரமும் தனி அறையும் உண்டு. அந்த இயந்திரம் வேலை செய்ததும் வேறு நிகழ்ச்சிகளை அது மறைத்துவிடும்.

வானொலிக் குழுவினர் ஆராய்ச்சியிலும் விஞ்ஞான முன்னேற்றத்திலும் கவனம் செலுத்துகின்றனர்; லாபம் அடைவதோடு தம் கடமை முடிந்துவிட்டதாக அவர்கள் எண்ணுவதில்லை. அமெரிக்க வானொலிகள் சுகாதாரமான பழக்கங்களை மக்களிடையே பரப்பவும் பல முயற்சிகளை மேற்கொள்ளுகின்றன.

தொலைக் காட்சி

தொலைக் காட்சி நிலையங்களையும் சில வானொலிக் குழுக்கள் அமைத்திருக்கின்றன. 'மைக்ரோ-வேவ்ஸ்' (Micro-waves) என்ற இடமறியும் 'வானொலி' போர்க் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பயனாக ஒரு வினாடியில் 1,86,000 மைல் தொலைவுக்குத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யலாம்! அமெரிக்காவில், இப்போது தொலைக்காட்சி நிலையங்கள் 98-ம், தொலைக் காட்சிக் கருவிகள் 23 லட்சமும் உள்ளன. தொலைக் காட்சிக் கருவியின் விலை ரூபாய் 800 முதல் ரூபாய் 12000 வரை உண்டு.

பல்வேறு நிகழ்ச்சிகள்

முன்னரே எழுதி வைத்ததை ஒலி பரப்புக் கருவியின் முன் படிக்கும் வழக்கம் அமெரிக்காவில் கிடையாது. இதனால், அமெரிக்கர் தம் வேலையைச் செய்வதற்கு அடுத்தபடியாக, மிகுதியான நேரத்தை வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதில்தான் செலவிடுகின்றனர்.

பத்திரிகைத் தலையங்கங்களின் சுருக்கம் அமெரிக்க வானொலிகளில் நாள்தோறும் படிக்கப்படுகிறது. சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்படும்போது, வானொலியில் விளக்கமான அறிவிப்பு நிகழ்கிறது. காலை 5 மணிக்கு மக்களை எழுப்ப, அமெரிக்க வானொலி நிலையங்கள் நீதிக் கதைகளை ஒலி பரப்புகின்றன. உடற்பயிற்சி செய் வோருக்கு அப்பயிற்சி எண்களைக்கூட வானொலி அறிவிப் பாளர் எண்ணிவிடுகிறார்! இரவில், குழந்தைகளை உறங்கச் செய்வதற்கான தாலாட்டுப் பாடல்களும் அந்த வானொலியில் உண்டு.

17. திரை உலகம்

திரைப்படத் துறையில் உலகில் முதல் இடம் பெற்ற நாடு அமெரிக்கா. திரைப்படங்களை மிகுதியாகப் பார்ப்பவர்கள் அமெரிக்கர். ஆனால், அவர்கள் நம்மைப் போல, பார்த்த படத்தையே மீண்டும் மீண்டும் பார்ப்பதில்லை.

டிக்கட் வாங்குவது

டிக்கட் வாங்குவதற்குத் தியேட்டருக்குத்தான்போக வேண்டுமென்பதில்லை. பெரிய நகரங்களில் முக்கிய பகுதிகளில் உள்ள பல அலுவலகங்களிலும் ஹோட்டல்களிலும் பொருட்காட்சிச் சாலைகளிலும், எந்தத் தியேட்டருக்கும் எத்தனை டிக்கட்டுகள் வேண்டுமானாலும் வாங்கலாம். டிக்கட்டைத் தரும்போது, அந்தத் தியேட்டரின் வரைப் படம் ஒன்றும் தருவார்கள். தீப்பிடித்தால், நாம் எந்தப் பக்கமாகச் செல்ல வேண்டும். வெளியே செல்லுவதற்கான வழிகள் எங்கெங்கே இருக்கின்றன என்ற விவரங்கள் இந்த வரைப் படத்தில் காட்டப்பட்டிருக்கும்.

செய்திப்படம்

செய்திப் படங்கள் நம் நாட்டைவிடப் பலமடங்கு மிகுதியாக அமெரிக்காவில் காட்டப்படுகின்றன. செய்தியைமட்டும் ஒருமணி நேரத்துக்குக் காட்டும் தியேட்டர்களும் எண்ணில. வாழ்வின் எல்லாத் துறைகளையும் பற்றிய செய்திகளை அமெரிக்கர் படம் பிடிக்கிறார்கள்.

நிகழ்ச்சிகள் நடந்த மூன்று, நான்கு நாட்களுக்குள்ளேயே, அவற்றை வெள்ளித்திரையில் காண்பதில், மக்கள் தனி மகிழ்ச்சி அடைகிறார்கள். முக்கியமாக,

விளையாட்டுப் போட்டிகளைக் காணச் செய்திப் படம் சிறந்த கருவியாக அமைந்துள்ளது. பத்திரிகையைப் படிக்காமலும், வானொலியைக் கேட்காமலும், அரசியல் உலகில் உண்டாகும் மாறுதல்களை அவ்வப்போது கவனிப்பதும் இப்படங்களைத் தொடர்ந்து பார்ப்பதால் எளிதாகிறது. இக்காரணங்களால் செய்திப்பட மனப்பான்மை அந்த நாட்டு மக்களிடையே வேரூன்றி விட்டது. இதே நோக்கத்தோடு இந்திய அரசியலாரும் நல்ல படங்களை எடுத்து தியேட்டர்களில் காண்பித்து வருவதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அவற்றை மட்டும் காண்பிப்பதற்காக சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களில் அரசாங்கமே திரைப்பட மாளிகை அமைத்திருப்பது பாராட்டத்தக்கது.

விரும்பும்போது படம் பார்க்கலாம்

திரைப்படத்துக்கு நாம் விரும்பும் நேரத்தில், நம் நாட்டில் போக இயலாது. பிற்பகல் 3-15 மணி கடந்து விட்டால், 6-30 மணிக்குத்தான் போகலாம். இதைப் போன்ற முறை, படம் பார்ப்பவர்களின் உரிமையைப் பறிக்கிறது. நினைத்த நேரத்தில் படம் பார்க்க வாய்ப்பு வேண்டுமென்பது அமெரிக்கரின் மனப்பான்மையாகும்.

அமெரிக்காவில் காலை 11 மணி முதல் மறுநாள் காலை 4 மணிவரை. இடைவேளையே இல்லாமல், தியேட்டர்களில் ஒரே படத்தை மீண்டும் மீண்டும் பன்முறை காட்டுகின்றனர். ஆதலால் படம் பார்க்கப் புதிதாக வருபவர் எப்போதும் உள்ளே வந்துகொண்டும், பார்த்து முடித்தவர் எப்போதும் வெளியே போய்க்கொண்டும் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும், தாம் விரும்பிய நேரத்தில், தியேட்டருக்குள் சென்று அப்போது நடந்த பகுதி மறுமுறை வந்தவுடன் எழுந்து சென்றுவிடுவர்.

பார்த்ததையே திருப்பித் திருப்பிப் பார்க்கும் பழக்கமும், பண்பாடும் அதற்கு வேண்டிய பொறுமையும் அமெரிக்கரிடம் கிடையா. இவற்றைத் தவிர, பல அலுவல்களுக்குப் போதிய நேரமின்றித் துன்பப்படும் அமெரிக்கர், பார்த்த பகுதியை அல்லது படத்தை மீண்டும் பார்ப்பதில் நேரத்தை வீணாக்குவதில்லை. ஆதலால் அவர்கள் தாமே எழுந்து போய்விடுவார்கள். தியேட்டருக்குள் சென்றவரை வெளியே அனுப்புவதற்காக, வேலையாட்கள் நியமிக்கப்படுவதில்லை. படம் பார்ப்பவர்களின் கண்களைப் பாதுகாப்பதற்காக முதல் வரிசைகூடத் திரையிலிருந்து 40 அடி தொலைவுக் கப்பால்தான் அமெரிக்கத் தியேட்டர்களில் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒரே வருப்பு......ஒரே கட்டணம் என்ற கொள்கையைப் பெரும்பாலும் எல்லாத்தியேட்டர்க்காரர்களும் கையாளுகிறார்கள். பெரும்பாலும் 40 செண்டு (ரூ. 1·87) சில தியேட்டர்களில் 80 செண்டு டிக்கட்டுகளையே விற்கிறார்கள். அமெரிக்கர் எல்லோருமே அமைதியாயும் கட்டுப்பாடாகவும் நடந்துகொள்வதாலும், சுத்தமாக இருப்பதாலும், சட்ட வரம்புக்குட்படுவதாலும் இதைப் போன்ற முறைகள் சிறப்பாக நிலவுகின்றன.

அமைதி

தியேட்டர்களில், படம் காட்டப்படும் மண்டபத்துக்கு உள்ளேயும், வெளியேயும், குண்டூசி விழுந்தாலும் கேட்கக் கூடிய அளவு அமைதி நிலவுவதும் எனக்குப் புதுமையாயிருந்தது. யாவரும் ஒவ்வொரு காட்சியையும் கூர்ந்து கவனிப்பார்கள். நடிகர்கள் முத்தமிட்டுக் கொள்ளும்போது, கணவன்......மனைவிமார்களும், காதலர்களும் அதைப் போன்றே செய்வர்.

18. வங்கிகள்

ஒரு நாள் ஓர் அமெரிக்கர் என்னை டெலிபோனில் கூப்பிட்டார். 'தங்களைப் பார்க்க விரும்புகிறேன். வரலாமா? நான் வருவதால் தங்கள் வேலைக்கு இடையூறு இல்லையே? இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று அவர் கேட்டார்.

'மெத்த மகிழ்ச்சி. தாராளமாக வாருங்கள். நான் சும்மாதான் இருக்கிறேன்' என்றேன்.

'சும்மா எப்படி இருக்க முடியும்? உறங்கிக் கொண்டிருப்பீர்கள். அல்லது சிந்தனை செய்வீர். அதுவும் இல்லாவிட்டால் ஒரு வேலைக்கும் அடுத்த வேலைக்குமிடையே ஒரு சில நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பீர்கள்'—என்றார் அமெரிக்கர்.

'எங்கள் நாட்டிலே பிறந்தது முதல் இறக்கும்வரை சும்மா இருப்பவர்கள் கோடிக்கணக்கானவர் இருக்கிறார்கள்; 'சும்மா இருப்பதே சுகம்' என்ற ஒரு பழமொழி கூட இருக்கிறது' என்று நான் கூறினேன். அவர் நான் சொன்னதை நம்பவில்லை.

அவர் நம்பாததற்குக் காரணம், அமெரிக்கர் நேரத்தைப் பொன்னேபோல் போற்றுவதாகும்.

அமெரிக்க வங்கிகளில் ஒரு 'செக்'குக்குப் பணம் வாங்க ஒரு நிமிடந்தான் ஆகும். பேரேடுகளை வைத்திருக்கும் ஒவ்வொருவரிடமும் பண இருப்பும் இருப்பதால் இந்த முறை அங்கே நிகழுகிறது.

பல அமெரிக்க வங்கிகள் மாதந்தோறும் அச்சிட்ட கடிதங்களை வாடிக்கைகாரர்களுக்கு அனுப்புகின்றன. இக்கடிதங்களில் பொருளாதார நிலவரம், அரசியலாரின் செல்வ நிலை, வணிக நிலைமை ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன.

வாடிக்கைக்காரர்களுக்குப் பயன்படும் வகையில் பல நூல்களையும் அமெரிக்க வங்கிகள் வெளியிடுகின்றன. அமெரிக்காவிலுள்ள வியாபார இடங்களையும் வங்கிகளையும் வாடிக்கைக்காரர்கள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம், செக்கை எவ்வாறு எழுதவேண்டும், வியாபாரத்திற்கு அனுப்பும் சரக்குகளுக்குப் பணம் பெற எப்படி உண்டியல்களைத் தயாரிப்பது என்பவை பற்றிச் சிறு சிறு வெளியீடுகளில் விளக்கப்பட்டிருக்கும். சிக்கலான பொருளாதாரப் பிரச்சினைகளை எளிதில் விளக்கிக் கூறும் சிறு புத்தகங்களையும் அமெரிக்க வங்கிகள் வெளியிடுகின்றன; இவைகளையெல்லாம் இனமாகவே வழங்குகின்றன. வாடிக்கைக்காரர்களுக்குப் பாஸ்போர்ட் வாங்கிக் கொடுத்தல், வெளிநாடுகளிலிருந்து வருபவர்களின் தபால்களை வாங்கி வைத்திருந்து அவர்களிடம் சேர்ப்பித்தல் போன்ற பணிகளையும் அமெரிக்க வங்கிகள் செய்கின்றன. பல அமெரிக்க வங்கிகள் வாடிக்கைக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒரு நாட்குறிப்பு வைத்திருக்கின்றன. அப்புத்தகத்தில் அவர்கள் தம் வங்கிக்கு வந்ததையும் கேட்டுக்கொண்ட செய்திகளையும் பிற விவரங்களையும் குறித்துக் கொள்ளுகின்றன.

இரவிலும் பணம் செலுத்தலாம்

நம் நாட்டில் வங்கிகளில் அவற்றின் அலுவலக நேரத்தில் மட்டுமே பணம் செலுத்த இயலும். வங்கி மூடிய பின்னரும், வங்கி விடுமுறை நாட்களிலும் பெரும்

தொகைகளை வருமானமாகப் பெறும் கடைகளும், ஹோட்டல்களும் திரைப்பட மாளிகைகளும் மீண்டும் வங்கி திறக்கும் வரை தம்மிடமே ரொக்கத்தை வைத்துக் கொள்ளுவதில்லை. எந்த நேரத்திலும் வங்கியில் பணம் கட்ட உதவும் ஏற்பாடு அமெரிக்காவில் உள்ளது, இதற்கு 'நைட் சேப்' (Night Safe) என்று பெயர். இதைப் பயன்படுத்த விரும்புவோர் முன்னேற்பாடு செய்து, வங்கி நிர்வாகிகளிடமிருந்து ஒரு சாவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்தச் சாவியின் உதவி யால், வங்கியின் 'நைட் சேப்' கதவைத் தெருவில் இருந்த வாறே திறக்கலாம். இவ்வாறு திறந்ததும், பணத்தையும் அதைப்பற்றிய குறிப்பையும் வாடிக்கைக்காரர் அதனுள் தபால் பெட்டிக்குள் தபால் போடுவதுபோலப் போட்டு விட்டுப் பூட்டிக்கொண்டு செல்லவேண்டும். வங்கி திறந்ததும் வங்கி அலுவலர் இத்தொகைளை எடுத்து உரியவர் கணக்குகளில் வரவு வைத்துக் கொள்ளுவர். பணம் செலுத்தியவர் அன்று ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

அமெரிக்க வங்கிகளில் பணிகளைச் செய்பவர்களுக்கு மரியாதையான பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் செக்குகளில் கோடிடுவதும், அவற்றைக் கணக்கில் போடுவதும் இல்லை. 'லிமிடெட் கம்பெனி'க்குக் கொடுக்கப்பட்ட செக்குகளை மட்டும் கணக்கில்தான் போடவேண்டும். மற்றச் செக்குகளைக் கணக்கில் போட வேண்டுமென்ற கட்டாயமில்லை.

அமெரிக்க அரசியலாரின் பெடரல் ரிசர்வ் வங்கிக்கு அடுத்தபடி அங்குள்ள பெரிய வங்கிகள்—பேங் ஆப் அமெரிக்கா, நேசனல் சிட்டி பேங், சேஸ் நேஷனல் பேங், மானுபாக்சரஸ் ட்ரஸ்ட் ஆகியவை. இவை ஒவ்வொன்றும்

ஓராயிரம் கோடி ரூபாய்வரை வரவு செலவு செய்கின்றன. சுவிட்சர்லந்து நாட்டின் தங்கக் கட்டிகளையும் இந்த வங்கிகளே பாதுகாக்கின்றன. எனினும் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த வங்கிகளில் பண இருப்பு மிகக் குறைவாகவே இருப்பதாக ஒரு நண்பர் கேலியாகச் சொன்னார். வங்கிகளில் கணக்குள்ள ஒவ்வொருவரும் விடுமுறை நாளில் செலவு செய்யப் பணத்தை வங்கியி லிருந்து வெள்ளிக்கிழமையன்று வாங்கி விடுகின்றன ராம். அன்று வெளியே போகும் பணம் முழுவதும் திங்கட்கிழமையன்று மீண்டும் வங்கிக்கு வந்து சேர்ந்து விடுகிறதாம். ஆனல் இதில் ஒரு வேறுபாடு என்ன வெனின், திங்கட்கிழமையன்று பணம் செலுத்து கிறவரெல்லாம் ஹோட்டல், சினிமா, ரயில் ரோடு முதளிாளிகள் மட்டுந்தானும்!

நாணயக் காட்சிச்சாலை

அமெரிக்கர் போற்றி வளர்ப்பவற்றில் 'மியூசியம்' முக்கியமான ஒன்ருகும்; அவர்களுடைய பொழுது போக்குகளில் பல நாட்டு நாணயங்களைச் சேர்ப்பதும் ஒன்று. இப்பண்பாட்டுக்கு ஏற்ப, சேஸ் நேசனல் வங்கி அதனுடைய நியூயார்க் நகரத் தலைமை அலுவலகத்தின் அருகே தனிக்கட்டிடம் ஒன்றில், எல்லா நாட்டு நாணயங் களுமுள்ள ஒரு காட்சிச் சாலையை அமைத்திருக்கிறது. இங்கே ஏறத்தாழ ஒரு லட்சம் நாணயங்கள் உள்ளன. அவைபற்றிய வரலாறுகளும் எழுதி வைக்கப்பட்டுள்ளன. இந்தக் காட்சிச்சாலையிலுள்ள இந்திய நாணயங்கள் மிகப்பல. இவைகளைச் சேகரிக்க ஐம்பது ஆண்டுகள் ஆயினவாம். இன்று செல்லுபடியாகும் (எல்லா நாட்டு) நாணயங்களிலும் அமெரிக்க வங்கிகள் கொடுக்கல் வாங்கல்

செய்வதும் குறிப்பிடத்தக்கது. அவைகளிடம் வெளி நாட்டு நாணயங்களும் ஏராளமாகக் கையிருப்பில் உள்ளன.

விளம்பரங்கள்

போட்டாபோட்டி முறைதான் அமெரிக்க வாணி பத்தின் அடிப்படையாகும். வங்கிகளுக்குள்ளும் பெரும் போட்டி இருக்கிறது. ஆகவே மற்றத் தொழில்கள் செய்பவர்களைப்போலவே வங்கிகளும் பெரும் அளவில் விளம்பரங்கள் செய்கின்றன. அமெரிக்காவில் வெளி யாகும் விளம்பரங்களில் ஐந்தில் ஒரு பங்கு வங்கிக்காரர் கள் வெளியிடுவனவே. ஆண்டுதோறும் சூன் 6-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதிவரை, ''உங்கள் வங்கியைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வாரம்'' (Know Your Bank Week) என்ற ஒரு வாரத்தை அமெரிக்க வங்கிகள் கொண்டாடுகின்றன. இவ்வாரத்தில் சில வங்கிகள் தம் வாடிக்கைக்காரர்களுக்கு விருந்தளிக்கின்றன. பத்திரிகை கள் வங்கிகளைப்பற்றித் தனி மலர்கள் வெளியிடுகின்றன. கல்லூரி ஆசிரியர்கள் மாணவரைச் சிறு சிறு பிரிவு களாக வங்கிகளுக்கு அழைத்துச் சென்று அவை செயல் படும் முறையை விளக்கிக் கூறுகின்றனர்.

19. பயணக் கலை

பயணம் செய்வது சிலருக்கு ஒரு கடமை; சிலருக்கு அது 'யாத்திரை' என்னும் சடங்கு; வேறு சிலருக்கு அது ஒரு வேப்பங்காய்.

'நான் உண்டு; என் வேலை உண்டு; அடுத்த வீட்டுக் காரர்கூட யார் என்று தெரியாது' என்று சொல்லுவதில் பெருமையடைபவர்கள் உள்ளனர். இதெல்லாம் நம் நாட்டவரின் தனிச் சிறப்புக்கள்.

அமெரிக்கர் பிரயாணம் செய்வதில் ஆர்வமும் மகிழ்ச்சியும் அடைகின்றனர். பொழுது போக்குகள் மட்டுமன்றிப் பிறவியின் பயனாய் அநுபவிக்க வேண்டிய இன்பங்களுள் ஒன்றாகவும் பிரயாணத்தைக் கருது கின்றனர்.

நோய் ஏற்பட்டால் அதைக் குணப்படுத்த ஒரு மருத்துவரிடம் செல்லுகிறோம்; நீதி மன்றத்தில் வழக்கை நடத்த ஒரு வழக்கறிஞரை நாடுகிறோம்; இங்ஙனமே, பிரயாணம் செய்யும்போது பிரயாணத் தொழில் நிபுணர் களின் உதவியைப் பயன்படுத்த வேண்டும் என்பது அமெரிக்கர் கருத்து.

''ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு எவ்வித வாகனத்தில், எந்த வழியில், எப்போது செல்லலாம்? அந்த நாட்டுக்குச் செல்ல என்னென்ன அனுமதிகள் வாங்க வேண்டும்? அங்கே நிலவும் சுங்கச் சட்டங்கள் என்னென்ன? அங்கே எந்த ஹோட்டலில் தங்கலாம்? பார்க்க வேண்டிய காட்சிகள் எவை?'' என்று பல வினாக்கள் பிரயாணம் செய்யுமுன் ஒருவனுக்கு எழும்.

இவைகளுக்குத் தக்க விடைகூறிப் பிரயாணத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் முன்னதாகச் செய்ய ஒரு நிறுவனம் வேண்டும். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஓய்வு பெற அமெரிக்கர் கடற்கரைக்கோ, மலைப் பகுதிகளுக்கோ செல்லுவார்கள். அமெரிக்கத் தொழிலாளருக்கும், சம்பளத்துடன் ஆண்டுதோறும் இரண்டு வார ஓய்வு கொடுக்கப்படுகிறது. இந்த ஓய்வுக் காலத்தில் பல்லாயிரம் பேர் கனடாவுக்கும் தென் அமெரிக்க நாடுகளுக்கும் இன்பச் சுற்றுலா செல்லுவர்.

அமெரிக்கரின் பிரயாண நிறுவனங்களில் தலைசிறந்தது ''அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனி.'' 30,000 பங்குதார்களுள்ள இந்த வணிகக்குழு 1850-ல் நிறுவப்பட்டது.

டிராவலர்ஸ் செக்

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் ஒரு பேங்கும் ஆகும். 'டிராவலர்ஸ் செக்' என்பதை ஏற்படுத்தி, அதை முதன் முதலில் உலகில் வழங்கியவர்கள் இக்கம்பெனியாரேயாவர். 100 ரூபாய்க்கு டிராவலர்ஸ் செக் கொடுக்க இவர்கள் வாங்கிக்கொள்ளும் கட்டணம் 75 ந. பை. இக்கம்பெனியார் கொடுக்கும் டிராவலர்ஸ் செக் உலக முழுவதும் செல்லுபடியாகும் நாணயமாக இருக்கிறது. உலகின் பல நகரங்களில் உணவுச்சாலைகள், ஹோட்டல்கள், ரயில் நிலையங்கள், தந்தி அலுவலகங்கள், பேங்குகள் ஆகியவற்றிலெல்லாம் ''இங்கே அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் செக் ஏற்றுக்கொள்ளப்படும்'' என்ற அறிவிப்புப் பலகைகளைக் கண்டேன். காணுமற் போன செக்குகளுக்குப் பணம் கொடுக்க இக்கம்பெனியார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்! இரண்டாவது உலகப் போரில் ஐரோப்பாவில் பல ஆயிரம் பேர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிராவலர்ஸ்

செக்குகளைப் புதைத்து வைத்திருந்தனர்; புதைத்த இடம் தெரியாததால் அவர்கள் அவைகளைப் பயன் படுத்தவில்லை. அவர்களில், டிராவலர்ஸ் செக் வாங்கிய தாக ஆதாரம் காட்டியவர்களுக்கு, போர் முடிவில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பணம் கொடுத்தது.

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனியின் ரயில் பிர யாண அலுவல்களை அமெரிக்காவில் பார்த்துக் கொள்ளு வது ''ரயில் ரோடு எக்ஸ்பிரஸ்'' என்ற ஸ்தாபனமாகும். இந்தக் குழு இப்போது அமெரிக்க ரயில் கம்பெனி களுக்குச் சொந்தமாயுள்ளது.

உலக முழுவதும் அலுவலகங்கள்

அமெரிக்காவுக்கு வெளியே அமெரிக்கன் எக்ஸ்பிர சுக்கு *139* நகரங்களில் அலுவலகங்களும், பல்லாயிர நகரங்களில் ஏஜண்டுகளும் உண்டு. பாரிஸ் நகரில் 'ரூஸ் கிரைப்' என்னும் சாலையிலுள்ள ஆறு மாடிக் கட்டிடத்தில் முழுவதும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அலுவலகம் இருக் கிறது; அங்கேதான் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனி யைப் பற்றி அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

பிரெஞ்சிலிருந்து வேற்று மொழிகளில் மொழி பெயர்ப்பவர்கள் பலர் இந்த அலுவலகத்தில் இருக் கின்றனர். பிரயாணிகள் ஒருவரை ஒருவர் இக்கட்டிடத் தில்தான் சந்திப்பதாக முடிவு செய்வது வழக்கம். தத்தம் நாடுகளிலிருந்து வரும் தபால்கள் இந்த அலுவ லகத்திற்கு அனுப்ப பிரயாணிகள் ஏற்பாடு செய் கின்றனர்; இந்த அலுவலகத்துக்குச் சென்று கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுகின்றனர்; வேறு முகவரிக்குத் தம் கடிதங்களைத் திருப்பி அனுப்பும்படி வேண்டிக்கொள் வதும் உண்டு.

தமக்கு உடனடியாகத் தேவைப்படாத பெட்டிகளையும், மற்றப் பொருள்களையும் இவ்வலுவலகத்திலேயே பிரயாணிகள் வைத்துவிட்டுச் செல்லுவர். பாரிஸ் நகரைச் சுற்றியுள்ள பல அரிய காட்சிகளைக் காட்டி விளக்கம் கூற ஏற்பாடு செய்துள்ளனர். இதற்குரிய கார்களில் நாள்தோறும் மூன்று தடவை பிரயாணங்களை இக் கம்பெனியார் ஏற்பாடு செய்கின்றனர். உடல் நலமில்லாதிருந்தால் எந்த வைத்தியரிடம் சிகிச்சை பெறலாம், என்னென்ன பொருள்களை எங்கெங்கே வாங்கலாம் என்பனபோன்ற பல தகவல்களையும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் ஊழியர் நாள்தோறும் பல ஆயிரம் பிரயாணிகளுக்குத் தெரிவிக்கின்றனர்.

கப்பல்கள், ஆகாய விமானங்கள், சர்வதேச ரயில்கள் ஆகியவை வந்து சேரும் இடங்களிலெல்லாம் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனியின் பிரதிநிதிகள் தயாராக இருந்து பிரயாணிகளை வரவேற்றுப் புதிய நாட்டில் அவர்களுக்கு உதவி செய்கின்றனர். தம்மால் செய்ய இயலாத உதவிகளைப் பிரயாணியின் நாட்டுத் தூதர்வாயிலாகச் செய்து தரவும் இவர்கள் முயலுகின்றனர்; பிரயாணிகளின் பொருள்களை எந்தத் துறைமுகத்துக்கும் கப்பலில் அனுப்பவும் ஏற்பாடு செய்கின்றனர்.

ஒரு நிகழ்ச்சி

சுவிட்சர்லந்தில் 'லுசான்' என்ற அழகிய நகரில் இந்த அலுவலகத்தார் சிறப்பாக ஏற்பாடு செய்த மலைக் காட்சிப் பிரயாணம் ஒன்றில் அவர்களுடைய 'கோச்' என்னும் காரில் 25 பிரயாணிகளுடன் நானும் ஒருவனாகச் சென்றேன்; எனது மழைக் 'கோட்'டையும் உடன் எடுத்துச் சென்றிருந்தேன். ஆனால் அன்று மழை பெய்யாததால், அந்தக் கோட்டைப் பயன்படுத்த வேண்டிய

அவசியம் ஏற்படவில்லை. பல இடங்களில் இறங்கி, ஆங்காங்குக் காட்சிகளைப் பார்த்துவிட்டு மீண்டும் கோச்சில் ஏறிக்கொண்டேன். பிரயாணம் முடிந்ததும், நான் என் மழைக்கோட்டைக் காரிலேயே வைத்துவிட்டு, மற்றப் பிரயாணிகளிடமிருந்து விடை பெற்றுக்கொண்டேன்.

இரண்டு மணி நேரம் லூசர்ன் கடைவீதிகளில் சுற்றித் திரிந்துவிட்டு, எனது ஹோட்டலுக்குச் சென்றேன். அங்கு அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் ஊழியர் ஒருவர் என்னுடைய மழைக்கோட்டுடன், எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார்! 'கோட்' இருந்த இடத்திலிருந்து அது என்னுடையது என்று முடிவு செய்து, பல ஹோட்டல்களை டெலிபோன்மூலம் விசாரித்து, நான் தங்கியிருந்த ஹோட்டலை அறிந்துகொண்டதாக அவர் சொன்னார். இது போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்கின்றன என்பதையும் எனது மழைக்கோட்டின் விலை ரூ. 100 என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அலுவலரின் குணச் சிறப்புக்கள்

அமெரிக்கன் எக்ஸ்பிரசின் செல்வாக்குக்குக் காரணம் அந்தக் கம்பெனியிலுள்ள அலுவலரின் நாணயமும், பொறுமையும், கடமை உணர்ச்சியும், சிரித்த முகமும் ஆகும்.

முகத்துக்கு முகம் கண்ணாடி; பல நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் உலகில் ஒற்றுமை நிலவும்; ஒரு நாடு பிற நாடுகளைப் புரிந்து கொள்ளவும் அது உதவும்; பிரயாணம் மகிழ்ச்சியானது மட்டுமன்று; அறிவை வளர்ப்பதும் ஆகும். ஆகவே, கூடுமான அளவு மிகுதியானவர் வெளிநாடுகளில் பிரயாணம் செய்ய வேண்டுமென்பதுதான் அமெரிக்கன் எக்ஸ்பிரசின் குறிக்கோளாகும்.

20. ஹோட்டல்கள்

அமெரிக்காவில் பலவிதமான உணவுச்சாலைகள் உண்டு. இவை 'காப்பிக் கடை' (Coffee shop), 'கபே டேரியா' (Cafetaria), 'ஆட்டோமாட்' (Automat) 'லஞ்ச் கவுண்டர்' (Lunch Counter), 'எக்ஸ்சேஞ்ச் பஃபே' (Exchange Buffet) என்பவை ஆகும்.

காப்பிக் கடை என்பது நம் நாட்டில் இருப்பதுபோலச் சிற்றுண்டிகள் விற்கப்படும் கடை.

கபேடேரியா என்பதும் சிற்றுண்டிகள் மட்டும் விற்கப் படும் கடைதான். எனினும் இது ஒரு தனி வகையைச் சேர்ந்தது. பரிமாறுபவர்கள் இருக்கமாட்டார்கள். உணவு உட்கொள்ள விரும்புவோர் தாமே ஒரு தட்டை எடுத்துக்கொண்டு, உணவு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பகுதி வழியாகச் சென்று தமக்கு வேண்டிய உணவு வகைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த வழியின் இறுதியில் ஒருவர் தட்டில் எடுத்துவைக்கப் பட்டிருக்கும் உணவுகளைப் பார்த்து, அவற்றின் விலையைக் கணக்கிட்டு, வாடிக்கைக்காரரிடம் டிக்கட் தருவார்.

அவர் அருகேயுள்ள மற்றொருவரிடம் பணம் கொடுத்துவிட்டு, எந்த இடத்திலாவது உட்கார்ந்து உணவை உட்கொள்ளலாம். கத்தி, கரண்டி, குத்துமுள் (Fork), தண்ணீர் முதலியனவும் கை துடைக்கக் காகிதக் கைக்குட்டையும் அங்கே வைக்கப்பட்டிருக்கும். பரிமாறு பவர்களின் விரைவின்மைக்கு மாற்றாக அமெரிக்கர் இம் முறையைக் கண்டு பயன்படுத்தி வருகின்றனர்.

ஆட்டோமாட் என்ற பெயருள்ள சிற்றுண்டிச்சாலேயில் எப்போதும் சூடான அலமாரிகளில், சிறிய கண்ணுடிக் கதவுகளுக்குள், சிற்றுண்டிகள் வைக்கப்பட்டிருக்கும். ஒவ் வோர் உணவின் விலேயும் அந்தந்த உணவு வைக்கப்பட் டிருக்கும் பகுதியின் முன்பக்கக் கதவின் அருகே குறிப் பிடப் பட்டிருக்கும். உரிய விலேயை அதே மதிப்புள்ள நாணயமாக, விலே குறிக்கப்பட்டிருக்கும் இடத்துக்கு அருகேயுள்ள ஓர் இயந்திரத்தில் போடவேண்டும். உடனே, தானே கைப்பிடியைத் திருகிக்கொண்டு, அந்தக் கதவு திறந்துகொள்ளும். உள்ளே இருக்கும் உண்வுப் பொருளேப் பணம் போட்டவர் எடுத்துக்கொள்ளலாம். இந்த அமைப்புள்ள ஆட்டோமாட் கருவிகள் ஒரு சில நகரங்களில் மட்டுமே உள்ளன.

பெரும்பாலும் எல்லாக் கடைகளிலும் அலுவலகங் களிலும் பேங்குகளிலும் சிறு உணவுச்சாலேகள் உள்ளன. குறிப்பாக, மருந்துக் கடைகளில் உணவு விற்கும் பகுதி ஒன்றுண்டு. இதற்கு லஞ்ச் கவுண்டர், அல்லது லஞ்சனட் (Luncheonette) என்று பெயர்.

எக்ஸ்சேஞ்ச் பஃபே என்ற உணவுச்சாலேயில் உணவு உட்கொள்ளுபவர்கள் தாம் எவ்வளவு பணம் பெறுமான முள்ள உணவை உண்டனர் என்பதைப் பணம் பெற்றுக் கொள்ளுபவரிடம் தாமே சொல்லி, பணம் செலுத்த வேண்டும்.

ஹோட்டல்களில் சிற்றுண்டி பேருண்டி ஆகியவற்றுடன் தங்கும் அறைகளும் கிடைக்கும். ஹோட்டல்களில் பல கோடி ரூபாய்கள் மூலதனம் உள்ளவையும் உண்டு; இவற் றில் பல ஆயிரம் அறைகள் இருக்கும்; இங்கே கிடைக்கும் வசதிகள் எல்லேயற்றவை; அரண்மனே உபசாரம் என்ற

சொற்றொடருக்குப் பதிலாக ஹோட்டல் வரவேற்பு என்ற பழமொழியை உருவாக்கலாம் — இங்கல்ல, அமெரிக்காவில்.

சாதாரணமாக, ஒரு ஹோட்டலில் ஒவ்வொரு மாடியிலும் 100 அறைகளுக்குக் குறைவாகவே இருக்கும். இருப்பினுங்கூட, ஒவ்வொரு மாடியிலுமுள்ள அறைகளின் எண்கள் புதிய நூறில் தொடங்கும். இதனுல் ஒரு குறிப்பிட்ட அறை எந்த மாடியில் இருக்கின்றது என்பதை எளிதில் அறியலாம். 825 ஆவது அறை என்ருல், எட்டாவது மாடியில் 25 ஆம் எண்ணுள்ள அறை என்று பொருள்படும்.

ஒவ்வோர் அறையிலும், பல மேசைகளும் நாற்காலிகளும், கட்டிலும் (சில ஹோட்டல்களில் ஒருவருக்கே இரண்டு கட்டில்களும்) குளிர் காலத்தில் அறையைச் சூடாக்கிக்கொள்ள மின்சார நெருப்பைத் தரும் கருவியும், டெலிபோன் கருவியும், (சில ஹோட்டல்களில்) வானெலிக் கருவியும் தொலேக்காட்சிக் கருவியும் வைக்கப்பட்டிருக்கும். கூடுதலாகக் கட்டணம் செலுத்தினுல், தங்கும் அறையிலேயே உணவு படைப்பர்.

வேலேயாட்கள் அறைக்குள் புகாமலே அழுக்குத் துணிகளே எடுத்துக்கொண்டு செல்லவும், சலவையான துணிகளேத் திருப்பித் தரவும் ஏற்ற அமைப்புகளுடைய கதவுகள் இந்த அறைகளில் உண்டு; ஏதாவதொரு வேலையை முன்னிட்டு, காலேயில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், துயிலெழ வேண்டுமென்று நாம் விரும்பினுல், ஹோட்டல் அலுவலகத்தில் டெலிபோன் இயக்குபவரிடம் அறிவிக்கவேண்டும். உரிய நேரத்தில் அவர் டெலிபோனில் அழைப்பார்; டெலிபோன் மணி அடிக்கும் ஓசையைக் கேட்டு நாம் எழுந்துவிடலாம்.

கூடுதலாகக் கட்டணம் செலுத்துபவர்களுக்கு, நீராடும் அறையுடன் கூடிய பெரிய அறை கொடுக்கப்படும். மற்றவர்கள் 8 அல்லது 10 அறைகளுக்குப் பொதுவாயுள்ள நீராடும் அறைகளையே பயன்படுத்த வேண்டும். நீராடும் அறைகளில், தண்ணீர் வெந்நீர் ஆகியவற்றில் விதவிதமாய் நீராட அமைப்புக்களும் தொட்டியும் உண்டு. பெரிய கண்ணாடிகளும் மலம் கழிப்பதற்கான கருவிகளும், கை முகம் ஆகியவற்றைக் கழுவ நீர்த் தொட்டி (Wash basin) களும் இருக்கும். பலவகையான உபயோகங்களுக்கு ஏற்ற தனித்தனி சோப்புக்களும் டவல்களும் நாள்தோறும் புதிது புதிதாக வைக்கப்பட்டிருக்கும். நீராடும் அறையில் நல்ல பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். இனிமையான சூழ்நிலையும் சுகாதாரமான அமைப்புக்களும் உண்டு. அமெரிக்கருடைய வீடுகளிலும் நீராடும் அறை இவ்வாறே அமைக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகைகளுக்கு உடனுக்குடன் செய்தி அறிவிக்கும் (தானே டைப் அடிக்கும்) டெலிபிரிண்டர் என்ற இயந்திரம் ஒவ்வொரு ஹோட்டலிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

'லவுஞ்சு' என்ற பெயருடன் பெரியதோர் மண்டபம் எல்லா ஹோட்டல்களிலும் இருக்கும். நண்பர்கள் கூடிப் பேசுவதற்காக இது பயன்படுத்தப்படும். பெரிய வியாபாரங்கள் எல்லாம் 'லவுஞ்சு'களில்தான் முடிவாகின்றன. மாநாடுகள், அரசியல் நிகழ்ச்சிகள், விருந்துகள் எல்லாம் ஹோட்டல்களிலேயே நடப்பதால், வாழ்க்கையின் நடுநாயகமான இடமாக ஹோட்டல்கள் விளங்குகின்றன.

ஹோட்டல் அலுவலகத்தில், தமக்கு வந்திருக்கும் கடிதங்கள் முதலியவற்றை அங்குத் தங்கியிருப்பவர்கள்

விசாரித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு நாள் என்னுடைய தபால்களுடன் ஒரு தந்தியும் எனக்கு வந்திருந்தது. அவற்றைப் பெற்றுக்கொண்டு, நான் என் அறைக்குச் சென்றேன். என் அறைக் கதவில் பூட்டுக்கு அருகே யிருந்த கைப்பிடியில் ஓர் அட்டை தொங்கியது. அந்த அட்டையில் கீழ்க்கண்டவாறு அச்சிடப்பட்டிருந்தது :

"உங்களுக்கு ஒரு தந்தி வந்திருந்ததே,
அதை வாங்கிக் கொண்டீர்களா?"

ஹோட்டலில் தங்குபவர்கள் கடிதம் எழுதவும், மற்ற உபயோகங்களுக்கும் பல அளவுகளில் விதவிதமான தாள்களும் ஹோட்டலின் படம் போடப்பட்ட கார்டுகளும் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. நகரத்தின் வரைப் படத்தை வாடிக்கைக்காரர்களுக்கு வழங்கும் ஹோட்டல்களும் இருக்கின்றன. அந்தப் படத்தில் தங்கள் ஹோட்டல் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டியிருப்பார்கள். ஹோட்டலின் பெயர் எழுதப்பட்ட தொப்பிகளை அணிந்த வேலையாட்களை ரயில், கப்பல், விமான நிலையங்களுக்கு அனுப்பும் வழக்கம் உண்டு.

உணவு உட்கொள்ளச் செல்லுபவர்கள் அம் மண்டபத்திலுள்ள பெரிய வேலையாள் குறிப்பிடும் இடத்திலேயே இருந்து உணவருந்த வேண்டும் என்ற ஏற்பாடு ஹோட்டல்களில் உண்டு. ஹோட்டல்களில் உணவு படைப்பவர்கள் பெரும்பாலும் பெண்டிரேயாவர். அவ்வுணவு படைப்பவர்களுக்குத் தனி உடை கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்களை அடையாளம் தெரிந்துகொள்வது எளிதாக இருக்கிறது. நாம் உண்ணும் உணவின் விலையில் பத்தில் ஒரு பகுதியை உணவு படைப்பவர்களுக்குப்

'பக்ஷீஸ்' ஆகக் கொடுப்பதும் அந்த நாட்டில் வழக்கம். ஆனால் கபேடேரியா ஆடோமேட் போன்ற வற்றில் பக்ஷீஸ் கொடுப்பது கிடையாது. ஹோட்டல்களில் ஏதாவதோர் உணவை நாம் சரிவரச் சாப்பிடா விட்டால், பரிமாறும் பெண்கள் மிக வருத்தப்படுவர்; அந்த ஹோட்டலின் உணவு ஆக்கும் முறையை நாம் கண்டிப்பதாக எண்ணுவர்.

ஹோட்டல்களின் சிறப்பை நன்கறியக் கீழ்க்கண்ட செய்தி உதவியாயிருக்கும். பென்சில்வேனியா ரயில் நிலை யத்தார் நியூயார்க் நகரில் தம் ரயில் நிலையத்துக்கு எதிரில் 7 ஆவது அவென்யூ 32 ஆவது வீதியோடு சேரும் இடத் தில் 'பென்சில்வேனியா' என்ற ஹோட்டலை நடத்தினர். இந்த ஹோட்டலின் பெயர் 1949-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியன்று 'ஹோட்டல் ஸ்டேட்லர்' என்று மாற்றப்பட்டது. இதைப்பற்றிய ஒரு பத்திரிகைக் குறிப்புப் பின்வருமாறு :

> "பெயர் மாற்றுவதற்கு 2 லட்சம் டாலர் செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உடைகளிலும், விரிப்புக்களிலும் தீப்பெட்டிகளி லும், அறிவிப்புப் பலகைகளிலும் பெயர் மாற்றி யாக வேண்டும். 8 லட்சம் புதிய துணிகளும், 34,000 கண்ணடிப் பொருள்களும், 1,27,000 வெள்ளிச் சாமான்களும் வாங்கி, அவற்றில் புதிய பெயர் பொறிக்கப்படும். 'ஹோட்டல் ஸ்டேட்லர்' என்பது பழைய பென்சில்வேனியா ஹோட்டல்தான் என வாடிக்கைக்காரர்கள் தெரிந்துகொள்ளுவதற்காகச் சில ஆண்டு களுக்கு விளம்பரம் செய்யப்படும். ரயில், கப்பல், ஆகாய விமானக் கம்பெனிகளுக்கும், பிரயாண

ஸ்தாபனங்களுக்கும், போலீசாருக்கும், ரயில் நிலையங்களில் சுமை தூக்கும் தொழிலாளருக்கும் பெயர் மாறுதல் அறிவிக்கப்படும்.

ஸ்டேட்லர் செயின் இந்த ஹோட்டலைச் சென்ற ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி ஒரு கோடி 30 லட்சம் டாலருக்கு (ஏறக்குறைய ஆறு கோடி ரூபாய்) வாங்கியிருக்கிறது. ஸ்டேட்லர் செயினைச் சேர்ந்த ஹோட்டல்கள் பாஸ்டன், பஃபலோ, கிளீவ்லண்டு, டெட்ராயிட், செண்ட் லூயி, வாஷிங்டன், பிட்ஸ்பர்க் நகரங்களிலும் உள்ளன.

பென்சில்வேனியா ஹோட்டல் 26 மாடிகளுள்ளது; 1919-ல் தொடங்கப்பட்டது; அப்போது உலகிற் பெரிய ஹோட்டலாக இருந்தது.''

இப்போது உலகிற் பெரியதாக இருப்பது வால்டார்ப் அஸ்டோரியா என்ற ஹோட்டல். இது 47 மாடிகளுள்ள கட்டிடத்தில் இருக்கிறது. வால்டார்ப் என்பது ஜெர்மனியிலுள்ள ஒரு கிராமம். அங்கிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறிக் குபேரர்களான அஸ்டர் குடும்பத்தார் இந்த் ஹோட்டலைக் கட்டியிருக்கிறார்கள்.

ஹோட்டல்கள் சங்கம்

அமெரிக்காவில் ஹோட்டல் தொழில் ஏழாவது பெரிய தொழிலாக விளங்குகிறது. மொத்தம் 500 கோடி டாலர்கள் இந்தத் தொழிலில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தாலி, சுவீடன், பிரான்சு ஆகிய பல நாட்டு உணவுகளை எவ்வாறு சமைப்பது என்ற புத்தகங்களை அமெரிக்க ஹோட்டல் சங்கத்தார் வெளியிடுகின்றனர்.

ஒவ்வொரு வாரமும் அந்தந்த நகரில் சிறப்பான நிகழ்ச்சிகள் என்னென்ன நடைபெறுகின்றன என்ற பட்டியலையும் வழிகாட்டி நூல்களையும் அந்தச் சங்கத்தார் பிரசுரிக்கின்றனர்.

அமெரிக்க ஹோட்டல் சங்கத்தார் தமக்குள் சுருக்கமான சொற்கள் வைத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால், ''ஒருவருக்கு ஓர் அறை 10ஆம் தேதிவரை ரிசர்வ் செய்யவேண்டும்'', ''நீராடும் அறையுள்ள, இருவர் தங்கும் அறை ஒன்று ரிசர்வ் செய்யவேண்டும்'', ''இருவருக்குத் தனித்தனி அறைகள் நான்கு நாட்களுக்கு வேண்டும்; ஒவ்வொன்றும் நீராடும் அறையுடன் கூடியதாக இருக்கவேண்டும்'' என்ற பலவாறான கருத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒரு சொல்லிலேயே மிகச் சிறு செலவில் தந்தி மூலம் தெரிவிக்க முடியும். அமெரிக்காவிலுள்ள பிரயாண ஸ்தாபனங்கள் இந்தச் சுருக்கமான சொற்களையே பயன்படுத்துகின்றன.

ஹோட்டலில் நண்பர் உணவருந்தும் முறை

அமெரிக்கர், தற்செயலாக ஒருவரையொருவர் ஹோட்டல்களில் சந்தித்தால், நண்பர்களாயினும் அவரவருடைய பில்லுக்கு அவரவரே பணம் செலுத்துவர். முன்னேற்பாடு செய்து, ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக நண்பர்கள் கூடினால்தான், அவர்களை அழைத்தவர் எல்லோருடைய பில்லுக்கும் பணம் கொடுப்பது அமெரிக்கரது வழக்கம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும், யாராவது ஒருவர் மற்றவர்களுக்கும் சேர்த்துப் பணம் கொடுப்பது வழக்கமாகிவிட்டால், நட்புக் குறையும்; அவரவர் பணம் செலுத்துவதாயின், நண்பர்கள் அடிக்கடி சந்திக்கலாம். இதை ஒட்டியே அமெரிக்கர் இம்முறையைக் கையாளுகின்றனர்.

21. உணவு

அமெரிக்கரின் உணவுக்கும் நம் உணவுக்கும் முக்கியமான வேறுபாடு, அவர்களுடைய உணவு பலதரப்பட்டிருப்பதேயாகும். நமது உணவு முழுமையும் அரிசிமயமாகவே இருக்கிறது. பகல், இரவு உணவுகள் முற்றிலும் அரிசியே ஆகும். சிற்றுண்டியிலும், அரிசியையே பல உருவங்களில் உண்கிறோம். அமெரிக்கர் சில பணியாரங்கள்,* 'சோமாஸ்' ஆகிய உணவுகளைத் தயாரிப்பதற்கு மட்டிலுமே அரிசியைப் பயன்படுத்துகின்றனர்; பலவகைத் தானியங்கள் கலந்த, சத்துள்ள உணவை உட்கொள்ளுகின்றனர். அவர்கள் சராசரியில், தலைக்கு ஒரு பவுண்டு தேயிலையும், 13 பவுண்டு காப்பியும், 16 பவுண்டு வெண்ணெய்யும் (நெய்யை அவர்கள் உட்கொள்வதில்லை), 105 பவுண்டு சர்க்கரையும், 125 பவுண்டு புலாலும், 160 பவுண்டு கோதுமையும் ஆண்டுதோறும் உணவாக உட்கொள்ளுகின்றனர்.

இனிப்பு உட்கொள்ளுவது

நமது நாட்டில் இனிப்பை முதலில் உண்டு. பின்னர்க் காரத்தை உட்கொள்ளுவது முறையாக இருக்கிறது. அமெரிக்கர் இம்முறை பிறழ்ந்து உண்பர். இனிப்புக்கு மற்ற உணவுகளின்மீது விருப்பமில்லாமல் செய்துவிடும் ஆற்றல் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுவதாலேயே, அமெரிக்கர் இனிப்பை இறுதியில் உண்கின்றனர்.

எந்த உணவிலும் எண்ணெய் சேர்க்கும் வழக்கம் அமெரிக்காவில் இல்லை. எண்ணெய் சேர்ப்பதால், உணவு

---

* Puddings.

எளிதாகச் செமிப்பதில்லை என்று அமெரிக்கர் கூறு கின்றனர். அமெரிக்காவில் எதையும் தாளிப்பதோ பொரிப்பதோ இல்லை.

மற்ற நாட்டு உணவுகளில் விருப்பம்

அமெரிக்கர் மற்ற நாட்டவரின் உணவுகளின்மீது வெறுப்புக் காட்டுவதில்லை. ஆஸ்திரேலியாவிலுள்ள சீன ஹோட்டல்களைப் போர்க்காலத்தில் அங்குச் சென்ற அமெரிக்க வீரர்கள் ஆதரித்ததால்தான், இன்று அவை செல்வச் சிறப்புடன் மிளிர்கின்றன. போர்க்காலத்தில் இந்தியாவுக்கு வந்த அமெரிக்க இராணுவத்தார் இந்திய உணவுகள் பலவற்றை உண்டனர். சிறந்த வெண்ணெ யுடன் பிசைந்த நல்ல அமெரிக்க மாவு (இதுதான் இப் போது மரிக்கன்மாவு என மருவி வழங்குகிறதுபோலும்) மின்சார அடுப்பின் அசையாத நெருப்பில் 'புஸ்' என்று பொன் நிறப் பூரியாவது அமெரிக்கருக்கு வியப்பாகவே இருக்கிறது.

இந்தியாவில் சில காலம் தங்கிய ஓர் அமெரிக்கர், "இட்டிலி என்பது ஒரு சிறந்த சிற்றுண்டி. சாம்பார் என்னும் கடலில், இட்டிலி ஒரு நீர்மூழ்கிபோல ஒளிந்து கொண்டிருக்கிறது" என்று ஓர் அமெரிக்கப் பத்திரிகை யில் எழுதியிருந்தார். இங்கு,

> "இட்டிலி யென்பது இனியஉணு; மற்றதனை
> ஓட்டி நுகர்வதுசாம் பார்"

என்னும் கேலிப் பாடல் நினைவில் வருகின்றது. இட்டிலி யைப்போலவே, அப்பளமும் இந்தியாவில் தயாரிக்கப் படும் காப்பியும் பெயர்பெற்றவை. ஆகையால், அமெ ரிக்காவில் இவை கிடைக்க ஏற்பாடு செய்வது, நம் அரசிய

லாரின் டாலர் பற்றுக்குறையைச் சரிக்கட்ட எளிதான, அனுபவ சாத்தியமான, உடனே பலன் தரத்தக்க வழியாகும்.

புட்டியில் அடைத்த உணவுகள்

வழக்கமாக உண்ணும் உணவு வகைகள் நீங்கலாக, புட்டியில் அடைத்த பல உணவுப் பொருள்கள், அமெரிக்காவில் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கது. வேகவைத்து, 5 நிமிடங்களில், சூடான பாலிலோ நீரிலோ கலந்து சாப்பிடும்படி பக்குவப்படுத்திய நிலையில் பல 'ரெடிமெட்' உணவுகளைக் 'கெல்லாக்' போன்ற குழுக்கள் அமெரிக்காவில் தயாரிக்கின்றன. ஹோட்டல்களில் இரவு உணவு உட்கொள்ளுபவர்கள் குறித்த உடைகள் அணிய வேண்டும். இரவு உணவுக்குப் பின்னர், நடனம் நடைபெறுவதாலேயே இந்த ஏற்பாடுபோலும். வேலை மிகுதியாலோ, வேறு காரணத்தாலோ ஒய்வு நாட்களில் அமெரிக்கரில் சிலர் காலைச் சிற்றுண்டி, பகல் உணவு இரண்டையும் ஒன்ருக்கிக் காலை 10 மணி அளவில் உண்பர். இந்த உணவின் அளவு சிற்றுண்டியைவிட மிகுதியாகவும் பகலுணவைவிடக் குறைவாகவும் இருக்கும். இதற்கு 'பிரெக்பாஸ்ட், லஞ்ச்' என்ற இரு சொற்களின் முதல் கடைப்பகுதிகளைச் சேர்த்துப் 'பிரஞ்ச்' (Brunch) எனப் பெயர் வழங்குகின்றனர். இரவு உணவை அமெரிக்கர் 6-30 மணிக்கே உண்பர். மற்ற நாட்டினர் பலரும் இவ்வாறே செய்கின்றனர். நம் நாட்டில், குறிப்பாக நகரங்களில் வாழ்பவர்கள், தம் உடல் நலத்தைக் கருதி, இயன்ற அளவு முன்னதாக இரவு உணவை உட்கொள்ளலாம்.

அமெரிக்கரின் அன்ருட உணவு பின்வருமாறு இருக்கும்: —

காலைச் சிற்றுண்டி :—பழச்சாறு, சீமை அவல் அல்லது கோதுமைப் பாயசம் போன்ற ஓர் உணவு (Porridge); மரவள்ளிக்கிழங்கால் செய்த சில உணவுகள்; ரொட்டி; 2 முட்டைகள் அல்லது மீன்; ஏதாவது ஒரு பழம் (சிட்ரஸ், பீச்சஸ், அவித்த ஆப்பிள்); காப்பி.

சிற்றுண்டியில் முதலில் படைக்கப்படுவது பழச்சாறு; அடுத்தது முட்டை.

முட்டையைப் பலவகையாகச் செய்வர். ஒரு நாளைக்கு அரை வேக்காடு முட்டை. மறுநாள் அவித்த முட்டை. மூன்றும் நாள் பொறித்த முட்டை. மற்றொரு நாள் முட்டைத் தோசை (ஆம்லட்).

சீமை அவல் அல்லது பார்லிக் கஞ்சியை பாலும் சர்க்கரையும் சேர்த்து அமெரிக்கர் சாப்பிடுவர். உப்பின கோதுமையை (Puffed wheat) மீன் எண்ணெய்யுடன் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுப்பார்கள்.

வறுத்த பன் ரொட்டியுடன் முட்டை, பால், தேன் மூன்றையும் கலந்து சாப்பிடுவார்கள். இதற்கு அமெரிக்காவில் பிரெஞ்சு டோஸ்டு என்றும், இந்தியாவில் பம்பாய் டோஸ்ட்டு என்றும் சொல்லுவார்கள்.

பகல் உணவு:—சூப், பெரும்பாலும் இறைச்சி; வெள்ளரிக்காய்ப் பச்சடி; உருளைக்கிழங்கு; காலிபிளவர்; பீன்ஸ்; தக்காளிப்பழம்; பச்சைப் பட்டாணி; சர்க்கரை வள்ளிக் கிழங்கு; லெட்டூஸ் என்ற கீரை; ஓர் இனிப்பு; காப்பி.

இரவு உணவு:—இது பகல் உணவைப் போன்றே இருக்கும்.

இறைச்சி உண்ணுதவர்கள்

இறைச்சி உண்ணுதவர்கள் ஒரு சிலர் அமெரிக்கரிலும் உளர்; இறைச்சி உண்பவருள்ளும் பலர், குறிப்பாக யூதர், பன்றிக்கறியை உட்கொள்வதில்லை. ஆனால் அமெரிக்காவில் சைவர்கள் எனக் கருதுபவர்கள் எல்லோருமே முட்டையும், ஒரு சிலர் மீனும் உட்கொள்ளுகின்றனர். பழங்களும், ரொட்டியும், பாலும், தயிரும் விதவிதமான ஊறுகாய்களும் அங்கே தங்குதடையின்றிக் கிடைப்பதால் சைவர்கள் துன்பமின்றி வாழ இயலும்.

அமெரிக்காவில் சைவர்கள் முட்டையை உட்கொள்ளுவது, அது உடல் நலந்தருவதாக இருப்பதாலேயே ஆகும். முட்டையானது வளர்ச்சியடையாத கோழி; அதனால் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய குணங்கள் முட்டையில் இருக்கின்றன. இரும்புபோன்ற தாதுப் பொருள்கள் அதில் உண்டு. முட்டையைப் பச்சையாகவும், வேகவைத்தும், பலவிதமாகச் சமைத்தும் சாப்பிடலாம். மனிதனுக்கு நாள்தோறும் அவசியமாயுள்ள *2600* காலரிகளில் ஒரு முட்டையிலிருந்து மட்டும் *98* காலரிகள் பெறலாம். ஒரு முட்டையில் ஒரு நாளைக்கு ஒருவருக்கு வேண்டிய தசைப் பொருளில் (Proteins) *9* சதவிகிதம் கிடைக்கிறது. உயிர்ச்சத்து (Vitamin A) *1241* மூல அளவுகள் I. U. ஒவ்வொரு முட்டையிலும் இருப்பதாகவும் சத்துணவு ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

உண்ணும் முறை

மேசைமீது உணவுகளைப் படைப்பார்கள். குழந்தைகளுக்கு மேசையின் உயரம் எட்டாததால், அவர்களுக்கு ஏற்ப நாற்காலிகள்மீது பலகை போடப்படும். ஒவ்வொரு

வருக்கும் குறித்த இடம் உண்டு. கை துடைக்க ஒவ்வொருவருக்கும் ஒரு துணி உண்டு. குழந்தைகள் அதைக் கழுத்தில் கட்டிக்கொள்ளுவர்; மற்றவர்கள் அதைத் தொடையில் விரித்துக் கொள்ளவேண்டும்.

வலது கையால் நாம் எடுத்து உண்பதற்கு வசதியாக உணவை நமது இடது பக்கத்திலேயே கொண்டு வந்து அமெரிக்கர் பரிமாறுகிறுர்கள் நமது வலது பக்கத்தில் ஏதாவது உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டால், அது நமக்கு வலது பக்கத்தில் இருப்பவருக்காக வைக்கப் படுவதே ஆகும்.

கரண்டி, கத்தி, குத்துமுள் ஆகிய பல கருவிகளின் உதவியால் அமெரிக்கர் பீங்கான் தட்டுகளில் உணவு உட்கொள்ளுகின்றனர். சிறிதளவு தம் கையையும் உபயோகிக்கின்றனர். சிறிய கரண்டி காப்பிக்கும், பெரிய கரண்டி சூப்புக்கும், குட்டையான கத்தி வெண்ணெய்க்கும், நீளமான கத்தி இறைச்சிக்கும் ஏற்பட்டவை.

அமெரிக்கர், ஒவ்வோர் உணவையும் உண்டு முடித்த பின்னரே அடுத்த உணவைப் பரிமாறுகின்றனர். ஆகையால் உணவு வீணுவதில்லை.

பல நூறு பேர் உணவருந்தும் போதுகூட, பரிமாறுபவர்கள் அமைதியாக நடந்து கொள்வதும் உணவு உட்கொள்ளுவோர் கட்டுப்பாடாக இருப்பதும் வழக்கம்.

மின்சாரச் சமையல்

குளிர் நிறைந்த அமெரிக்காவில் சுடச்சுட உண்ணுவதற்காக, உணவருந்தும் மேஜையின்மீது ஒரு மின்சார அடுப்பு வைக்கப்படுவதால், வாய்க்குள் செல்லும் வரை உணவு சூடாகவே இருக்கும்.

மின்சாரச் சமையலைப்பற்றி மற்றொன்று கூறலாம். வெந்நீரும் தண்ணீரும் வெள்ளம்போல் வர சோப்பும் மருந்தும் பாத்திரத்தைத் தூய்மையாக்குகின்றன. மின்சாரத்தால் சமைப்பதால் கரியின்றி மினுக்கும் பாத்திரங்கள் மேலும் மின்னுகின்றன. அவற்றைத் துடைத்து அழகுபெற அடுக்குவதும் அமெரிக்காவில் ஒரு கலையாக விளங்குகிறது. காலத்துடன் போட்டி யிட்டுத் தம் வாழ்க்கையை நடத்தும் அமெரிக்கர் உணவை ஆற அமர உண்ணுவதற்கு நேரமின்றி, ஒரு சில வகைகளை மட்டும் அவசர அவசரமாக உண்டுவிட்டு வேலைக்குச் சென்றுவிடுவர். மீண்டும் பசித்தால் புசிப்பர். இதையொட்டி, ''பிரிட்டிஷார் அதிகமாக உண்பர்; அமெரிக்கர் அதிகத் தடவைகள் உண்பர்'' என்ற பழமொழி வழங்கி வருகிறது.

உணவின் சிறப்பு

உடல் பெரிதாகிவிடாமலிருப்பதற்காக உணவைக் குறைத்து உண்பவர்களும் அமெரிக்காவில் மிகுதியாக உள்ளனர். பால் சேர்க்கப்பட்ட ஆகாரங்கள் ஐஸ்கிரீம், பலவிதமான மிட்டாய்கள், சாக்லட், வாழைப்பழம் ஆகியவற்றை வயதுவந்த அமெரிக்கரும் விரும்பிய போதெல்லாம் உட்கொள்ளுகின்றனர்.

அமெரிக்கரின் உணவு உடலுக்கு நன்மை தரத் தக்கபடி அமைக்கப்பட்டுள்ளது. புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு ஆகிய சுவைகளை அவ்வுணவில் காண இயலாது. நெய், குழம்பு, மோர் ஆகியவையும் அங்குப் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, நம் நாட்டு உணவில் ஊறித் தோய்ந்தவர்களுக்கு அமெரிக்க உணவு சுவைப்பதில்லை.

தூய்மை

அமெரிக்காவின் ஒரு சிறப்பு அங்கு விற்கப்படும் பொருள்கள் யாவும் தரமாக இருப்பதும் தூய்மையாகச் செய்யப்படுவதும் ஆகும். ஓட்டல்களில் தயாராகும் உணவுப் பொருள்களுக்கும் இது பொருந்தும். ஓட்டல்களின் சுகாதாரச் சிறப்பும் அங்கு நிலவும் சுற்றுபுறத் தூய்மையும் நேரில் பார்த்தவர்களுக்குத் தான் தெரியும். எதையும் யாரும் எங்கும் வீசி எறியும் சுதந்திரம், சுதந்திர அமெரிக்காவில் குழந்தைகளுக்குக்கூட இல்லை!

உணவும் பேச்சும்

அமெரிக்கர் அளிக்கும் விருந்துகளில் சுவைமிக்க பல உணவுகள் இருக்கும். ஆனல் அவற்றை அநுபவித்து உண்பது இயலாது. இதற்குக் காரணம் பெயரளவுக்குச் சாப்பிட்டுக்கொண்டு 'தொண தொண' என்று பேசிக்கொண்டிருப்பது அங்குப் பழக்கமாகி விட்டதேயாகும்.

''ஆரியக் கூத்தாடினலும் காரியத்திலே கண்ணுயிருக்கும்'' அமெரிக்கர் உணவு உட்கொள்ளும்போதே வேறொரு வேலையில் ஈடுபடுவர். மேல் நாட்டவர் அனைவருமே காலைச் சிற்றுண்டியை அருந்தும்போது, பத்திரிகையையும் படித்து முடித்துவிடுவர். அமெரிக்கர் பகலுணவைத் தம் அலுவலகத்தாருடன் உண்டு, அவர்களுடன் வாணிபச் செயல்களைப்பற்றி அப்போது உரையாடுவர்; மாலை நேரத்தில், பொழுதுபோக்குக் கழகங்களில் பிஸ்கோத்து, சாண்ட்விச் தேயிலை ஆகியவற்றை உட்கொள்ளும்போதே, சமூக நலம் பற்றிய கருத்துக்களைப் பரிமாறி நண்பர்களின் நலனையும் உசாவிவிடுவர்; இரவு உணவை மனைவி மக்களுடன்

தத்தம் இல்லங்களில் உட்கொள்ளுவர். பெரும்பாலும் அப்போதுதான் குடும்பத்தார் அனைவரும் சந்தித்துக் குடும்ப அலுவல்களைப் பற்றிப் பேசுவார்கள். நேரத்தை வீணாக்கக்கூடாது என்பதே அமெரிக்கரின் கருத்து. காலஞ்சென்ற அறிஞர் பெர்னாட் ஷா இக்கருத்தையே பின்வரும் மேற்கோளில் உறுதிப்படுத்தியிருக்கிறார்:—

> "நேரமும் பணமும் ஒன்றே நேரந்தான் நாகரிகம், கலை, இலக்கியம், ஓய்வு, இன்பம் எல்லாம். சுருங்கச் சொன்னால் செழிப்பும் கொழிப்பும் நிறைந்த வாழ்க்கையின் பயனை நன்றாக அநுபவிக்க உதவுவது நேரமே."

அமெரிக்கச் சாப்பாட்டில் அரிசிச் சோறு என்பது மிக அருமை.

சாப்பிடும்போது அமைதியாகவும் தட்டு, கத்தி, குத்துமுள், கோப்பை முதலியன சிறிதளவும் சேதப்படாத படியும் உணவு உடம்பிலோ துணியிலோ சிந்ாதவாறும் சாப்பிடவேண்டும். பெரிய குழந்தைகள் இந்த முறை களிலிருந்து வழுவிவிட்டால், "உனக்கு வெட்கமா யில்லையா?" என்று தாய் தந்தையர்கள் கேட்பார்கள். அவ்வாறு மூத்த குழந்தைகளைக் கண்டிக்கும்போது, சிறு குழந்தைகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

22. இந்தியாவும் அமெரிக்காவும்

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள ஒற்றுமைகளும் உறவும் மிகப் பல. அமெரிக்கா கண்டுபிடிக்கப் பட்டதே, இந்தியாவைக் காணவேண்டும் என்ற ஆசையால் ஏற்பட்ட நிகழ்ச்சியே.

இந்தியாவைப்போல் அமெரிக்காவும் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அமெரிக்கரும் சுதந்திரப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஆகையால் மற்றவர்களுடைய சுதந்திர உணர்ச்சியை அவர்களால் புரிந்துகொள்ள முடியும்.

முதல் உலகப் போர் நடைபெற்றபோது இந்தியாவில் சுதந்திர உணர்வு தோன்றிற்று. அதைப் பாராட்டி அமெரிக்கக் குடியரசுத் தலைவரான வூட்ரூவில்சன், சென்னை வழக்கறிஞரான சர். எஸ். சுப்பிரமணிய அய்யருக்கு எழுதினார்.

இரண்டாவது உலகப் போர் நடைபெற்றபோது, ''வெள்ளையனே வெளியேறு'' என்ற இயக்கத்தை அண்ணல் காந்தியடிகள் தொடங்கினார். அது 1942 ஆகஸ்ட் 8-ம் நாளில் ஏற்பட்டது. அதற்கு முன்னரே அதாவது 1942 மார்ச் 10-ஆம் நாள், வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் ஒரு தந்தி அடித்தார். ''உடனே இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடு'' என்பதுதான் தந்தியின் வாசகம்.

அமெரிக்கருடைய இடைவிடாத முயற்சியால் 1945-ல் இங்கிலாந்திலிருந்து கிரிப்ஸ் தூதுக் குழு வந்தது. அக் குழு நல்லதொரு முடிவைச் செய்யவும்

போர் நடக்கும்போதே இந்தியாவுக்குச் சுதந்தரத்தின் சாரத்தைக் கொடுக்கவும் ஆவன செய்ய அமெரிக்க அரசியல் அறிஞர் ஒருவரை ரூஸ்வெல்ட் அனுப்பினர்.

அமெரிக்காவில் பல்லாயிரம் இந்தியர்கள் உள்ளனர். ஓர் இந்தியர் அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கலிபோர்னியா இராச்சியத்தில் 17-ம் நூற்றுண்டில் சீக்கியர்கள் குடியேறினர். எல்ஸென்ட்ரோ என்னும் சிறு நகரில் அவர்கள் தொகையாக வாழ்கின்றனர். அங்கு சீக்கியர் கோயிலும் இருக்கிறது. பார்லி உற்பத்தியிலும், பழங்களைச் சாகுபடி செய்வதிலும் அவர்கள் இணையற்றவர்கள்.

அமெரிக்காவிலிருந்து குடியேறி இந்தியாவில் தங்கிய பெருமக்களும் பலர் ஆவர். கர்னல் ஆல்காட் என்பவர் ஹிந்து—பௌத்த மதங்களைப்பற்றி அறிவதற்காகச் சென்னைக்கு வந்து 1878-ல் பிரம்மஞான சபை என்ற அடையாற்றில் தொடங்கினர்.

மகாத்மா காந்தியடிகளின் சீடர்கள் அமெரிக்காவில் உள்ளனர். இவர்களில் தலைசிறந்தவர் ஜே. எச். ஹோம்ஸ். காந்தீயத்தைப் பரப்பிய சிறந்த எழுத்தாளர்களில் வின்ஸ்டன் ஷீன் லூயி பிஷர் என்னும் இரு அமெரிக்கரும் குறிப்பிடத் தக்கவர்.

கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் ஐந்து முறை அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்திருக்கிருர். எஸ்ரா பௌண்டு, வால்ட் விட்மன் போன்ற அமெரிக்க மேதைகளின் படைப்புக்களில் தாகூரின் கருத்துக்கள் காணப்படுகின்றன. நியூயார்க் மாநகரின் கேந்திரமான பகுதி டைம்ஸ் ஸ்கொயர் என்பது. 1961-ல் தாகூர் நூற்றுண்டு விழா கொண்டாடப்பட்டபோது, அதற்கு தாகூர் ஸ்கொயர் என்ற புதுப் பெயர் சூட்டப்பெற்றது.

23. இந்தியாவைப் பற்றிய அமெரிக்க ஆராய்ச்சி நிலையம்

அமெரிக்கருக்குப் பசி அதிகம். பசி என்னும்போது, உணவுப் பசி, அறிவுப் பசி இரண்டையுமே குறிப்பிடுகிறேன்.

இந்தியாவைப்பற்றி ஆதாரமாக அறிந்துகொள்ளும் மனப்பான்மை வளர்ந்து அந்த வேலையிலேயே வாழ்நாள் முழுவதும் ஈடுபடும் அமெரிக்கர் உள்ளனர். இவர்களுள் ஒருவர் ஞான ரத்னகர நார்மன் ப்ரௌன் என்னும் பேராசிரியர்.

இவருடைய தலைமையில் இந்தியாவைப் பற்றிய அமெரிக்க ஆராய்ச்சிக் குழு பம்பாய் அருகே உள்ள பூனா நகரத்தில் இயங்கி வருகிறது. அமெரிக்கர் இந்தியாவைப் புரிந்து கொள்ளவும், இந்திய மொழிகள், பண்பாடு, நாகரிகம் பற்றி ஆராய்ச்சி செய்யவும் இந்த நிறுவனம் உதவி செய்கிறது.

இதன் கிளைகள் விரைவில் டில்லி, கல்கத்தா, சென்னை நகரங்களில் தொடங்கப்பெறும். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு இந்த நிறுவனத்தை நடத்தி வருகிறது.

அமெரிக்கச் செல்வர்கள் ஏற்படுத்தியுள்ள அறநிலையங்களும் அமெரிக்க அரசாங்கமும் இந்த ஆராய்ச்சி நிலையத்துக்கு ஏற்படும் செலவை ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆராய்ச்சியில் ஈடுபட்டு அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வரும் பேராசிரியர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி, படிப்பதற்கு நூல் நிலையங்களுடன் தொடர்பு, பழகுவதற்கு இந்திய அறிஞர்களுடன் அறிமுகம்—ஆகியவற்றை இந்த நிலையத்தார் செய்து வைக்கின்றனர்.

இந்திய மொழிகளைப் பயில விரும்பும் அமெரிக்கர்கள் தகுந்த பயிற்சி அடைவதற்கான வசதிகள் அளிக்கப்படுகின்றன.

இந்திய சமூகத்தின் சிறு சிறு பிரிவினரைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளும் அமெரிக்க அறிஞர்களுக்கு அவர்கள் விரும்பும் உதவிகள் செய்யப்படுகின்றன.

ஆராய்ச்சி நோக்கத்தோடு அமெரிக்காவில் இருந்து வருபவர்களுக்குப் பிரயாண ஏற்பாடு செய்து அந்தச் செலவையும் இந்த நிறுவனத்தார் ஏற்றுக்கொள்கின்றனர்.

24. இந்தியாவுக்கு அமெரிக்க உதவி

மனிதரில் ஏழை பணக்காரர் உண்டு. இந்த வேறு பாடு நாடுகளிடையேயும் நிலவி வருகிறது.

விஞ்ஞான வளர்ச்சியாலும் மக்களின் உழைப்பாலும் அளவு கடந்த செல்வத்தை 200 ஆண்டுகளில் அமெரிக்கா திரட்டியிருக்கிறது. உலகெங்கும் உள்ள எத்தனையோ நாடுகளுக்கு அமெரிக்கா அதனுடைய பணத்தை வாரி வழங்கி வருகிறது.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தபோது மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியும் ஜப்பானும் சுடுகாடாய் இருந்தன. அமெரிக்கரின் பேருதவி யால் மேற்கு ஜெர்மனியும், ஆஸ்திரியாவும், ஜப்பானும் இன்று புத்துயிர் பெற்றுப் பெரிய வல்லரசுகளாக விளங்கு கின்றன. அங்கே செல்வம் கொழிக்கிறது. தொழில் பெருகியிருக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரம் பல மடங்கு ஆக உயர்ந்துவிட்டது.

கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்கா வேறு எந்த நாட்டையும்விட இந்தியாவுக்கு மிகப் பெரிய அளவில் உதவி புரிந்து வருகிறது. 1963 ஏப்ரல் வரை அமெரிக்கா இந்தியாவுக்குச் செய்திருக்கும் உதவிகளின் மொத்த மதிப்பு 2374 கோடி ரூபாய் ஆகும்.

இது தவிர இராணுவ உதவியும் நமக்கு அமெரிக்கா விடமிருந்து கிடைத்திருக்கிறது. 1962-ல் சீனர்கள் நயவஞ்சமாக இந்தியாவைப் படையெடுத்தபோது, ''நண்பர்கள் நாங்கள்; காப்போம் உங்களை'' என்று

தயக்கமின்றிச் சொன்ன ஒரே நாடு அமெரிக்கா. நான்கு மணி நேரத்துக்கு ஒரு முறை மிகப் பெரிய விமானங்களில் அமெரிக்கப் போர்க் கருவிகள் இந்தியாவுக்கு வந்த வண்ணமாக இருந்தன.

இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு, சர்வ தேச வளர்ச்சிக்கான அமெரிக்க ஏஜென்ஸி (U. S. I. D. A.) என்ற நிறுவனமும் தொழில் நுணுக்க ஒத்துழைப்பும் பிறவும் கடன் கொடுத்தும் தொழில் நுணுக்க அறிஞர்களைத் தந்தும் உதவுகின்றன.

கோதுமையும் அரிசியும் பற்றுக்குறை ஏற்படும் போதெல்லாம் அன்பளிப்பாகவும் கடனாகவும் அமெரிக்கா நமக்குத் தந்து வருகிறது.

இந்தியாவில் கல்வி பயிலும் 40 இலட்சம் சிறுவர்களுக்கு அமெரிக்காவிலிருந்து பாலும் கோதுமையும் நன்கொடையாகக் கிடைக்கின்றன. இப்பொருள்களை நம் நாட்டில் கள்ளச் சந்தையில் விற்றவரும் உண்டு. "இவை விற்பனைக்கு அல்ல; அன்பளிப்பாகக் கொடுக்கப் படுபவை" என்று அமெரிக்காவில் அச்சிட்டு இப்பொருள்களை இப்போது இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

இந்தியாவுக்குத் தேவையான இன்றியமையாப் பொருள்கள் பலவற்றை அமெரிக்காவில் வாங்க வேண்டி இருக்கிறது. இதற்கு வேண்டும் டாலர் நாணயம் நம்மிடம் இல்லை. குறிப்பிட்ட ஏற்றுமதி அல்லது இறக்குமதிக்காக இருபதாண்டுத் தவணைக்கு அமெரிக்காவிலுள்ள "ஏற்றுமதி இறக்குமதி வங்கி" இந்தியாவுக்குக் கடன் கொடுத்து உதவுகிறது.

1951-ல் இந்தியாவில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. 90 கோடி ரூபாய் மதிப்புள்ள கோதுமையை அமெரிக்க

அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்கு கொடுத்தது. அதற்குரிய பணத்தை 1957-முதல் சிறு சிறு தவணைகளாக இந்திய ரூபாய்களாக இந்தியாவில்பெற்றுக் கொள்கிறது.

அமெரிக்க உதவியால் இந்தியாவில் மின்சார உற்பத்தி நிலையங்கள் தோன்றியுள்ளன. இரயில்வேத் துறைக்கு எண்ணற்ற இயந்திரங்கள் கிடைத்துள்ளன. டெல்கோ, இந்துஸ்தான் மோட்டார்ஸ், பிரிமியர் மோட்டார்ஸ், சிமெண்டு, சணல் உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்ட நிறுவனங்களும், அரசாங்கத் துறையிலுள்ள எஃகு உற்பத்தி கம்பெனிகளும் உரத் தொழிற்சாலைகளும் பல நூறு கோடி ரூபாய் உதவி பெற்றிருக்கின்றன.

தொழிற் கல்வி வளர்ச்சி, வேளாண்மைக் கல்வியின் பெருக்கம், மருத்துவத் துறைகளில் புதிய ஆராய்ச்சி, மலேரியா ஒழிப்புத் திட்டம்—இப்படிப்பட்ட ஒவ்வொரு துறையிலும் அமெரிக்கா கைகொடுத்து உதவுகிறது.

தொழில் வளர்ச்சிக்கு முதலீடு வழங்கும் இந்திய அரசாங்க நிறுவனங்களுக்கும் அமெரிக்கா கடன் கொடுக்கிறது.

இந்திய முதலாளிகள் தொடங்கியுள்ள பல பெரிய தொழிற்சாலைகளில் அமெரிக்க முதலாளிகள் மூலதனம் போட்டு அவற்றை நடத்தும் வழியையும் நமக்குக் கற்றுத் தருகின்றனர். இவ்வகையில் தமிழ்நாட்டில் குறிப்பிடத் தகுந்த தொழிற்சாலைகள் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை, சென்னை இரப்பர் தொழிற்சாலை, சக்தி பைப்ஸ் முதலியன.

ஏற்றுமதி இறக்குமதி வங்கி ஏர் இந்தியா—இண்டர் நேஷனல், ஹிந்துஸ்தான் அலுமீனியம், டீஸல் இரயில்

இயந்திரத் தொழிற்சாலை போன்ற 13 தொழில் நிறுவனங்களுக்கு 15 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது.

கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஏற்படவும், நீலகிரி மாவட்டத்தில் குந்தா நீர் மின்சாரத் திட்டம் நிறைவேறவும், சென்னை நகரில் தொழிற் கல்வி வளர்ச்சி பெறவும், தஞ்சை மாவட்டத்தில் (பாக்கேஜ் திட்டத்தின் வாயிலாக) உணவு உற்பத்தி பெருகவும் அமெரிக்கா இயன்ற உதவி புரிந்துவருகிறது.

முன்னர்க் கூறியபடி, இவற்றையெல்லாம்விட, அமெரிக்கா நமக்கு அளித்து வரும் இராணுவ உதவி மிக முக்கியமானது.

ஜெர்மானியரையும், ஜப்பானியரையும் போல, அமெரிக்க உதவியை நல்ல முறையில் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டுப் பற்றும் உழைப்பும் நமக்கு இன்றியமையாதன.

"ஆசிரியர்க்குத் தமிழ் மக்களின் நன்றியும் பாராட்டும் உரியன. "ஹிந்து"

பிரயாண நூல் எழுதுவதில் இவர் வல்லுநர்; இவர் மேன்மேலும் பிரயாணம் செய்து நூல்கள் எழுதுவாரென நம்புகிறோம். "மெயில்"

தலைசிறந்த புத்தகம். "ஆனந்தவிகடன்"

கையில் புத்தகத்தை எடுத்தால் மேலும் மேலும் படித்துக்கொண்டே போகத் தூண்டும். "தினமணி"

தாம் கண்ட நாட்டைப்பற்றி எழுத விரும்பும் ஒவ்வொரு தமிழரும் இந்தப் புத்தகத்தைப் படிக்கவேண்டும். "கலைமகள்"